CNAV




யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்

# நூற்றாண்டு விழா மலர்

1910–2010

# யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்



# நூற்றாண்டு விழா மலர்

## 1910–2010

# நூல் விபர அட்டவணை


| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | நூற்றாண்டுவிழா சிறப்பு மலர் |
| வெளியீடு | : | யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் |
| பக்க அளவு | : | B5 (ISO) |
| பக்கங்கள் | : | XXX + 102 + கலர்ப்படங்கள் |
| எண்ணிக்கை | : | 300 |
| கடதாசி | : | 70 GSM பாங் |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ், 39/2, ஆடியபாத வீதி, திருநெல்வேலி. |

# பாடசாலைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பாடசாலை பெயர் | : | யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் |
| முகவரி | : | சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். |
| கல்விக் கோட்டம் | : | சங்கானை |
| கல்வி வலயம் | : | வலிகாமம் |
| மாகாணம் | : | வடக்கு மாகாணம் |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | சுழிபுரம் கிழக்கு **J/174** |
| பிரதேச செயலகம் | : | வலி மேற்கு |
| உள்ளூராட்சி சபை | : | பிரதேசசபை (சுழிபுரம்) |
| தேர்தல் தொகுதி | : | வட்டுக்கோட்டை இல.- 080 |
| பாடசாலை அடையாள இல | : | 1011007 |
| பாடசாலை தொகைமதிப்பு இல | : | 09073 |
| பரீட்சை திணைக்கள இல | : | 11053 |
| பாடசாலைத் தரம் | : | *II* (தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை) |
| பாடசாலை அதிபர் பெயர் | : | திரு. ந. பாலச்சந்திரன் |
| பாடசாலை தொலைபேசி இல | : | 021 320 7440 |

# 100 வது ஆண்டு நிறைவு விழாச்சபையின்
## நிர்வாகக்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. ந. பாலச்சந்திரன் (அதிபர்) |
| உப தலைவர் | : | செல்வி மு. விஜயகுமாரி (உப அதிபர்) |
| செயலாளர் | : | திரு. சு. யாதவன் (கலால் வரி உத்தியோகத்தர்) |
| உப செயலாளர் | : | திரு. கு. பாலமுருகன் (ஆசிரியர்) |
| பொருளாளர் | : | செல்வி வ. மனோராணி (ஆசிரியர்) |
| மலர் ஆசிரியர் | : | திருமதி க. சுந்தரசிவம் (ஆசிரியர்) |
| உறுப்பினர்கள் | : | திருமதி யா. இந்துமதி (ஆசிரியர்) |
| | | திரு. சு. திருகேஸ்வரன் (அதிபர்) |
| | | திரு. க. ரவீந்திரன் |
| போசகர் | : | திரு. ம. செல்லையா (ஓய்வு பெற்ற திட்டமிடல் அலுவலர்) |

## விழாக்குழு

திரு. ந. பாலச்சந்திரன் (அதிபர்)
செல்வி மு. விஜயகுமார்(உப அதிபர்)
திரு. ம. செல்லையா
திரு. சு.திருகேஸ்வரன்
திரு. கு. பாலமுருகன்
திரு. ஜெ. கோகலே
திரு. சு. யாதவன்
திரு. சு. தங்கராசா
திரு. க. ரவீந்திரன்
செல்வி வ. மனோராணி
திருமதி க. சுந்தரசிவம்
திரு. ந. கஜேந்திரன்
திரு. சி. திருச்செந்தூரன்
திரு. ஞா. யுகதாஸ்
செல்வி. ஜெ. ஜெயசாந்தி
செல்வி சு. ஜீவனா

## மலர்க்குழு

திரு. ந. பாலச்சந்திரன்(அதிபர்)
செல்வி மு. விஜயகுமாரி(உப அதிபர்)
திருமதி க. சுந்தரசிவம்
திரு. ம. செல்லையா
திரு. சு. யாதவன்
திரு. ஜெ. கோகலே
திரு. சு. திருகேஸ்வரன்
செல்வி வ. மனோராணி
செல்வி ச. சுபத்திரா
திரு. சி. திருச்செந்தூரன்
செல்வி சு. ஜீவனா
திரு. கு. பாலமுருகன்
திருமதி யா. இந்துமதி

# பொருளடக்கம்


- பாடசாலைத் தரவுகள்
- மலர் வெளியீட்டுக் குழு, விழாக்குழு
- பாடசாலைக் கீதம்
- அதிபரின் உள்ளத்திலிருந்து
- இதழாசிரியர் இதயத்திலிருந்து
- ஆசியுரைகள்
- வாழ்த்துரைகள்

**நினைவுக் குறிப்புகள்** 1-20

- என்றும் உயர்வுடன் நின்று விளங்க எல்லோரும் பிரார்த்திப்போம்.
- எனது பார்வையில் நூற்றாண்டு விழாக்காணும் யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்
- ஆறுமுக வித்தியாலயத்திற்கு அகவை நூறு
- கல்வியின் அடித்தளத்தை அமைத்துத் தந்த பாடசாலை
- எனது வாழ்வுடன் ஆறுமுக வித்தியாலயம்
- என் நினைவுகள்
- என் பள்ளியும் நாமும்
- பாடசாலை நினைவுகள்
- என்னை ஆசிரியத்துறையில் வளர்த்தெடுத்த ஆறுமுக வித்தியாலயம் வாழ்க பல நூற்றாண்டுகள்.
- வாழ்க நூற்றாண்டு
- வித்தியாலயத்தை வாழ்த்துகிறேன்
- என் உள்ளத்திலிருந்து

**கல்வியியலாளரின் ஆக்கங்கள்** 21-48

- புதிய பண்பாட்டு மறுவாசிப்பு
- கல்வியும் வாழ்வும்
- திறந்த பாடசாலை முறைமையின் செயலாற்றுகை
- இன்றைய காலகட்டத்தில் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறுதலின் முக்கியத்துவம்
- சிறுவர்களுக்கான அரங்கச் செயற்பாடுகள்
- ஈழத்து இசை வளர்ச்சிப்பாதையிலே
- புது நெறி வகுத்த புனிதவதி

**ஆசிரியர் ஆக்கங்கள்** 51-58

- கோகழியாண்ட குருமனி(ணி) தன் தாள் வாழ்க
- இன்றைய உலகில் கணிதத்தின் முக்கியத்துவம்
- சமூகமயமாக்கல்
- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் வித்திடும் அடிமனப் பதிவுகள்
- The Value of Learning English
- மனித விழுமியங்கள்

பழைய மாணவர்களது ஆக்கங்கள் 61-74

- ✧ பாடசாலைகளைப் பாதுகாப்போம்
- ✧ வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியமைத்த வள்ளுவனின் வாய்மை மொழி சிலவற்றுடன்
- ✧ சங்க காலத்தில் இசைமரபு
- ✧ முதலாம் நிலைக் கல்வியின் இன்றியமையாமை
- ✧ கண்ணகி கோயில் அரசமரம்
- ✧ பேரறிஞர்கள்
- ✧ வலைப்பந்தாட்டம்

மாணவர்களின் ஆக்கங்கள் 79-95

- ✧ தாய்
- ✧ தகவல் தொடர்பாடல் விருத்தியும் முன்னேற்றமும்
- ✧ உள்ளத்து அனையது உயர்வு
- ✧ மங்கையராய்ப் பிறந்து விட்டோம்
- ✧ வாழ்க்கை
- ✧ சிறுவர் நாம்
- ✧ எமது பாடசாலை
- ✧ சேற்றில் முளைத்த செந்தாமரை
- ✧ சூழல் மாசடைவதைத் தடுப்போம்
- ✧ J/CHULIPURAM NORTH ARUMUGA VIDIYALAYAM
- ✧ பொது அறிவு
- ✧ ஒரு குடையின் சுயசரிதை
- ✧ தொலைக்காட்சியின் பயன்கள்
- ✧ உயிர் எழுத்தில் என் அம்மா
- ✧ உலக அதிசயங்கள்
- ✧ மரத்தில் பூக்காத பூக்கள்
- ✧ கூடி வாழ்தல் (கதை)
- ✧ உலகின் ஏழு அதிசயங்கள்
- ✧ சிறுவர் எதிர்காலம் சிதைந்திடாது...
- ✧ சத்தான முதியவர்கள் நம் சொத்து

- ✧ 1996 - 2010 வரை சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்களின் விபரம்
- ✧ தமிழ்த் தினப்போட்டிகளின் பெறுபேறுகள்
- ✧ ஆங்கிலதினப் போட்டிகளின் பெறுபேறுகள்
- ✧ சமூக விஞ்ஞானப் போட்டிகளின் பெறுபேறுகள்
- ✧ விவசாய, விஞ்ஞானப் போட்டிகளின் பெறுபேறுகள்
- ✧ குழு விளையாட்டுப் போட்டிகளின் பெறுபேறுகள்
- ✧ ஏனைய போட்டிகளின் பெறுபேறுகள்
- ✧ மனமார்ந்த நன்றிகள்

# தூர நோக்கு

தேசத்தின் அபிவிருத்தி நோக்கங்களை நிறைவு செய்யக் கூடிய ஆற்றலும் மனப்பாங்கும் கொண்ட ஆளுமை மிக்க சமூகமொன்றை உருவாக்கல்.

# நோக்கக் கூறு

தூர நோக்கினை எய்துவதற்காக ஆசிரிய ஆளணி, பாடசாலைச் சமூகம், மாணவர் ஆகியோருக்கான வழிகாட்டலையும் பௌதீக வளத்தினையும் வழங்குவதுடன் நேரான போக்குடைய முகாமைத்துவக் கட்டமைப்பை உருவாக்கி மேம்பாடுகளைத் தொடர்ந்து ஊக்குவிப்பதுடன் நலிவுகளை இனங்கண்டு மேம்படுத்துவதற்கான அனுகூலங்களை உருவாக்குதல்.

# யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்

## பாடசாலைக் கீதம்

இராகம் :- ஹம்சத்வனி

ஆறுமுக வித்தியாலயம் என்கையில்
தாகம் தணியிது உள்ளத்திலே
எங்கள் சந்ததி அனைவரும் வளர்வதற்கே
ஞானப்பாலினைத் தந்திடும் பெருந்தாயே

(ஆறுமுக ....................)

செந்தமிழ் ஆங்கிலம் தம்முடனே - பல
விந்தை நிறைந்திடும் விஞ்ஞானமும் - நல்ல
சிந்தை வளர் கலைப்பாடங்களும்
தொழில் செய்திடப்பற்பல வழிவகையும்

(ஆறுமுக ....................)

நாங்கள் அறிந்து வாழ்வதற்கே - நல்ல
வாய்ப்புக்கள் தந்திடும் நற்றாயே
எம்முந்தையர் ஆயிரம் ஆயிரம் பேர்கள்
வாழ்ந்திட வழி காட்டி நின்றாயே

(ஆறுமுக ....................)

சைவமும் தமிழும் தழைப்பதற்கே - அன்று
சைவ வித்தியாவிருத்தி சங்கத்தினர்,
ஆறுமுக ஆசான் ஆரம்பித்த - உன்னை
அன்போடு பேணிப் புரந்தனரே


(ஆறுமுக ....................)

இன்றிலும் பார்க்க எழுச்சியுற்று - நீ
என்றென்றும் வாழ்க வாழ்கவென்றே - உன்
மைந்தரும் ஆசாரும் மாணவரும் - மன
நிறைவுடன் வாழ்த்தி வணங்குகின்றோம்.

(ஆறுமுக ....................)


ஆக்கம் :
**வித்துவான் திரு. மு. விருத்தாசலம்**
(B.A, Dip in Edu.முன்னாள் அதிபர்)

## எமது அதிபர்



திரு. நமசிவாயம் பாலச்சந்திரன் S,L.P,S 2-I

எமது உப அதிபர்



செல்வி முருகேசு விஜயகுமாரி S.L.T.S -1

# அதிபர் உள்ளத்தில் இருந்து

எமது வித்தியாலயத்தின் வரலாறு பற்றிய தகவல் முன்னாள் சங்கானைக் கோட்டக்கல்விப் பணிப்பாளரும் சைவவித்தியா விருத்திச் சங்க உபதலைவருமாகிய திருவாளர் அ. தற்பரானந்தன் அவர்களின் வாழ்த்துச் செய்தியில் தெட்டத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளதற்கு மேலாக நான் கூறுவதற்கு ஒன்றுமில்லை எனக்கருதி வரலாறு பற்றிய எனது செய்தியைத் தவிர்க்கின்றேன்.

தற்போது எமது பாடசாலையிலுள்ள பாடசாலைக்குரித்தான ஆவணங்கள், பௌதிகவளங்கள் ஆகியவற்றைப் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்த அதிபர்கள், ஆசிரியர்கள் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் எமது பாடசாலைச் சமூகத்தால் என்றென்றும் போற்றப்பட வேண்டியவர்கள். அவர்கள் பற்றிய விபரங்களை இனங்கண்டு கொள்வதற்காக அவர்களின் சேவைக் காலங்கள் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

தற்போது எம்மிடம் உள்ள கட்டங்களில் 90 X 17 வகுப்பறைக் கட்டடமும் 40 X 20 விஞ்ஞான அறையும் முன்னாள் அதிபர் அமரர் மு. விருத்தாசலம் அவர்கள் காலத்திற்கு முற்பட்டவையாகும். முன்னாள் அதிபர் அமரர் மு. விருத்தாசலம் அவர்கள் 120 X 20 வகுப்பறை 20 X 10 அதிபர் காரியாலயம் மேற்குப்புற மற்றும் வடக்குப் புற மதிலும் படலையையும் தமது காலத்தில் அமைத்துப் பாடசாலையின் கட்டடத்தேவையை ஓரளவு பூர்த்தி செய்தார். அத்துடன் பாடசாலைக்கான கீதத்தையும் ஆக்கித்தந்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து முன்னாள் அதிபர் அமரர் ச. சண்முகலிங்கம் அவர்களின் காலத்தில் நாட்டில் இடம் பெற்ற யுத்த சூழ்நிலையால் கட்டடவசதிகளைப் பெறும் வாய்ப்பு அவர்களுக்கு வாய்க்கவில்லை. பாடசாலைக்கான இலச்சினையும் மகுடவாசகமும் அவர்களால் ஆக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நான் இப் பாடசாலையின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதன் பின் 1999 ஆம் ஆண்டு UNICEF நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் 120 X 20 வகுப்பறைகள் மூடியடைக்கப்பட்டதுடன் 6 சல கூடவசதியும் 1 மல கூடமும் 20 X 20 வகுப்பறை ஒன்றும் அமைக்கப்பட்டது.

2001 இல் Forut நிறுவன உதவியுடன் நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டது. 2002 இல் பன்முக வரவு செலவுத்திட்டத்தினூடாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொன்னம்பலம் கஜேந்திரகுமார் அவர்களால் நூலகத்தளபாடவசதி ஏற்பாடு செய்யப்பட்டது. 2003 இல் பன்முக வரவு செலவுத்திட்டத்தினூடாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். கே. சிவாஜிலிங்கம் அவர்களால் 120 X 20

வகுப்பறை, 20 X 10 அதிபர்காரியாலயம் 40 X 20 விஞ்ஞான அறை ஆகியவற்றிற்கு மின்னிணைப்பு பெறப்பட்டது 2004 இல் முன்னாள் அதிபர் அமரர் மு. விருத்தாசலம் அவர்களின் குடும்பத்தினரால் 70 X 30 கொண்ட மேடையுடன் கூடிய ஒன்று கூடல் மண்டபம் அமரர் மு. விருத்தாசலம் ஞாபகார்த்த மண்டபம்" எனும் பெயரில் அமைக்கப்பட்டது.

2005 இல் வெளிநாடு வாழ் எமது பாடசாலை பழைய மாணவர்களின் அன்பளிப்பால் அமரர் மு. விருத்தாசலம் ஞாபகார்த்த மண்டப வளவைச்சுற்றி முட்கம்பிவேலியும் 2 படலைகளும் மேற்கு, வடக்கு மதில்கள் முற்றாக வீழ்ந்தமையினால் மீளக்கட்டப்பட்டதுடன் சிறுவர் பூங்காவுக்கான மதிலும் அமைக்கப்பட்டது.

2007 இல் திணைக்கள ஒதுக்கீட்டில் சிறுதிருத்தம் மேற்கொள்ளப்பட்டு 120 X 20 வகுப்பறை 20 X 10 அதிபர் காரியாலயம் 90 X 17 வகுப்பறை ஆகியவற்றின் கூரைகள் முழுமையாகச் சீர் செய்யப்பட்டதுடன் 90 X 17 வகுப்பறைக் கட்டடத்தின் ஒரு பகுதி மூடியடைக்கப்பட்டது.

2010 இல் ஜனாதிபதியின் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் 20 X 20 வகுப்பறை கணனிக் கற்கை அறையாக 12 கணனிகள் பொருத்தக் கூடியவாறு மாற்றியமைக்கப்பட்டது. 2010 இல் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முன்னாள் அதிபர் அமரர் ச. சண்முகலிங்கம் அவர்களது குடும்பத்தாரால் பாடசாலையின் "பெயர்வளைவு அமைக்கப்பட்டது. எனது காலத்தில் பாடசாலைக்கான தூரநோக்கு, நோக்கக் கூறு தயாரிக்கப்பட்டது. பாடசாலைக்குச் சொந்தமான காணியின் வரைபடம் நில அளவைத் திணைக்களத்தால் அளக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பிரதி பெறப்பட்டது. தற்போது எமது வித்தியாலயம் ஓரளவு பௌதிக வள வசதிகள் கொண்ட நிறுவனமாகக் காணப்படுகின்றது.

## பாடசாலை வளங்களைப் பிரிவு ரீதியாக நோக்குவோம்

### அதிபர் காரியாலயம்

காரியாலய அளவு 20 X 10 அதிபர் மேசை, கதிரை, காரியாலயப்பாவனைக்கான கணனி, கணனி அச்சுப்பொறி, தொலைபேசி என்பவற்றைக் கொண்டுள்ளது.

### குடி நீர் சுகாதார வசதி

நீர்த்தாங்கி, மல கூடம் -2, சல கூடம் - 6 ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

### நூலகம்

நூலகமேசை 6 X 4 - 4, 6 X 2 - 3, நூலகக் கதிரை - 32 நூலக அலுமாரி - 2, புத்தகறாக்கை- 3, நூல்கள் - 1800 ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**ஒன்று கூடல் மண்டபம்**

ஒன்று கூடல் மண்டப அளவு - 70 X 30

**விஞ்ஞான அறை**

விஞ்ஞான அறை அளவு - 40 X 20

**கணனிக் கற்கை அறை**

கணனிக் கற்கை அறை அளவு - 20 X 20

12 கணனிகள் பொருத்துவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

**உயர்மட்டக் கற்பித்தல் செயற்பாடு**

Computer Printer - O. H. P, Screen.

Scanner, Laminatar Paper cutter, D. V. D Player

**விளையாட்டு வசதி**

மைதானம், கரப்பந்து உபகரண வசதி, வலைப்பந்து, உபகரண வசதி, மெய்வல்லுநர் விளையாட்டுக்கான உபகரண வசதி.

**உள்ளக விளையாட்டு**

கரம், டாம், சதுரங்கம்

**சிறுவர் பூங்கா**

ஊஞ்சல்கள், சறுக்கி, சீ - ஷோ

**இசைத்துறை**

சுருதிப்பெட்டி - 3, வயலின் -1, மிருதங்கம் - 1, இப்பாடசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கு அதிபர் ஆசிரியர்கள். மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரும் தத்தமது ஆற்றலுக்கு ஏற்ப ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டி அமைகின்றேன்.

நன்றி

**திரு. ந. பாலச்சந்திரன்,**

அதிபர்,

யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்.



# இதழாசிரியர் இதயத்திலிருந்து

யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய அன்னையானவள் தனது நூறாவது ஆண்டில் கால்பதித்து தனது பெருமையினை பெருவிழாவாகக் கொண்டாடுகின்ற இவ் வேளையில் நூறு அகவைகள் கல்விப்பணியாற்றிய இவ் வித்தியாலயத்தின் அடிச்சுவடுகளை ஒரு முறை திரும்பிப் பார்ப்பதற்குரிய ஒரு வரலாற்று ஆவணப்பதிவேடாக பல்வேறு சோதனைகளைக் கடந்து சாதனைகளினைத் தாங்கி மலர்கின்றாள் என்னும் பொழுது எனது அக மகிழ்விற்கு அளவேயில்லை.

இப்பாடசாலையின் பழைய மாணவி என்ற வகையிலும், முன்னைநாள் ஆசிரியர் என்ற வகையிலும் இம்மலரிற்கு மலராசிரியராக இருப்பதனையிட்டு எனது அகம் உவகையடைகின்றது. இம்மலரானது எமது வித்தியாலயம் சார்ந்துள்ள சைவசமய குருமாரது ஆசிச்செய்திகளுடனும், கல்வியியாளர்களது ஆசிச்செய்திகளுடனும் ஒய்வு நிலை ஆசிரியர்களின் (குறிப்பாக புலம் பெயர்ந்து வாழ்கின்ற) மனப்பதிவுகள், பழைய மாணவர்களது மனப்பதிவுகள், ஆக்கங்கள், ஆசிரியரின் ஆக்கங்கள், கல்வியியலாளர்களின் ஆக்கங்கள், மாணவர்களின் ஆக்கங்களையும், சாதனைகளையும் தாங்கி வருகின்றது.

இந்நூற்றாண்டு விழா மலர்வெளியீட்டுக்காக ஆசியுரை, வாழ்த்துச்செய்திகள், கட்டுரைகள் என்பவற்றை வழங்கி உறுதுணை புரிந்த அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறுகின்றேன்.

இம்மலர் வெளிவர முன்னின்று பல்வேறு வகைகளிலும் சுறுசுறுப்புடன் செயற்பட்ட மலர்க்குழுவினருக்கும் பழைய மாணவருக்கும் ஒத்துழைப்பு நல்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் இம் மலரிற்கான புகைப்படங்களை உரிய காலத்தில் தந்துதவிய சுவப்பிரதா ஸ்ரூடியோ உரிமையாளருக்கும், உரிய நேரத்தில் இம் மலரானது எமது கைகளில் அழகுடன் தவழுவதற்கு அச்சிட்டு தந்த குரு பிறிண்டர்ஸ் அச்சகத்தினருக்கும், மேலும் எம்முடன் ஒத்துழைத்து உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் மலர்க்குழு, விழாக்குழு சார்பாகவும், எமது வித்தியாலயம் சார்பாகவும் எனது இதய பூர்வமான நன்றிகளைக் கூறி மனம் கழிபேருவகை அடைகின்றேன்.

**திருமதி. க. சுந்தரசிவம்**
பழைய மாணவி
ஆசிரியர்.

# எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

சென்ற இடமெல்லாம் சிறப்பைத் தருவது கல்வி. இது மனிதருக்கு மிகவும் இன்றியமையாதது. ஆதி காலத்தில் குருகுலக் கல்வியாகத் தோன்றி திண்ணைப் பாடசாலையாக வந்தபோது வசதி படைத்த சிலரே கல்வி மான்களாக முடிந்தது. பின் கல்விச் சாலைகள் தோன்றி எல்லோரும் கல்விபெறும் வாய்ப்பு ஏற்பட்டது. சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாசாலை 1910 ஆம் ஆண்டு செட்டியார் வம்சத்தைச் சேர்ந்த இராமலிங்கம் கார்த்திகேசு என்பவரது காணியில் நொத்தாரிசு சுப்பிரமணியம் என்பவரது ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. நிறுவுநர் கார்த்திகேசு என்பவர் உதவி ஆசிரியராகவும் காரைநகர் களபூமியைச் சேர்ந்த கார்த்திகேயர் அதிபராகவும் நொத்தாரிசு சுப்பிரமணியம் முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டனர். ஆரம்பகாலத்தில் இப்பாடசாலையில் ஏழாம் வகுப்பு வரை வகுப்புக்கள் இருந்தன. 1923 ஆம் ஆண்டில் சைவவித்தியா விருத்திச் சங்கம் பொறுப் பேற்றது. பின் 1963 ஆம் ஆண்டு அரசாங்கப் பாடசாலையாக அரசால் அங்கீகரிக்கப்பட்டது. தற்போது இங்கு 11 ஆம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படுகின்றது. இந்தப்பாடசாலையில் தான் எனது தாயாரும் அவரது சகோதரிகளும் கல்வி கற்றனர். இக் கல்லூரி மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் பறாளாய் முருகனின் திருவிழாவின் போது சிரமதானப்பணி செய்து கோவிற் சுற்றுப்புறங்களைத் துப்புரவு செய்து வருகின்றார்கள். இக் கல்லூரி கடந்த காலங்களைப் போன்று நன்மாணாக்கர்ளை உருவாக்கி நமது கிராமத்திற்கும் மக்களுக்கும் நற் சேவையாற்ற வேண்டும். இதற்கு அதிபரும் ஆசிரியர்களும் ஒத்துழைக்க வேண்டும். இப்பாடசாலைமென்மேலும் சிறந்து விளங்க எனது மனப்பூர்வமான ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

**மு. பாலகுருசாமிசர்மா.**
ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி,
தேவஸ்தானம், பறாளாய்,
சுழிபுரம்.

# ஈசுர விநாயகர் தேவஸ்தானம்

மாணவர்களுக்கு அறிவுக்கண்களைத் திறப்பது வித்தியாலயம் ஆகும். (வித்தியா + ஆலயம்) எனவே பள்ளிக்கூடம் ஆயலத்திற்குச் சமமானது. அங்கே கல்வி புகட்டும் ஆசிரியர்கள் கடவுளுக்குச் சமமானவர்கள். செட்டி பள்ளிக்கூடம் என்றதும் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயமே யாவரதும் மனக்கண் முன்னே தோன்றும். பறாளாய் ஈசுர விநாயகப் பெருமான், முருகப்பெருமான், சாத்தாவோலைச்சிவபெருமான், பணிப்புலம் முத்துமாரி அம்மன், வீரபத்திரர், கண்ணகை அம்மன், போன்ற ஆறு தெய்வங்களின் ஆறு முகங்களும் இவ்வித்தியாலயத்தைச்சுற்றி காவல்புரிய ஆறுமுகவித்தியாலயம் தோற்றம் பெற்றுப் பெருமையுடன் விளங்குகின்றது. இவ்வாறான பெருமைக்குரிய வித்தியாலயம் இன்று வளர்ச்சியடைந்து புதுப்பொலிவுடன் தனது தூற்றாண்டு விழாவைக் காண்பதுவும் பெருமையே.

இது காரணமாக நூற்றாண்டு விழா மலர்வெளிவருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த வாடா மலரை மலர வைக்கும் விழாக்குழுவின் வேண்டுகோளை ஏற்று ஆசியுரை வழங்குவதோடு, முதற்கண் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கல்விகற்ற வித்தியாலயம், அத்துடன் ஆசிரியராகப் பணிபுரிந்த வித்தியாலயம் மேலும் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்ற வித்தியாலயம். இன்று இவ்வித்தியாலய நூற்றாண்டு விழா மலருக்கு ஆசியுரையும் வழங்க வைத்த வித்தியாலயம் இன்னும் வேண்டுமா? .......?....?. மறக்கவும் முடியுமா?..

எமது கிராமத்திலே ஆறுமுக வித்தியாலயம் சைவமும் தமிழும் வளர்த்ததுடன் பல அறிஞர்களையும், கல்விமான்களையும், நல்லாசிரியர்களையும், ஆன்மீகத்துறையினரையும், அரசியல் வாதிகளையும், அமைச்சரையும், பல்துறை சார்ந்த வல்லுநர்களையும் உருவாக்கியதோடு மட்டுமன்றி குறிப்பாக சமூகத்தில் நல்ல பண்புள்ள பிரஜைகளைக் காணவைத்த பெருமைக்குரியது.

எமது வித்தியாலயம் மென்மேலும் வளர்ச்சியடைந்து இன்னு பல கல்விமான்களையும், அறிஞர்களையும், சமூகத்திலே நல்ல பண்புள்ள மக்களையும் உருவாக்கி எமது கிராமத்திற்கும், நாட்டிற்கும் சேவை செய்ய வேண்டும் என்று சர்வவல்லமை பொருந்திய சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகரை வணங்குவதோடு ஆறுமுகவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா சிறப்புற மனமார வாழ்த்தியமைகின்றேன்.

*"வாழ்க வித்தியாலயம் வளர்க அதன் புகழ்"*

**சோழியூரான் பிறைசூடிக்குரு,**
பழைய மாணவனும், ஓய்வு பெற்ற ஆசிரியரும்,
சந்ததிப்பூசகரும்.



# செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

மனிதனைப் புனிதனாக்கும் அறிவாலயங்களே பாடசாலைகள். இருளை அகற்றி ஒளி தரும் பணியினை வழங்கும் பள்ளித்தலங்களைப் பேணுவது எம் கடனாகும். சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்" அகவை நூறு கண்டு பெருமை பெறும் நாளில் நல்வாழ்த்துத்தெரிவிப்பதில் ஆனந்தமடைகிறேன். நல்லை நகர் ஆறுமுக நாவலர் பெருமானின் சிந்தனைக்கு மதிப்புக் கொடுத்து ஊர் தோறும் சைவப் பாடசாலைகளைப் பல பெரியவர்கள் தோற்றுவித்தனர். ஆங்கிலேயர் ஆதிக்கத்துடன் போட்டியிட்டு எம் பண்பாட்டைப் பாதுகாக்க பாடசாலைகளே ஏதுவாக விளங்கின. அன்று சில செல்வந்தர்கள் வாணவேடிக்கையுடன் கூடிய திருவிழாவுக்கும், வேறு சில தற்பெருமை தரும் வைபவங்களுக்கும் சொத்துக்களைச் செலவு செய்தனர். இதே வேளை ஆக்கபூர்வமாகச் சிந்தித்து காலமுள்ள வரை பயன் தரும் காரியமாகக் கருதிப் பாடசாலை கட்டியவர்கள் இன்றும் வையத்தில் அழியா நிலை பெற்றனர். ஆறுமுக வித்தியாலயத்தின் பெருமை ஸ்தாபகர் அமரர் கார்த்திகேசு உபாத்தியாயர் அவர்கட்கு உரியது இப் பாடசாலையின் மேன்மைக்காக உழைத்த அதிபர்கள் ஆசிரியர்கள் நன்றிக்குரியவர்கள் இன்று நூற்றாண்டு விழாக்கால மதிப்பார்ந்த அதிபர் திரு. நமசிவாயம் பாலச்சந்திரன் அவர்கட்கும் ஆசிரியர்கட்கும் என் இனிய வாழ்த்துக்கள் உரித்தாகுக. நூற்றாண்டு விழாக்காலத்தில் கல்விகற்கும் மாணவச் செல்வங்களுக்கு என் இனிய நல்லாசிகள். சூரியன் சந்திரன் நிரந்தரமாக விளங்குவது போல் இவ்வித்தியாலயம் என்றும் நிலை பெற துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**திரு. ஆறு திருமுருகன்,**

தலைவர்,

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

## பணிப்புலம் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான
## இன்பராஜக்குருக்கள் அவர்களின்
## ஆசியுரை

யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாயலம் தனது நூற்றாண்டு விழாவை வெகு கோலாமாக கொண்டாடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஒரு மனிதனுக்கு கல்வி இன்றியமையாத கருவியாகும். அத்துடன் சமய நம்பிக்கை, கலை, பண்பாடு, விளையாட்டு என்பனவும் முக்கியத்துவம் பெறுகிறது.

இப்பாடசாலையில் கல்வி கற்று வெளியேறியோர் பலதுறை சார்ந்த உத்தியோகத்தர்களாக இருக்கின்றனர். இலை மறை சாய்போல் இருக்கும் மாணவர்களின் செயற்பாடுகள் வெளிக்கொணரப்பட வேண்டும். இங்கு கல்விச் செயற்பாடுகளில் முன்னிற்கும் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களின் விடா முயற்சியின் பயனாக மாணவர்கள் கல்வி, கலை விளையாட்டுகளில் முன்னேறி வருவதையிட்டு பேரானந்தம் அடைகின்றேன்.

நூற்றாண்டு காணும் இப்பாடசாலை கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்றும் ஆலமரம் போல் பல கல்வி மான்களை உருவாக்க வேண்டும் என்றும் எனது மனமுவந்த நல்லாசிகளை கூறிக்கொள்கின்றேன்.

**இன்பராஜாக்குருக்கள்**
(பழைய மாணவன்)

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



இவ் வருடம் நூற்றாண்டு விழாக்காணும் யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்திற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

இப் பாடசாலை செட்டியார் வம்சத்தைச் சேர்ந்த இராமலிங்கம் கார்த்திகேசு என்பவரது காணியில், நொத்தாரிசு சுப்பிரமணியம் என்பவரின் ஒத்துழைப்புடன் ஆறுமுகப்பாவலரின் நினைவாக ஆறுமுக வித்தியாலயம் என்ற பெயர் சூட்டப்பட்டு 1910 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. 1963 ஆம் ஆண்டுவரை தனியார் வசமிருந்த இப் பாடசாலை அவ் வாண்டில் அரசாங்கப் பாடசாலையாக உள்ளீர்க்கப்பட்டது. ஆரம்பத்தில் தரம் - 7 வரை இருந்த இப் பாடசாலை இன்று தரம் - 11 வரையான வகுப்புக்களைக் கொண்டு பல துறையிலும் சிறந்து விளங்குவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அன்று தொடக்கம் இன்றுவரை இப் பாடசாலை வரலாற்றில் கால் பதித்து அதன் உயர்விற்கும், கல்விச் சேவைக்கும் தம்மை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்களை இந் நன்நாளில் பாராட்டுவதுடன் நூற்றாண்டு விழாவில் வெளியிடப்படவுள்ள சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ் வித்தியாலயம் எதிர்காலத்தில் மேலும் பல சிறப்புக்களைப் பெற்றுப் புதுப்பொலிவுடன் விளங்கவும், தனது தரமான கல்விப்பணியால் உயர்ந்து, தரமான சமுதாய உருவாகத்திற்கு சீரிய வழியினைக் காட்டும் கலைக்கூடமாகத் திகழ வேண்டுமெனவும் இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

**திருமதி இமெல்டா சுகுமார்,**
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,
யாழ். மாவட்டம்.



## மாகாணக் கல்விப் பணிப்பாளரின்

## ஆசிச்செய்தி

நூற்றாண்டு விழாக்காணும் யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலை வெளியீடு செய்யும் சிறப்பு மலரூடாக வித்தியாசாலைச் சமூகத்திற்கு ஆசிகூறுவதில் பேருவகையடைகின்றேன். சுதேசிகளின் விழிப்புணர்வு காரணமாக இக்கிராமத்தில் சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயம் இன்று பெருவளர்ச்சி பெற்றுள்ளது.

இக்கிராமத்திற்கு நூற்றாண்டு நிகழ்வு ஒரு உத்வேகத்தினைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். கடந்த கால வரலாறுகளைக் கருத்தில் கொண்டு எதிர்கால வித்தியாலய வளர்ச்சிக்கு உரிய திட்டங்களை முன்வைப்பது நூற்றாண்டு விழாக்குழுவின் பொறுப்பாகும்.

கடந்த 100 வருடங்களாக பாடசாலை வளர்ச்சியில் உழைத்த அனைவருக்கும் மாகாணக்கல்வித்திணைக்களத்தின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இவ்வித்தியாலயம் இன்னும் பல நூற்றாண்டுகள் சீரிய வளர்ச்சி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ப. விக்னேஸ்வரன்,**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.



## தாபகரின் நோக்கத்தை நிறைவேற்றும் பாடசாலை

யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம் இப் பகுதியில் வாழ்ந்த பெரியோர்களால் இப் பகுதி மாணவர்களின் அறிவு கண்களைத் திறக்க ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலையின் முதலாவது அதிபர் அமரர் திரு.கார்த்திகேயர் தொடக்கம் இன்றுள்ள அதிபர் திரு. ந. பாலச்சந்திரன் வரை இப் பாடசாலை மாணவ வளத்தினால் தேய்ந்து போகாது காப்பாற்றப்பட்டு மாணவர்களுக்கு பொதுக்கல்வியை வழங்கி வருகின்றது. இப் பாடசாலையின் தாபகர்கள், கடமையாற்றிய அதிபர்களுக்கு தலைசாய்த்த வணக்கத்தை தெரிவிப்பதில் கடப்பாடுள்ளது. இப் பாடசாலையில் கல்வி கற்கும் ஏழை மாணவர்களின் அடைவுகளை மேம்படுத்த அதிபரும், ஆசிரியர்களும் அயராது உழைக்கின்றனர். இத் தன்னலங் கருதாத அர்ப்பணிப்பான சேவையை வழங்கும் அதிபர், ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இப் பாடசாலை சகல பௌதிக மனித வளங்களையம் பெற்றுத் தொடர்ந்தும் கல்வித் தொண்டாற்ற எனது வாழ்த்துக்கள்.

**வே. தி. செல்வரத்தினம்,**

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

யாழ்ப்பாண மாவட்டம்.



# நூற்றாண்டு காணும் கல்விச்சாலை

சுழிபுரம் வடக்கில் நூறு ஆண்டு காலம் கல்விப்பயிர் வளர்த்து வந்த ஆறுமுக வித்தியாலயம் இவ்வாண்டு தனது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடி மகிழ்கிறது.

ஒரு வித்தியாலயத்தின் வரலாற்றில் ஒரு சதாப்த காலமென்பது வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய காலப்பகுதியாகும். இந் நீண்ட காலப்பகுதியில் இவ் வித்தியாலயம் பல்லாயிரம் நன் மாணார்க்களை உருவாக்கியிருக்கும் பல சாதனைகளைப் படைத்திருக்கும்.

சுழிபுரம் வடக்கில் கல்வித் தேவையுள்ள இடத்தில் இவ் வித்தியாலயத்தின் அமைவுக்கென வித்திட்ட முன்னோர்கள், அதனைவளர்த்துப் பெருவிருட்சமாக்கிய பெரியோர்கள், இன்னல்கள் வந்துற்ற போதெல்லாம் வைரத்தூண்களாக நின்று இதன் பெருமையைக் காத்த பேரறிவாளர்கள், இதன் பெருமையை இன்றும் காத்து நிற்கும் பாடசாலைச் சமூகத்தினர் என அனைவரும் என்றும் நினைவிற் கொள்ளத்தக்கவர்கள்.

இவ்வித்தியாலயத்தின் தற்போதைய கட்டமைப்பில் சிறந்த ஓர் அதிபர் கடமையில் உள்ளார். அர்ப்பணிப்பு மிக்க சேவையை வழங்கும் ஆசிரியர் குழாம் ஒன்று உள்ளது. வித்தியாலயத்தின் பெருமையைக் காத்திடும் மாணவர் குழாம் ஒன்று உள்ளது. இதன் வளர்ச்சியிலும் மேன்மையிலும் பெருமை கொள்ளும் பெற்றோர்கள் உள்ளனர். அவ்வகையில் இவ் வித்தியாலயம் சிறப்பிடம் பெறுகிறது.

எமது கல்விச் சூழலில், மாணவரை கைகாட்டி அழைக்கும் எத்தனையோ பிரபல்யம் மிக்க பாடசாலைகள் உள்ளன. இவ்வழைப்புக்களைப் புறக்கணித்து இவ்வித்தியாலயம் தமது வாழ்வில் ஒளியேற்றும் என்ற தளராத நம்பிக்கையுடன் இவ் வித்தியாலயத்தை நோக்கி வருகை தரும் மாணவர் குழாம் ஒன்று உள்ளது. இவர்களின் நம்பிக்கைகள் வீண்போகக்கூடாது. கல்விச் சாதனைகளைப் பொறுத்தவரை இவ்வித்தியாலயம் பல படிகளைக் கடக்க வேண்டியுள்ளது.

இவ்வித்தியாலய நூற்றாண்டுப் பெருமையில் மகிழ்வுறும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் மகிழ்வில் நானும் உரிமையுடன் பங்கேற்கின்றேன். இவ் வித்தியாலயம் நிலைத்திருக்கவும், மேன்மேலும் மேன்மையுறவும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. ஆ. ராஜேந்திரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்

# வலி மேற்கு பிரதேசசெயலரின்

## ஆசிச்செய்தி

தொன்மையானதும், வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான பழம்பெரும்பதி சோழியபுரம் ஆகும். இங்கு சிறந்து மிளிரும் கல்விக்கு அடித்தளமாக இருப்பது பாடசாலைகளாகும். இங்குள்ள பாடசாலைகளில் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் இவ்வாண்டு தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது பெருமைக்குரிய விடயமாகும். இயற்கை வனப்பு நிறைந்த இனிய கிராமிய மணம் கமழும் பிரதேசத்தில் செயற்படும் இப்பாடசாலை சுழிபுரம் பிரதேசத்தின் பல்வேறு கிராமத்துப் பிள்ளைகளினதும் அறிவாற்றல் விருத்திக்குப் பெருமளவில் உதவுகின்றது. ஏற்றத்தாழ்வு இன்றிச் சமநிலை பேணிக் கல்வியைச் சிறப்புற வழங்கிவருவது பாராட்டுதற்குரியது. இப்பாடசாலையின் அதிபர், மற்றும் ஆசிரிய ஆசிரியைகள் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவது இதன் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றது. இப்பாடசாலை சகல வளங்களும் பெற்றுக் கல்விப்பணியாற்ற எனது ஆசியை வழங்குகின்றேன்.

**திருமதி. தேவநந்தினி பாபு**

பிரதேச செயலர்,

வலி மேற்கு,

சங்கானை.

# நூறு வயதில் தடம் பதிக்கும் சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலயம்



சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் நூறாவது ஆண்டில் காலடி வைப்பது கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 1910 இல் உயர்திரு இராமலிங்கம் கார்த்திகேசு உயர்திரு சுப்பிரமணியம் என்பவர்களது பரோபகாரச் சிந்தனையில் எழுந்த இவ்வித்தியாலயம் ஆறுமுகப்பாவலரின் நினைவாக ஆறுமுகம் வித்தியாலயம் எனப் பெயர் பெற்றுச் சிறப்புற்றது. ஆரம்பகாலத்தில் 7 ஆம் வகுப்பு வரை இருந்த இவ் வித்தியாலயம் இன்று தரம் 11 வரை உயர்ந்து நிற்கின்றது. அமைதியான சூழலைக் கொண்ட இவ் வித்தியாலயம் அமைதியான ஒரு அதிபர் திரு. ந. பாலச்சந்திரன் அவர்களின் காலத்தில் நூற்றாண்டு விழாவைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இவ் வித்தியாலயத்தின் மாணவர்கள் சகல துறைகளிலும் ஆற்றல் பெற்று விளங்குவது அதிபர், ஆசிரியர்களின் கடமை உணர்வுகளைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. மாணவர்கள் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்குடனும் நடந்து கொள்வதைப் பல முறை எனது நிர்வாகத்தின்போது அவதானித்துள்ளேன். அதிபர் திரு பாலச்சந்திரன் அவர்களும் யாவருடனும் அன்புடனும் பண்புடனும் பழகித் தனது வித்தியாலயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிர்வாகி. தானும் தனது வித்தியாலயமும் என்ற தன்மையில் அமைதியாகக் கடமைபுரியும் திரு. பாலச்சந்திரன் அவர்களின் காலத்தில் இவ் வித்தியாலயம் நூற்றாண்டு விழாவைச் சந்தித்ததையிட்டு நான் உள்ள உவகையுடன் வாழ்த்துகின்றேன். இவ் வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் இவ் வித்தியாலய உயர்விற்காக உழைத்த ஓய்வு பெற்ற அதிபர் ஆசிரியர்களையும் இந்நேரத்தில் நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றேன். இவ் வித்தியாலயம் மேலும் பல சிறப்புகளைப் பெற இறைவனை வேண்டி இன்றைய அதிபர் ஆசிரியர்களை மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**றெஜினா இருதயநாதன்,**
ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.



# ஆசிச் செய்தி

அந்நிய காலனித்துவ ஆட்சி நிலவிய காலகட்டத்தில் சைவத்தமிழ்ப் பண்பாட்டுச் சூழலை மாசுறாது பேணிப்பாதுகாத்துக்கொள்ளும் நோக்குடன் 1910 ஆம் ஆண்டில் யாழ்குடா நாட்டில் பரவலாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றாக யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலை விளங்குகின்றது.

அன்றைய காலகட்டத்தில் சமூகப்பற்றும், தீர்க்கதரிசன நோக்கும் கொண்ட சுதேசிய பண்பாட்டினை நேசிக்கின்ற சான்றோரின் உயரிய சிந்தனையின் பேறாய் "கல்வியே கருந்தனம்" எனும் மகுட வாசகம் தாங்கித் தோற்றம் பெற்றதே இக்கல்விக்கூடமாகும்.

"எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என்ற ஆன்றோர் வாக்கின் முக்கியத்துவத்திற்கிணங்க மூடப்பழக்கவழக்கங்களில் அதீத நம்பிக்கை கொண்டிருந்த சமூக அங்கத்தவர் மத்தியில் அறிவுக் கண்களைத் திறந்து அறிவியல் ஒளி வீசச் செய்த பெருமையினை இவ்வறிவாலயம் கொண்டுள்ளது. இங்கு கல்வி கற்ற கணிசமான அளவு மாணவர்கள் கடந்த மூன்று தசாப்தகால அமைதியின்மையின் போது புலம் பெயர்வுக்குள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் எண்ணத்திலும் செயலிலும் இரண்டறக் கலந்த நினைவுச் சுடராக இவ் ஆலயம் விளங்கிவருகின்றது. அவர்களின் அளப்பரிய ஆதரவு, அன்பளிப்புக்களால் இந் நூற்றாண்டு விழா சிறப்புற்று மெருகு பெறுகின்றது.

கடந்த ஓர் நூற்றாண்டு வளர்ச்சிப் போக்கில் சமயம், கலை, இலக்கியம், பண்பாடு, வாழ்வியல் முறை, அறிவியல், இயற்கைச்சூழலியல் போன்ற துறைகளில் ஏற்பட்ட நல்மாற்றங்களை எதிர் காலச்சந்ததியினருக்கு செப்புகின்ற சீர்மிகு நல் வழி காட்டும் வரலாற்றாவணமாக இந் நூற்றாண்டு மலர் பூத்துக்குலுங்கி என்றும் நன் மலராக மணம் பரப்பி நிற்க வேண்டுமென எனது நல்லாசிகளை நல்குகின்றேன்.

**சு. சுந்தரசிவம்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்.
நிர்வாகம்,
வலிகாமம் கல்வி வலயம்.



## முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர்
## திரு. அ. தற்பரானந்தன் அவர்களின்
# ஆரம்பவரலாற்றுச் செய்தியும் வாழ்த்தும்

சைவப்பிள்ளைகள் சைவசமயச் சூழலிலேயே கற்க வேண்டுமென்பது யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் கருத்து. சைவப்பிள்ளைகள் புறமதப் பாடசாலைகளில் கற்பதனால் தமது சமய அறிவு, ஒழுக்கங்களை மறப்பதுடன் மதமாற்றத்திற்கும் உட்பட்டனர். இதனால் செல்வந்தர்களான சைவப்பெரியோர்களே! உங்கள் உங்கள் ஊர்கள் தோறும் பாடசாலைகளை நிறுவுங்கள் என வேண்டுகோள் விடுத்தார். தானும் முன் உதாரணமாக இந்தியாவில் சிதம்பரத்திலும், இலங்கையில் யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையிலும் சைவப்பிரகாசவித்தியாசாலைகளை நிறுவினார். இவரது வேண்டுகோளை ஏற்றோர் கோப்பாய், இணுவில், கந்தரோடை, புலோலி, நல்லூர் - கந்தர்மடம் ஆகிய இடங்களில் சைவத்தையும் தமிழையும் வளர்க்கக் கூடியதாக பாடசாலைகளை நிறுவினர். மேலும் நாவலரின் எண்ணத்தை நிறைவேற்றவே சேர்.பொன்.இராமநாதன், கௌரவ.சு.இராசரத்தினம், சேர்.வைத்திலிங்கம் துரைச்சுவாமி, திரு.மு.சி. இராசரத்தினம், சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் போன்றோர் கூடிச் சைவவித்தியாவிருத்திச்சங்கத்தை ஸ்தாபித்தனர். இச் சங்கமே இலங்கையின் பல பாகங்களிலும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நிறுவி மிஷனரிகளின் சூழ்ச்சி வலையில் வீழாமல் சைவத்தமிழ்ச் சிறார்களைக் காத்தது என்றால் மிகையாகாது.

சைவச்சான்றோர் வாழும் சுழிபுரம் என்னும் கிராமத்தில் செட்டியார் குடும்பத்தில் இராமலிங்கம் என்னும் பெரியார் இருந்தார். அவரது மகன் கார்த்திகேசு என்பவர் தனது சொந்தக் காணியில் நொத்தாரிசு சுப்பிரமணியம் என்பவரது உதவி ஒத்தாசையுடன் ஒரு பாடசாலையை நிறுவினார். திரு. சுப்பிரமணியம் அவர்களின் பேரன் ஆறுமுகப்பாவலர் என்னும் சைவப்பெரியாரின் பெயரையே இப் பாடசாலைக்குச் சூட்டவேண்டுமென விரும்பிச் சுழிபுரம் ஆறுமுகவித்தியாசாலை எனவும் பெயரிட்டனர். இஃது 1910 ஆம் ஆண்டு நடைபெற்ற கால் கோள்விழா திரு.சுப்பிரமணியம் அவர்களே இப் பாடசாலையின் முகாமையாளராக நியமிக்கப்பட்டார். திரு. இ. கார்த்திகேசு அவர்கள் முதலாவது தலைமை ஆசிரியராக இருந்து அருந்தொண்டாற்றினார். பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன. முகாமையாளர் திரு. சுப்பிரமணியம் காலமானார். இதன் பின் 1923 ஆம் ஆண்டு இவ்வித்தியாசாலையைச் சைவவித்தியாவிருத்திச் சங்கமுகாமையிடம் ஒப்படைத்தனர். சங்கத்தின் நிர்வாகத்தில் பாடசாலை மேலும் வீறு நடைபோட்டு வளர்ந்து வந்தது.

ஆரம்பத்தில் பாலர் கீழ்ப்பிரிவில் இருந்து ஏழாம் வகுப்புவரை இருந்த இப்பாடசாலை தரம் பதினொன்று வரை உள்ள சிரேஷ்ட பாடசாலையாகத் தரம் உயர்ந்தது. திரு. மு. விருத்தாசலம் அவர்கள் அதிபராக இருந்தபோது வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஆ. தியாகராசா அவர்கள் ஒதுக்கிய நிதிமூலம் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டது. இவர் ஓய்வு பெற்ற பின் திரு. சண்முகலிங்கம் அதிபராக இருந்து சேவையாற்றி வந்தார். 1995

அக்டோபரில் இடப்பெயர்வு ஏற்பட்ட போது அதிபர் வன்னிக்குச் சென்று விட்டார். சிரேஷ்ட ஆசிரியராக இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றிய திரு. ந.பாலச்சந்திரன் அதிபர் பொறுப்பினை ஏற்று நடாத்தினர். திரு.ந.பாலச்சந்திரன் "சைவசித்தாந்தபானு" இலக்கணவித்தகர் இ. நமச்சிவாயதேசிகர் அவர்களின் புத்திரன் ஆவார். இவரது காலத்தில் பாடசாலை பல துறைகளிலும் வளர்ச்சி பெற்று வந்தது. பாடசாலைக்கெனச் சைவவித்தியா விருத்திச்சங்கம் பெற்ற வீதியின் மேற்கே உள்ள காணி பயன்படுத்தப்படாதிருந்தது. திரு. ந. பாலச்சந்திரன் அதிபரான பின்பே அக்காணி துப்புரவு செய்யப்பெற்று இல்லமெய்வல்லுநர் போட்டியும் அதில் நடத்தப் பெற்றது. மேலும் அதிபர் தானே முன்நின்று கரப்பந்தாட்டம், வலைப்பந்து ஆகியவற்றுடன் ஏனைய தடகளப்போட்டிகளையும் மாணவர்களுக்குப் பயிற்றினார். இதனால் கோட்ட, வலய மட்டங்களில் இப்பாடசாலை பரிசுகளையும் பெற்றது. அத்துடன் தொண்டுபடும் செயல்முறையிலும், பண்ணிசை, நீதிநூல் மனனப்போட்டிகளிலும் மாணவர்களை உற்சாகப்படுத்திப் பரிசில் பெறவைத்தனர். அதிபரும் ஆசிரியர் குழாமும் சிறப்பாக வளர்ந்து வந்த இப் பாடசாலை சைவவித்தியாவிருத்திச் சங்க இலட்சியங்களை நிறைவேற்றித் தற்போது நூறு ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளமை பெருமகிழ்ச்சிக்குரியது. மேலும் இப் பாடசாலை வளர்ந்து இப்பகுதி மாணவர்களுக்குப் பயன்பெற உதவுவதாக. காலப்போக்கில் மகா வித்தியாலயமாக உயர்ந்து சீரிய பணிகளைச் செய்ய வாழ்த்துகின்றேன். ஆறுமுகநாவலர் ஐயாவின் கனவுகளும் நனவாகும். அதுவே ஐந்தாம் குரவர் எனப்போற்றப்படும் ஐயாவுக்கு நாம் செய்யும் பிரதி உபகாரமாகும்.

*வாழ்க சுழிபுரம் ஆறுமுகவித்தியாசாலை*
*வளர்க அதன் தொண்டு.*

**அ. தற்பரானந்தன்.**
முன்னாள் சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
துணைத் தலைவர், சைவவித்தியாவிருத்திச் சங்கம்.

கந்தரோடை,
சுன்னாகம்.
2010.10.02

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின்

## ஆசியுரை

பண்பாட்டுப் பாரம்பரியத்தில் கல்வி வழங்குவதற்காக எழுந்த ஒப்பற்ற நிறுவனங்களில் பாடசாலைகளது தோற்றம் விதந்துரைக்கப்பட வேண்டிய தொன்றாகும். நூற்றாண்டு கொண்டாடும் கல்வி நிறுவனம் ஒன்று அது தன் பதிவுகளை மலர் ஒன்றின் மூலம் வெளிக்கொணரவுள்ளமையை அறிந்து அதற்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இம்மலரானது பாடசாலையின் அகப்புறச் சூழல்களினை மையமாகக் கொண்டு வரலாற்றுப்பதிவுகளை நிகழ்காலத்தில் நிலைநிறுத்தி எதிர்காலத்தின் நல்ல வாய்ப்புக்களுக்கு வழிகோலும் என்பதில் ஐயமில்லை. இம் மலர் ஆழம்மிக்க கனதியான விடயங்களை கட்டுரையாக உள்ளடக்கி வெளிவருவது வரவேற்கத்தக்கது. இவ்வகையில் நல்ல பதிவுகளை மலரின் ஆக்கங்களாக்கி வெளிவர வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**துரை எங்கரசு**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சங்கானைக் கல்விக் கோட்டம்.

# வாழ்த்துச் செய்தி

யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலயம் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வரலாற்றுப் பெருமை மிக்க சுழிபுரம் கிராமத்திலே 1910 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று நூறு ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றது.

ஒரு பாடசாலையானது நூறு ஆண்டினைக் கடந்து நிற்பது சாதாரண விடயமல்ல. காலஓட்டத்தில் எத்தனையோ பாடசாலைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துள்ளன. இப்பாடசாலை கடந்த காலங்களில் பல நெருக்கடிகளைச் சந்தித்த போதிலும் அவற்றிற் கெல்லாம் முகங் கொடுத்து இன்று இப் பிரதேசத்தில் நிமிர்ந்து நின்று தன்னாலான சேவையினை இப்பகுதி மக்களுக்கு ஆற்றிவருகின்றது. எதிர்காலத்திலும் இப்பாடசாலை கல்விச் செயற்பாடுகளிலும் ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பல சாதனைகளைப் படைத்து இப் பிரதேச மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

A. V. **கணேசலிங்கம்**
முன்னை நாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர்.

# ஆசி உரை

இலங்கையில் உள்ள ஊர்களை அவதானிக்கும் போது சமய ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் முக்கியம் பெறும் இடங்கள் ஒரு சிலவே உள்ளன. இந்த வகையில் யாழ்குடா நாட்டின் வடமேற்கிலுள்ள சுழிபுரம் கிராமம் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இக்கிராமத்தின் கரையோரத்திலுள்ள திருவடிநிலை, ஜம்பு கோளப்பட்டினம் என்பன இலங்கை வரலாற்றுடனும் சமய நடவடிக்கையுடனும் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. காத்தற்கடவுளாகிய மகாவிஷ்ணு கால்பதித்த இடமே திருவடிநிலை, பௌத்த பிக்குணி சங்கமித்தை வெள்ளரசமரக்கன்றுடன் வந்திறங்கிய இடமே ஜம்புகோளத்துறைமுகம். சங்கமித்தாவை வரவேற்பதற்கு அன்றைய இலங்கை மன்னன் தீசனும் யாழ்ப்பாண அரசன் மளுவனும் தங்கியிருந்த இடமே தீசமளுவ(திசைமழை) இக் கரையிலுள்ள சம்புநாத ஈசுவரரை வழிபாடு செய்வதற்கென சோழ இளவரசிகள் தங்கியிருந்த இடமே இன்றைய பறாளாய்பகுதி சோழ நாட்டின் பூம்புகார் நகரிலிருந்து இங்கு வந்த காவற்றெய்வம் கண்ணகியின் உறவினர்கள் அமைத்த குடியிருப்பே இன்றைய சுழிபுரம்.

இன்று சுழிபுரம் என்ற சொல் பரந்து விரிந்த ஒரு பகுதியை அடக்கி நின்ற போதும் அதன்மையப்பகுதி கண்ணகித் தெய்வம் நிலை கொண்டுள்ள ஆறுமுகவித்தியாசாலைப் பகுதியே காணப்படுகிறது. இவ்வாறு வரலாற்றுப் பெருமையும் சமயமுக்கியத்துவமும் பெற்று அமைதியும் அழகும் ஒருங்கே கொண்டுள்ள சுழிபுரத்தின் ஆறுமுகவித்தியாசாலை தனது நூறாவது ஆண்டில் கால்பதித்து நிற்கிறது.

இப்பாடசாலை அன்று தொட்டு இன்றுவரை பல சவால்களுக்கு மத்தியில் எதிர்நீச்சலடித்து நிலைபெற்று நிற்கிறது. விக்ரோறியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்து, பண்டத்தரிப்பு மகளிர், வட்டு இந்து போன்ற கல்லூரிகளின் சவால்களை காலத்துக்குக் காலம் எதிர் நோக்கி வந்துள்ளது.

செட்டிமார்கள் தமது பிள்ளைகளுக்காக இதனை ஆரம்பித்த போதும் சுழிபுரம் கிழக்குப் பகுதி மக்களே இங்கு பெருமளவில் கல்வி பயின்றனர். ஆனால் ஒரு கட்டத்தில் அவர்கள் விக்ரோறியாக் கல்லூரியை நாடிச் சென்று விட பணிப்புல மக்கள் கைகொடுத்து இதனைக் காப்பாற்றி வைத்தனர். நல்நிலை நோக்கிச் சென்று கொண்டிருந்த இப் பாடசாலை நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இப் பகுதி மக்கள் வெளிநாடுகளை நோக்கி குடிபெயரத்தொடங்கினர். தங்கியிருந்த மாணவர்களை ஏனைய பாடசாலைகள் தம்வசம் ஈர்த்துக்கொண்டன. இதனால் பாடசாலையின் மாணவர் தொகை பெருமளவில் வீழ்ச்சி காணத் தொடங்கியது.

என்ன தான் தடங்கல்களும் சவால்களும் ஏற்பட்ட போதும் காவல் தெய்வம் கண்ணகி, சம்புநாத ஈஸ்வரர், ஈசுவர விநாயகர், பறாளாய் முருகன் போன்ற தெய்வங்களின் அருட்பார்வை இப்பாடசாலை மீது இருப்பதால் இவ்வாறான பின்னடைவுகள் தற்காலிகமானவையே. இதன் எதிர்காலம் ஒளி மயமானதாக விளங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இவ்வாறான ஒரு பாடசாலையின் நூற்றாண்டு விழாவிற்கு ஆசியுரை கூறக்கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் மிகவும் மகிழ்கின்றேன். இந்த வாய்ப்பை வழங்கிய பாடசாலையின் விழாக்குழவினருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கல்லூரி சீரும் சிறப்பும் பெற்று பெருவாழ்வு பெற எனது உளமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**திரு. நா. சண்முகசுந்தரம்**
ஓய்வு நிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
சங்கானைக் கோட்டம்.

## ஊக்கமுடன் செயற்பட்டு உயர்வுகள் பலகாண

நூறாண்டு காலம் கல்வி மணம் வீசி இன்று அதன் மலரை முகிழ்விக்கும் யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் தன் கிராமத்து சிறார்களின் சுடர் விளக்காகத்திகழ்கின்றது. இவ் வித்தியாலயத்தின் பின் புலத்தை நன்கு உணர்ந்தவன் என்ற வகையில் அதன் எதிர்காலச் சிறப்பிற்காக ஆசி வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

சுழிபுரம் கிராமத்தின் செட்டியார் வழிவந்த செம்மல்கள் தம் நல்லெண்ணத்தின்மூலம் தம் எதிர்கால சந்ததியின் பொக்கிஷமான கல்வியை பேணிப்பாதுகாத்து வளர்க்கும் முயற்சியால் தரம் ஏழு வகுப்புடன் இவ் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று பல்வேறு வளர்ச்சிப்படிகளைத் தாண்டி தரம் 11 வகுப்பு வரை கல்விபோதிக்கும் வித்தியாலயமாக வளர்ந்து நிற்கின்றது. இன்று இவ் வித்தியாலயத்தின் அதிபர் கதிரையை அலங்கரிப்பவர் இவ் வித்தியாலயத்தின் பின் புலத்தை நன்கு அறிந்தவர். வித்தியாலய வளர்ச்சிக்கு நடைமுறைச் சாத்தியமான விடயங்களை எடைபோட்டு அதன் பொருத்தப்பாட்டை உணர்ந்து படிப்படியாக செயற்பாடுகளை முன்னெடுப்பதில் கைதேர்ந்தவர். சூழஉள்ள வளம் மிக்க கல்விச்சாலைகளின் பல்வேறு சவால்களை முகங்கொண்டு இன்றைய வளர்ச்சியை எட்டப்பாடுபட்டவர். இதன் மூலம் இன்று இவ் வித்தியாலயம் பல்துறை வளர்ச்சியைக் கண்டு நிற்கின்றது. தொடர்ந்தும் அதிபர் காட்டும் பாதையில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் தம்மையெல்லாம் இணைத்து ஒருமுகமாக ஊக்கமுடன் செயற்பட்டு உயர்வு பல காண இறையருள் துணைக்கொண்டு ஆசியுரைக்கின்றேன்.

**திரு. சி. செல்லையா,**
முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சங்கானைக் கோட்டம்.

# போஷகரின் ஆசிச்செய்தி

சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலயம் தனது நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடுவது மிகவும் போற்றுதற்குரியதாகும். இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவனாகிய யான், இந்நூற்றாண்டு விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வரலாற்றுப் பெருமை மிக்க திசமழைக் கண்ணகை அம்மன் ஆலயத்தின் முன்னிலையில் அமைந்துள்ள இவ் வித்தியாலயம் தன்னலமற்ற அதிபர்களதும் ஆசிரியர்களதும் சிறப்பான சேவையால் அன்று தொட்டு இன்றுவரை சீரான கல்விப்பணியைத் தொடர்ந்து செய்து பல கல்விமான்களை உருவாக்கி வருகிறது. இங்கு கற்கும் மாணவர்களது திறமைகள், மாகாணமட்டப்போட்டிகள் வரை சென்று பெற்ற வியத்தகுவெற்றிகளால் வெளிக்கொணரப் பட்டமை குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாது சிறந்த கல்வியறிவையும் நற்பண்புகளையும் பெற்ற இவ்வித்தியாலயமாதாவின் மாணவமணிகள் அரச உத்தியோகங்களிலும் மிகமிக உயர்ந்த பதவிகளில் இன்றும் பணியாற்றிவருவது இக்கல்விச்சாலைக் கலைத்தெய்வத்தின் மாபெருங்கருணையாகும்.

அன்று தனது ஆரம்பக்கல்வியைப் பெற்றவரும் வைத்திலிங்கம் இராசேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியுமாகிய திருமதி தவபவானி சிவராசா அவர்கள் இன்று இலங்கை கல்வி நிர்வாக சேவை (S.L.E.A.S) பரீட்சையில் சித்திபெற்று கொழும்பில் உள்ள கல்வி அமைச்சு நிர்வாகப் பணிமனையில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி வருவது நாமெல்லோரும் பெருமை கொள்ளக் கூடிய விடயமாகும்.

இவ்வாறு வருங்கால மாணவ சமுதாயம் பல வழிகளிலும் உயர்வடைந்து இக்கல்விச்சாலையின் மங்காப்புகழை எட்டுத்திக்கும் எட்டச் செய்வதற்கு எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசி கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

"கேடுஇல் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடு அல்ல மற்றை அவை."

"சிவாயநம"
திசமழை,
சுழிபுரம்.

**ம. செல்லையா.**
(ஓய்வு பெற்ற திட்டமிடல் உத்தியோகத்தர்,
வலிகாமம் கல்வி வலயம்)

# வாழ்த்துச் செய்தி

சுந்தரப்பதியாம் சுழிபுரத்தில் நாற்றிசையும் ஆலயங்களும் அறிவுக் கூடங்களும் குறைவின்றிக் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு அறிவுக்கூடந்தான் இன்று நூற்றாண்டு விழாக்காணும் சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலயம்.

இவ் வித்தியாலயம் திரு இ. கார்த்திகேசு அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு இன்று நூற்றாண்டுகள் கடந்து கல்விச்சேவை வழங்கும் இப்பாடசாலையில் சுழிபுரம் கிராமமக்களும் அயற்கிராம மக்களும் கல்வி கற்று உலகின் பல பாகங்களிலும் சிறந்து விளங்குகின்றனர். முன்னாள் தபால் தந்தி தொலைத் தொடர்பு அமைச்சர் திரு செ. குமாரசூரியர் இப்பாடசாலையின் பழைய மாணவன் ஆவார். இத்தகைய பெரியோர்களை உருவாக்கிய இப்பாடசாலை இன்னும் பல நூற்றாண்டுகள் கல்விச்சேவை புரிய வேண்டும் என்று இறைவனை வேண்டுவதுடன் இந்நூற்றாண்டு விழாவையொட்டி வெளிவரும் மலர் சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன்.

**திரு. சி. புத்திசிகாமணி**

செயலாளர்,

பிரதேசசபை சுழிபுரம்.

19-11-2010.



# வாழ்த்துச் செய்தி

யாழ்மாவட்டத்தின் வலி மேற்குப் பிரதேசத்தில், சுழிபுரம் கிராமத்தின் வடபால் சைவமும் தமிழும் கமழுகின்ற சீலர்கள் வாழுகின்ற இடத்தில் "ஆறுமுக வித்தியாலயம்" எனும் அன்னை அரசோச்சுகின்றாள். இவ்வன்னையின் நூற்றாண்டு விழா மலரில் வாழ்த்துச்செய்தி வழங்கக் கிடைத்த வாய்ப்பை வரப்பிரசாதமென எண்ணி அகமகிழ்கின்றேன்.

எனக்கு அன்னையின் பாலுள்ள பூர்வீகத்தொடர்பே இவ்வாய்ப்பை அளித்தது. எனது தந்தையார் அமரர் வே. மகேஸ்வரன் தனது ஆரம்பக் கல்வியைக் கற்ற பாடசாலை, அவர் தனது இறுதி மூச்சுவரை ஆசிரியராகக் கற்பித்த பாடசாலை இது. எனது பேரனார் பொன்னம்பலச்சட்டம்பியார் அன்று வீடு வீடாகச் சென்று பிள்ளைகளைக் கூட்டி வந்து பல காலமாகக் கற்பித்த பாடசாலை இது.

இன்றும் "செட்டி பள்ளிக்கூடம்" என அன்பாக அழைக்கப்படும் அன்னை ஆறுமுக வித்தியாசாலை பல கல்வியியாலாளர்களையும், சிந்தனையாளர்களையும், மகான்களையும் இம்மண்ணில் பிரசவித்துள்ளது. முன்னைநாள் தபால்தந்தி தொலைத்தொடர்பு அமைச்சரும் பொறியியலாளருமான திரு. செல்லையா குமாரசூரியர் தனது ஆரம்பக்கல்வியை இங்கேயே கற்றார்.

வரலாற்றுப் பெருமைமிக்க கண்ணகை அம்மன் ஆலயமும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கமைந்த பாடல் பெற்ற ஈசுர விநாயகரும், ஆறுமுகப்பெருமானும் சூழஉள்ள தலத்தில் விளை நிலப்பரப்பும் இனிய அமைதியான சூழலும் அமையப்பெற்ற புண்ணிய பூமியிலே இப்பாடசாலை அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். இச் சூழலானது இன்று நாடும், உலகம் எதிர்பார்க்கின்ற, கல்வியூடாக நற்சமூகமொன்றினைச் சமைக்கின்ற, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகட்கு மிக உகந்த சூழலாகும்.


கடந்த கால நெருக்கடிச் சூழலிற் சிக்குண்டு எமது மக்கள் விதவைகள், அனாதைகள், ஊனமுற்றோர், வீடற்றோர், கைவிடப்பட்டோர், காணாமற்போனோர், கைது செய்யப்பட்டோர் எனச் சீரழிந்துள்ளனர். இதனால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள பண்பாட்டு, கலாசார சீரழிவுகள் பற்றி அன்றாடம் வெகுஜன ஊடகங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

இந்நேரத்தில், இம்மலரூடான ஆக்கங்கள் காலத்தின் தேவை கருதியதோர் ஆவணப்படுத்துகையாக அமையவேண்டும். மேலும், இம்மலரூடாகக் களமமைத்துக் கொடுத்து உதவிய அதிபர் அவர்களுக்கும், மற்றும் கல்விச் சமூகத்தவர்களும் பாராட்டுதற்குரியவர்கள். மாறிவருகின்ற உலகமயமாக்கல், மற்றும் நாகரிக மாற்றங்களில் நாமும் கலந்துகொண்டாலும், எமது சமூகத்திற்கே உரித்தான மனித விழுமியங்களை (NORMS) இழந்துவிடாத, ஆளுமைமிக்க, தன்னம்பிக்கை துணிவு கொண்ட சீரிய சமூகமொன்றைச் சமைக்க இந்நூற்றாண்டு விழா அடித்தளம் அமைக்கவேண்டும். கல்வியின் தூர நோக்கான அன்பு, கருணை, மனிதநேயமிக்க எதிர்காலச்சமூக அமைவிற்கு இவ்விழாவும், மலரும் பெரும் பங்காற்ற வேண்டுமென ஈசுர விநாயகரை இறைஞ்சி மனமார வாழ்த்துகின்றேன்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை"

**மகேஸ்வரன் – ஸ்ரீ முருகவேள்** (M.A)
கிராம அலுவலர்,
பணிப்புலம் J/176.

நிறுவனர்



திரு. இராமலிங்கம் கார்த்திகேசு

# நிறுவுனர் நினைவுக் குறிப்புக்கள்

இயற்கை எழில் மிக்க ஈழவள நாட்டின் வட பால் உள்ளது யாழ்ப்பாணம். இதன் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள வலிகாமம் கல்வி, செல்வம், விவசாயம் ஆகிய வளங்களைக் கொண்டது. இதில் முன்பு சோழபுரம் என்று அழைக்கப்பட்ட சுழிபுரம் கிராமம் உள்ளது. சுழிபுரம் என்றதும் திருவடி நிலைத் தீர்த்தமும், பறாளாய் விநாயகர், முருகன் ஆலயங்களும், கற்புக்கரசி கண்ணகி அம்பாள் ஆலயமும், சம்புநாதர் ஆலயமும் நினைவுக்கு வரும். இத்தகைய சிறப்புவாய்ந்த கிராமத்தின் வடபகுதியில் வாழ்ந்தவர்கள் செட்டியார்கள் என்று அழைக்கப்படும் சைவ வைசிக குலத்தவர்கள் ஆவர்.

இத்தகைய சைவ வைசிகர்களுள் மிகச்சிறப்புடன் வாழ்ந்தவர் கார்த்திகேசு இராமலிங்கம். இவருடைய மனைவி அன்னப்பிள்ளை. இத்தம்பதியினருக்கு மூத்த புதல்வராக 1885 ஆம் ஆண்டு பிறந்தவர்தான் பேரனின் பெயரைக் கொண்ட கார்த்திகேசு அவர்கள். இவர் பிற்காலத்தில் "செட்டியார்" என்றும் "தம்பையா வாத்தியார்" "தம்பையாச் சட்டம்பியார்" என்றும் எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டார். இவரே சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலையின் ஸ்தாபகரும் நீண்ட கால அதிபரும் ஆவார். இவர் சிறு வயதில் இருந்தே கல்வி கற்பதில் மிக்க ஆர்வம் கொண்டு, நன்கு கற்று சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். கல்வி அறிவைத் தான் பெற்றது போல் தனது கிராமத்திலுள்ள பிள்ளைகளும் பெறவேண்டும் என்ற ஆர்வத்தாலும், வித்தியாதானமே மேலானது என எண்ணியதாலும் 1905 ஆம் ஆண்டளவில் ஒரு பள்ளிக்கூடத்தை உருவாக்க எண்ணினார்.

ஒரு பாடசாலை உருவாக்கவேண்டும் என்ற தனது எண்ணத்தை சுழிபுரம் மேற்கில் வசித்து வந்த நண்பர்களாகிய நொத்தாரிசு சுப்பிரமணியம் அவர்களிடமும், சங்கரப்பிள்ளை என்பவரிடமும் கூறி ஆலோசனை கேட்டார். அவர்களின் யோசனைப்படி பாடசாலை கட்டுவதற்கு முதலில் நிலம் தேவைப்பட்டது. அதற்கு செட்டியார் கார்த்திகேசு தனது தந்தையார் முதிசமாக தனக்குக் கொடுத்த நிலத்தில் ஒரு பகுதியைப் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகக் கொடுக்க முன் வந்தார். உருவாக்கச் செலவின் ஒரு பகுதியை நொத்தாரிசு சுப்பிரமணியம் அவர்களும், சங்கரப்பிள்ளை அவர்களும் மற்றும் நண்பர்கள் பலரும் பகிர்ந்து கொண்டனர். கார்த்திகேசு அவர்கள் நிலத்தைக் கொடுத்தது மட்டு மல்லாமல் தன் இனத்தவர்களுடைய உதவியுடனும், தனது கடின உடல் உழைப்பாலும் பள்ளிக் கூடத்தை 1910 ஆம் ஆண்டளவில் உருவாக்கினார்.

மேலும் வகுப்புகளைத் தொடங்குவதற்கு வீடு வீடாகச் சென்று மாணவர்களைச் சேர்ப்பது, இலவசமாகப் பாடங்களைக் கற்பிப்பது, பாடசாலையை நிர்வகிப்பது போன்ற எல்லாப் பொறுப்புகளையும் கார்த்திகேசு அவர்களே ஏற்றுக்கொண்டார். தமிழுக்கும் சைவசமயத்துக்கும் அளப்பரிய தொண்டாற்றிய ஆறுமுகப்பாவலர் அவர்களின் ஞாபகமாக ஆறுமுக வித்தியாசாலை என்ற பெயர் பாடசாலைக்கு அளிக்கப்பட்டது.

நாளடைவில் மாணவர் எண்ணிக்கையும் கூடத்தொடங்கியது. கூடுதலான ஆசிரியர்களும் தேவைப்பட்டனர். பாடசாலையின் எல்லாத்தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குப் போதிய நிதி இல்லாத நிலை ஏற்பட்டது. இக்காலகட்டத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் பல பாடசாலைகளை நடத்திவந்ததை அறிந்த கார்த்திகேசு அவர்கள் தான் ஆரம்பித்த பாடசாலையையும் அச்சபையிடம் கையளித்தார். சைவ வித்தியா விருத்திச் சங்கம் முகாமைத்துவம் செட்டியார் கார்த்திகேசுஅவர்களையே தலைமை ஆசிரியராக நியமித்ததுடன் பல உதவி ஆசிரியர்களையும் நியமித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியது. இதற்கிடையில் கார்த்திகேசு அவர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கல்லூரியில் ஆசிரிய பயிற்சியையும் முடித்து தனது தகுதியையும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டார்.

பாடசாலையும் ஆறுமுக வித்தியாசாலை என்ற பெயருடனும் கிராம மக்கள் மத்தியில் "செட்டி பள்ளிக்கூடம்" என்ற செல்லப்பெயருடனும் தொடர்ந்து பணியாற்றியது. இராமலிங்கம் கார்த்தகேசு அவர்களும் ஓய்வுபெறும் காலம் வரை தொடர்ந்து தலைமை ஆசிரியராகப் பணியாற்றி 1953 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஓய்வுபெற்றார். அதன் பின் பாடசாலைகள் அனைத்தும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டதன் பயனாக இப்பாடசாலையும் அரசாங்க உதவியுடன் மேலும் வளர்ச்சியடைந்து இன்று அப்பகுதியில் உள்ள பிள்ளைகள் அனைவரும் பயன்பெறக்கூடிய முறையில் பணியாற்றுகிறது.

**வாழ்க வளர்க ஆறுமுக வித்தியாலயம்**

**ஸ்தாபகரின் மகள்**
**ஞானாம்பிகை இராமச்சந்திரன் – கனடா**

# முன்னாள் அதிபர்கள்



மு. கார்த்திகேசு
(1910-1925)



இ. கார்த்திகேசு
(1926-1950)


S. பசுபதிப்பிள்ளை
(1951-1965)



C. சரவணமுத்து
(1966-1968)



சு. நல்லதம்பி
(1968-1972)



சி. கந்தையா
(1972-1973)



மு. விருத்தாசலம்
(1974-1986)



ச. சண்முகலிங்கம்
(1986-1995)

## என்றும் உயர்வுடன் நின்று விளங்க எல்லோரும் பிரார்த்திப்போம்

அழகு ஜொலிக்கும் மரகதத்தீவு என வர்ணிக்கப்படுகின்ற ஈழவளநாட்டின் வடபாலுள்ளது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் என்றவுடன் எல்லோர் மனசிலும் முதற்கண் உதயமாவது செந்தமிழும் சிவநெறியும் கலந்த ஒரு பாரம்பரியம் மிக்க தமிழ்ச் சமுதாயமே. ஒரு காலத்தில் யாழ்ப்பாண மக்கள் தமது முக்கிய தொழிலாக விவசாயத்தையே கொண்டொழுகினர். இயற்கையோடு சேர்ந்த வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைக்குரிய சிலதொழில்களையும் மேற்கொண்டு வாழ்ந்தனர். விவசாயிகள் தமது ஓய்வு நேரத்தை ஆலயவழிபாட்டிலும் புராண இதிகாசங்கள் படிப்பதிலும் செலவிட்டு வந்தனர். இதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தவை அக்காலத் திண்ணைப் பாடசாலைகளே.

இத்தகைய பாரம்பரியம் மிக்க பிரதேசங்களுள் வலிகாமம் மேற்கும் ஒன்றாகும். யாழ்ப்பாணத்தில் திரு அவதாரம் செய்து புரட்சிகரமான முன்னோடியாகத் திகழ்ந்து இந்த நாட்டில் சைவசமயத்தையும் அதற்குக்கருவியாகிய தமிழ்மொழியையும் கட்டிக் காத்து வளர்த்த பெருமை நாவலர் பெருமானுக்கே உண்டு. அவர் விதைத்த விதை எல்லா இடங்களிலும் பரவிமுளை கொண்டது. அவ்வாறு முளைகொண்ட பிரதேசங்களுள் வலிகாமம் மேற்கும் ஒன்றாகும். வலிகாமம் மேற்கில் பாரம்பரியம் மிக்கவைகளும் தன்னிறைவு கொண்டவைகளுமான பல கிராமங்கள் உள்ளன. ஆங்கிலேயருடைய வருகை காரணமாக இக்கிராமங்களிலும் சில பாடசாலைகள் கட்டப்பட்டன. அதனால் ஆங்கிலக்கல்வி கற்கும் வாய்ப்புப் பலருக்கு ஏற்பட்டதுடன் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று உத்தியோகம் பார்க்கும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது. அதனால், தாமும் வாழ்ந்து இங்குள்ள பலரையும் வளமாக வாழவைத்தனர். எங்கிருந்தாலும் எத்தொழிலைச் செய்தாலும் அம்மக்கள் மொழி, சமயம் என்பவற்றில் பற்றுள்ளவராகவே வாழ்ந்து வந்தனர். அவற்றை எவ்வாறு வளர்க்கலாம் என்பதைச் சிந்தித்துச் செயல்வடிவம் ஆக்குவதற்குப் பெரும்பாடுபட்டு உழைத்தனர். இவ்வாறு உழைப்பால் உயர்ந்து உருப்பெற்று உன்னதநிலை அடைந்த கிராமங்கள் பல உள்ளன. அவற்றுள் சுழிபுரம் கிராமமும் ஒன்றாகும்.

இக்கிராமம் வலிகாமம் மேற்கிலுள்ளது. யாழ்நகரிலிருந்து மானிப்பாய் காரைநகர்வீதியில் பன்னிரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. பரந்த பரப்பளவைக் கொண்டதாகஉள்ளது. மக்கள் குடியிருப்புக்கும் அவர்கள் தொழிலுக்கும் வசதியான அமைவைக் கொண்டு விளங்குவது இக்கிராமத்தின் சிறப்பாகும். ஒரு மனிதனுடைய வாழ்க்கை வசதிக்கேற்றவகையில் சகல தொழில் சார்ந்தவர்களையும் இக்கிராமம் கொண்டு விளங்குவது மற்றுமோர் சிறப்பம்சமாகும். மக்கள் குடியிருப்பு, விவசாயத்துக்கான மருதநிலம், கிராமத்தின் மேற்குக்கரை எல்லையாகக்கடலும், கடல்சார்ந்த இடமும், இடையிலே காடு என்பன அமைந்து இக்கிராமம் ஒரு திட்டமிட்டு அமைத்த இயற்கைவளம் கொண்டதாக விளங்குகின்றது.

பண்டைக்காலத்தில் இக்கிராமம் இந்தியாவிற் சோழநாட்டுடன் தொடர்புள்ளதாக விளங்கிய தென்பதற்குச் சம்பில்துறைபோன்ற துறைமுகங்கள் ஆதாரமாக உள்ளன. அத்துடன் இந்தியாவுடன் தொடர்புடையதாக இருந்தமையை ஸ்ரீராமர் இலங்கைவந்து இறங்கி அவர் பாதம் நிலைத்த இடம் திருவடிநிலை என உள்ளது எனக்கூறும் வரலாறும் எடுத்துக் கூறுகின்றது.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமான வணிகத்தொடர்பை ஏற்படுத்தச் சம்பில்துறைமுகம் பயன்பட்டு இருந்தமையைச் சங்கமித்தையின் வருகை எடுத்துரைக்கின்றது. இந்திய நாட்டுச் செட்டிமார் இங்குவந்து குடியேறினர் என்பதை இக்கிராமத்தின் வடக்கே அமைந்துள்ள சம்புநாதேஸ்வரசிவன் ஆலயம் நிரூபணம் ஆக்குகின்றது. இக்கிராமத்தில் உள்ளவர்களுக்கும் இந்தியாவிலுள்ளவர்களுக்கும் திருமணபந்தம் ஏற்பட்ட வரலாறு இதனை நிரூபணமாக்கு கின்றது.

சுழிபுரம் கிராமத்தை எடுத்து நோக்கும் பொழுது அதன் சிறப்புக்களைப் பல கோணங்களிலிருந்து சிந்திக்கக் கூடியதாக உள்ளது. கிராம எல்லைகளிற் கோவில்களை அமைத்து அக்கால மக்கள் கிராமத்தைப் பாதுகாத்து வந்ததோடு இடுகாடு, சுடுகாடு என்பவற்றை மக்கள் குடியிருப்புக்குத் தொலைவிலேயே அமைத்துள்ளனர். கிராமத்தின் உள்ளே எல்லாத் தெய்வங்களுக்கும் கோவில்கட்டப்பட்டுப் பூசை வழிபாடு திருவிழாக்கள் என்பன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சின்னத்தம்பிப்புலவராற் பாடப்பெற்ற "பறாளை விநாயகர் பள்ளு" என்னும் நூல் ஈழத்திற் பள்ளுப்பிரபந்தம் ஆக்கப்பட்ட காலத்துக்கு முற்பட்டது இவ்வாலயம் என்பதை எடுத்துக்காட்டுவதுடன் கிராமத்தின் தொன்மைச் சிறப்பினையும் விளக்குகின்றது. இக்கிராமக்கோவில்களிற் புராணங்கள் படித்துப் பயன் சொல்லப்படுகின்றது. பறாளை விநாயகப்பெருமானுக்கு ஆக்கப்பட்ட தேரானது மிக்க கலைத்துவத்துடன் விளங்குவதோடு, தத்துவங்களும் அற்புதங்களும் நிறைந்ததாகக் காட்சியளித்து ஆய்வாளர்களின் கவனத்தைப் பெற்றுள்ளது. நாற்பாலும் நன்செய்நிலத்தின் நடுவண் வீற்றிருக்கின்ற ஈசுரவிநாயகரும், சிவசுப்பிரமணிய சுவாமியும் அருளாட்சி புரிகின்றனர். விசேடமாகக் கந்தர்சஷ்டி காலத்திற் காட்சியளிக்கும் பச்சைப்பசேல் என்னும் வயற்காட்சி சொல்லும் தரத்ததன்று.

கோவில்கள் மாத்திரமன்றி இக் கிராமத்து மக்களின் கல்வி வளர்ச்சிக்காகப்பல பாடசாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சுழிபுரம் கிழக்கு அமெரிக்கமிஷன் பாடசாலை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம் மத்தி ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை, சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம், திருவடிநிலை சைவத் தமிழ்க்கலவன் வித்தியாசாலை, காட்டுப் புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்பவை அவை. சுழிபுரம்விக்ரோறியாக் கல்லூரி ஆங்கிலக்கல்வியுடன் சைவசமயத்தையும் வளர்த்த கல்லூரியாக விளங்கியது. அத்தீபத்திற் கல்விகற்ற மாணவச் சுடரொளிகள் தத்தம் கிராமங்களிலும் சைவப்பாடசாலைகள் உருவாகுவதற்குத் தூண்டு கோல்களாக விளங்கினர். அவர்களது அரிய முயற்சியினால் ஆக்கம்

பெற்றவையே. பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை என்பவை சமயம், கல்வி இவற்றை வளர்த்ததோடு சனசமூக நிலையங்கள், மாதர்சங்கங்கள் என்பவற்றையும் சிறுவர் பாடசாலைகள் விளையாட்டுக் கழகங்கள் என்பற்றையும் இக்கிராமமக்கள் உருவாக்கியுள்ளனர். ஆன்மிகத்தையும் கல்வியையும் வளர்த்ததோடு மக்கள் வாழ்வியல் தேவைகளும் நிறைவுசெய்யப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் உற்பத்திசெய்யப்படும் விவசாயப்பொருள்களை விற்பனை செய்யவும் தமக்கு வேண்டிய பிறபொருள்களைப் பெற்றுக் கொள்ளவும் கூடிய பெரிய சந்தையும் மக்கள் தேவைகளைத் தொடர்பாடல்மூலம் நிறைவு செய்வதற்குப் பெரிய தபாற் கந்தோரும், அரசாங்க சுதேச வைத்தியசாலையும் இக்கிராமத்திலுண்டு. பல்துறைசார்ந்த அரச உத்தியோகத்தர்களும், ஏனைய ஊழியர்களும், பல்வேறு தொழிலாளர்களும் பெரிய விவசாயிகளும் ஆகிய இவர்களைக் குடிமக்களாகக் கொண்ட இக்கிராமம் தன்னிறைவுள்ள தாகவும், சிறப்புமிக்கதாகவும் விளங்குகின்றமை மிக்க சிறப்புத் தன்மை வாய்ந்தது.

இன்று நூற்றாண்டு விழாக்காணும் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் என்னும் இத்தாபனம் சுழிபுரம் செட்டிய வம்சத்தினரால் நிலம் அன்பளிப்புச் செய்து கல்வித் தேவைக்காக உருவாக்கப் பெற்றது. செட்டிய வம்சத்தினால் இது ஆரம்பிக்கப்பட்டமையால் இப்பாடசாலைக்குச் செட்டிபள்ளிக்கூடம் என்னும் பெயரும் உண்டு. இதன் ஆரம்பகர்த்தாவும் நீண்டகால அதிபருமான தம்பையாச் சட்டம்பியார் என்னும் கார்த்திகேசு அவர்களுடைய நாமம் என்றும் நின்றொலிக்கும் சாதனை வீரர் "இந்து போட் இராசத்தினம்" அப்புக்காத்தர் ஐயாவின் நிர்வாகத்தில் இயங்கிய இந்து போட் பாடசாலைகளுள் இதுவும் மிக்க சிறப்பு வாய்ந்ததாகும். பறாளை ஈசுரவிநாயகர் ஸ்ரீசிவசுப்பிர சுவாமி, கண்ணகை அம்பாள் ஆகிய தெய்வங்களின் அருளாட்சியில் ஜொலித்துக் கொண்டிருக்கும் இந்த ஆறுமுக வித்தியாசாலை பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கி, அவர்களுக்கு உன்னத வாழ்வளித்து உயர்வுடன் விளங்க எல்லோரும் பிரார்த்திப்போம்.

**பண்டிதை திருமதி பொன். பாக்கியம்**

ஒய்வுநிலை ஆசிரியர், சுழிபுரம்.

# எனது பார்வையில்
# நூற்றாண்டு விழாக் காணும்
# யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்

*"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவையிரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு"*

என்பது வள்ளுவர் வாக்காகும். மக்கள் வாழ்விலுள்ள பெருமைகளுள், முதன்மை பெறுவது கல்வியாகும். கல்விப்பணியே கடவுட் பணியென, முன்னோர் கூறிய வார்த்தை அமுத வாக்காகும். மனிதசமுதாயத்தின் மாற்றத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், சமூக அசைவிற்கும், குடும்ப ஜீவனோ பாயத்திற்கும் கல்வியே சிறந்த கருவியாகும். மேலும் மனிதனுள் மறைந்திருக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்படுத்துவதும் கல்வி ஆகும். இக் கல்வியானது கருவறையிலிருந்து கல்லறைவரையில் மனிதவாழ்வுடன் தொடருகிறது. சமூக மேம்பாட்டிற்கு ஆதாரமான இக்கல்வியானது, முற்காலத்தில் திண்ணைப்பள்ளிகளிலும் பின் வளர்ச்சி அடைந்தகாலங்களில் பாடசாலைகள் கல்லூரிகள், மகாவித்தியாலங்கள், பல்கலைக்கழகங்கள், தனியார் நிறுவனங்கள், நூல் நிலையங்கள் முதலியனவற்றின் மூலமும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே 1910 ஆம் ஆண்டு சிறிய ஓலைக் கொட்டிலுடன் ஆரம்பிக்கப்பட்ட யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம், இன்று பல நிரந்தரமான கட்டடங்களுடன் காட்சி அளிப்பது மிக்க மகிழ்வுக்குரிய விடயமாகும்.

இவ்வுலகம் இன, மத, மொழிகளால் வேறுபட்டிருப்பினும், ஏதோ ஒரு வகையில் தத்தமது கலை கலாசார பண்பாடுகளுக்கமைவாகப் பல விழாக்களைக் கொண்டாடி வருகிறார்கள். பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற அநேக விழாக்களையும் கொண்டாடுகின்றார்கள். பாடசாலைகள், கல்லூரிகள், திணைக்களங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றிலும் திறப்பு விழா, வெள்ளி விழா, பொன் விழா, வைர விழா, பவள விழா, நூற்றாண்டு விழா போன்றவிழாக்களும் கொண்டாடப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே இன்று யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. நாட்டு நிலைமை காரணமாக இன்று எத்தனையோ தமிழ்ப்பாடசாலைகள் கல்லூரிகள் அழிந்தொழிந்து தரைமட்டமாகிவிட்டன. இப்பாடசாலையும் அவ்வப்போது சிறுசிறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டதுண்டு. அத்தகைய சூழ்நிலைகள் அனைத்தையும் தாண்டி இவ்விழாவைக் கொண்டாடுகிறார்ளென்றால் அன்றிலிருந்து இன்றுவரையுள்ள பாடசாலை ஸ்தாபகர், அதிபர்மார், ஆசிரியர்கள், பெற்றார் சங்க நிர்வாகிகள் மாணவர்கள், நலன் விரும்பிகள், விழாக்குழு அங்கத்தவர் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

பெரும்பான்மையான கல்லூரிகள் பாடசாலைகள் மனிதர்கள், மதங்கள், மகாத்மாக்களின் நாமங்களின் பெயர்களைக் கொண்டிருக்க இப்பாடசாலை முருகக்கடவுளின் நாமத்தைக் கொண்டிருப்பது ஒரு சிறப்பியல்பாகும். அத்தகைய சிறப்பியல்பைக் கொண்ட யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்திற்கு செட்டிபள்ளிக்கூடம் என்னும் இன்னுமொரு காரணப்பெயருமுண்டு. இப் பாடசாலை ஆரம்பித்த காலகட்டத்தில் இப்பாடசாலையின் சூழலில் சைவபோசனத்தை மட்டுமே உணவாகக் கொண்ட செட்டிகுலத்தவர்களே வாழ்ந்துள்ளனர். அக் குலத்தவரின் பெருமகன் ஒருவரின் பெருமுயற்சியாலேயே இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது

எனவும் கூறப்படுகிறது. மேலும் ஆரம்பகாலகட்டத்தில் அக்குல மாணவர்களே அதிகமாகக் கற்றும் வந்துள்ளதாகக் கருதப்படுகிறது. இக் காரணங்கள் காரணமாகவும் இப் பாடசாலைக்கு செட்டிப்பள்ளிக்கூடம் என்ற இன்னொருபெயரும் ஏற்பட்டிருக்கலாம். இன்றும் அப்பெயர் வழக்கிலுள்ளது. அக்காலகட்டத்தில் பாடசாலைகள், கல்லூரிகள் அனைத்தும் சைவவித்தியா விருத்திச் சங்கத்தினதும் அமெரிக்கன் மிஷனிரனதும், தனியாரினதும் பொறுப்பின் கீழ் இயங்கிவந்துள்ளன. அந்த வகையில் இப்பாடசாலை சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் இயங்கி வந்துள்ளது. ஒரு காலகட்டத்தில் இலங்கையிலுள்ள அனைத்துப்பாடசாலைகளையும் கல்லூரிகளையும் அரசே பொறுப்பேற்றது. அன்றிலிருந்து இன்றுவரைக்கும் இப் பாடசாலை அரசாங்கப்பாடசாலையாகவே இயங்கிவருகின்றது.

தெய்வம் பாதி, திறமை பாதி என்பார்கள். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு எல்லோருடைய திறமையும் முயற்சியையும் தாண்டி, தெய்வத்தின் அனுக்கிரகமுமுண்டு. இப் பாடசாலையின் மேற்கெல்லையில் கண்ணகை அம்மன் ஆலயமும், ஆலயத்தை அடுத்திருக்கும் வயல் வெளியில் பறாளாய் விநாயகர் ஆவயமும், பறாளாய் முருகன் ஆலயமும் உண்டு. இவ்வாலயங்களின் மகோற்சவகாலங்களில் இப் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களை அழைத்துச் சென்று சிரமதானங்கள் செய்வதுண்டு. மகோற்சவ காலங்களில் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்வதற்கு அக்காலகட்டங்களில் பாடசாலை மூடி விடுமுறை விடுவதுமுண்டு.

இந்நேரத்தில் எமக்கும் இப்பாடசாலைக்கு முள்ள ஈடுபாடு பற்றிக் கூறுவதும் அவசியமாகிறது. நானும் பாரியார் இரஞ்சிதமும் வெளிமாகாணச் சேவையை முடித்து 1974 ஆம் ஆண்டு இப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்தோம். நாம் இருவரும் இப் பாடசாலையில் கல்வி கற்காவிட்டாலும் கல்விகற்பிக்கின்ற சேவைகிடைத்தமைபற்றி மிக்க சந்தோசம் அடைந்தோம். இங்கேயே தொடர்ந்து கடமை ஆற்றி, இங்கிருந்தே இருவரும் ஓய்வும் பெற்றோம். நாம் இங்கு மூன்று அதிபர்களின் கீழ் சேவை செய்யும் பாக்கியம் கிடைத்தது. மூவரும் நம்மூரவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அக்காலகட்டத்தில் எம்முடன் கல்விகற்பித்த அனைத்துச் சக ஆசிரியப் பெருந்தகைகளையும் மறக்கமுடியாது. நாம் இப்பாடசாலைக்கு வந்த போது பல அடிப்படைத்தேவைகள் பூர்த்தியாக்கப்படவேண்டிய நிலையில் இருந்தன. அப்பொழுது அதிபராக இருந்த சின்னக்குட்டி கந்தையாவின் கீழ் சில மாதங்களே கடமை ஆற்றும் வாய்ப்புக்கிடைத்தது.

அவரைத்தொடர்ந்து அதே ஆண்டில் அமரர் முருகேசு விருத்தாசலம் அவர்கள் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். அவரின் கீழ் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் கடமை ஆற்றுகின்ற வாய்ப்புக்கிட்டியது. அவர்காலத்தில் பல அடிப்படைத்தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டன. கட்டிடத்தேவை, குடிநீர்த்தேவை, ஆசிரியர் பற்றாக்குறை போன்ற இன்னோரன்ன தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டன. வடக்குப் பக்கத்திலுள்ள சரிவானநிலையிலுள்ள கட்டடக்கூரை அகற்றப்பட்டு, புதிய கூரை அமைக்கப்பட்டது. அடுத்து பாழடைந்த நிலையிலுள்ள பிரதான கட்டடம் முற்று முழுதாக அகற்றப்பட்டு, இது வரை காலமும் இல்லாதிருந்த அதிபர் அறையும் உட்பட சேர்த்து அமைக்கப்பட்டது. இக் கட்டடம் அமைக்கும் பொறுப்பை ஆசிரியர் பிறைசூடிக்குருவிடமும், என்னிடமும் அதிபர் ஒப்படைத்தார். இதிலிருந்து எஞ்சிய பணத்தைக் கொண்டும், இரு பழைய கட்டடங்களின் கூரைகளிலிருந்து பெறப்பட்ட மரங்களை ஏலம் போட்டு வந்த பணத்தைக் கொண்டும், பழைய கட்டடச்சுவரில் இருந்து

பெறப்பட்ட முருங்கைக்கல்லை விற்றுப்பெற்ற பணத்தைக் கொண்டும், ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட நன்கொடைப் பணத்தைக் கொண்டும் பல அடிப்படைத்தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டன. கிட்டத்தட்ட 70 ஆண்டுகளாக இல்லாதிருந்த குடிநீர்க்குறையைப் போக்க ஒரு கிணறு தோண்டப்பட்டது. பாதுகாப்புக்கருதி மதில் கட்டி இரும்புப்படலை போடப்பட்டது. கட்டடச் சுவரில் பாடசாலையின்பெயரும் விலாசமும் எழுதப்பட்டன. மேலும் எட்டாம் வகுப்புவரையில் இருந்து பத்தாம்வகுப்புவரை உயர்த்தப்பட்டது. ஆசிரியர் பற்றாக் குறையை நீக்குவதற்காக அதிபர் மு. விருத்தாசலம் அவர்கள் கல்வித்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சங்கீதம் போன்ற பாடங்களுக்கான பல ஆசிரியர்களை நியமனம் பெறச்செய்ததுடன் அயற்கிராமங்களிலுள்ள பலரை வசதிக்கட்டண ஆசிரியர்களாகவும் நியமித்தார். அவர்களில் சிலர் நிரந்தர ஆசிரியர்களாகவும் நியமனம் பெற்றனர். அக்காலகட்டத்தில் மேற்படி பாடசாலை கல்வியிலும் மற்றும்விளையாட்டு, உடற்பயிற்சி, சங்கீதம், பேச்சுப்போட்டி அனைத்திலும் மேலோங்கிக் காணப்பட்டது. கல்விப்பொதுச்சாதாரண பரீட்சையின் பெறுபேறுகள், சுற்றாடலிலுள்ள கல்லூரிகள் மகாவித்தியாலங்களின் பெறுபேறுகளுடன் போட்டி போட்டுக் காணப்பட்டது. சில சமயம் விஞ்சியும் காணப்பட்டது. சங்கீதப்போட்டியில் வட்டாரம் மாகாணரீதியில் தெரிவாகி அகில இலங்கைப் போட்டியிலும் பங்குபெறத் தெரிவாகியுள்ளது. அகில இலங்கை வானொலியிலும் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. இத்துணைச்சிறப்புக்களும், அடிப்படைத்தேவைகளின் பூர்த்திகளும் அமரர் அதிபர் விருத்தாசலம் அவர்களின் சேவைக் காலத்தில் நிறைவேற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு அவ்வமயம்கடமையிலுள்ள அனைத்து ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் மாணவர்களின் கீழ்படிவும் காரணங்களாக அமைந்துள்ளன.

அதிபர் முருகேசு விருத்தாசலம் அவர்களின் ஓய்வுக்குப்பின் ஆசிரியர் சபாபதிசண்முகலிங்கம் அவர்கள் அதிபராகக் கடமையேற்றார். அவர்மேற்படி பாடசாலையின் அனைத்துத்துறைகளின் வளர்ச்சிகளிலும் மிகவும் அக்கறைகொண்டு, மிகச்சிறப்பாக நிர்வகித்து வந்தார். இப் பாடசாலைக்கு ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத குறை பல ஆண்டு காலமாக இருந்து வந்தது அனைவரும் அறிந்ததே. அக்குறை இவரின் பெருமுயற்சியால் நிறைவேறியது. அவரை அடுத்து வந்த அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் மேற்படி பாடசாலையின் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருப்பதை அறிந்து அளவிலா ஆனந்தம் அடைகின்றேன். இன்னும் மேன்மேலும் இப்பாடசாலை வளர்ச்சி அடையவேண்டுமெனவும் இதுபோன்ற பல விழாக்களைக் கண்டு களிக்கவேண்டுமென்றும் எல்லாம் வல்ல பரமாத்மா சிவனை வேண்டுகிறேன்.

"ஓம் சாந்தி"

இளைப்பாறிய ஆசிரியர்,
**த. கந்தையா (கனடா.)**

# "ஆறுமுக வித்தியாலயத்திற்கு அகவை நூறு"

வித்தியாலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய வரலாற்றைத் திருமதி ஞானாம்பிகை இராமச்சந்திரன் ஆசிரியை 1953 ஆம் ஆண்டு வரை அவரது தந்தையார் இட்ட வித்தைப் பற்றிச் சுருக்கமாகச் சாராம்சமாகக் கூறியுள்ளார்.

அன்னாரது ஓய்வின் பின்னர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தி. சு. பசுபதிப்பிள்ளை அவர்கள் கடமை ஏற்றார். தம்பையாச் செட்டியார் என்றழைக்கப்படும் திரு. இ. கார்த்திகேசு அவர்கள் இட்டுச் சென்ற வித்தை கல்வியெனும் நீரூற்றி வளரச் செய்தார். அக்காலத்தில் வசதியற்ற மாணவரும் கல்வி கற்பதற்காக க.பொ.த.(சா/த) வகுப்பு வரை ஆரம்பித்துள்ளனர்.

அவ்வித்தியாலயத்தில் நானும் கல்வி கற்று க.பொ.த.சா.த பரீட்சையில் சித்தி யெய்தி உள்ளேன் என்பதை பெருமிதத்துடன் கூறிக்கொள்ளுகிறேன். பின்னர் 01.01.1977 ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியையாகப் பேறு எனக்குக் கிடைத்தது. அவ்வமயம் "ஆறுமுகவித்தியாலயம் என்கையில் தாகம் தணியுது உள்ளத்திலே" என்ற பாடசாலைக் கீதத்தை இயற்றி மாணவர் உள்ளத்திற்கு விருந்தளித்த திரு. மு. விருத்தாசலம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினர். திரு. இ. கார்த்திகேசு அதிபர் இட்ட வித்து அதிபர் திரு பசுபதிப்பிள்ளை காலத்தில் வளர்ந்து அதிபர் திரு. மு. விருத்தாசலம் அவர்களால் கல்வி எனும் உரமிட்டு பெரும் ஆலமரமாகக் கிளைத் தோங்கியது என்பது யாவருமறிந்த உண்மையேயாகும்.

மனக் கவலையடைந்து கடமை ஏற்கச்சென்ற எனக்கு, அதிபரும், ஆசிரியர் குழாமும் (சிறப்பாக்க திரு. திருமதி. கந்தையா .ரஞ்சிதம்) மாணவச் செல்வங்களும் என்மனக் கவலைக்கு அமிர்தமாகக் கிடைத்த பெருஞ் செல்வமாகும்.

அதிபரினது அயரா முயற்சியாலும் ஆசிரிய குழாத்தினது கடமையே கண்ணியமென்ற நல்ல நோக்காலும், மெய்வல்லுநர்ப் போட்டி, சங்கீதப்போட்டி, ஆகியவற்றில் முதன்மை பெற்று விளங்கியது. அன்றியும் அயற் கிராம மக்களை பெற்றோர் அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர் நலன்புரிச்சங்கம் அமைத்து வித்தியாலய வளாகத்தில், கிணறு, பூசை அறை, விஞ்ஞான கூடம் என்பவற்றை ஆசிரியர் ஒத்துழைப்போடு வித்தியாலயத்தை மேலும் மெருகூட்டியது. அன்னாரின் ஓய்வின் பின் திரு. ச. சண்முகலிங்கம் அவர்கள் அதிபராகப் பணிபுரிந்தார். அவரும் பாடசாலைக்குப் புகழைத்தேடித்தந்தார்.

அதிபர்கள் இருவரினது காலத்திலும் கீழ்ப்பிரிவு வகுப்பில் கடமையாற்றி மேல் வகுப்புகளுக்குத் தமிழ் மொழி இலக்கியம் கற்பிக்கும் பொறுப்பையும் அளித்துள்ளனர். பின்னர் 1995 ஆம் ஆண்டு கலவரத்தினால் உந்தப்பட்டுஇடம் பெயர்ந்து கல்விப்பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். இருந்தும் வித்தியாலய ஆசிரியர்களையும், மாணவர்களையும் நான் என்றும் என் மனதில் நீங்கா நினைவுடன் இடம் பெற்றமையை இங்கு குறிப்பிடுகிறேன்.

எனவே வித்தியாலய நலன் புரிச்சங்கம் ஆற்றிய அளப்பெரிய செயற்பாடுகளில் "அகவை நூற்றாண்டு விழா" வயிரம் பொறித்த மகுடமாகும் என வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

நன்றி
வாழ்க வாழ்க வளர்க.

இங்ஙனம்,
**திருமதி. வள்ளியம்மை கணபதிப்பிள்ளை,**
பிரதி அதிபர், (கனடா)

# கல்வியின் அடித்தளத்தை அமைத்துத் தந்த பாடசாலை

சுழிபுரம் வடக்கில் கண்ணகி அம்மன் கோவிலுக்கு முன்னால் சுழிபுரம் வடக்கு, கிழக்கு, பனிப்புலம், வயல்கள், வீடுகள், கோவில்கள், கேணி என்பவற்றின் சூழலிலே அமைதியாக அமைந்துள்ளது ஆறுமுக வித்தியாசாலை. தன்னைச் சூழவுள்ள மக்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும் பெரும் பணியாற்றி வரும் இக் கல்விக் கூடம் இன்று 100 வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதை மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றேன்.

கடந்த 55 வருடங்களுக்கு முன் 1955 இல் 1 ஆம் வகுப்பில் சேர்ந்து ஆரம்பக்கல்வியைத் தொடங்கியவர்களில் நானும் ஒருவர். அது மட்டுமல்லாது 1973 ஆம் ஆண்டில் ஆசிரியை ஆகவும் கடமையாற்றியுள்ளேன். 1955 இல் திரு. S. பசுபதிப்பிள்ளை மாஸ்டர் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். பல ஆசிரிய ஆசிரியைகள் கடமை புரிந்தனர். திரு செல்லத்துரை மாஸ்டர், துரையப்பாமாஸ்டர், ஆங்கில ஆசிரியை சிவம் ரீச்சர், நாகரட்ணம் ரீச்சர், தம்பையா மாஸ்டர், ஜெகசோதி ரீச்சர், மங்கையற்கரசி ரீச்சர் இப்படியாகப் பல ஆசிரியர்களின் முகங்கள் இதனை எழுதும் போது நினைவில் வந்து போகின்றன. ஆசிரியையாக கடமைபுரிந்த காலத்தில் திரு. கந்தையா மாஸ்டர் அவர்கள் அதிபராகக் கடமைபுரிந்தார்.

ஆறுமுக வித்தியாசாலை தரம் 2 பாடசாலையாக க.பொ.த (சா/த) வரையுமான கல்வியை வழங்குவதில் அன்றும் சரி இன்றும் சரி சிறப்பாக இயங்கிவருகிறது. இங்கே தமது ஆரம்பக்கல்வியை மட்டும் கற்றவர்கள் தங்கள் கல்வியை முழுதாகவே பெற்றுக் கொண்டவர்கள் எல்லோரும் சிறப்பான முறையில் கல்வியைப் பெற்றுள்ளனர். கல்வியியலாளர்களால் தற்போது இனங்கண்டு நடைமுறைப்படுத்தப்படும் "கல்வியில் பண்புத் தர விருத்தி" (Education quality Development) செயற்பாடான காலங்காலமாக இப்பாடசாலையில் கலைத்திட்டக் கல்வியோடு சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. இதனை இப்பாடசாலையில் கல்வி கற்று இன்று நாட்டிலும், வெளிநாடுகளிலுமுள்ள பழைய மாணவ மாணவியரின் நடத்தைகள், ஒழுக்கம், அமைதியான ஆடம்பர மற்ற வாழ்க்கை, சமய பழக்க வழக்கங்கள், ஊர்ப்பற்று, பாடசாலைப்பற்று போன்ற பல பண்புகளின் மூலம் காணக்கூடியதாக உள்ளது. அளவு ரீதியில் (Quantity) கல்வி உயர்ச்சி மட்டம் குறைவானாலும் தர ரீதியில் (Quality) உயர்ந்த மட்டக் கல்வியை இக் கல்விக்கூடம் கடந்த 100 ஆண்டுகளாக வழங்கிக் கொண்டிருப்பதை எல்லோரும் அறிவர்.

அன்று 2 கட்டடத் தொகுதிகளுடன் மட்டுமே செயற்பட்டு வந்த பாடசாலை இன்று அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு பௌதிக வளங்களைப் பெற்று சிறந்த முகாமைத்துவ அதிபர், சேவை மனப்பான்மை கொண்ட ஆசிரியர்களுடன் விளங்குவதைக் காண்கின்றேன். மாணவரது குடும்பசூழல் பொருளாதாரம், சிறப்பாற்றல்கள் என்பவற்றை நன்கறிந்த ஆசிரியர்கள் அவர்களுக்கு சகல வழிகளிலும் வழிகாட்டியாக விளங்கும்

அதிபர், பொருளுதவி செய்யும் பழைய மாணவ மாணவியர் இதை விட ஏற்ற சமயத்தில் வழிகாட்டும் கல்வி அதிகாரிகள் இவை எல்லாம் இன்றும் இன்னும் பாடசாலை வளர்ச்சி பெறும் என எதிர்வு கூறுகின்றன. இது மட்டுமா? இங்கு கற்கும் மாணவ மாணவியர் தங்கள் அதிபர், ஆசிரியர்களிடம் காட்டும் அன்பும் பணிவும், மரியாதையும் சொல்லில் அடங்கா.

பலர் இங்கே தமது ஆரம்பக் கல்வியைமட்டும் பெற்று அயற் கல்லூரிகள் சென்று அக் கல்லூரியின் பெறுபேறு மட்டங்களை உயர்த்தியும், வேறு பல துறைகளில் சிறப்புற்றும் விளங்குகின்றனர்.

அடிப்படைக் கல்வியை சிறப்பாக வழங்கிக் கொண்டிருக்கின்ற இப் பாடசாலையை ஸ்தாபித்த பெரியார், அவரது வாரிசுகள் மேலும் இங்கு கடமையாற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், நன்கொடையாளர், கல்வி அதிகாரிகள் சகலருக்கும் இச் சந்தர்ப்பத்திலே நன்றிகளைத் தெரிவித்து வணங்குகின்றேன்.

*"வளர்க ஆறுமுக வித்தியாசாலையின் கல்விச் சேவை"*

**திருமதி தவபவானி சிவராஜா,**
B. Ed - Dip in School Management,
SLPS - I, SLEAS III
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
கல்வி அமைச்சு,
இசுருபாய, பத்தர முல்ல.

# எனது வாழ்வுடன் ஆறுமுக வித்தியாலயம்

1962 ஆம் ஆண்டு விஜயதசமி அன்று அரிச்சுவடிதனை ஏடு மூலம் தொடக்கி வைத்து அரிவரி வகுப்பில் அமர்த்தி அன்பு மிகு ஆசிரியை கண்மணி அவர்கள் மூலம் ஆரம்பக்கல்வி முதல் மூன்றாம் வகுப்புவரை இடையே இரட்டை வகுப்பேற்றமும் தந்து என்னை ஒரு நல் மாணாக்கனாக்கிய உந்தனை மறக்கலாகுமா? அகவைகள் நூறுதனை கடந்தாலும் பல்லாயிரம் ஆண்டுகள் நிலைத்து நின்று பல்கோடி நல்மாணாக்கரை உருவாக்கிட வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைத்திட பிரார்த்தித்து வளங்கள் பல பெற்று இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் நிலைத்து நின்று விட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

*வாழிய வாழியவே*
*எங்கள் ஆறுமுக வித்தியாலயம்*
*வளம் பல பெற்று*
*வளமுடன் வாழியவே!*

**சிவபாதம் சிவானந்தன்**
(நோர்வே, பழைய மாணவன்)
முன்னாள் கமநல சேவை,
உத்தியோகத்தர், சுழிபுரம்.

# என் நினைவுகள்

இயற்கை எழில் மிகுந்த தூய சைவமணம் கமழும் திருவூர் சுழிபுரம். இத் திருப்பதியில் கல்வியினூடாக சைவமும், தமிழும் மக்களிடையே சிறக்க வேண்டுமென எழுந்த பாடசாலை யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம். இப் பாடசாலையை திரு. ஆறுமுகப்பாவலர் 1910 இல் ஆரம்பித்து வைத்தார். பாடசாலை தனது வளர்ச்சிப் பரிணாமத்தில் பல படிகளைக் கடந்து இன்று உயர்ந்துள்ளது. தனது நூறாவது வருட சேவையை ஆரம்பிக்கின்ற வித்தியாலய அன்னைனைப் பாராட்டி விழா எடுத்து வெளியிடவுள்ள...... நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு கிராமத்தின் அளப்பரிய, பெறுமதி மக்க பெரும் சொத்து அக்கிராமத்திலுள்ள பாடசாலை ஆகும். மனிதனின் அறிவுக் கண்களைத் திறந்து புனிதப்படுத்துகின்ற கல்விக் கூடத்தைப் பேணிக் காப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். சிறிய பாடசாலையாக இருந்தபோதும் கிடைத்த வளங்களின் உச்சப் பயன்பாட்டினால் பல சாதனைகளைப் புரிந்து உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளது. இப் பாடசாலை 1986 - 1999 வரை 14 வருடங்கள் நான் இப்பாடசாலையில் ஆசிரியராக சேவை செய்யும் வாய்ப்புக் கிடைத்தமை எனக்கு இறைவனால் கிடைத்த பெரும் பாக்கியம் எனக்கருதுகின்றேன்.

மலர் வெளியீடு என்பது ஒரு வரலாற்று நிகழ்வு. இச் செயற்பாட்டை முன்னெடுத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரையும் பாராட்டுகிள்றேன். பத்து தசாப்த காலமாக பல சாதனைகளை வெளிப்படுத்தி மேன்மையுடன் விளங்கும் எமது பாடசாலை மேலும் பல வளங்களையும் பெற்று உன்னத நிலையை அடை வேண்டுமென இறைவனை உள்ளத்தில் இருத்தி என்றும் பிரார்த்திக்கின்றேன்.

"பிச்சை புகினும் கற்கை நன்றே"

**திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம்,**
ஓய்வு நிலை அதிபர்,
சுழிபுரம் கிழக்கு.

# எம் பள்ளியும் நாமும்

எந்தையும் தாயும்
எழுத்துக்கள் பழக்கியதும்
எம் முந்தையர் பலர் கற்று
முன்னுக்கு வந்ததும்
அகிலம் எல்லாம்
அகன்று வாழ்கின்ற
உறவுகள் எல்லாம்
ஒழுக்கமாய் உழைப்பதும்
ஆறுமுக வித்தியாலய
அன்னையாம் எம் பள்ளி
அருகிலிருந்து அறிவு தந்ததால்

வித்துவான் கம்புடன்
வெளியிலே வந்தால்
ஊசி விழுந்தாலும்
ஒலிக்கும் அங்கு
அதிபராய் இருந்த
அவரிடம் நாங்கள்
அமுதத் தமிழை
பருகினோம் அன்று

நேரம் தவறி
பள்ளிக்குச் சென்றால்
நீட்டின கையில்
தண்டனை பெற்றதால்
நேரம் தவறாத
எங்கள் தொழிலில்
நேர்த்தியாய் இங்கு
இன்றும் உள்ளோம்

தரமொன்று அதிபர்
சண்முகலிங்கம்
பட்டணத்து பள்ளிகள்
பதவி கொடுக்க
நாடிய போதும்
நாடாது அவற்றை
ஊருக்காக உழைத்து நின்ற
உத்தமர் அவரையும்
எப்படி மறப்போம்
எங்களின் வாழ்வில்
எல்லாப் பிள்ளையும்
எம் பிள்ளையென்றே
பள்ளி நேரமன்றி
எல்லா நேரமும்
படிப்பித்த எமது
பழைய ஆசிரியர்கள்
அள்ளித் தந்த
கல்வியால் தானே
அவனியில் துணிந்து
பவனி வருகிறோம்

கல்வியில் இன்றும்
கலங்கரை விளக்காய்
எம் பள்ளி இன்றும்
பறைசாற்றுகிறது - இருந்தும்
அயல் பள்ளிகளெல்லாம்
பழைய மாணவரின்
பாசப் பணத்தால்
காணிகள் விரிந்து
கட்டிடங்கள் மிளிர்ந்து
காட்சி கொடுக்க
எம் பள்ளி மட்டுமே
ஏழைகள் படித்ததாலோ
என்னவோ இன்றும்
ஏழ்மையாய் இருக்கிறது.

**மகேந்திரன் இராமச்சந்திரன்**
பழைய மாணவன்,
டென்மார்க்

## பாடசாலை அதிபர் ஆசிரியர் குழாம்



**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

செல்வி மு. விஜயகுமாரி (உப அதிபர்), திரு. J. கோகலே, திரு. சு. கணேசதாசன், திரு. ந. பாலச்சந்திரன்(அதிபர்), திரு. S. K. யோசப் அனுரா, செல்வி வ. மனோராணி.

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

திருமதி ம. மனோகுமார், திருமதி சி.மிருளாஜினி, திருமதி இ. ஞானகுரு, செல்வி ச. சுபத்திரா(கணனி உதவியாளர்), திருமதி யா. இந்துமதி, திருமதி க. சிவரஞ்சினி(நிதி உதவியாளர்) , திருமதி. து. மகிழம்பிகை, திருமதி ற. சந்திரகுமார், திருமதி அ. பகீரதன்

# பாடசாலை நினைவுகள்

அண்மையில் WWW. PANIPULAM. Com என்ற வெப்தளத்தை திறந்தபோது ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. என்னையும் என் போன்ற ஆயிரக்கணக்கானவர்களையும் வாழ்வில் உன்னத நிலையை எய்த ஏதுவானதும் மூலாதாரமானதும் மிக அத்தியாவசியமானதுமான கல்விப் பொக்கிஷத்தை வாரி வழங்கிய (மிகைப்படத்தப்பட்ட கூற்றல்ல - கிழே விளக்கமளிக்கின்றேன்) கல்விக்கூடமாம் சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாசாலையின் நூற்றாண்டு விழாவுக்கான பகிரங்க அழைப்பைக் கண்ட உள்ளம் உவகை அடைந்தேன் எமது கல்விப்பயணத்திற்கு அடித்தளம் அத்திவாரம் அமைத்துக் கொடுத்த கலைக்கூடமாம் ஆறுமுக வித்தியாசாலை வாழ்வில் என்றும் மறக்கமுடியாது.

நூற்றாண்டு விழாவிற்காக ஏதாவது ஒரு வழியிலாவது எனது பங்களிப்பை வழங்க வேண்டுமென்ற வேட்கையில் விழாக்குழவினரின் பெயர்கள் மற்றும் தொலைபேசி எண்களை கண்டு, உடனடியாக தொடர்புகளை ஏற்படுத்த முயன்றும் முடியாது போய் இறுதியில் சிரேஷ்ட ஆசிரியர் மனோராாணியின் தொலைபேசியில் தொடர்பு கிடைத்தது. உரையாடலின்போது என்னை சுய அறிமுகம் செய்த பின் எனது நோக்கத்தையும் கூறினேன். நான் கல்வி கற்ற காலத்தில் கடமை புரிந்த (சுமார் ஐந்து தசாப்தங்களுக்கு முன்) ஆசிரிய பெருந்தகைகளின் அளப்பரிய சேவைகள் என்நினைவுக்கு வந்தன.

ஒரு சில நிகழ்வுகளை மட்டும் பகிர்ந்து கொள்கிறேன் என்னுடைய வயதை ஒத்த பழைய மாணவர்களின் நினைவில் நீங்காதிருக்கும் ஆசிரிய மணி திருமதி செண்பச்சோதி நான் நான்காம் வகுப்பில் கற்கும் வேளை எமது வகுப்பாசிரியராக இருந்தார். ஒரு நாள் ஒரு மாணவன் தன்னை அறியாமலே மலம் கழித்துவிட்டார். சக மாணவர்களின் சிரிப்பொலி ஒருபக்கம் மறுபுறம் சில மாணவர்கள் மூக்கை பொத்திய வண்ணம், இன்னும் சிலர் முகத்தை சுழித்தவண்ணமாக இருந்த பொழுது எமது ஆசிரியையோ எது வித அருவருப்போ, வெறுப்போ முணுமுணுப்போ இன்றி உடனடியாக அந்த மாணவனின் கையை பிடித்து வெளியே உள்ள நீர்த்தொட்டிக்கு அழைத்துச் சென்று ஒரு தாய் தன் சேய்க்கு செய்வதைப் போன்று அவனை கழுவி சுத்தம் செய்து மிண்டும் வகுப்பறைக்கு அழைத்து வந்தார். இது போன்று அர்ப்பணிப்புடன் கடமை புரிந்த ஆசிரிய பெருந்தகைகளை நினைவு கூரும் போது மெய் சிலிர்க்கின்றது. இன்னொரு சம்பவத்தையும் கூறியே ஆகவேண்டும் ஐந்தாம் வகுப்பின் கற்ற நாட்களில் எனது வகுப்பில் ஒரு மாணவன் வகுப்பில் மயக்கமுற்று கிழே விழுந்து விட்டார். அந்நேரம் ஆங்கிலபாடம் நடந்து கொண்டிருந்தது. அந்த ஆசிரிய பெருந்தகையின் பெயர் நினைக்கவா மறுக்கின்றது. உடனடியாக அவர் மாணவனின் முகத்தில் தண்ணிர் தெளித்து மயக்கம் தெளிந்த பின் மாணவருடன் உரையாடிதலிருந்து சில தகவல்களை அறிந்தார். மிக வறுமையான குடும்பத்தை சேர்ந்தவன் என்றும் அன்று காலையும் முதல் நாள் இரவும் எதுவித உணவேனும்

உட்கொள்ளவில்லை என்பதையும் அறிந்ததால் மனம் இரங்கி தான் கொண்டு வந்த மதிய உணவான இடியப்பபொட்டலத்தை வழங்கி, தனது மதிய உணவை துறந்து மனம் மகிழ்வடைந்தார். இத்தகைய உத்தம புருசர்களுக்கு, சொர்க்கம் என்று சொல்லப்படும் ஒரு இடம் உண்டு. ஆரம்பத்தில் பாடசாலையின் பெருமைகளை எழுதிய இடத்தில் மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல என்பதற்கான விளக்கத்தை என்னையே ஒரு உதாரமாணமாகக் கொண்டு விளக்குகிறேன். ஐம்பது வருடங்களுக்கு முன் இன்று போல் உள்ள வசதிகள், வாய்ப்புகள் அறவே கிடையாது. பிரத்தியேக வகுப்புகள் கிடையாது இலவச சீருடை கிடையாது (அரைவாசிக்கு மேற்பட்ட மாணவர்கள் வெறும் சாரத்துடன் - மேலே சேட்டு கிடையாது) மதிய போசனம் கிடையாது ஆனால் கல்வி என்பது வளம் குன்றாது வாரிவழங்கப்பட்டது. இந்த காலகட்டத்தில் நான் புலமைப்பரிசில் பரிட்சையில் சித்தியடைந்தேன் இதிலிருந்து ஊகித்தறியமுடியும் எனது கூற்று மிகைப்படுத்தப்பட்டதல்லதென்பது.

நூற்றாண்டு காலமாக கல்விபணிகளை மேற்கொண்டு வரும் எமது ஆறுமுக வித்தியாலயம் மென்மேலும் மெருகடைந்து வளர்ச்சி கண்டு இன்னும் பல நூற்றாண்டுகள் பணியை தொடர வாழ்த்துவதுடன் சமுதாயத்தை செதுக்குகின்ற சிற்பிகளாம் ஆசிரியர் குழாத்திற்கும் எனது நல்லாசிகள் உரித்தாகுக.இறுதியாக இந்த வாழ்த்தும் செய்தியை வழங்க சந்தர்ப்பமளித்த விழாக்குழுவினருக்கு எனது நன்றிகள் பல.

கலட்டி,
பண்டத்தரிப்பு.
17-08-2010.

**பழைய மாணவன் – கந்தையா மனோகரன்,**
பிரதான பொறியியலாளர் (கடல்சார்),
கொழும்பு.

# என்னை ஆசிரியத்துறையில் வளர்த்தெடுத்த ஆறுமுக வித்தியாலயம் வாழ்க பல நூறாண்டுகள்

நான் ஆசிரியத்துறையில் முதல் நியமனம் பெற்று இப்பாடசாலையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி கடமையேற்றேன். அப்போது அமரர் ச. சண்முகலிங்கம் அவர்கள் அதிபராக இருந்தார். அவர் தனது திறமையான வழிகாட்டலினால் எம்மை வழிப்படுத்தினார். எமது குறைகளை இரகசியமான முறையில் சொல்லித் திருத்துவார். நிறைகளை நான்குபேர் மத்தியில் கூறி உற்சாகப்படுத்துவார். குறிப்பாக ஒரு தந்தையின் நிலையிலிருந்து எம்மை வழிப்படுத்தினார். அந்நாட்களை நான் மறக்கவில்லை.

பின்னர் தற்போதய அதிபர் திரு. ந. பாலச்சந்திரன் அவர்களின் தலைமையின் கீழ் கடமையாற்றினேன். இக்காலப் பகுதியில் அதிபர், ஆசிரியர்கள் ஒரு சகோதரத்துவ உறவில் கூட்டுக்குடும்பம் போன்று ஒற்றுமையாக கடமையாற்றினோம். அதிபர் அவர்கள் ஆசிரியர்களின் கஸ்டநஸ்டங்களைப் புரிந்து கொள்பவர். வேலையில் மிகவும் நுணுக்கமானவர்.

இங்கு கற்பித்துக் கொண்டிருக்கும் செல்வி. வ. மனோராணி ஆசிரியையிடம் நான் பாலர் வகுப்பில் கற்றுள்ளேன். பின்னர் அவரோடு இணைந்து சக ஆசிரியராகக் கடமையாற்றும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இங்கு கற்பித்த, கற்பிக்கின்ற ஏனைய ஆசிரியர்களும் என்னோடு மிகவும் அன்பாகப்பழகினார்கள். கற்பித்தலின் போது ஏற்படுகின்ற இடர்பாடுகள், சந்தேகங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வோம்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் பல துறைகளில் ஆற்றலுள்ளவர்கள்; ஆசிரியர்களுடன் அன்பாகப் பழகும் பண்புள்ளவர்கள்; உறவினர்களுக்கிடையே ஒற்றுமையுள்ளவர்கள். இதேபோல பெற்றோரும் மிகவும் கீழ்ப்படிவுள்ளவர்கள். எந்த வித பிரச்சினையும் கொடுக்காதவர்கள். மேலும் எனது குடும்பத்தவர், உறவினர் பலர் இப்பாடசாலையில் கல்வி கற்றுள்ளார்கள். முக்கியமாக எனது தாயார் இங்கு கற்று **S. S. C** பரீட்சையில் சித்தியடைந்த ஒருவர். இப் பாடசாலையில் அதிக பற்றுக்கொண்டவர். என்னை இப்பாடசாலையை விட்டு நானாக வேறுபாடசாலை மாறக்கூடாது என இறுதி வரை கூறிவைத்திருந்தார். இதற்கிணங்க நானும் என்னால் முடிந்த சேவையை என் காலப்பகுதியில் இப்பாடசாலைக்கு ஆற்றியுள்ளேன்.

இப்பாடசாலை பல துறைகளிலும் வளர்ச்சி கண்டு நன்மாணாக்கரை உருவாக்கி, ஆசிரியர்களையும் அவர்களது துறையில் வளர்த்தெடுத்து வந்துள்ளது. "அனுபவம் சிறந்த ஆசான்" என்ற கூற்றுக்கு இணங்க நான் இப்பாடசாலையில் இருந்து அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்களிடம் இருந்து பெற்ற அனுபவங்களினால் வளர்த்தெடுக்கப்பட்டேன். இப்பாடசாலை மேலும் சிறந்த முறையில் வளர்ச்சி பெற கண்ணகை அம்மன் அருள் புரிவாளாக.

ஆசிரியர்,
**திருமதி புஸ்பராணி சுகுமார்.**

# வாழ்க நூறாண்டு

மருதம் சூழ் வளம் கொழிக்கும் சுழிபுரம் பதியினிலே
அருள்புரி ஆனைமுகன் இணை ஆறுமுகன் அருளிட
சேரும் நம்மன்னை கண்ணகியின் முற்றத்திலே
பாரும் போற்றிட வாழனும் இன்னும் நூறாண்டே

கலைக்கொரு கூடமானாய் கற்பவர் கண் திறந்திடவே
சளைக்காது தமிழ் வளர்த்தாய் தன்னிகரில்லா எம் தாயே
விலையின்றி வித்தைகள் விதைத்தாய் நம் நெஞ்சிலே - புகழில்
மலை போலும் வாழணும் இன்னும் நூறாண்டே

பணம் படைத்தார் பகட்டாய் பட்டணம் பறந்து விட - நல்ல
குணம் கொண்ட குழந்தைகளை குன்றினிலே தீபமாக்கினாய்
கணம் கணம் நினைப்பதுண்டு உன்னிடம் இருந்த நாட்களை - இன்னும்
காண வேண்டும் பல பல நூறாண்டே

திட்டங்கள் பல வகுத்தும் திடம் தந்தாய் நம்மவர்க்கு
சட்டங்கள் இன்றி சரிவழி போக வைத்தாய் - நாம்
பட்டங்கள் பல பெற்று பாரினிலே உயரவைத்தாய்
எட்ட முடியாப் புகழ் கொண்டு வாழ் நூறாண்டே

குருமார் உனது திருக்கரங்களில் அசையும் விரல்களே
தெருவோரம் நின்றிருப்போம் உன் கைகள் அரவணைக்காவிட்டால்
பெரும் பேறு பெற்று விட்டோம் பெருமிதமும் அடைந்து விட்டோம்
பெருமையினில் வாழ வேண்டும் பிறிதொரு நூறாண்டே

விண்ணகத் தேவரும் வியந்திட வாழ்க வாழ்கவே
மண்ணக மாந்தரும் பணிந்திட வாழ்க வாழ்கவே
எண்ணற்ற ஆண்டுகள் எழில் பெற வாழ்கவே
பண்ணிசைத்துப் பணிகின்றோம் வாழ்க வாழ்கவே

கண் திறந்தாய் கலை தந்தாய் வாழ்கவே
எண்ணுடன் எழுத்தும் தந்தாய் வாழ்கவே
பண்புடன் பணிவும் தந்தாய் வாழ்கவே - நமக்கு
முன்னும் முதலுமானாய் வாழ்க வாழ்கவே

தண்மையும் தமிழும் போல வாழிய வாழியவே - நம்
எண்ணமெல்லாம் ஏற்றம் பெற வாழி வாழியவே - உடல்
மண்ணுடன் கலந்தாலும் நின்புகழ் வாழிய வாழியவே
வாழிய வாழிய வாழியவே பல நூறாண்டு வாழியவே

பழைய மாணவன்,
**க. கார்த்திகேயன்.**



விழாக்குழு



மலர்க்குழு

## வித்தியாலயத்தை வாழ்த்துகிறேன்

யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் நூற்றாண்டு விழாக்காணுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். 1910 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பல அதிபர்கள், ஆசிரியர்களின் அயரா முயற்சியினால் பல துறைகளிலும் பாடசாலை வளர்ச்சியடைந்து வருகின்றது. நான் இப்பாடசாலைக்கு 1988 ஆம் ஆண்டு ஆரம்பக்கல்வி ஆசிரியராக நியமிக்கப்பட்டு வந்தேன். அப்போது அமரராகிவிட்ட திரு. ச. சண்முகலிங்கம் அவர்கள் அதிபராக இருந்தார். அவர் சிறந்த முறையில் பாடசாலையை நிர்வகித்து பல துறைகளிலும் வளர்த்து வரும் வேளையில் நாட்டின் போர்ச்சூழல் காரணமாக 1995 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் மக்கள் இடம் பெயர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அதிபர் திரு. ச. சண்முகலிங்கம் அவர்களும் வவுனியா மாவட்டத்துக்குச் சென்றதன் காரணத்தால் இப் பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பைத் தற்போதைய அதிபர் திரு. ந. பாலச்சந்திரன் ஏற்று நடாத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதிபர் திரு. ந. பாலச்சந்திரன் அவர்கள் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் இப் பாடசாலையைச் சிறந்த முறையில் நிர்வகித்து வருகின்றார். வகுப்பறைகள் புனரமைப்பு, மல சல கூடம், சிறுவர் பூங்கா, நூல் நிலையம், பிரதான மண்டபம், கணனிக் கூடம் என்பன இவரின் முயற்சியால் அமைக்கப்பட்டு பாடசாலை வளர்ச்சியில் பெரிதும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிபர், ஆசிரியர்களின் அயரா முயற்சியினால் கல்விச் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் போன்ற பல துறைகளிலும் மாணவர்கள் பல சாதனைகள் படைத்து வருகின்றனர்.

நான் இப் பாடசாலையில் 21 வருடங்களுக்கு மேலாக ஆரம்பக் கல்வி ஆசிரியராகக் கடமையாற்றியுளேன். இதனால் இப் பிரதேச மக்களின் குடும்ப நிலைமைகளை என்னால் நன்றாக அறிய முடிந்தது. இப்பிரதேச மாணவர்களிடம் வெவ்வேறான திறமைகள் உண்டு. கல்விச் செயற்பாடு மாத்திரமல்ல, கலை ஆர்வத்திலும் விளையாட்டுத் துறையிலும் திறமை மிக்கவர்கள். இப் பாடசாலையில் கற்ற மாணவர்கள் பல்கலைக்கழகம் வரை சென்று உயர் கல்வி கற்கின்றனர். மாணவர்கள் மிகவும் கீழ்ப்படிவானவர்கள்; அன்பு நிறைந்தவர்கள். பெற்றோர்களும் மிகவும் கீழ்ப்படிவானவர்கள். பிள்ளைகளின் கல்வியில் அக்கறை உடையவர்கள். எல்லோரையும் அறிந்து நடப்பவர்கள்.

அமரர் வித்துவான் திரு. மு. விருத்தாசலம் அதிபராக இருந்த காலத்தில் (1974 - 1983 வரை காலப்பகுதியில்) எனது தந்தையாரும் இப்பாடசாலையில் ஆங்கில பாடத்தைக் கற்பித்து 1983 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். அவரும் இப் பாடசாலையைப் பற்றி, அமரர் திரு. மு. விருத்தாசலம் அதிபர் அவர்களின் நற்குணங்களைப் பற்றி, அதிபர் தன்னைப் பாராட்டிய சம்பவங்களை என்னோடு அடிக்கடி கதைப்பார். எனது தந்தையார் வாழ்த்துரை எழுத முடியாத நிலையில் இருப்பதால் என் மூலம் தனது வாழ்த்துக்களை வித்தியாலயத்திற்குத் தெரிவிக்கின்றார்.

வயல் சூழ்ந்த அமைதியான நல்ல பௌதிக வளம் நிறைந்த இடத்திலே இப்பாடசாலை அமைந்துள்ளது. முன்னால் இருக்கும் கண்ணகை அம்மனின் அருளும், வைரவப் பெருமானின் அருளும் இப் பாடசாலைக்கு என்றும் உண்டு. இப் பாடசாலை பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து பல நூறாண்டுகள் கல்வி ஒளி பரப்பி, நல்ல கல்விச் சமூகத்தை உருவாக்கப் பறாளாய் விநாயகரும் முருகப்பெருமானும் அருள் புரிய வேண்டுமென்று வேண்டி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

*வளர்க வித்தியாலயம். உயர்க அதன் புகழ்.*

**திருமதி த. உதயகுமார்**
ஆசிரியர்.

# என் உள்ளத்திலிருந்து

சோழியபுரம் என்னும் சோலை நல்லூரில் பழம் பெரும் ஆலயங்களான பறாளாய், கண்ணகையம்மன் என்பவற்றினாலும் அழகிய பசுமையான வயல் வெளிகளாலும் சூழப்பட்ட அமைதியான சூழலில் கல்வியின் கலங்கரை விளக்காய் சுடர்விட்டொளிரும் எம் பாடசாலை தனது பத்தாவது சதாப்தத்தில் கால் பதிக்கும் வேளைதனில் நானும் இங்கு கடமையாற்றுவதையிட்டு பெருமிதம் கொள்கிறேன்.

சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பொருட்டு அமரர் கார்த்திகேசு போன்ற பல பெரியார்களின் முயற்சியினால் சிறு குடிலில் 1910 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டு தற்போது பல கிளைகளாக வளர்ச்சியடைந்து மேன்மை பெற்றுக்காணப்படுகிறது. அதாவது தபால் தந்தி அமைச்சராக இருந்த அமரர் குமாரசூரியர் போன்ற பெரியார்களையும் உருவாக்கிய பெருமை இப்பாடசாலையைச் சாரும்.

பரந்த சமூகத்தின் நோக்கங்களை எய்துவதற்காகக் கருமமாற்றுகையில் பாடசாலை யினால் பின் பற்ற வேண்டிய பின்பற்றக்கூடிய பலகருமத்தொடர்கள் காணப்படுகின்றன. அக்கருமத்தொடரின் வெற்றி அல்லது தோல்வியானது பாடசாலை ஒழுங்கமைப்பின் தன்மையிலேயே தங்கியுள்ளது.

இந்தவகையில் சிறந்த ஒழுங்கமைப்பின் கீழ் வறிய பிள்ளைகளின் வாழ்வை வளம் படுத்தி வளர்ச்சி கண்டு நிற்கும் வேளையிலே நானும் 1993 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராகவும், உப அதிபராகவும் கடமையாற்றி வருகிறேன். நான் வரும் வேளைதனில் ஆளுமையும் ஆற்றலும் மிக்க அதிபராக அமரர் ச. சண்முகலிங்கம் அவர்கள் சேவையாற்றினார். பின் தற்போது அதிபராகவுள்ள திருவாளர் ந. பாலச்சந்திரன் அவர்களின் சேவையால் இப்பாடசாலை பல சாதனைகளைப் படைத்துள்ளது. இவ்வதிபர் மா ஓ சேதுங் கூறியது போல "என்ன செய்கிறீர்கள் என்பதற்குப் பதிலாக எவ்வாறு செய்கிறீர்கள்" என்ற கூற்றுக்கிணங்க மாணவர்களையும் ஆசிரியர்களையும் சிறந்த முறையில் வழிநடாத்தி வருகிறார்.

இவ்வாறாக வளர்ச்சி கண்ட நிலையில் பழைய மாணவர்களதும், சமூகத்தினதும் ஒத்துழைப்புடன் தனது நூற்றாண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுகிறது. இந்தவகையில் இப் பாடசாலை மேன்மேலும் வளர்ந்து அறிவுப்பசியைப் போக்குவது மட்டுமல்ல ஆற்றல், திறன் கொண்டதும் நவீனத்துவத்தின் சவால்களை எதிர்கொள்ளக் கூடியதுமான சமூகத்தை உருவாக்குவதில் தொடர்ந்தும் தனது அதிசிறந்த சேவையை வழங்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

ஆறுமுகம் எனும் அறிவாலயத்தின் - புகழ்
அண்டமெல்லாம் பரவட்டும்
அடுத்து வரும் பல சமூகங்களின்
அறிவு ஆற்றல், திறன்களையும் - வளர்த்து
அறை கூவும் சவால்களை - எதிர் கொள்ளும்
சமூகமொன்றை உருவாக்கட்டும்.
"வாழி நீ நீடூழி"

உப அதிபர்
**செல்வி மு. விஜயகுமாரி**

# புதிய பண்பாட்டு மறுவாசிப்பு

கடந்த ஒக்ரோபர் மாதம் உலக வாசிப்புமாதமாக அனுஷ்டிக்கப்பட்டதை அறிவோம். அது தொடர்பில் வாசிப்பினைப் பெருக்கும் விடயங்கள் பேசுபொருட்களாயும் பல்வேறு செயற்றிட்ட முன்வைப்புகளும் இடம் பெற்றிருந்தன. வாசிப்பின் பொறிமுறைகள் முதல் பலவகைப்பட்ட வாசிப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. மேம்போக்கானதாயில்லாத ஆழ்ந்த வாசிப்பும் அதன் பயன்பாடுகளும் வலியுறுத்தப்பட்டன.

அந்தத் தளம் உறுதியானது எனக்கொண்டு "புதிய பண்பாட்டு மறுவாசிப்பு" குறித்து இக்கட்டுரை பேச முயல்கிறது. இதற்கான அவசியம் என்ன? இன்றைய உலக மயமாதல் சூழலில் தகவல் தொழில் நுட்பத் தொடர்பாடல் புவிக்கோளத்து நாடுகள் அனைத்தையும் ஒரு கிராமம் போல் உணர்த்தியுள்ளதாக கூறுவர். எந்தச் சிரமங்களும் இல்லாமலே, குவிந்திருக்கும் தகவல் பொதிகளில் இருந்து ஏற்ற முடிவுகளை எடுத்து வாழ்வை வளம் படுத்தும் விருத்திகளை எட்ட முடியும் என்பதாக நம்பப்படுகிறது. அந்த வகையில் "தேடு கல்வி" எனும் தவம் அடிபட்டுப்போய் விடுகிறது.

மறுபுறம், உலகமயமாதலில் பல்தேசிய நிதி நிறுவனங்கள் நாடுகள்ஒவ்வொன்றையும் வேட்டைக்காடாக்கி கபளீகரம் செய்வதற்கு ஏற்ப மக்கள் மனங்களைத் தகவமைக்கும் கருத்தியல்கள் பல்வேறு ஊடகங்கள் வாயிலாக கொட்டிக் குவிக்கப்படுகின்றன. முட்டாள் பெட்டி எனப்படும் தொலைக்காட்சி முதல் அறிவுப்பெருக்கமாய் நம்பவைக்கப்படும் கணனிவரை அனைத்து வடிவங்களும் மக்களது சிந்திக்கும் திறனை மழுங்கடிக்க முயல்வன. இந்தக் குப்பைகள் அறிவுச் சூழலை மாசுபடுத்துவன. வேலைப்பளுக்களும் வாழ்க்கைப் பிரச்சினைகளும் அல்லாடவைக்கும் நிலையில் மாசுபட்ட இந்தச் சூழல் மலினமான பொழுது போக்குகளுக்கே ஆற்றுப்படுத்தும். வாசிக்க முனைந்தாலும் நசிவுக்குரிய இலகுவான எதையாவது நாடும் மனப்பாங்கு கட்டமைக்கப்படுகிறது.

ஆக, உலகமயமாதல் பண்பாட்டுச்சிதைவினை வலுவாக வளர்த்துள்ளது. தமது சொந்தப் பண்பாட்டுப் பின்புலத்தில் தமக்கான வாழ்வாதாரங்களை கட்டியெழுப்பிய மக்களை, அந்நியசக்திகளின் வளம் கொழிக்கும் வகையில் உழைக்கப் பண்ணும் தேவையின் அடிப்படையில் பண்பாட்டுத் தகர்ப்பு உலகமயமாதலுக்கு அவசியப்பட்டது. எமது சூழலும் கொங்கிரீட் வனாந்தரமாகி செழுமையான ஆடம்பரங்கள் பெருகுவதுபோன்ற தோற்றம் கொள்வது மெய் - அங்கே வாழ்வு பறிபோய் விடுகிறது என்பது அதை விடப்பெரும் உண்மை. இயற்கையின் அரிய கொடுப்பினைகளான சுத்தமான காற்றையும் நீரையும் நிம்மதியான வாழ்வையும் அந்தக் கொங்கிரீட் காடுகளில் என்ன விலைகொடுத்தும் பெற முடிகிறதா? அதைவிடவும், எமக்கு ஒரு படி வளர்ச்சிபோலத் தோற்றம் காட்டி, எம்மிடமிருந்து அபகரித்ததைக் கொண்டு மேலாதிக்க நாடுகள் பெருக்கியுள்ள வாழ்வாதாரங்கள் பல மடங்கு அதிகம் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஓரம்சம்.

இத்தகைய உலகமயமாதல் பின் புலத்துக்கு அமைவான தத்துவமாக வெளிப்பட்ட பின் நவீனத்துவம் வாசிப்பு தொடர்பில் பாதகமான தாக்கத்தைச் செலுத்தியிருந்தது. ஒரு படைப்பு வாசகர் ஒவ்வொருவராலும் அவரவர்க்கான பிரதியாக கட்டமைக்கப்படுகிறது என்பது பின்

நவீனத்துவக் கோட்பாடு. இதில் ஒரு பகுதி உண்மை உண்டு. அது காரணமாக இதுவே முழு உண்மை எனக்கொண்டு மயங்கிக் கொண்டாடியவர்கள் உளர். ஒருவரது வாழ்க்கைக் கோலம், சமூகப்பின்னணி, கற்றறிவுப் புலம் சார்ந்து அவருக்கான எண்ணக்கருத்திரளமைவு (ஸ்கீமா) கட்டமைக்கப்பட்டிருக்கும். படைப்பினை அந்த ஸ்கீமாஅடிப்படையில் தன்னமைவாக்கிலோ, தன்மயமாக்கியோ விளங்கிக்கொள்வதனால் வேறெவரினதும் புரிதலிலிருந்து வேறுபட்டதாக அவரது பிரதி தனித்தன்மையுடன் அமையும். ஒவ்வொருவருக்கும் அவ்வாறான தனித்தன்மை மிக்க பிரதிகள் சாத்தியமாகும்.

ஆயினும், இத்தகைய பிரதிகள் மூலப்படைப்பிலிருந்து அதிகம் விலகுதல் ஆரோக்கியமானதல்ல. மூலப்படைப்பின் தெளிவின்மையின் அளவும் படிப்பவரது புரிதல் குறைபாடும் அதிகரிக்கும் போதே முற்றிலும் வேறுபட்ட பிரதி கட்டமைக்கப்பட வாய்ப்பு ஏற்படும். மாறாக, உள்ளத்தின் ஒளிப்பெருக்குடன் தெளிவாக உருவாக்கப்பட்ட படைப்பொன்றினை வாசிப்பின் ஆளுமை வீச்சுக்கான உச்சத்திறனுடன் படிக்கிற எவரும் படைப்பின் சாத்தியப்பாட்டிலிருந்து அதிகம் விலகலுறாத பிரதியையே பெற்றிருப்பார். அத்தகைய ஆரோக்கியமான சமூகச் சூழலில் படைப்பொன்று வீரியமிக்கதாக்குறவை ஏற்படுத்த முடியும். ஒரு நூல் தன்னை அடியந்தமாக புரட்டிப்போட்டதாக கூறுகிறவர்களைப் பார்த்திருக்கிறோம்.

நூல் பல கற்பினும் ஒருவருக்கான உண்மை அறிவே மிச்சமாகும் என்கிற வள்ளுவரும், குற்றங்குறை கூறமுடியாவகையில் கற்று, கற்றவாறு ஒழுக வலியுறுத்தியுள்ளமையைக் காண்கிறோம். படைப்பிலிருந்து தனக்கு உவப்பானதைக் கொள்ளும் மனித மனத்தை உணர்த்தி, அதைவிடவும் கற்றலின் வாயிலாக நிரந்தர நடத்தை மாற்றத்தை எட்டவேண்டும் என வள்ளுவர் வலியுறுத்துகிறார் என முடிவுசெய்ய முடியும். அந்தவகையில் மனித மனங்களையும் திறன்களையும் மாற்றிப் புனைந்து வளர்த்தெடுப்பனவாக படைப்புகள் அமைகின்றன எனலாம். இதன் வாயிலாக ஒவ்வொரு சமூகமும் தத்தமக்கான பண்பாட்டினைக் கட்டமைக்கின்றன. ஒரு சமூகம் உயர் விழுமியங்களாகக் கருதுவன, அதன் வழக்காறுகள், நடத்தைக் கோலங்கள், விழாக்கள், சம்பிரதாயங்கள், சட்டங்கள், நடையுடை பாவனைகள், உணவுப்பழக்கங்கள் விருப்பங்கள், கலைகள், இலக்கியங்கள் எனும் அம்சங்கள் அனைத்தும் பண்பாடு எனப்படுகிறது.

இவ்வகையில் சமூகம் ஒன்று கட்டமைத்துள்ள பண்பாட்டினை அடுத்த தலைமுறையிடம் கல்வி வாயிலாகக் கையளிக்கும்; பெற்றுக் கொள்கிற புதிய தலைமுறை அதற்குத் தக நடத்தை மாற்றம் பெற்று சமூகவியல்பினராவர். அத்தகைய பண்பாட்டினைச் சிதைவுக்குட்படுத்தி மேலாதிக்க சக்திகள் தமக்கு ஆட்படுத்தும் நுகர்வுக் கலாசாரம் இன்று எம்மீது திணிக்கப்பட்டுள்ளது. எமது அடித்தளத்தை நாம் இழந்து மனித மாண்புகளற்ற பதர்களாகிவருகிறோமோ எனும் அச்சம் மெல்ல மெல்ல மேற்கிளம்பி வரக்காண்கிறோம்.இத்தகைய இழிநிலையைத் தகர்ப்பதற்கு எமது பாரம்பரியத்திடம் மீளச்செல்லும் குரல்களும் எழக்காணலாம். பண்பாட்டு மீட்டுருவாக்கம் வாயிலாக இன்றைய அழிவுகளிலிருந்து மீள முடியும் என நம்புவர். இத்தகையவர்களை பண்பாட்டியவகையினராகக் கொள்ள முடியும்.

இன்னொரு வகையினர் எதிர்ப் பண்பாட்டிய வரையறைக்குரியவர்கள். இவர்கள், எமது மரபுப்பண்பாடு அப்படியொன்றும் ஏற்றிப்போற்றத்தக்கது அல்ல என்பர். சாதி இழிவுகள் பேசி உழைக்கும் மக்களை அவமதித்தவாறு "தண்டச்சோறுண்ணும் பார்ப்பார்" உழைக்காது சகலபோகங்களும் அனுபவிப்பது பகவான் அனுக்கிரகம் எனப்பொய்யுரைகள் பேசுவனவாயே எமது பண்பாடு அமைந்திருந்தது என்பர். அத்தகைய மரபுப் பண்பாட்டை முழுதாக நிராகரித்து எதிர்ப் பண்பாட்டு நடத்தைக் கோலங்களை முன்னெடுக்கவேண்டும் என்பது எதிர்ப் பண்பாட்டியர் நிலைப்பாடு. தமிழர் வரலாற்றில் ஈ.வே.ரா பெரியார் எதிர்ப்பண்பாட்டியவாதத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆவார். மரபுப் பண்பாட்டு வரலாற்றை எதிர்ப்பண்பாட்டு அடிப்படையில் மறுவாசிப்புக்கு உள்ளாக்கியவர் பெரியார். இதிகாசங்கள், புராணங்கள், கலை, இலக்கியங்கள் என்பவற்றை எல்லாம் மாற்றுப் பார்வையில் அவர் மறுவாசிப்புச் செய்திருந்தார்.

இவ்வாறு மரபுக்கூறுகள் அனைத்தையும் அடியந்தமாய் எடுத்தெறிந்து விடாமல், ஏற்புடையவற்றைக் கையேற்று, அடிமைப்படுத்தும் குணாம்சம் சார்ந்தனவற்றைத் தயவுதாட்சண்யமின்றி நிராகரிக்கும் மற்றொருவகையே புதிய பண்பாடு. இவ்வகையில் விட்டுத்தொலைக்க வேண்டிய அம்சத்தில் எதிர்ப்பண்பாட்டியப் பண்பும், எமது மரபுத்தொடர்ச்சிக்கான பாரம்பரியத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கவற்றை எடுத்துக்கொள்வதில் பண்பாட்டியக் குணாம்சமுடையதாக புதிய பண்பாட்டியம் அமைகிறது. அதற்காக புதிய பண்பாட்டியம் என்பது பண்பாட்டியத்திலும் எதிர்ப்பண்பாட்டியத்திலும் இருந்து அங்கொன்று இங்கொன்றாக எடுத்துக்கோர்த்த கலவையன்று. புதிய வரலாறு படைக்கும் அடிப்படைப்பண்பு மாற்றத்துக்குரிய வடிவம் இது. மகாகவி பாரதிபுதிய பண்பாட்டியத்துக்கான சிறந்த எடுத்துக்காட்டு. புதிய பண்பாட்டு அடிப்படையில் தமிழர் வரலாற்றுத் தொடக்கம், வளர்ச்சி, புராண - இதிகாசங்களின் தாக்கம் என்பவற்றை மறுவாசிப்புக்கு உள்ளாக்கியவர் க. கைலாசபதி.

பொதுவாக வாசிப்பு என்பது எழுதப்பட்டவற்றைக் கிரகிப்பது என்பதைக் கடந்து பன்முகப் புரிதலுக்குரியதாக இன்று கல்வியுலகில் பார்க்கப்படுகிறது. முன்னரே பாமர மக்களிடம் படிப்பது என்பதே வாசிப்பதாக பொருள் கொள்ளப்பட்டிருந்தது. படிப்பவர்கள் புத்தகங்களுக்குள் முகம் புதைத்திருப்பதால் "எத்தனையாம் தரம் படிக்கிறாய்" என்பதனை "இப்ப என்ன வாசிக்கிறாய்" எனக் கேட்கும் மரபு இருந்தது. அந்த உழைக்கும் மக்களைப் பொறுத்தவரை வாழ்ந்து அனுபவித்துக் கற்பவர்கள் என்றவகையில் வாழ்வினை வாசிப்பவர்கள் ஆதலால் - புத்தகப் பூச்சிகளாகிக் கொண்டிருந்த படிப்பாளிகளை "என்ன வாசிக்கிறாய்" (எந்த வகுப்பில் படிக்கிறாய்") எனக் கேட்பதில் பரந்துபட்ட அர்த்தப்பரிமாணங்களைக் காணமுடியும்.

எழுத்து மொழியை மட்டுமன்றி, உடல் மொழியையும் உணர்வு வெளிப்பாடுகளையும் வாசித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஒருவரோடு உரையாடும் போதோ, காட்சி யூடகத்தை கண்டு அனுபவங்கொள்ளும் போதோ சம்பந்தப்படும் உடல் மொழியையும் உணர்வு நிலை வெளிப்பாட்டையும் கவனத்தில் கொள்ளாமல் சரியான புரிதலை வந்தடைய முடியாது. "நல்ல சந்தோசமாய் இருக்கிறோம்" என்கிறவர் முகச்சுழிப்புப் போன்ற உடல்மொழி வெளிப்பாட்டோடு அதனைக் கூறும் பட்சத்தில் அதன் பொருள் எதிர்நிலைக்குரியது என்பதைக் கேட்பவரால் அனுமானித்துவிட முடியும். இயல்பாக மக்களிடம் வெளிப்படும் இவையே கலைப்படைப்புகளில் ஆற்றல் மிக்க உடல் மொழிகளாக கவன ஈர்ப்பைப் பெறுவன.

இதே போன்றுதான் வரலாற்றினை வாசிப்பதும் எழுதப்பட்டவற்றிலிருந்து மட்டுமாயல்லாமல் பல்வேறு தளவிரிவாக்க முடையதாயுள்ளது. கல்வெட்டு எழுத்துகளில் இருந்து வாசிப்பது முழுப்புரிதலுக்கு இட்டுச்செல்லாது. தொல்பொருள் ஆய்வுத் தடயங்கள் உணர்த்தும் வாழ்முறை "வாசிக்கப்பட" வேண்டும். நாட்டார் வழக்காற்று மரபு பொதிந்துவைத்திருக்கும் அடிப்படை உண்மை வெளிப்படுமாறு புதிய கோணத்தில் வாசிக்கப்பட வேண்டும். அவ்வாறே புராண இதிகாசங்களைக் கட்டவிழ்த்து உண்மையைத் தேடும் நோக்கில் எழுத்தைக்கடந்துறையும் எழுதப்படாதனவற்றை வாசிக்க முயல வேண்டும்.

சிறிய அளவில் நடந்த விடயம் ஒன்றை அதிகாரச் சாதியவர்க்கத் தரப்பினர் தமது ஆதிக்கத்தையும் சுரண்டலையும் ஏற்கப் பண்ணும் வகையில் புராண - இதிகாசப்புனைவுகளாக்கியுள்ளனர். (இதிகாசத்தில் நிகழ்வுக்கான சாத்தியம் உள்ளதுடன் ஒப்பிட்டால் புராணத்தில் இன்னும் அருந்தலாகவே இருக்கவாய்ப்புண்டு). இராமர், சீதை, இராவணன் சம்பவங்கள் சமஸ்கிருத வீரயுக இலக்கியத்தில் மிகக் குறைவாக இடம் பெற்ற கவிதைகள்; இதை விட வீரப்பண்பும் அதிகம் பேசப்பட்டதுமான சம்பவங்கள் அதிக கவிதைகளாய் இருந்த போதிலும் காவிய முரணும் ரசனையும் உடையதாக இராமன் கதை அமைந்ததாலேயே இன்று கம்பராமாயணமாக விஸ்வரூபம் பெற முடிந்தது. வட இந்தியாவில் ஆற்றால் சூழப்பட்ட சிறிய தீவான இலங்கை, இலங்கை சோழரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காலத்தில் எமது இலங்கையாக கம்பராமாயணத்தில் மாற்றம் பெற்றிருந்தது. இராமன் குறித்த வீரயுகக் கவிதை உருவாகி ஆயிரம் ஆண்டுகளின் பின்னர் வால்மீகி இராமாயணத்தில் ஒரு கடவுள் அவதாரமாகக் காணப்பட்டார்; இன்னும் ஆயிரம் வருடங்களின் பின்னர் கம்பரிடம் வேறு பரிமாணங்களைப் பெற்றார். பின்னரான ஏழு நூற்றாண்டுகளின் வளர்ச்சியில் இன்றைய ஆதிக்க சக்திகள் இராமன் புனைவுகளைத் தமக்கு அமைவான வாசிப்புகளுக்கு ஆட்படுத்தி மக்களை மோதவிடுதற்குப் பயன்படுத்துவர்.

அதுவும் ஒருவகை மறுவாசிப்புத்தான். அத்தகைய புராண - இதிகாசங்களை பண்பாட்டிய நிலையில் இருந்தவாறே அதன் ஆதிக்க சார்பிலிருந்து விலக்களித்து மறுவாசிப்பு செய்ய முயல்கிறவர்கள் உள்ளனர். ஆயினும் மரபுப்பண்பாடு தவிர்க்கவியவாமல் ஆதிக்கத்தை நியாயப்படுத்தும் குணப்பண்பையே அதிகம் கொண்டுள்ளமை ஒருண்மை. அக்காரணத்தினாலேயே எதிர்ப்பண்பாட்டியர்கள் அவற்றைத் தகர்க்கும் மறுவாசிப்புகளை மேற்கொள்கின்றனர். குழந்தையைக் குளிப்பாட்டிய நீரைத் தொட்டியிலிருந்து வீசும்போது கூடவே குழந்தையையும் வீசிவிடுவதைப் போலஎதிர்ப்பண்பாட்டிய வாதிகள் ஆதிக்கவாதப் புனைவுகளைத் தகர்க்கும்போது உள்ளுறைந்திருக்கும் உழைக்கும் மக்களின் உருவாக்கமான பண்பாட்டுக் கூறுகளையும் அழித்துவிட முயல்வர்.

அதற்கு மாறாக புதிய பண்பாட்டியம், உழைக்கும் மக்களது பண்பாட்டு அம்சங்களைப் பாரம்பரிய மரபிலிருந்து உள்வாங்கி எதிர்கால முன்னேற்றத்துக்கும் விடுதலைக்குமான புதிய பண்பாட்டை கட்டமைக்கும் வண்ணம் ஆதிக்கத்தகர்ப்பு எனும் அளவில் எதிர்ப்பண்பாட்டு நிலைப்பாட்டையும் உள்வாங்கும் கலை - இலக்கிய வடிவங்களில் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகள் உழைப்பு இழிவுபடுத்தப்பட்டு அதிகாரம் செலுத்தியவர்கள் புனிதர்களாக கொண்டாடப்படும் நிலை நிலவியது. புதிய பண்பாட்டியரான பாரதி "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

எனப்பிரகடனப்படுத்திய போது மேலது கீழாய், கீழது மேலாயான புரட்சி முன்மொழியப்பட்டது. உழைக்கும் சூத்திரர்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் கடை நிலையினர் எனும் பிராமணியப் பொய்யுரை தகர்க்கப்பட்டு, உழைக்காதுசுரண்டித் தண்டச்சோறுண்போரே அவமானத்துக்குரிய வாழ்வையுடையோர் எனும் உணர்வு பாரதியால் கிளர்த்தப்பட்டது. நல்லோர் ஒருவரின் பொருட்டு மழைபெய்யும் எனும் சுரண்டற் சமூகநியதி மாறி, எல்லோரும் உழைத்துண்ணும் நல்லோரயாவர் எனும் மாற்றமாக இதனைச் சித்திரிப்பார் தமிழியல் ஆய்வுலகின் புதிய பண்பாட்டியரான க. கைலாசபதி.

அந்தவகையில் சமூக உணர்வு மறுகட்டுமானத்துக்கு உட்படுத்தப்பட வேண்டியதாகிறது. மனித உழைப்பு உலகை புதிதாய்ப் புனைந்து வளர்ச்சிகளைச் சாத்தியமாக்கியது. ஆயினும் இரண்டாயிரம் வருடங்களின் முன்னர் உழைக்காது சுரண்டிவாழ்வோர் தம்மை நியாயப்படுத்தும் வகையில் உழைப்பை இழிவுபடுத்தியதோடு உழைக்கும் மக்களை அடிமைப்படுத்தும் கருத்தியல்களையும் பரப்புரைத்தனர். மக்கள் விடுதலை சித்திக்கும் போது உழைப்பே போற்றத்தக்கது எனும் கருத்தியல் மேலோங்கும், இதற்கான மாற்றத்தை முன்னதாக பண்பாட்டுத்தளத்தில் புதிய பண்பாட்டியம் ஏற்படுத்தும். ஏற்படவும், விழிப்புணர்வுறும் மக்கள் அனைத்துவகை ஒடுக்கு முறைகளையும் தகர்த்துப் புதிய உலகைப் படைப்பர். அப்புத்துலகின் மக்கள் புதிய பண்பாட்டுச் சூழலில் ஆரோக்கியமான உடல் உள ஆத்மார்த்த வாழ்வைச் சாத்தியப்படுத்துவர். இன்று பண்பாட்டியம், எதிர்ப்பண்பாட்டியம் என்பவற்றோடு மூன்றாம் நிலையில் புதிய பண்பாட்டியம் நிலவுகிறது. இவற்றில் புதிய படைக்கும் ஆற்றலுடன் எதிர்காலத்தைச் சிருஷ்டிக்கவல்லதாக புதிய பண்பாட்டியமே உள்ளது. புதிய உலகைப் படைக்க ஆர்வங்கொள்ளத்தக்க ஆளுமை நாடுவோர் புதிய பண்பாடு குறித்த வாசிப்பில் திளைப்பர். எழுச்சியுறும் புதிய பண்பாட்டியம் உருவாக்கும் உலகுக்கான இயல்புச் சூழலே புதிய பண்பாடு சார்ந்ததாய் அமையும்.

அந்தவகை புதிய பண்பாட்டு உணர்வோடு ஒவ்வொரு விடயத்தையும் மறுவாசிப்புக்கு உட்படுத்துவது அவசியம். பண்பாட்டியம், எதிர்ப் பண்பாட்டியம், புதிய பண்பாட்டியம் குறித்த தெளிந்த பார்வை இவ்வகையில் அவசியமானதாகும். உழைக்கும் மக்களின் நோக்கிலும் மக்கள் விடுதலைக்கோணத்திலும் தரிசன வீச்சுக்கொள்வது புதிய பண்பாட்டியம் அத்தகைய புதிய பண்பாட்டு மறுவாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் அறிமுக கட்டுரை இது. இத்திசைவழியிலான தேடலுக்கான ஒரு அருட்டுணர்வு கிளர்த்தப்படுமாயின் அதுவே இப்போதைக்குப் போதுமானது தேடு கல்வி இல்லாத ஊர் பாழ், புத்தம் புதிய கலைகள் மென்மேலும் வளர்ந்தபடி அவை எடுத்த எடுப்பில் கைவரப்பெறும் என்பதற்கு இல்லை. அர்ப்பணிப்பு உணர்வோடு தொடர்ந்து கற்போம்.

*தற்திருப்தி கற்றலின் எதிரி!*

**கலாநிதி – ந. இரவீந்திரன்,**
தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரி,
தர்காநகர் 12090.
விரிவுரையாளர் (முன்னாள் ஆசிரியர்)
(யா/ சுழிபுரம். வ. ஆ. வி).

# கல்வியும் வாழ்வும்

சமூக அசைவியக்கத்தின் (SOCIAL MOBILIZATION) தூண்டுகோலாக விளங்குகின்ற கல்வியானது, மானிடரில் மறைந்திருக்கின்ற அளப்பரும் ஆற்றலை, தெய்வீக சக்தியை வெளிக்கொணர்வதற்கும் அவற்றினை மேலும் மெருகூட்டவும் உதவுகின்றது. கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணிப்பதன்று. அவ்வாறு திணிக்கப்படும் விஷயங்கள் வாழ்நாள் முழுவதும் அவனோடு ஒன்றாமல் உபத்திரவம் செய்து கொண்டு இருக்கும். அதனால் எதுவித பயனும் கிட்டமாட்டாது. கற்கும் விடயங்கள் மனதில் நன்றாகப் பதிந்து மனித நடத்தைக் கோலங்களை நிர்ணயம் செய்கின்ற எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் பிரதிபலிப்பதுடன் கால ஒட்ட வளர்ச்சி நிலைகளை உள்வாங்கி இயற்கையோடு பொருதி சிந்தனை ஆற்றல் விரிவடைவதற்கு உந்து விசையாக கல்வி பங்காற்றுதல் வேண்டும். அதாவது கல்வி உயிரூட்டுவனவாக, ஊக்கம் அளிப்பனவாக, மனிதத்தன்மை தருவனவாக, ஒழுக்கத்தை மேம்படுத்துவதாக, மனவலிமையைத் தருவதாக, புத்தியை விசாலிக்கச் செய்வதாக, தன்னம்பிக்கையைத் தருவதாக அமைதல் வேண்டும்.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால் வாக்கினில் ஒளி உண்டாகும்" என மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களும், "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என ஔவைப்பிராட்டியும், "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என வள்ளுவப் பெருந்தகையும் கல்வியின் பெருமை தொடர்பாக பகர்ந்துள்ளனர். எனினும் நடைமுறை வாழ்வில் கல்விக் கூடங்களின் செயற்பாடுகளால் மாணவர்களின் நடத்தைக் கோலங்களில், வாழ்வியல் முறைகளில் அனுகூல மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளனவா என ஆய்வு செய்ய வேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம்.

மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, அனுபவம் யாவும் அவர்கள் வாழ்கின்ற பௌதீகச் சூழல், சமூகச்சூழல், ஆன்மீகச்சூழல், பொருளாதாரச் சூழல், பண்பாட்டுச் சூழல், தொழில் நுட்பச் சூழல் ஆகியவற்றுடன் பொருந்திச்செல்லக் கூடியவாறும் தேவை ஏற்படும் பொழுது பழையன கழிதல், புதியன புகுதல் என்ற அறிஞர்களின் கூற்றுக்கிணங்க புதிய அறிவியல் தொகுதிகள் மற்றும் நடைமுறைகளை அதன் அனுகூலபிரதிகூல விளைவுகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து அவற்றை ஏற்றுக் கொள்ளத் தயாரான நிலை மேம்படுத்தப்படுதல் அவசியமாகும்.

நாட்டின் தேசிய இலக்கு, கொள்கைகள், ஒவ்வொரு இனங்கள், மதங்களுக்குரித்தான தனித்துவச் சிறப்பியல்புகள், பிரதேசங்கள், சமூகம் சார் தனித்துவ இயல்புகளில் மாசுபடியாத நிலையினை, புதிய அறிவியற்றொகுதியை வரவேற்கும் பொழுது கவனத்தில் கொள்ளப்படல் அவசியம். அதாவது சமூகங்கள் ஒவ்வொன்றினதும் விஷேடித்த பாரம்பரியத் தொழில்நுட்ப ஆற்றுகைத்திறன்கள், பிரதேசம் சார்,கிராமம் சார் வேறுபட்ட உள்ளூர் இயற்கை வளங்களை வீண் விரயமின்றி மனித தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் போக்கானது புதிய அறிவியற் றொகுதியின் வருகையால் கைவிடப்படல் ஆகாது. பொருளாதாரச் சிக்கனம் உடல், உள ஆரோக்கியம், சூழல் காரணிகளுக்கிடையிலான சுற்றோட்டச் செயற்பாடு என்பனவற்றுக்குப் பங்கம் ஏற்படாது தவிர்க்க முடியும். இதற்கு கல்வி அறிவும், தூரதிருஷ்டிப் பார்வை கொண்ட

விரிசிந்தனைப் போக்கும் அவசியம் ஆகும். ஆனால் நடைமுறையில் நமது நாட்டில் அத்தகைய போக்கு மிக வறிதானதாக உள்ளது. வல்லரசுகளுக்கும், பல்தேசியக் கம்பனிகட்கும் சாதகமான முறையில் நடைமுறையில் உள்ள உலகமயமாதல் என்ற கொள்கையின் அறிமுகத்தினைத் தொடர்ந்து வெளிநாட்டுப் பொருட்கள் மீது அதீத மோகம் கொள்ளும் போக்கும் உற்பத்திக் கலாசாரத்திலும் பார்க்க நுகர்வுக்கலாசாரத்தின் மீது மிகுந்தபற்றுக் கொள்ளும் போக்கும் நவீனம் என்ற போர்வையில் பெரும்பாலான மக்களது அறிவை மழுங்கடித்து நர்த்தனம் புரிந்து வருகின்றது. இவை மன அமைதியினைச் சீர்குலைத்து அவசரம், பதட்டம், பரபரப்பு நிறைந்த வாழ்வியற் பண்புக் கோலத்தை உருவாக்குகின்றன. உள்ளூர் வளங்களின் பயன்படுதன்மை கைவிடப்பட்டு அவை மாற்றுத் தேவைகளுக்கேனும் பயன்படுத்தப்படாது விரயமாகிப் போவதுடன் அவற்றை பயன்பாட்டு நிலைக்கு உருமாற்றுவதற்காக மரபு ரீதியாக கையாளப்பட்டு வந்த அருமையான தொழில்நுட்ப முறையியல்களும் மறைந்து போகும் நிலையும் ஏற்பட்டுள்ளது. மறுபுறம் நவீன தொழில் நுட்பத்தின் உள்வருகையில் ஏற்பட்ட தேவைகளின் பெருக்கமும், அவற்றை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பொருட்களின் பன்முகத் தன்மையும் அதிகளவான பணவருவாயைத் திரட்டுவதற்கான அங்கலாய்ப்பு நிலையினை மக்களிடம் ஏற்படுத்தி உள்ளது. உள்ளூர் வளங்களை மூலாதாரமாகக் கொண்ட சுய தொழில் வாய்ப்பு முயற்சிகள் இறக்குமதியாகும் நவீன தொழில் நுட்பப் பொருட்களுடன் போட்டியிட முடியாத நிலை ஏற்படுகின்றது. ஒப்பீட்டு ரீதியில் பாரம்பரிய உற்பத்திப் பொருட்களினை விடக்குறைந்த ஆயுட்காலத்தினை உடைய இந்நவீன பொருட்களின் பால் கணிசமான அளவு நுகர்வு நாட்டம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையானது கிராமியப் பண்புசார் உற்பத்தி இயல்புகளை நலிவடையச் செய்து வேலையின்மைப்பிரச்சினையையும் தோற்றுவித்துள்ளது. இவை சமூக அமைதியின்மை, திருப்திகரமற்ற வாழ்க்கைத்தர நிலைமைகளைக் கூர்மையடையச் செய்கின்றது. கல்வி அறிவின் அடிப்படையிலான சிந்தனைப்பாங்கு முனைப்புப் பெறாமையினால் இந்நிலை ஏற்படுகின்றது. கல்வி அறிவினைக் கடந்தகால, நிகழ்கால எதிர்கால அரசியல், சமூகவியல் சர்வதேசக் கண்ணோட்டங்களில் விரவச் செய்து பொதுநோக்கு, நாட்டுப்பற்று, தன்னிறைவு போன்ற தாரகமந்திரங்களுக்கு வலுவூட்டம் செய்யும் பண்பு மக்களிடத்தில் கட்டி எழுப்பப்படுவது அவசியம். இவ் விடயத்தில் நாட்டில் நல்லாட்சி மலரவேண்டுமாயின் அறிவு ஆட்சிபீடத்தில் அமர வேண்டும் என உரைத்த கிரேக்க தத்துவ ஞானியான பிளேட்டோவின் எண்ணப்பாங்கினை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இங்கு நம் நாட்டில் கல்வி கற்ற மக்கட் தொகுதியினர் தாம் பெற்ற அறிவின் அடிப்படையில் சிந்தித்து தமது வாக்குரிமையினைப் பயன்படுத்தும் தன்மை அரிதாகவே உள்ளது. இன்றைய கொள்கை வகுப்பு, திட்டமிடல் நடைமுறைகள் அவற்றில் அழுத்தம் செலுத்தும் புறக்காரணிகள் அதனால் எதிர்காலத்தில் பல்வேறு கோணங்களில் பல் பரிமாணங்களில் ஏற்படக்கூடிய அபாய ஏதுக்கள் தொடர்பில் விழிப்புணர்வற்று தற்கால நுகர்வுசார் சுகநல போகங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றனர். இங்கு கல்வி அறிவிற்கும் மக்களின் வாழ்வியற் தீர்மானங்களுக்குமிடையில் இணைப்பற்ற போக்கு நிலவுவதனைக் கண்டு கொள்ள முடிகின்றது.

நுகர்வு சார் பொருளாதார நலன்களுக்கு அடுத்தபடியாக பண்பாட்டு நடைமுறைகளின் உயிர் நாடியாகக் கருதப்படுகின்ற இறைவழிபாட்டு நடைமுறைகளில் கூட அறிவின் செல்வாக்கு வறிதாகவே உள்ளது. பண்டைய காலங்களில் மக்கள் நம்பிக்கைகளில் அதிகம் பின்னிப் பிணைந்திருந்த பேய், பிசாசு, முனி, செய்வினை, சூனியம் போன்ற அச்ச எண்ணப்பாங்குகள் அறிவியல் தொழிற்பாடு நகரமயமாக்கற் செயற்பாடுகளின் விரிவாக்கத்தினால்

குறைவடைந்துள்ள போதிலும் இறைவழிபாடு தொடர்பாக அறிவியலுக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுவது அதற்காக அதிகளவு பணத்தை செலவிடுவது முன்னைய காலங்களை விட முனைப்பு பெற்று விளங்குகின்றது. இயற்கைப்படைப்புக்கள் அனைத்தும் எம்மை மீறிய அதி உன்னத சக்தியின் தோற்றப்பாடுகள் என்பதில் ஐயமில்லை.ஒவ்வோர் உயிரினத்தினதும் ஆன்மாவில் ஒன்றிப்போய் உள்ள இறைவடிவத்தினை எமது மக்களில் பலர் உணரத்தவறி விடுகின்றனர். சுவாமி விவேகானந்தர், யேசு கிறிஸ்து நாதர், கௌதம புத்தர் போன்ற இறை ஒளி ஞானம் பெற்றவர்கள் தமது ஐம்புலன்களை ஆசைகளின் பால் செல்லவிடாது அடக்கி ஒருமுகப்படுத்தி உயிரினங்களின் செம்மையான நிலையிருப்புக்கு உகந்த கருத்துக்களை வெளியிட்டதுடன் முன்மாதிரியான சமூகப்பணிகளிலும் தமது வாழ்நாட்காலத்தினைச் செலவழித்தனர். இயற்கையை வழிபடுதலுடன் ஆரம்பித்த எமது இந்து சமயத்தின் அடிப்படையான, பெறுமதியான நல் உண்மைகளை உணராத நிலையில் அதனைத் தவறாக பலரும் சுயநல நோக்கங்களுக்காக வியாபாரப் பாணியில் ஆலயங்களை நடாத்தி தமது சொத்துச் சுகங்களைப் பெருக்கிக் கொள்கின்றனர். சமய விடயங்களில் ஆழ்ந்த புலமை மிக்கவர்கள் எனத் தம்மைத்தாமே பிரசாரப்படுத்தித் திரியும் சுயநலமிகளும் இத்தகையபடுபாதகங்களுக்குத் துணை போகின்றனர். இவர்கள் புராண படனங்களை மனப்பாடம் செய்து வெறுமனே ஒப்புவிப்பதோடு நின்று விடுகின்றனர். அவர்களின் எண்ணம் சொல், செயல்களில் அவை இம்மியளவும் செல்வாக்குச் செலுத்துவதில்லை. இறையுணர்வுக்கு மாறான விதத்தில் பொய்மையும், புரட்டுவாதக் கருத்துக்களையும் உரைத்து சமூகங்களில் குழப்பநிலையைத் தோற்றுவிக்கும் பஞ்சமாபாதகர்களாக இவர்கள் தொழிற்படுகின்றனர். இவர்களையும் அறிவுப்புலமை மிக்கவர்கள் என நம்பும் இளம் பராயத்தினர் கல்வி அறிவின் மூலம் பெற்றுக் கொள்கின்ற நல் விழுமியக்கருத்துக்களை தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தேவை இல்லை என தவறாகக் கருதிக் கொள்கின்றனர். இறைவனுக்கு காணிக்கை செலுத்துதல், ஆலயம் அமைத்தல் போன்றவற்றை செய்வதன் மூலம் தமது பாவங்கள் கழிந்து நற்கதி அடையலாம் என கருதிக்கொள்ளும் இவர்கள் இறைவனின் ஆற்றலை சிறுமைப்படுத்திக் கொள்கின்றனர். இறைவன் அனைத்து ஜடப்பொருட்களிலும் நிறைந்துள்ளான். எப்பொழுதும் எவ் இடத்திலும் எந்நிலையிலும் இறைவனை நினைக்க முடியும் இதற்கு இடைத்தரகர்கள் அவசியமில்லை. நித்தமும் இறையுணர்வுடன் தொழிற்படும் மனிதர்கள் பொய்யுரையார்கள். ஏனைய உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கமாட்டார்கள். யேசுகிறிஸ்து நாதன் 10 கட்டளைகளில் ஒன்றில் மனிதர்களை அவதூறு செய்தல், கொலைக் குற்றத்திற்கு ஒப்பானது எனச் செப்பி உள்ளார். இன்று சர்வசமயசமரசக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அன்பின் வழியாக அனைத்து உயிர்களினையும் நல்வழிப்படுத்தி தன்னம்பிக்கையை வலுப்படுத்தி தினசரி சுய மதிப்பீட்டின் ஊடாக ஆன்மீக மலர்ச்சியை ஏற்படுத்தின்ற பகவான் ஸ்ரீசத்யசாயி பாபா சேவா நிறுவனம், பிரம்ம குமாரிகள் நிறுவனம் போன்ற சமூகப்பற்றும் நல் நோக்கமும் கொண்ட நிறுவனங்கள் வளர்ச்சி அடையத் தொடங்கியுள்ளமை ஆன்மீக மலர்ச்சிக்கான கலங்கரை விளக்காக ஒளிவீசுகின்றது. இது பேரொளியாக சுடர்விட்டுப் பிரகாசிப்பதற்கு தற்போதைய பாடசாலைச் சமயக்கல்வியை கற்கும் மாணாக்கர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக உள்ளது. சைவ சமயத்தின் அடிப்படை மையக் கருத்தாகிய ஆணவ ஒழிப்புக்கு மாறாக எனது ஆலயம், நான் கட்டிய ஆலயம் என ஆணவம் மேலோங்கி இறையருள் நீங்கியுள்ள இடத்தில் இவ் அன்புப் பேரொளி அவற்றைச் சுட்டெரிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை

சிரத்தை, ரிதம், சத்தியம், மனவொடுக்கம் ஆகிய நான்கும் ஒன்றிணையும் போது மாபெரும் ஆற்றல் உருவாகின்றது. அத்தகைய ஆற்றலில் எல்லா ஆற்றல்களின் வெளிப்பாடும் அடங்கியிருக்கும். அதுவே தெய்வீக நிலை ஆகும். "புத்தி ஐம்பொறி உணர்வுகளைக் கடந்தது" பேராற்றல் மிக்கது. எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒன்று சேர்வதனால் பேராற்றல் உருவாகின்றது. எண்ணம் ஒன்று; சொல்வேறு செயல்வேறு; மற்றொன்று எனச்செயற்படுபவன் கொடியவன் அல்லது தீயவன் எனக்கருதப்படுகின்றான். சூரியன் எப்படி இருளை அகற்றி ஒளியைத் தருகின்றானோ அதே போன்று புத்தியும் அறியாமையை நீக்கி வாழ்வில் எம்மை ஒளிரச் செய்கின்றது. சுயநம்பிக்கையை மேலோங்கச் செய்கின்றது. முழு நிறைவான ஆளுமை விருத்திக்கு வழிகாட்டுகின்றது.

பண்டைய குருகுலக் கல்வி முறையில் குருவுக்கு பணிவிடை செய்து கல்வி பயிலும் முறை நிலவியது. அங்கு செயற்பாடு தழுவிய நல்லொழுக்கக் கல்வி மாணவருக்குக் கிட்டியது. அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் குருவின் வழிகாட்டலில் நன்றியுணர்வுடன் ஒழுக்கம் தவறாத செயற்பாடுகளுடன் வாழ்க்கை நடாத்துவதற்கு உதவியது. ஜோன்டுயி, மகாத்மா காந்தி ஆகிய பெரும் சிந்தனையாளர்களும் செயற்பாடு தழுவிய கல்வி முறைமையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி உள்ளனர். இக் கல்வி மாணாக்கர்களின் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய மூன்றினையும் செம்மைப்படுத்தி வலுப்படுத்துகின்றது.

இடது மூளையுடன் வலது பக்க மூளையின் செயற்பாட்டினையும் ஊக்குவித்து விசாலமடையச் செய்து சமநிலையான ஆளுமைத்தன்மையினை மேம்படுத்துகின்றது. ஆனால் தற்பொழுது பாடசாலை மாணாக்கர் பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களில் தமது பகல் பொழுது நேரம் முழுவதனையும் செலவிடுவதனால் வீட்டில் பெற்றோருடன் இணைந்து முயற்சிகளில் ஈடுபட்டு அனுபவம் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதாகி விட்டது. மேலும் பொழுது போக்கு விடயங்களில் ஈடுபட்டு மகிழ்ச்சிகரமான அனுபவங்களைப் பெறுவதற்கான வாய்ப்பும் வறிதாகி உள்ளது. இந்நிலைமை நடைமுறை வேலை உலகு எதிர்பார்க்கின்ற பிரயோக அறிவுடன் கூடிய ஆற்றுகைத்திறன் மிக்க மனிதவளத்தை வழங்கமுடியாத துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்துகின்றது. எனவே கல்விக்கும் வாழ்க்கைக்கும் இடையில் பிணைப்பினை ஏற்படுத்தும் வகையில் வாழ்வின் பல்பரிமாணக் கூறுகளிலும் கல்வி அறிவு செறிவுற்றுச்செழுமை பெறச் செய்யும் செயற்பாடுகளில் அனைத்துத் தரப்பினரும் ஈடுபடவேண்டிய அத்தியாவசியத்தினை ஏற்படுத்தி உள்ளது. இல்லாவிடில் உலகமயமாதலின் கொடூரமான எண்ணங்களுக்கு தன்னாதிக்கம் சுய மரியாதைப்பண்பும் கொண்ட சமூகம் பலியாகின்ற அபாயநிலை துரிதமடைந்துவிடும்.

கல்விக்கும் வாழ்க்கைக்கும் இடையில் காணப்படுகின்ற இடைவெளியின் பெருக்கமானது மனித சமூகத்தின் நீண்டகால இருப்பினைக் கேள்விக்குரியதாக்கிவிடும்.

**சு. சுந்தரசிவம்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
(நிர்வாகம்)
வலிகாமம் கல்வி வலயம்.

# திறந்த பாடசாலை (OPEN SCHOOL) முறைமையின் செயலாற்றுகை

உலகளாவிய ரீதியில் கல்வி உரிமை அனைவருக்கும் வழங்க அனைவருக்கும் கல்வி 2015 இல் நிச்சயமாக (Education for All By 2015 truly) என்ற செயல்திட்டத்தை யுனெஸ்கோ நிறுவனம் விரைவாக அமுலாக்கி வருகின்றது. அதன் செயலாற்றுகைகளாக அனைவருக்கும் கட்டாயக்கல்வியை வழங்குதல் திறந்த பாடசாலை முறைமையை ஏற்படுத்தல், தொழிற்பாட்டு எழுத்தறிவூட்டல், தொழில் வழிகாட்டல், சுய தொழில்கல்வி, பெற்றோர்களுக்கான கல்வி, சமூக விழிப்புணர்ச்சிக்கான கல்வி ஊடகங்களினூடாகக்கல்வி, ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் முதன் முதலாக யாழ்ப்பாண மாவட்ட ஐந்து வலயங்களிலும் சென்ற மாதம் திறந்த பாடசாலைகள் திறக்கப்பட்டன. இவற்றின் செயலாற்றுகை மிகவும் பயனுறுதி வாய்ந்தவை என்பது தொடர்பான விழிப்புணர்வு போதுமானதாக இல்லை.

முறைசார்ந்த பாடசாலைகள் இலங்கையில் கல்வியை வழங்கி வருகையில் பல குறைபாடுகளும் பல சிறப்பம்சங்களும் காணப்படுகின்றன. முறை சார் பாடசாலைகளின் நெகிழ்ச்சியற்ற தன்மைகள், குறித்த வயதுகள் அடிப்படையிலேயே சேர வேண்டிய நிலைகள், சம வயதினர் சம வகுப்புக்களில் இருக்க வேண்டிய நிலை, ஒவ்வொரு ஆண்டும் வகுப்பேற்றம், தனியாள் வேறுபாடுகளுக்கு குறைந்த சந்தர்ப்பங்கள், பல்வேறு நோய்கள் விசேட தேவைகள், காரணமாகப்பாடசாலைகளில் இருந்து விலகியோர் மீண்டும் பாடசாலையில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு இல்லை. பொருளாதாரம், வறுமை காரணமாகத் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பமுடியாத பெற்றோர்கள் ஆகிய அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து கல்வி என்னும் அழியாச் செல்வத்தை மேற்குறிப்பிட்ட புறக்கணிக்கப்பட்டவர்கள் பெற உதவும் களங்களாகத் திறந்த பாடசாலைகள் உள்ளன. திறந்த கல்வி திறந்த பல்கலைக்கழகம், திறந்த பாடசாலை முறைமைகள் எல்லாம் கல்வி வாய்ப்புக்களை திறக்கும் திறவு கோல்களாகவுள்ளன.

## இலங்கையில் திறந்த பாடசாலைகள்

கல்வியமைச்சும், தேசிய கல்வி நிறுவகமும் 2004 ஆம் ஆண்டு இலங்கையில் முதன் முதலாகத் திறந்த பாடசாலை முறைச் செயற்றிட்டத்தை ஆரம்பித்தன. திறந்த பாடசாலை முறைமையானது திறந்த கல்வி முறையைப்பயன்படுத்தி கல்வியைப் பயனாளியின் வாசற்படிக்கே கொண்டு செல்லும் ஒரு செயலொழுங்காகும். இதில் வயது, பால், அடிப்படைக்கல்வித்தகைமை, தொழில் நிலைமை, சமூகநிலைமை என்பவை கருத்திற் கொள்ளப்பட மாட்டா. கற்போரின் விருப்பப்படி விரும்பிய இடத்தில் தொடங்கி விரும்பிய வேகத்தில், விரும்பிய அளவில் விரும்பிய ஊடகங்களைப் பயன்படுத்திக் கற்கும் வாய்ப்புக்கள் கிடைக்கும். இங்கு விரும்பிய ஊடகங்களாக எழுத்தூடகம் சுய கற்றல் ஆவணங்கள், ஒலிப்பேழை, ஒளிப்பேழை, வானொலி, தொலைக்காட்சி, கணனிகள், வகுப்பறைச் செயற்பாடுகள் என்பவை உள்ளன. இங்கு மிக மகிழ்ச்சிகரமாகக் கற்கும் சூழல் காணப்படும். கற்றலின் பொறுப்பு கற்போனிடமே விடப்படுகின்றது. சுய கற்றல் இங்கு ஊக்குவிக்கப்படும். கற்கும் சுதந்திரத்தைக் கற்போருக்கு வழங்கி, கற்போரை மையமாகக் கொண்டு இப் பாடசாலைகளின் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

எமது நாட்டின் எழுத்தறிவு வீதம் உயர்வாகக்காணப்பட்டாலும் முறைசார் பாடசாலையில் நுழையும் மாணவர்களில் கணிசமான பங்கினர் பொதுக்கல்வியை நிறைவு செய்யாத நிலையில் இடைவிலகுகின்றார்கள். கல்வியமைச்சு ஆய்வுகளின்படி ஆரம்பப்பிரிவு முடிவடைவதற்குள் 6.3 % மானவர்களும், இடைநிலை முடிவடைவதற்குள் 10% மானோரும் க.பொ.த (சா.த)துடன் 45% மானோர் பரீட்சையில் தவறியும் இடைவிலகுகின்றனர் இவ் இடைவிலகலுக்கான காரணங்களாக :

1. குடும்பப்பின்னணி : வறுமை, பருவகாலத் தொழில்கள், பெற்றாரிடம் கல்வி விழிப்புணர்வு இன்மை, குடும்பப்பிளவுகள், முரண்பாடுகள், பெற்றார் குடிப்பழக்கம்.

2. பாடசாலைக் காரணிகள் :
   பரீட்சை அச்சுறுத்தல் பயம், பிள்ளைகளின் உடல் உள நிலை அறியாத கவர்ச்சியற்ற கற்பித்தல், பொருத்தமற்ற தண்டனைகள், பிள்ளைகளின் பிரச்சினைகளை அறிந்து வழிகாட்டாமை, ஆசிரியர் வளம், பௌதிகவளம் போதாமை, பாடசாலை அநுமதிப் பிரச்சினைகள்.

3. கலைத்திட்டக் குறைபாடுகள் :
   பரீட்சை இலக்குக்கல்வி, கல்விக்கும் வேலை உலகிற்கும் தொடர்பின்மை, சுயவிருத்திக்கு இடமளிக்காத கல்வி முறை, தொழில் நுட்பக்கல்விக்கான வசதிகள் இன்மை. பொதுப்பரீட்சைகளில் குறைந்த அடைவு.

4. நாட்டு நிலைமைகள் : பாதுகாப்புப்பற்றிய உள நெருக்கீடுகள், சமூக கலாசாரச்சீர்கேடுகள், யுத்தத்தாக்க பின் விளைவுகள், பொருத்தமற்ற அரசியல், வன்முறைச் செயற்பாடுகள்.

இவ்வாறான காரணங்களால் பொதுக்கல்வியைப் பூர்த்தி செய்யாது இடையில் பாடசாலையை விட்டு மாணவர் விலகுவதே இடைவிலகலாகும் (Drop Out) இங்கு பிள்ளைகள் பாடசாலையிலிருந்து இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி வறுமை எனக் கண்டறியப்பட்டுள்ளது. (அமரசிங்க 2002) இவ்வாறன நிலைமைகளில் இருக்கும் பிள்ளைகளுக்கு வழிகாட்டும் திறந்த பாடசாலைகளின் நோக்கங்களாவன.

- ❖ முறைசார் பாடசாலைகள் மூலம் பயன்பெற முடியாமல் போன பல்வேறு தரப்பினருக்கு கல்விக்கான ஒரு மாற்று வசதியை வழங்குதல்.

- ❖ முறைசார் பாடசாலையில் பிரவேசிக்க முடியாது போன பிள்ளைகளுக்குக் கற்றல் வாய்ப்புக்களை உருவாக்கல்.

- ❖ முறைசார் பாடசாலையிலிருந்து பயன்பெற முடியாது போன மாணவர்களுக்குத் தம் இடைநிலை, மூன்றாம் நிலைக்கல்வியை நிறைவு செய்யச் சந்தர்ப்பம் வழங்குதல்.

❖ பயிற்றப்படாத ஓரளவு பயிற்றப்பட்ட ஊழியர்களுக்கு பொதுக்கல்வி வாய்ப்பை வழங்குதல்.

❖ கல்விக்கும் தொழிலுக்குமான தொடர்பை விரிவுபடுத்தல்.

❖ சமூகத்தின் அனைத்து அங்கத்தவர்களினதும் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வாழ்நாட்கல்விக்கு வாய்ப்பளித்தல்.

❖ பொது மக்களைக் கற்றற் சமூகத்தின்பாலும் தொடர் கல்வியின் பாலும் வழிப்படுத்தல்.

❖ அனைவருக்கும் கல்வி வழங்குவதன் மூலம் சம உரிமையையும், சமூக நீதியையும், ஜனநாயகத்தையும் ஏற்படுத்தல் என்பவையாகவுள்ளன.


**திறந்த பாடசாலையின் பாடநெறிகள்**

திறந்த பாடசாலைகள் முறைசார் பாடசாலைக்கல்வியை இடைவிட்டவர்களுக்கு நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார, கலாசார, விழுமிய வாழ்வில் பயனுடைய முறையில் பங்கு கொள்ளச் செய்யவும், அவர்களுடைய கல்வி தொழிற் தேவைகளைக் கருத்திற் கொண்டு கல்வியில் இரண்டாவது ஒருவாய்ப்பினை வழங்குவதற்காகவே இப் பாடசாலைகளின் பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வயதுக்கட்டுப்பாடு அநுமதிக்கான தகுதிக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதாக சகலருக்கும் இப்பாடசாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்ற எண்ணக்கருவாகவே திறந்த பாடசாலை எனப்பெயர் பெறுகின்றன. இங்கு

- அத்திபாரப்பாடநெறிகள்
- இடைநிலைக்கல்விப் பாடநெறிகள்
- செயற்பாட்டு எழுத்தறிவூட்டல்பாடநெறிகள்
- தொடருறு பயிற்சிப்பாடநெறிகள்
- வாழ்க்கை விருத்திப்பாட நெறிகள்
- முயற்சியாண்மைப்பாடநெறிகள்
- இணைப்புப்பாடநெறிகள்
- சிரேஸ்ட இடைநிலைப்பாடநெறிகள்
- தொழில் வாண்மைப்பாடநெறிகள்
- மொழிப்பாட நெறிகள்
- சுயதொழில் பாடநெறிகள்

குறித்த பிரதேசப்பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்ப இப்பாடநெறிகள் பயிற்றுவிக்கப்படும். கல்வியின் முழு நிறைவான பயன் மூலம் தரமான வாழ்க்கை வாழ, பொருளாதார அருவிருத்திக்கான, தொழிற்றுறைகளில் விருத்திக்கான இப்பாட நெறிகள் நேரடியாகக் கைகொடுக்கும். சுயவழிப்படுத்தப்பட்ட சுய கற்றலின் மூலம் கற்கும் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்பவும் தொழில் வாய்ப்புக்களை விரிவடையச் செய்யவும், சமூகத்தில் உயர் அந்தஸ்தைப் பெறவும் உதவும்.

**பல்லூடக அணுகுமுறையிலான திறந்த பாடசாலை கற்றற் தொகுதி**




இவ்வாறாகப் பாடசாலைக் கல்வியை பெற முடியாதவர்களுக்கும், பெற்று இடையில் விட்டவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும், வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் திறந்த பாடசாலை முறைமை மிகுந்த பயனுடையதாகக் காணப்படுகின்றது. வலயக்கல்வி அலுவலகங்களின் முறைசாராக்கல்விப் பிரிவு அலகுகள் இவற்றை முறையாக இயக்க ஆரம்பித்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தின் ஐந்து வலயக்கல்வி அலுவலகங்களிலும் இப்பாடசாலைகள் இவ் வருடம் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் உயிர்ப்பான செயலாற்றுகையே மிக அவசியமானது. இதற்கு பொதுமக்களிடையே போதுமான அளவு விழிப்புணர்வுகள் போதுமானதாக இல்லை. இவ் விழிப்புணர்வுகள் இன்னும் பாடசாலை மட்டமளவில் கூட முழுமையான கருத்தேற்றம் பெறாத நிலை காணப்படுகின்றது. மேலும் திறந்த என்ற எண்ணக்கரு எம்மவர்களுக்கு தரம் குறைந்த என்ற பிழையான சிந்தனையும் காணப்படுகின்றது. இவற்றை நீக்கி எமது அடிமட்ட ஏழை மக்களுடைய கிராமிய மக்களுடைய கல்வியறிவை உயர்த்தி அதனூடாக பொருளாதார சமூக விழிப்புணர்வு, சுபீட்சத்திற்கு வழிகாட்டும் அற்புத சாதனமாகத் திறந்த பாடசாலை முறைமையைப் பயன்படுத்த மேலும் பல நிலைகளினூடாக விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை விரைவாக நாமனைவரும் இணைந்து முன்னெடுக்க வேண்டும். பாடசாலைக் கல்வி முழுமையாகப் பெறாத அறுபது வீதத்திற்கு அதிக மானவர்களுக்குக் கல்வி ஒளி கொடுக்கும். இருளான வாழ்வுக்கு ஒளி கொடுக்கும் கருவியாகத் திறந்த பாடசாலைகளைப் பயன்படுத்துவோம்.

**பா. தனபாலன்**

சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி.

# இன்றைய கால கட்டத்தில் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறுதலின் முக்கியத்துவம்

*நூற்றாண்டு விழாக்காணும் எனது கல்லூரித் தாய்க்கு முதல் வணக்கம்.*

நூறுஆண்டுகளிற்கு முன்பு 1910 ஆம் ஆண்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பண்டைய கப்பல் துறைமுகமான "சம்பில்துறையில்" இறக்கப்படும் பொருட்களை சேமித்து வைக்கும் பிரதேசமாகவிருந்தது சோழியபுரம். இச் சோழியபுரம் என்கின்ற தொல்லியல் சான்றுகளை தன்னகத்தே கொண்ட சுழிபுரம் வடக்கில் ஓர் சிறிய கொட்டகையில் தனது கல்விப்பணியை ஆரம்பித்தாள் எங்கள் கல்லூரி அன்னை அன்றிலிருந்து பல நூற்றுக்கணக்கான புத்தஜீவிகளையும் கல்விமான்களையும் புடம்போட்டு உருவாக்கி எமது பிரதேசத்தின் மனிதவளத்தை அபிவிருத்தியடைய வைத்துள்ளாள். தொடர்ச்சியாக தானும் படிப்படியாக வளர்ச்சியைக் கண்டு இன்று யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலமாகத் தரமுயர்ந்து நூற்றாண்டுப் பணி பூர்த்தியை கொண்டாடத் தயாராகி வருகின்றாள்.

இக் கல்லூரியை மேன்மையுறச் செய்த அதிபர்களில் ஒருவராகிய வித்துவான் மு விருத்தாசலம் காலத்தில் 1980 ஆம் ஆண்டில் க.பொ.த (சாதாரணம்) தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று வெளியேறிய கல்லூரித்தாயின் புதல்வர்களில் நானும் ஒருவன் என்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். மேலும் ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்த நாட்டின் மனிதவள அபிவிருத்தி மூலமே எட்டப்படக்கூடியது என்பது, முறையான கல்விச் செயற்பாட்டின் மூலமே ஒருவர் தன்னையும், சமுதாயத்தையும் வளம்படுத்தமுடியும் என்ற கல்விச் சிந்தனையுடன் எமது கல்லூரித் தாய் தனது இலட்சிய வேட்கையை மேலும் பல்லாண்டு காலம் முன்னெடுத்து செல்ல எமது ஆசிகளையும், உதவிகளையும் வழங்குவோம்.

**தொழில் வழிகாட்டலின் அவசியம்**

போட்டிகளும் தரப்படுத்தல்களும் நிறைந்து இன்றைய கல்விச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற மாணவ சமுதாயத்தினர் கல்விப்பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையிலும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையிலும் சித்தி பெற வேண்டியது கட்டாயமாகும். இவைகளை மாணவர்கள் எதிர்காலத்தில் தகுந்த தொழில் ஒன்றினைப் பெறுவதற்கும் சமூகத்தில் சிறந்த அங்கத்தவனாக தம்மை நிலை நிறுத்திக் கொள்வதற்கும் அத்திபாரமாக அமைகின்றன. இன்றைய யதார்த்த உலகில் வாழுகின்ற இளைஞர் யுவதிகள் முகங் கொடுக்கின்ற பாரிய பிரச்சினையாக இருப்பது வேலையில்லாப் பிரச்சினையாகும். அதே வேளை பல அரச நிறுவனங்களிலும் தனியார் கம்பனிகளிலும், கூட்டுத்தாபனங்களிலும் நிலவுகின்ற பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான நவீன தொழில் நுட்பத்திறன்களையும், அனுபவத்தினையும் கல்வித்தகைமைகளையும் கொண்டவர்கள் இல்லாதிருக்கின்றனர். உலகமயமாதலின் காரணமாக விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியும் தகவல் தொழில் நுட்பத்தின் வேகமும் கைத்தொழில் மயமாக்கலின் நவீனபுரட்சியும் பரம்பரை பரம்பரையாக பேணிவந்த பல தொழில்களைக் குறைத்து பல நூற்றுக்கணக்கான புதிய புதிய தொழில்களை உருவாக்கி வருகின்றது. இவ்வகையான புதிய தொழில்களை எவ்வாறு இனங்காண்பது? இத்தொழில்களைப் பெறுவதற்கானதொழில்சார் கல்வியையோ, தொழில்

திறன்களையோ எங்கு பெறலாம்? போன்ற வழிகாட்டல்களை இளைஞர், யுவதிகளுக்கு வழங்க வேண்டியது அவசியமாகின்றது.

குடும்ப பொருளாதார சிக்கல்கள் காரணமாகவோ, பெற்றோரின் கல்வியறிவின்மையால் கீழுழைப்புக்காக அல்லது வீட்டு வேலை செய்வதற்காக பாடசாலை செல்லவிடாது தடுத்தல் காரணமாகவோ, உள்நாட்டு யுத்தத்தினால் தமது தாய், தந்தையரை இழந்ததன் காரணமாகவோ பாடசாலைக் கல்வியை இடைநடுவில் விட்டவர்களும் வருடா வருடம் நடைபெறும் க.பொ.த.(சாதாரணம்) பரீட்சையில் தோற்றி தோல்வியடைந்த 50% - 60% ஆன மாணவர்களும் க.பொ.த.(உயர்தரம்) பரீட்சையில் தோற்றி தோல்வியடைந்த 55% - 65% ஆன உயர்தர மாணவர்களும் பல்கலைக்கழகத் தகுதி பெற்றும் பல்கலைக்கழகம் செல்லக்கிடைக்காத 30% - 40% ஆன மாணவர்களும், தொழில் ஒன்றினைப் பெறுவதற்கான தொழில்சார் கல்வியையோ, தொழில்நுட்பத்திறன்களையோ பெற்றுக் கொள்ளாது வீட்டிற்கு அனுப்பப்படுகின்றனர். இவர்கள் தம்மைச் சூழவுள்ள வேலையுலகில் காணப்படுகின்ற தொழில்களை பெறுவதற்கான தொழில்சார் திறன்களையும், தொழில் நுட்ப அறிவையும் எங்கு பெறலாம்? எவ்வாறு பெறலாம்? போன்ற வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டியது அவசியமாகின்றது.

பெற்றோர்களின் வற்புறுத்தல் காரணமாக தமது இயலுமைக்கும், ஆற்றலுக்கும் பொருத்தமில்லாத கல்வியையோ அல்லது தொழிலையோ பெற்று ஈற்றில் தோல்வியடைந்து மனவிரக்திக்கு உள்ளாகியிருப்பதும் நெரிசல் மிக்க கடும் போட்டிநிலவுகின்ற பிரபல்யமான ஒரு சில தொழில்களை நம்பி பெரும்பாலான மாணவர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளப் போட்டிபோட்டு ஈற்றிலே தோல்வியினைத் தழுவுவதும் உதாரணமாக வைத்தியத்தொழில்) சிறந்த வருமானமாக தருகின்ற ஒரு சில தொழில்கள் மீது சமூகத்தின் பாதகமனப்பாங்கு காரணமாக (உதாரணமாக சிகையலங்கரிப்பாளர்) அத்தொழில்களை பெறுவதற்கான முயற்சிகள் இன்றி இருத்தல் கேள்வியில்லாத ஏதேனும் தொழில் துறையில் ஈடுபட்டு (கீழ் உழைப்பு) தொழில் திருப்தியற்று விரக்தியுறுவதும். இவை போன்ற காரணங்களால் சமுதாயத்தில் பற்றின்றி ஒதுங்கி வாழ்வதும் நாம் சமூகத்தில் காணுகின்ற வெளிப்படையான உண்மைகளாகும். இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும். நாம் பெற்றோர்களுக்கும், சமூக உறுப்பினர்களிற்கும், இளைஞர், யுவதிகளிற்கும் தொழில் மகத்துவம் பற்றியும் அவர்களது இயலுமைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற தொழிலை எங்குபெறலாம் என்பது பற்றியும், தொழில் பெறுவதற்கான திறன்களையும் தொழிற் கல்வியையும் எங்கு பெறலாம் என்பது பற்றியும் வழிகாட்டல்களும் ஆலோசனை கூறுதலும் அவசியமாகும்.

தொழில் பெறுவதற்கான வயதினையடைந்தும் எந்த வொரு தொழிலையும் பெறாது தமது பெற்றோரின் உழைப்பிலேயே தங்கிவாழும் இளைஞர்கள் தமது பொழுதினை வீணே தெருக்களிலும் சந்திகளிலும் கழிப்பதுடன் சமூக விரோதச் செயற்பாடுகளிலும் ஈடுபடத்தூண்டுகின்றது. மேலும் தகுந்த தொழில் ஒன்றினை ஆரம்பிப்பதற்கான தகுதியும், ஆற்றலும், திறனும் இருந்தும் பணவசதிஇல்லாததால் அல்லது கடன் பெற்று தொழில் ஆரம்பிக்கும் மார்க்கம் தெரியாமல் இருப்பதனால் வீணேபொழுதைக் கழிக்கின்றனர். இவர்களுக்குத் தொடர்ச்சியான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவது மிக அவசியமாகும்.

**ஒவ்வொருவருக்கும் தொழில் தேவைதானா?**

வேலை ஒவ்வொருக்கும் தேவைதானா என்பதற்கு ஆபிரகாம் மாஸ்லோ மனிதன் தனது தேவைகளை (பௌதீக, சமூக, பாதுகாப்பு, கௌரவ மற்றும் சுய அந்தஸ்து தேவைகள்) நிறைவு செய்யவே வேலை செய்கின்றான் என்றார். ஒவ்வொருவரும் பின்வரும் மூன்று காரணங்களை முன்னிட்டே வேலை செய்கின்றனர்.

| | |
|---|---|
| 1. பொருளாதாரக் காரணிகள் | : வாழ்வதற்கு |
| | : எதிர்கால சமூகப் பாதுகாப்பிற்கு |
| 2. உளரீதியான காரணிகள் | : ஆத்ம திருப்திக்காக |
| | : வேலை செய்வதன் மூலம் கிடைக்கும் திருப்திக்காக |
| | : விருப்புக்காக |
| | : சமூகத்தின் முன்னேற்றத்தில் பங்கு எடுப்பதற்காக |
| | : கடமையுணர்வுடன் செயற்பட |
| 3. சமூகக் காரணிகள் | : சமூகத்தில் வரவேற்பினைப் பெற்றுக்கொள்ள |
| | : அனுபவத்தினைப் பெற்றுக் கொள்ள |
| | : சமூகத்தில் தனக்கென ஓர் அந்தஸ்த்தினைப் பெற |
| | : மேலும் பயிற்சியினையும் அறிவினையும் பெற்றுக்கொள்ள |

நாம் எப்படிப்பட்ட தொழிலையும் வேலையையும் செய்யும் போது அதன் மூலம் பொருளாதார வசதியும், சமூக அங்கீகாரமும், மனத்திருப்தியும் கிடைக்கின்றது. திருப்தியளிக்காத ஒரு வேலையில் ஈடுபடவேண்டிய சந்தர்ப்பம் ஒருவருக்கு ஏற்படுமாயின் அதன் மூலம் உளரீதியான தாக்கத்துக்கு உட்படுவதோடு வெறுப்பு நிலையும் உருவாகும். சமூகத்தில் நிலவும் பொருளாதார சமூகப்பிரச்சினைகள் தோன்ற இந் நிலைமையே காரணியாகின்றது.

**தொழில் வழிகாட்டல், ஆலோசனை கூறுதல் நிலையம்**

தமது தகுதிக்கும் ஆற்றலுக்கும் இயலாத தொழில்களைச் செய்வதாலும், திருப்தியளிக்காத வேலைகளில் ஈடுபடுவதாலும் இவர்களிடமிருந்து உண்மையான செயலாற்றலினைப் பெற முடிவதில்லை. இதனால் நிறுவனங்களிற்கு மட்டுமன்றி நாட்டுக்கும் உண்மையான பலாபலன்கள் கிடைப்பதில்லை. இதனையுணர்ந்தே 1905 ஆம் ஆண்டில் அமெரிக்க தொழிலறிஞர்களின் மனதில் *"தொழில்வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறுதல்"* எண்ணக்கரு உருவானது. உடனடியாகவே நடைமுறைப்படுத்தி வெற்றியும் கண்டார்கள். இதன் தொடர்ச்சியாக உலகெங்கும் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறுதல் நிலையங்கள் அமைக்கப்பட்டன. இலங்கையில் 1952 ஆம் ஆண்டு பாடசாலைகளில் அறிமுகப் படுத்தப்பட்டாலும் அது ஏட்டளவிலேயே இருந்தது. ஆயினும் 2002 ஆம் ஆண்டளவில் மூன்றாம் நிலைக் கல்விப் பயிற்சி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் 52 நிலையங்களில் தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை கூறுதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கிவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் "யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியில்" தொழில்வழி காட்டல் மற்றும் ஆலோசனை கூறுதல் நிலையமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "ஒருவர்தனக்குப் பொருத்தமான தொழிலை, தனது ஆற்றல், உளச்சார்பு, ஆர்வம் பொருத்தப்பாடு ஆகிய பண்புகளினதும், தொழிலைப் பெறக்கூடிய வாய்ப்பின் அடிப்படையிலும் தெரிவு செய்து அதைப்பெற்று தொழில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு உதவிகளையும், ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும்" யாழ்மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் இந்த நிலையம் வழங்குகின்றது.

**நிலையத்தின் செயற்பாடுகள்**

தொழில்வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறுதல் நிலையப் பொறுப்பாளர்கள் தொழில் தேடுகின்ற இளைஞர் குழுக்கள், பாடசாலைகள், தொழிற் பயிற்சி நிலையங்கள், சமூக அபிவிருத்திக் கழகங்கள், கலாசார நிலையங்கள், இளைஞர் மன்றங்கள் கழகங்கள் போன்ற இடங்களிற்குச் சென்று கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகளை நடாத்துவதன் மூலம் தகுந்த தொழிலினைத் தெரிவு செய்தல் அத்தொழிலுக்குத் தன்னை தயார்ப்படுத்துதல் அத்தொழிலினைப் பெறுதல், தொழிலில் முன்னேறுதல் போன்ற விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை கூறுதல் நிலையத்திற்குச் செல்லும் ஒருவர் பின்வரும் நன்மைகளை/பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. தனது தகுதிக்கும் தேவைக்கும், திறமைக்கும் பொருத்தமான தொழில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.
2. தனது உயர்கல்வியைத் தொடர்வதற்கான தகுந்த ஆலோசனையைப் பெறலாம்.
3. தனது பிள்ளைகளைத் தகுந்தவோர் தொழிலை நோக்கி வழிப்படுத்துவதற்கான தகவல்களையும் ஆலோசனைகளையும் பெறலாம்.
4. தனக்குப் பொருத்தமான தொழிற்பயிற்சி நெறிகளைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்லாம்.
5. தனக்குப் பொருத்தமான தகுந்த உயர்கல்விக்கான பாதையைக் கண்டு பிடிப்பதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. தான் ஊழியப்படையில் இருந்தால் தொழில் வெற்றிடங்களுக்குச் சிபார்சு செய்யப்படுவார்.
7. தன்னால் தெரிவுசெய்யப்பட்ட துறையில் முன்னேறுவதற்கான சக்தியையும், ஊக்குவிப்பையும் பெறலாம்.
8. தனக்குள் மறைந்துள்ள மதிநுட்பத்தையும், திறமையையும் அடையாளங்காண்பதற்கான வழிகாட்டல்களைப் பெறலாம்.
9. சிறந்த சுயவிபரக் கோவை (Resume Curriculam Vita/ Bio Data) ஒன்றினைத் தயாரிப்பதற்கான தகவல்களையும், உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
10. நேர்முகப் பரீட்சையொன்றுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கானதயார்ப் படுத்தல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
11. தனது தகுதிக்கும், திறமைக்கும் பொருத்தப்பாடான சுயதொழில் ஒன்றினை ஆரம்பிப்பதற்கான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

12. சுயதொழில் ஒன்றினை ஆரம்பிப்பதற்குத் தேவையான கடன்கள் வழங்குகின்ற நிறுவனங்கள் தொடர்பான தகவல்களையும், வழி காட்டல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
13. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள், உயர்கல்விகள் தொடர்பான தகவல்களையும் ஆலோசனைகளையும் பெறலாம்.
14. இணையத்தின் மூலம் புதிய தொழில் நுட்பங்களை அறியலாம் **(Internet)**

இவ்வாறாக நன்மைகளைப் பெறுவதன் மூலம் தனது சமூக, பொருளாதார, உளரீதியான திருப்தியையும் மேன்மையையும் அடைந்து நாட்டிற்கும் மனித வள அபிவிருத்தி வழங்குவதன் மூலம் நாடு செழிப்படைகின்றது.

**தொழில் நுட்பக்கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சியின் முக்கியத்துவம்**

*"திறமையினை மிஞ்சக்கூடிய ஆற்றல் நிலையான மற்றும் முறையான பயிற்சிக்குண்டு"*

உண்மையான பயிற்சியளித்தல் ஆளணியானது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தியாக்கி ஆளுமையை வளர்த்து அதனூடாக உற்பத்தித் திறன் மேம்பாட்டினை ஏற்படுத்துகின்றது. இதனாலேயே ஒருவரதுவெற்றி அல்லது நிறுவனங்களினது பயனுறுதியான இலக்கினது அடைவு அல்லது நாடு ஒன்றினது அபிவிருத்தி என்பது கிடைக்கும் வளங்களிலன்றிஅவ்வளங்களை உத்தம மட்டத்தில் பயன்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. புதிதாக கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளான கொரியா, யப்பான், சிங்கப்பூர், சீனா, மலேசியா போன்ற நாடுகள் இரண்டு தசாப்த காலங்களில் மனிதவள அபிவிருத்தி மற்றும் தொழில் நுட்ப அறிவுகளின் மேம்பாட்டில் அபிவிருத்தியை எட்டியுள்ளன. இதனால் அபிவிருத்தியடைந்துவரும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் மட்டுமன்றி அபிவிருத்தியடைந்த அமெரிக்கா,இங்கிலாந்து போன்ற நாடுகளும் இத்தகைய தொழில் நுட்பங்கள் மற்றும் உத்திகளை கைக்கொள்ள விளைகின்றன. எனவே இத்தகைய நிலைகளை அடைவதற்குரிய உடனடித்தீர்வாக தொழில் நுட்பத்துடன் கூடிய தொழில்சார் கற்கைகளே அமைகின்றன. இவை மிகக் குறுகிய காலத்தில் மிகக்குறைவான உள்ளீட்டு வளங்களைக் கொண்டு உடனடியாகவே தொழிலில் ஈடுபடுத்தக் கூடிய தன்மையினை வழங்குவதாலாகும்.

**தொழிற் பயிற்சி மற்றும் தொழில் நுட்ப அறிவினை வழங்கும் நிறுவனங்கள்:**

முக்கியமான பொதுத்துறை பயிற்சியளித்தல் முகவர்களாக பின்வரும் அமைப்புகள் காணப்படுகின்றன.

01. தொழில் நுட்பவியல் கல்லூரி (COT)
02. தொழில் நுட்பக் கல்லூரி (TC)
03. இலங்கைத் தேசிய தொழில் நுட்பக்கல்வி நிறுவகம் (NITESL)
04. இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE)
05. தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA)
06. தொழிற் பயிற்சி அதிகார சபை (VTA)
07. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC)
08. தேசிய வணிக முகாமைத்துவ நிறுவகம் (NIBM)

09. இலங்கை ஜேர்மன் தொழில் நுட்பபயிற்சி நிலையம் (CGTTI)
10. ஆடைக்கைத்தொழிற் பயிற்சி நிறுவனம் (CITI)
11. தாதியர் பயிற்சிக் கல்லூரி (NURSING SCHOOL)
12. இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் (GJRTI)
13. கட்டட நிர்மாண மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD)
14. இலங்கைத் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் (SLTTI)
15. பிரித்தானிய கணனிச் சபை (BCS)
16. கட்டடக் கைத்தொழிற் பயிற்சி நிலையம் (CETRAC)
17. தேசிய தொழிற் பயிற்சி நிறுவனம் (NVTI)
18. கிராமியற் தொழிற் பயிற்சி நிலையம் (RVTC)
19. திறன் அபிவிருத்தி நிலையம் (SDC)
20. இலங்கை அச்சக நிறுவனம் (SLIOP)

**குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழிற் பயிற்சியினை வழங்கும் முக்கியமான அமைப்புக்கள் வருமாறு.**

1. யாழ்பிராந்திய திறந்த பல்கலைக்கழகம் (OUSL)
2. யாழ் தொழில் நுட்பவியல் கல்லூரி (COT)
3. தொழில் பயிற்சி அதிகார சபை (VTA)
4. யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பநிறுவனம் (ATI)
5. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC)
6. தகவல் தொழில் நுட்பப் பூங்கா (IT - PARK)
7. வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி
8. தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA)
9. அரசசார்பற்ற நிறுவனங்கள் (WUSC, SARVODAYA, HOME TECH, ETC)
10. பிரதேச செயலக கற்கை நெறிகள்
11. ஏனைய தனியார் அமைப்புக்கள் (IIS. NIIT, SLIT, ETC)
12. முறை சாரா கல்விப் பயிற்சி நெறி

பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள் மேற்கூறிய நிறுவனங்களில் தமது தகுதிக்கும் விருப்பத்திற்கும், திறமைக்கும் ஏற்ற விதத்தில் பயிற்சிநெறிகளைப் பயின்று பின்பு சிறந்த தொழிலொன்றைப் பெற்று, மனிதவள அபிவிருத்தியடைந்து தான் சார்ந்த சமூகத்திற்கும் நாட்டிற்கும் பெருமை தேடும் வண்ணம் வேண்டுகின்றோம்.

பழைய மாணவன்
**ஆறுமுகம் – நற்குணேஸ்வரன்**
(B.SC, PGDE, DI P IN ENG, NCTE (NITESL)
MIMS (ENGLISH)

# சிறுவர்களுக்கான அரங்கச் செயற்பாடுகள்

சிறுவர்களுக்கான செயற்பாடுகளில் சிறுவர் அரங்கச்செயற்பாடுகள் சிறுவர்களுக்கான கல்வி என்ற அடிப்படையில் முக்கியம் பெறுகின்றன. இந்த இடத்தில் நின்று சிறுவர் நாடகத்தையும் சிறுவர் அரங்கையும் தனித்தனியாக விளங்கிக் கொள்ளுதல் பொருத்தமானதாகும். சிறுவர் நாடகம் என்று குறிப்பிடப்படும் போது சிறுவர்களால் புத்தளிப்பு முறையில் வகுப்பறைமட்டத்தில் பாடமொன்றிற்கான பாடவேளையொன்றில் ஆசிரியருடன் இணைந்து ஆக்கப்படும் நாடகமாகும். இதற்கு எழுதப்பட்ட ஒரு நாடக எழுத்துரு பயன்படுத்தப்படமாட்டாது. சிறுவர் அரங்கு என்னும் போது சிறுவர்களை இலக்குப் பார்வையாளர்களாகக் கொண்ட அரங்க நிகழ்வைக் குறிக்கும். இங்கே எழுதப்பட்ட ஒரு நாடக எழுத்துரு அவசியம். இச்சிறுவருக்கான அரங்கில் மூன்று வகைப்பாட்டுக்குட்பட்ட நடிகர்கள் இருப்பர்.

1. சிறுவர்களுக்காக சிறுவர்களே நடிகர்களாயிருப்பர்.
2. சிறுவர்களுக்காக வளர்ந்தோர்கள் நடிகர்களாயிருப்பர்.
3. சிறுவர்களுக்காக வளர்ந்தோர்களும் சிறுவர்களும் இணைந்து நடிகர்களாயிருப்பர்.

இம் மூன்று நிலைகளிலும் பார்வையாளர்களாயிருப்பவர்கள் சிறுவர்களே. எனினும் சிறுவர்களின் பால் அக்கறையுடைய அனுதாபமுடையவர்களும் பார்வையாளர்களாக இருக்க அனுமதிக்க முடியும்.

சிறுவர்களை அவர்களின் உளவியற்பருவத்தை குறிப்பிட அவர்களின் காலவயது அடிப்படையில் பிரித்து நோக்குவது வழக்கமாக இருக்கின்றது.

1. வயது 1 முதல் வயது 5 வரையான பிரிவினர்.
2. வயது 6 முதல் வயது 8 வரையான பிரிவினர்.
3. வயது 9 முதல் வயது 11 வரையான பிரிவினர்.

இவ்வாறான வயதுப்பிரிப்புகள் நடைமுறை இலகுக்கானதாகவே பயன்படுத்தப்படுவன. அன்றி அச்சொட்டான உளவியற்பருவ எல்லைகள் என்று எடுத்து விளக்கத் தேவையற்றதாகும். பிள்ளைகளின் தனியாள்வேறுபாடுகாரணமாக இவ் வயதுப்பிரிப்பு எல்லைகள் வேறுபட முடியும். சிறுவர்கட்கான அரங்கச்செயற்பாடுகளின் போது மேற்சொல்லப்பட்ட பிரிவுகளின் உள முதிர்ச்சிக்கேற்ப விடய உள்ளடக்கங்களைத் தெரிந்தெடுத்து அதற்குப் பொருத்தமான வகையில் நாடக எழுத்துருக்களை அமைத்துக் கொள்ள வேண்டும். இங்கு எல்லா நிலைகளிலும் சிறுவருக்கு விடயத்தைப்போதனை செய்யும் வெளிப்படையான முறைகளைத் தவிர்த்துக் கொண்டு செல்வது நல்லது. இதற்கு முன்தேவையாக இருப்பது சிறுவர்களுக்கான அரங்கச்செயற்பாடுகளில் ஈடுபடும் நெறியாளர்கள் சிறுவர்களின் உளவியல் அறிவுடன் வேலை செய்ய வருவதாகும். சிறுவர்களிடம் மாற்றங்களை உண்டு பண்ணவிளைகின்ற ஒவ்வொருவரும் முதலில் சிறுவர்களை அறியக் கூடியவர்களாகத் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சிறுவர்களின் விருத்தியும், சிறுவர்களின் பல்வேறுபட்ட ஆற்றல்களின் விருத்தியும், சிறுவர்களுக்கான அரங்கச்செயற்பாடுகளின் மையப்படுத்தப்பட்ட நோக்கங்களாக இருக்கின்றன. இதற்கு அமைவாகவே மற்றைய கூறுகள் கையாளப்படுகின்றன. இங்கு சிறுவர்களின் மகிழ்வும், அவர்களின் ஈடுபாடும் சிறப்படைய வேண்டும். சிறுவர்களுக்கானதும் சிறுவர்களுக்குப்பிடித்தமானதுமான ஆடல், பாடல், போலச் செய்தல் பாவனை பண்ணுதல், விளையாட்டுகள், வினோதசெயற்பாடுகள் போன்றனவும் ஏற்றமுறையில் கையாளப்படுகின்றன. சிறுவர்களைப் பொறுத்த வரையில் சிறுவர் அங்கச் செயற்பாடுகள், சிறுவர் நாடகச் செயற்பாடுகள்யாவும் ஒழுங்கமைக்கபட்ட விளையாட்டாக அமைந்திருத்தல் முக்கியமாக வுள்ளது. அமைக்கப்பட்ட அனைத்தும் இணைந்து சிறுவர்களின் கல்வி சார்ந்த தேவைகளை முழுநிறைவடையச் செய்வனவாக அமைதல் வேண்டும்.

சிறுவருக்கான அரங்கின் பயன்பாட்டை சிறுவர்களுக்கான கல்வி சார்ந்து பார்ப்பதே மிகவும் பொருத்தமானதும் பொறுப்புடையதுமாகும். ஈடுபடும் பிள்ளைகள் அனைவரும் என்னென்ன அடைவுகளைப் பெற்றுள்ளார்கள் எனப்பார்க்கவேண்டும். நடிக்கும் பிள்ளைகளும் அவர்களுடன் கூடிச்செயற்படுகின்றபிள்ளைகளும் பெற்றுக் கொள்ளக்கூடிய அடைவுகளாகப் பின்வரும் பண்புகளைப் பார்க்க முடிகின்றது.

1. கூடிவேலை செய்தல்.
2. நுணுக்கமாக அவதானித்தல்.
3. ஒரு நிகழ்வை, ஒரு விடயத்தை, ஒரு பொருளை, ஒரு தொகுதியை கருத்தூன்றிக் கவனித்தல்.
4. ஒரு தலைமையின் கீழ் கட்டுப்பட்டு செயலாற்றுதல்.
5. ஆக்க வெளிப்பாட்டால் இன்பமடைதல்.
6. கற்பனை விருத்தியாதல்.
7. தானே செய்யும் தன்னம்பிக்கை பெறுதல்.
8. கருத்துக்களை நேர்த்தியாக முன் வைத்தல்.
9. தனக்குள்ள ஆற்றல்களை வெளிப்படுத்தல்.
10. கருத்துக்களைச் செவிமடுத்தல்.
11. தன்னகக்கட்டுப்பாடு, புறக்கட்டுப்பாடு என்பவற்றுடன் இசைவுற்று செயற்படுதல்.
12. ஊக்கத்துடன் எடுத்த செயலில் ஈடுபடுதல்.
13. பட்டறிவு பெறுதல்.
14. விரிவாக சிந்தித்தல்.
15. ஆராய்ந்து பார்த்தல்.

இப் பண்புகளை ஈடுபடுகின்ற சிறுவர்கள் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு குறித்தபண்புகள் கொண்டதாக நாடக எழுத்துரு ஆக்கப்படுவதை முன்கூட்டியே திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். எப்பண்புகள் அடையப்படும் இலக்குகளுக்கு ஏற்றவை என்பதை நாடகப் பிரதியிலும் ஆற்றுகைக்கான ஒத்திகைகளிலும் திட்டமிட்டு இணைத்துக் கொள்வது பொருத்தமானதாகும்.

சிறுவர் அரங்க ஆற்றுகையின் போது இலக்குப்பார்வையாளர்களாகிய சிறுவர்களிடமும் பின்வரும் விடயங்கள் சென்று செறிந்து விடுகின்றன.

1. பார்க்கின்ற பிள்ளைகள் தாம் முன்னரே கேட்டு இரசித்திருந்த கதைகள் மேடையிலே கண்முன்னே உண்மையாக நடப்பதைப்போல காணநேருவதால் கிடைக்கும் மகிழ்ச்சி.
2. சிறுவர் பண்புகளுக்கேற்றதாக துணிவு, உயர் குணம், நன்றி அறிதல், உறுதி, அழகு போன்ற இயல்புகள் நிறைந்த பாத்திரங்களோடுதங்களையும் ஈடுபடுத்திக்கொள்ளுதல்.
3. கதையில்வரும் உணர்வு பூர்வமான காட்சிகளுடன் தன்னையும் இணைத்துக் கொள்வதால் பிள்ளையின் அடக்கப்பட்ட உணர்வுகள் வெளியேற்றப்பட சந்தர்ப்பங்கள் அமைதல்.
4. தயாரிப்பின் போது வெளிப்பட்டு நிற்கின்ற அழகியல் அம்சங்களை இரசிக்கப்பழகுதல்.

சிறுவர்களிடத்தே பார்த்தல், கேட்டல். உணர்தல் போன்றவற்றில் விரைவான விருத்திநிலை காணப்படும். இவ்விருத்திகளை ஊக்குவிக்கும் சூழ்நிலைகளை குறித்தபுலனுணர்வுகளின் வளர்ச்சிக்கு ஏற்புடையதாக சிறுவர் அரங்க செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தித்தருகின்றன. மேலும் சிறுவர் அரங்க செயற்பாடுகள் உடல் விருத்திக்கு உள விருத்திக்கு ஊட்டம் செய்வதுடன் சமூகம் சார்ந்த விருத்திக்கும் களமமைத்து நிற்கிறது. நாடகம் ஒன்றை நடிப்பதன் மூலம் சிறுவர்கள் உண்மையில் புத்தாக்கப்படைப்பாளிகளாக மாறுவதற்கான அடிப்படைகளைக்கற்கிறார்கள் என்று சொல்வதும் இங்கு முக்கியமானது தான். இசைக்கேற்ப அசைதல், தாளத்திற்கு ஏற்ப ஆடுதல், இசையோடுபாடுதல் போன்ற விடயங்களும் சிறுவர் அரங்கசெயற்பாடுகளை வளமூட்டுபவையாக இருப்பதால் ஈடுபடும் சிறுவர்களிடத்தே அழகியல் உணர்வு விருத்தியடைந்து சிறப்படைகின்றது. இவ்வாறான அனைத்துக் கூறுகளும் இணைந்து சிறுவர் அரங்க செயற்பாடுகள் சிறுவர்களின் ஒட்டு மொத்த ஆளுமையை சிறப்பாக கட்டமைக்கும் கல்விச் செயற்பாடுகளாக மலர்ந்து நிற்கின்றன.

**த. சிவகுமாரன்,**
முகாமையாளர்,
ஆசிரியர் வளநிலையம்,
மானிப்பாய்.

# ஈழத்து இசை வளர்ச்சிப் பாதையிலே

ஒரு நாட்டு மக்கள், நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்குவதற்கு அவர்களின் கலையறிவே பிரதான இடம் வகிக்கின்றது. நாகரிகமானது மக்களின் புறத்தோற்றப்பாடானது. பண்பாடானது, அவர்களது கற்பனைத்திறனுக்கேற்ப உள்ளுணர்வினின்றும் வெளிப்படுவது. பண்டைக்காலத்தில் குருகுலமரபின்படியே அனைத்துக்கலைகளும் வளர்க்கப்பட்டன. கலைகள் தெய்வீகக்கலைகளாக மன்னராலும் மக்களாலும் போற்றப்பட்டன. அரசவைகளில் கலை வளர்ச்சிக்காக சமஸ்தானவித்துவான்களை நியமித்தும், போட்டிகள் நடத்தியும், பிறநாட்டுக்கலைஞர்களையும் உள் நாட்டுக்கலைஞர்களையும் கௌரவித்து பரிசில்கள் பட்டங்கள் வழங்கியும் ஆதரவு வழங்கினர்.

ஈழத்திலே பண்டுதொட்டே பல கலைகளும் போற்றப்பட்டதை இலக்கிய, சரித்திர, சமய நூல்கள் மூலம் நாம் அறிய முடியும். இலங்கையை ஆண்ட இராவணன் வீணையிசையில் பாண்டித்தியம் பெற்றவன். மாமுனிவர் அகத்தியருடன் வீணைப் போட்டியில் பங்குபற்றியவன். ஒரு முறை கைலைமலையை பெயர்த்தெடுக்க முற்பட்டபோது, வீணையிசையால் இறைவனை மகிழ்வித்து அதனின்றும் விடுபட்டான். திருவிளையாடற் புராணத்திலே வரும் இசைவாது வென்ற சருக்கத்திலே, ஈழத்தினின்றும் போட்டிக்கென பெண் ஒருத்தி (விறலி) அழைக்கப்பட்டதை சில பாடல்கள் (4, 14, 17, 40) குறிப்பிடுகின்றன. இரண்டு கண்ணும் குருடான கவிவீரராகவன் என்பான், யாழிசையால் இலங்கையை ஆண்ட மன்னனை மகிழ்வித்து, பரிசிலாக மணற்றிடல் ஒன்றைப் பெற்றமையை யாழ்ப்பாடியின் சரித்திரம் கூறும். முத்துராச கவிராயரின் "கைலாயமாலை" நூலும் (39-45 வரிகள்) இச் சரிதத்தைக் கூறுகின்றது. "நகுலமலைக் குறவஞ்சி" யானது பரிசில் பெற்ற இடம் "வீணாகானபுரம்" எனக்கூறும். "யாழ்ப்பாண வைபவகௌமுகி" யானது, இராவணன் இருந்தபின், அவனது வீணையை சித்ராங்கதன் என்னும் கந்தருவன், கீரிமலையில் பாதுகாப்பாக வைத்திருந்த இடமே வீணாகானபுரம்" எனக் கூறும்.

மாவிட்டபுரத்தில் கோவிலமைத்த மாருதப் புரவீகவல்லி இளவரசியானவள் பல்துறைக்கலைஞர்களுடனேயே வந்து நிறைவு செய்தாள். பின்னர் அக்கலைஞர்கள் இக்கோவிலிலேயே பணிக்கமர்த்தப்பட்டனர் என்ற செய்தி அறியக்கிடக்கின்றது. வண்ணை. வைத்தீஸ்வரன் கோவில் கும்பாபிடேகத்திற்காக, மங்கலவாத்தியம் - பண் - நடனக் கலைஞர்கள் தென்னிந்தியாவினின்றும் வரவழைக்கப்பட்டனர். தேவார முதலிகள் மூவரும் பாடிய திருக்கேதீச்சரம் - திருக்கோணேஸ்வரம் திருத்தலங்களிலும் இவ்வாறு ஓதுவார்கள் பலர் பண் முறைகளைக் கடைப்பிடித்திருப்பர். திருப்புகழ்பாடிய அருணகிரிநாதரும் கதிர்காமம், நல்லூர் திருத்தலங்கள் மீது பாடல்களைப் பாடியுள்ளார். எனவே இலங்கையின் பழமைவாய்ந்த திருத்தலங்களில் பண்களும் ஏனைய கலைகளும் முறைப்படி வளர்க்கப்பட்டிருக்கும் என்பது ஏனைய கலைகளும் முறைப்படி வளர்க்கப்பட்டிருக்கும் என்பது தெளிவு.

மஹாவம்சத்தில் விஜயனின் பட்டத்து இளவரசி இலங்கை வந்தபோது, அவனுடன் கலைஞர் குழாமும் வந்ததாக வரலாறு கூறுகின்றது. கி.பி. 1153 - 1186 காலப்பகுதியில் முதலாவது பராக்கிரமபாகு பொலநறுவ நகரில் "சரஸ்வதி மண்டபம்" அமைத்து இசைநடன கலைகளை வளர்த்துள்ளான். சூளவம்சம், தூபவம்சம்,தளதசிரித நூல்களில் இசைவாத்தியங்களின் பட்டியல்கள் காணப்படுகின்றன. கோட்டைராசதானி காலத்தில் இராசதானியின் நாற்புறமும் காவற் தெய்வங்களான கோவில்களில் மேளம் - குழல் - நடனம் - கானம் இடம் பெற்றுள்ளன. கோட்டை இராச்சியத்தில் ஈழத்தின் முனீஸ்வரனுக்கு சொந்தமான 64 கிராமங்களில் தமிழ்க் கலைஞர்கள் பணியாற்றினர். யாழ்ப்பாணத்தில் பரராஜசேகரனின் ஆட்சியிலே அரச - கோயில் முடிசூட்டுவைபவங்களிலே, பலவகை முரசங்கள் முழங்கியமையை அறியமுடிகின்றது. "கண்ணகி வழக்குரை காவியம்" நூலிலும் பல வகை முரசங்கள் - பண்கள் சேர்ந்தொலிப்பது சொல்லப்படுகின்றது. பொதுவாக மன்னர்கள் போல, மக்களும் கொடைத்திறத்தால் பண்ணிசைப்புலவர்களுக்கு பொற்கிழிகள் வழங்கினர்" என "பறாளை விநாயகர் பள்ளு" பிரபந்தப்பாடல் பின்வருமாறு கூறும்.

"பண்ணிற் றோயப் பொருண்முடிப் புக்கட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
யெண்ணிப் பொன்முடிப் புக்கட்டி வைத்திடு
மீழ மண்டல நாடெங்கள் நாடே"

இலங்கை நாடானது அன்னியராட்சிக்குட்பட்டபோது எமது கலை வளர்ச்சிகளும், சமய வளர்ச்சிகளும், பாதிக்கப்பட்டன. கி.பி. 1619 - 1658 காலப்பகுதியில் போர்த்துக்கீசரின் ஆதிக்கத்திலும் கி.பி. 1658 - 1796 காலப்பகுதியில் ஒல்லாந்தரின் ஆதிக்கத்திலும் கி.பி 1796 - 1948 காலப்பகுதியில் பிரித்தானியரின் ஆதிக்கத்திலும் இருந்தது. இவர்களமைத்த கிறிஸ்தவ தேவாலயங்களின் பிரார்த்தனைப்பாடல்களாக மேற்கத்திய இசையும் பியானோ - வயலின் முதலிய கருவி இசைகளும் மேலோங்கின. இவர்களது சமயத்திலீடுபாடுள்ள மக்கள் அவ்விசையைப் பயின்றனர்.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் வேலைசெய்வதற்கென அழைக்கப்பட்ட இலட்சக்கணக்கான இந்திய மக்கள், தமது பாரம்பரிய கலைகளைப் பேணி வந்தனர். காமன் கூத்து, அருச்சுனன் தபசு கூத்திசை வடிவங்களையும், வில்லிசைக் கதை வடிவங்களையும் தமது ஓய்வு நேர பொழுது போக்காக பாதுகாத்தனர். இந்தியா - இலங்கை கலைஞர்கள் தமது கலைத்தொழிலுக்காகவும், யாத்திரையை மேற்கொண்டும் கலைவடிவங்களைத் தந்தனர். இலங்கையில் கலைகளுக்கு வரவேற்புகள் இருந்தன. தென்னிந்திய நாடக சபாக்குழுவினர், தமது பிரபல இசைவிற்பன்னர்கள் திரு. கிட்டப்பா, தியாகராஜபாகவதர், K.P. சுந்தராம்பாள், G.N. பாலசுப்பிரமணியம், திருச்சிலோகநாதன், T.R. மகாலிங்கம் மூலம் தமது பாடல்களைப்பாடி மகிழ்வித்தனர். பலர் நேரிலும், கிராம போன்தட்டு இசையிலும் பாடல்களைத்தந்து மகிழ்வித்தனர். இப்பாடல்களில் நாட்டங் கொண்டபலர், இசைகற்பதற்கென குருகுல வாசஞ்செய்யவும், நிறுவனரீதியில் இசைகற்கவும் தென்னிந்தியா சென்றனர். 1934 இல் சாந்தி

நிகேதன் கலைஞர் குழுவானது, இலங்கையின் பல பாகங்களிலும் "சாபவிமோசனம்" என்ற நாட்டிய நாடகத்தை மேடையேற்றியது. இதன் பின்னர் நிறுவன ரீதியில் சிதம்பரம் அண்ணா மலைப் பல்கலைக்கழகம், தமிழ் நாடு அரச இசைக் கல்லூரி, திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம, கலா க்ஷேத்ரா, சாந்திநிகேதன், ஆகிய வற்றில் வசதி படைத்தோர் சென்று பல ஆண்டுகள் பயின்று "இசைமணி" ,"சங்கீதபூஷணம்" , "சங்கீதவித்வான்", "சங்கீதசிரோன்மணி" "சங்கீத - நடன டிப்ளோமா" பட்டங்களுடன் நாடு திரும்பினர்.

இவர்களிற் பலர் கலைமன்றங்களமைத்து கலைவிழாக்கள் இசைவிழாக்கள் ஆண்டு தோறும் நடத்தினர், சிலர் கலை மலர்களான "நாதம்", இசையருவி", கலை அருவி" மாத - காலாண்டு இதழ்களை வெளியிட்டனர். இந்தியாவில் படித்து வீணைப்பட்டம் பெற்ற திருமதி மகேஸ்வரி நவரத்தினம் அவர்கள், இரு இசை நூல்களை 1931 இல் வெளியிட்டு யாவரையும் வியக்கவைத்தார். "THE FIRST BOOK IN KARNATIC MUSIC", "THE VEENA TUTOR" என்பன அந்நூல்கள். பண்ணிசையை வளர்ப்பதற்கென ஆறுமுகநாவலர் தென்னிந்தியாவின் பிரபல ஓதுவார் இராமநாதபுரம் பொன்னோதுவாரையும், இராமநாதபுரம் ஓதுவார்களையும் யாழ்ப்பாணம் அழைத்துச் சிலகாலம் கோவில்களிலும், திண்ணைப்பள்ளிகளிலும் பயிற்றுவித்தார். சிலர், தென்னிந்திய ஆதீனங்களில் இங்கிருந்து சென்று பயிற்சிபெற்றனர். சேர். பொன். இராமநாதனும் இசைக்கல்விக்கு முன்னிடம் கொடுத்தார். இவரது மகள் முறைப்படி இசை பயின்று பட்டம் பெற்றார். நாவலரின் அளப்பரிய சேவையால் பண்முறை - புராணபடனம் - இசைச் சொற்பொழிவுகள் இன்றும் நிலைத்து நிற்கின்றது.

இலங்கையில் ஆடப்படும் வடமோடி - தென்மோடிக் கூத்துக்கள் பல பாரம்பரியமானவை, இந்தியாவினின்றும் வருகை தந்த பல கலைஞர்களுடன் ஈழத்துக்கலைஞர்களும் சேர்ந்து பல நாடக - கூத்துவடிவங்களை அரங்கேற்றினர் இக் கூத்துக்களிற் பல சுத்தமான இராகங்களையடிப்படையாகக் கொண்டு பாடப்படுகின்றன. "மயானகாண்டம்" ஓர் அரிய படைப்பாகும். இலங்கையின் பல வாத்திய இசைக் கலைஞர்கள் இவற்றில் பிரபல்யமடைந்தனர்.

1931 இல் Dr. I சாண்டிமன் தலைமையில், W. M. குமாரசாமி உபதலைவராகவும், திரு. ***M. S.*** பரம் செயலாளராகவும், திரு. அண்ணாச்சாமி பொருளாளராகவும் கொண்டு வடஇலங்கை சங்கீதசபை ஆரம்பிக்கப்பட்டது. 1933 - 34 காலப்பகுதியில் இச் சபையானது, வேனிற் காலவிடுமுறை வகுப்பொன்றை, திரு. T.S.சபேஸ்ஐயர் தலைமையில் பல இசைக்கலைஞர்களைக் கொண்டு ஆரம்பித்தது. இதற்கு பரீட்சகராக திரு. P. சாம்பமூர்த்தி அவர்கள் இருந்தார். இவ்வகுப்பிற் பயின்ற மூவர், சிறப்புத்தேர்ச்சிக்கென தமிழகம் சென்று இசைத்துறையிற் பட்டம் பெற்றனர். திரு. P. சந்திரசேகரம், திரு. K. S. பாலசுப்பிரமணியம், திரு. K. வேலாயுதபிள்ளை ஆகியோரே அம்மூவர்.

**இசைத்துறை வளர்ச்சியிலே அரச நிறுவனங்களின் பங்களிப்பு இன்று முக்கியத்துவம் பெறுகின்றது.**

1. வட இலங்கை சங்கீத சபையானது வழங்கும் ஆசிரியதராதரப் பத்திரம், 1949 இல் கல்விப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்டு, அதற்கான ஆசிரியசம்பள நிர்ணயம் செய்யப்பட்டது. இச்சபையில் அங்கம்வகிக்கும் திரு. M. S. பரம் அவர்களின் இசைத்திறமைக்காக, இசைத்துறை மேற்பார்வையாளராக கல்வி அமைச்சு நியமித்தது. இச்சபைபோன்று, சிங்கள மக்களும் "லங்கா காந்தர்வசபா" என்ற அமைப்பின் மூலம், தமது இசைத்துறையை வளர்த்தனர். 1948 இல் அரச நுண்கலைக்கல்லூரி கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1952 இல் விரிவான பாடத்திட்டம் வகுக்கப்பட்டது. இதன் மூலம் சித்தியடைந்தவர்கட்கு அழகியற் கல்வி ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்திய பல்கலைக்கழகங்களில் இசைத்துறைப்பட்டம் பெற்றவர்களும், க.பொ.த.சாதரண பரீட்சையில், கர்நாடக சங்கீதத்துடன் 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் சுமார் 160 பேர் இசையாசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

ஆசிரிய மாணவ பயிற்சியில் ஈடுபடும் அனைவருக்கும் அழகியற் பாடம் 1961 இல் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டது. அதேபோல் பாடசாலை மாணவர்களில் தரம் - 6 முதல் தரம் - 11 வரை யாவரும் அழகியற் கல்வி கட்டாய பாடமாக அறிமுகஞ் செய்யப்பட்டது. இதன் பின்னர், அழகியற் கலையை பிரதானமாக படிக்கும் மாணவர்கள், தரம் 13 இல் சித்தி பெற்று, நுண்கலைப்பிரிவில் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை பெற வாய்ப்புக் கிடைத்தது.

**2. பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்**

1974 இல் யாழ். மருதனார் மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை, கல்வி அமைச்சு பொறுப்பேற்றது. 1982 இல் மட்டக்களப்பு, விபுலானந்தர் இசை நடனக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இவ்விரு நிறுவனங்களும் பல்கலைக்கழக தரத்திற்கு உயர்த்தப்பட்டன. இவ்வாறே சிங்கள மக்களுக்கும் களனி பல்கலைக்கழகத்தில் நுண்கலைப்பீடத்தில் கற்கும் வாய்ப்புகள் உண்டு. பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற முடியாதவர்கள் தேசிய கல்வியியற் கல்லூரிகள் மூலம், அழகியற் பாட பயிற்சியில் கற்று ஆசிரிய நியமனம் பெறுகின்றனர்.

**3. பிரதேச செயலகங்கள்**

பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கலாசாரப்பிரிவின் மூலம் உள்ளூர்க்கலைஞர்கள், கௌரவிக்கப்படுவதுடன் சிறப்பு மலர்களும் வெளியிடுகின்றனர்.

**4. கலாசார அமைச்சு**

மூத்த கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் கலாபூஷணம்" விருதுகள் வழங்குகின்றனர். கலைத்துறை எழுத்தாளர்களின் சிறந்த நூல்களுக்கு பரிசில்கள் வழங்குகின்றனர். எழுத்தாளர்களின் சில நூறு பிரதிகளை கொள்வனவு செய்து உதவுகின்றனர்.

**5. ஒலி – ஒளி பரப்பு ஊடகங்கள்**

கொழும்பு றேடியோ நிலையம் 1951 இல் இலங்கை வானொலியாக மாறியது. குரல் தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்த கலைஞர்களின் நிகழ்ச்சிகள் நேரடியாகவே ஒலிபரப்பட்டன. பின்னர் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, வேறோர்தினத்திலேயே நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. 1952 இல் வாத்தியக் கோஷ்டித் தலைவராக D. S. மணிபாகவதர் நியமனம் பெற்றார். திரு. K. S. பால சுப்பிரமணிய ஐயர் சங்கீத அமைப்பின் உதவியாளராக பல ஆண்டுகள் கடமையாற்றினார். நூற்றுக்கணக்கான வாய்ப்பாட்டு - வாத்திய - பண்ணிசை - இசைச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளைத் தயாரித்தவர் அவரே. 1976 இல் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.

தற்பொழுது நிறுவன ரீதியிலும், குருகுல மரபிலும் பல கலைஞர்கள் உருவாகி அரங்காற்றுகைகளை நிகழ்த்துகின்றனர். பல நாடுகளுக்கும் நிகழ்ச்சிகளை வழங்கி நாட்டுக்கு பெருமை சேர்க்கின்றனர். சிலர் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, முதுதத்துவமாணி, முதுமாணிப்பட்டங்களைப் பெற்று மேலும் கலைமேம்பாட்டுக்குதவுகின்றனர். சுவாமி விபுலானந்தரின் பலவாண்டுகள் ஆராய்ச்சியின் பயனாககிடைத்த "யாழ் நூல்" இன்றும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் இசையாராய்ச்சியினைத் தூண்ட வழி அமைக்கின்றது. இசைத்துறைப்பட்டம் பெற்றவர்கள் பலர், பாடசாலை மாணவர்கட்கான நூல்களையும், ஏனையவர்கள் துறை சார்ந்த நூல்களையும் வெளியிட்டு, காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர். ஒலி - ஒளிப்பதிவு நிலையங்களூடாக பலர் தமது வாய்ப்பாட்டு - வாத்தியம் - மெல்லிசை - ஆக்கங்களை வெளியிடுகின்றனர். வசதி படைத்த இன்னும் பலர் இணையத்தள வலைப்பின்னல் ஊடாக பல தகவல்களையும் ஆவணப்படுத்தி, உலகத்திலுள்ள அனைவருக்கும் உபயோகப்படுத்த உதவுகின்றனர். எனவே நாட்டுக் கூத்தாலும், கர்நாடக இசையினாலும், திருமுறையிசையாலும், மெல்லிசையாலும் கலைஞர்கள், தமது முழுத்திறனையும் உலகிற்கு வழங்க வேண்டும்.

**கலாவித்தகர். எஸ். சிவானந்தராஜா**
**பண்டத்தரிப்பு.**

# புது நெறிவகுத்த புனித வதி

இலக்கியம் என்பது மானிட வாழ்க்கையின் கண் வருகின்ற அனுபவங்களை அழகுறப்புனைந்து கூறுவதாகும். இ:.து ஒருவர் தாம் பெற்ற அனுபவத்தை இன்னொருவருக்குச் சிந்தாமல் சிதறாமல் தொற்றவைக்கும் முயற்சியால் கனியப் பெறுவன எனலாம். இலக்கியம் காலத்தைக்காட்டுகின்றது. காலம் இலக்கியத்தை உற்பவிக்கின்றது.

"காலத்திற்கேற்ற வகைகள் அவ்வக்காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும் ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் நிலைத்திடும் நூலொன்றில்லை" என்பது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கூற்றாகும். அவ்வாறே இலக்கியவடிவங்களும் ஒவ்வொருகால அனுபவ வெளியீட்டுத் தேவைகளைப் பொறுத்துத்தோன்றியும் வளர்ந்தும் மாறியும் வந்திருக்கின்றன. சங்கமருவிய காலம் மேற்படி கூற்றுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. இயற்கை நெறிக்காலமான சங்ககாலத்தினை அடுத்து அறநெறிக்காலமாகிய சங்கமருவிய காலம் இடம் பெறுகின்றது. சங்ககால மக்களின் வாழ்வில் காணப்பட்ட குறைபாடுகளே அறவுணர்வை மக்கள் அகங்களில் விதைக்கக் காரணமாயிற்று எனலாம். இவ்வாறு மருவிய காலப்பகுதியில் அறவுணர்வு தலையெடுத்து மக்கள் அகங்களைச் செம்மைப்படுத்த முற்பட்டன. எனினும் சமண, பௌத்த மதங்கள் வற்புறுத்திய கடுந்துறவு மக்கள் வாழ்வில் பற்றற்றதன்மையை ஏற்படுத்தி நின்றன. இதனால் மக்கள் யாவரும் மாற்றுவழி ஒன்றைத் தேடி நின்றனர். அத்தகைய சூழ் நிலையில் இல்லறத்திலிருந்து கொண்டும் வீடுபேறு அடையலாம் என்பதனை வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்து காட்டி, வழிப்படுத்த பக்தி இலக்கியத்தின் விடிவெள்ளியெனத் தோன்றியவரே காரைக்கால அம்மையார் ஆவர். அவரின் வாழ்வே புதுமையானது. செய்கையோ அற்புதமானது எனலாம்.

**அம்மையாரின் பக்தி**

காரைக்கால் அம்மையார் கருவிலேயே திருவுடையவர். பக்தி நெறியேவாழும் நெறியாகக் கொண்டவர். சித்தத்தை சிவன்பால் வைத்துச் சிவனடியார்களையே சிவனாக்கக் கண்டவர். புனித வதியார் என்னும் திருநாமம் பூண்டு புனிதவாழ்வு வாழ்ந்த புனிதையாவார். பிறந்து மொழி பயின்ற நாள் முதலாக சிவன் சேவடிக்கே சிந்தை வைத்து வாழ்ந்தவர். "வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்" என்ற முது மொழிக்கு எடுத்துக் காட்டாக, வண்டல் பயிலும் பிராயத்தில் கூட பிறைசூடியபிரானின் திருநாமங்களையே பேசி நின்றவர். இல்லற வாழ்விலும் இல்லறத்தைத் துறந்த போதும் பொருவிடையார் திருவடிக் கீழ் ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப்பெருக வாழ்ந்தார். இவ்வாறு பரமனடியே பற்றெனக்கொண்ட முத்திநெறியில் தலைப்பட்ட புனிதவதியாரின் வாழ்க்கை பக்தி இலக்கியத்தின் தோற்றத்துக்கு உரமாகியது. அ:.து பின்வந்த மெய்யடியார்க்கெல்லாம் வித்தாகியது.

பக்திச் செல்வம் சிறக்கப் பெற்ற புனிதவதியாரின் அகம் பரமனைக் கண்டு இன்புறுவது, அவன் புகழ்பாடுவது என்பவற்றையே நாடியது. இறைவனின் எழிலார் கழலை எய்தும் நாள் எந்நாளோ என அல்லும்பகலும் அவனருளையே வேண்டி நின்றார். இவ்வாதங்கத்தை தமது அற்பு தத்திருவந்தாதியில்

"அன்றும் திருவுருவம் காணாது ஆட்பட்டேன்........"

என வெளிப்படுத்தியிருக்க காண்கிறோம். செந்தமிழ்ப் புலமைச் செல்வியாய் விளங்கிய அம்மையார் பக்திச்சுவை சொட்டச்சொட்டப் பாடிய பாக்கள் சிவனின் திருக்கோல அழகினை, திருக்கூத்தின் இன்பநிலைகளை எடுத்துக்காட்டி கற்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்தும் பான்மையது. ஞானச்செல்வியாகிய அம்மையார் வாய் மலர்ந்தருளிய நூல்களாக அற்புதத்திரு வந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை என்பன விளங்குகின்றன. இவையாவும் நூற்று நாற்பது பாடல்களை உடையன. பாடல்களின் எண்ணிக்கை மட்டும் கொண்டு ஒரு புலவனை மதிப்பிடலாமா? அம்மையாரின் கவித்துவச் சிறப்பு யாது? அவர் இலக்கியச் செல்நெறியில் தோற்றுவித்த புதுமைதான் என்னே! அப்புதுமைகள் காலத்தை வென்று காட்டாற்று வெள்ளம் போல் பக்திப்பிரவாகமாக பெருக்கெடுத்தோடியதா? என்ற வினாக்களிற்கு விடை கண்டால் ஒழிய அவரைத்தமிழ் நாட்டுப்பெரும்புலவர் வரிசையில் வைக்கலாமா என்ற கேள்விக்கு விடைகாண இயலாது என்பது வெள்ளிடைமலை. எனவே அவற்றுக்கு ஓரளவிற்கேனும் விடைகாணும் முயற்சி இக்கட்டுரை எனலாம்.

**பொருள் மரபு**

சங்கப் பாடல்களுக்கு மக்களுடைய வாழ்க்கை, ஒழுக்கம், மனோபாவம் என்பனவே பொருள்மரபாயிற்று. அம்மரபு அறநெறிக்கால வாழ்வியலாற் பெரிதும் மாற்றமுறுகின்றது. காலவோட்டம் கருத்து மாற்றத்துக்குக் காலாகிறது. உள்ளடக்கம் உருவமாற்றத்துக்கு வித்திடுகிறது. இவ்வுண்மையை ஒவ்வொரு மொழியிலுள்ள இலக்கிய வரலாறும் நிரூபித்து நிற்கின்றது. அந்தவகையில் காலத்தின் போக்கிற்கிணங்க இலக்கியங்கள் எழுச்சிபெறுகின்றன என்பதற்குச் சங்கமருவிய காலம் ஓர் எடுத்துக்காட்டாகின்றது.

காதல், வீரம், அறம், ஆசாரம், நீதி, ஒழுக்கம் என்று ஓடிக்கொண்டிருந்த தமிழ் இலக்கியப் பொருள் மரபு சங்கமருவிய காலப்பிற்பகுதியிலே **"பக்தி"**என்னும் புதுப்பொருளால் புதுமணம் கமழத் தொடங்கியது. அப்புதுப் படைப்புக்கும் புனிதையாக புனிதவதியார் புத்தெழுச்சி கொள்கின்றார். இம் முயற்சியே பல்லவர் கால மெய்யடியார்கள் தாம் இறைவன் மாட்டுக் கொண்ட அன்பினையும் அதனால் தாம் பெற்ற தெய்வீக அனுபவங்களையும் தங்குதடையின்றி வெளியிட வழிகாட்டிற்று எனலாம். இவர்,

"இடர்களையாரேனும் எனக்கு இரங்காரேனும்.... என் நெஞ்சு அவர்க்கே"

என்று பக்தி வைராக்கியத்தோடு பாடியதைப் பின்பற்றியே

"நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்....."

என்று அப்பர்சுவாமிகளும் "நாக்கொண்டுமானிடம்பாடேன்" என்று ஆண்டாள் முதலானோரும் பாடிப் பணிந்தனர். இவ்வாறு பல்லவர்கால மெய்யடியார்களுக்கெல்லாம் விடிவெள்ளியென உதயமாகி தெய்வீக ஒளிபரப்புகின்றார்.

**செய்யுள் மரபு**

பொருள் மரபு மட்டுமன்றி செய்யுள் மரபிலும் அம்மையார் புதுமை காண விழைந்தார். உள்ளடக்கத்துக்கேற்ப வடிவமாற்றமும் தேவைப்பட்டது. அதனைத் தம் அனுபவத்தால் கண்டுணர்ந்தவர் காரைக்கால் அம்மையார். வினாவுக்கு விடையளிக்கும் பண்பு நிறைந்ததும் செப்பலோசை உடையதுமான "வெண்பா யாப்பு" அற ஆசார நீதிக் கருத்துக்களைப் புலப்படுத்தப் பொருத்தமானது ஆயினும் உணர்ச்சியனுபவங்களையும் தெய்வீக அனுபவங்களையும் புலப்படுத்தத் தோதாக அமையவில்லை என்பதால் பாக்களை விட்டு

பாவினங்களைக் கையாண்டு பார்த்தார். அக்காலத்திற் செல்வாக்குப் பெற்றிருந்த "வெண்பா" யாப்பினால் அற்புதத்திருவந்தாதியை இயற்றினார். எனினும் திரு விரட்டை மணிமாலையில் கட்டளைக் கலித்துறையையும் திருவாலங்காட்டுமூத்த திருப்பதிகத்தில் விருத்தப்பாவினையும் கையாண்டு புதுமை புகுத்தியது மட்டுமன்றி பல்லவர் கால மெய்யடியார்களான ஞான சம்பந்தர், சுந்தரர் முதலானோர் பாக்களைவிட்டு தாழிசை, துறை, விருத்தம் முதலான பாவினங்களைக் கையாண்டு பக்திப் பாசுரங்களைப் பாடிக்குவிக்க முன்னோடியாய் விளங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**மொழியை வெளியிடும் நெறி**

"சொல்ல நினைக்கின்றோம் எப்படிச் சொல்வது"என்பது ஒவ்வொரு உள்ளத்திலும் தோன்றும் முதல்நிலையாகும். இதனை இதனால் உரைப்பதே சாலப்பொருத்தமானது என தெளிந்து கொள்வது சிருஷ்டிப்பாளரின் முதற்பணியாகும். அந்தவகையில் அம்மையார்மானிடக் காதலை மகேசன் மீது கொண்ட பக்தியாகப் பரிணமிக்கச் செய்கின்றார்.

அம்மையார் "நாயகன் நாயகி பாவத்தைக் கையாண்டு பாடியதைப் பின்பற்றியே பின்வந்த மெய்யடியார்களும் அகத்துறையில் நின்று அகமகிழ்ந்து அரனைப்பாடிப் பணிந்தனர் எனலாம். அப்பர் சுவாமிகள் "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்றும் நம்மாள்வார் "தந்தையும் தாயாரும் நிற்க தனிவழி போயினாள்" என்றும் நாயகன் நாயகி பாவத்தைக் கையாண்டு பாடல்களைப் பாடுவதற்கு அம்மையாரே வழிகாட்டி நின்றார். அம்மையார் தன் மனக்கண் முன் காட்சியளித்த இறைவனின் திருமேனிஅழகினைக் கண்டு "காலையே போன்றிலங்கும் வெண்ணீறு கடும் பகலில்..." எனப் பாடியதைப் பின்பற்றியே "குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயிற்..." என்று அப்பரும் "பொன்னார் மேனியனே..." என்று சுந்தரரும் "பச்சைமாமலை போல் மேனி" என்று தொண்டரடிப்பொடியாள் வாரும் பாடிப்பரவினர் எனலாம்.

இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தமை, மாலும் அயனும் அடிமுடிதேடியமை, மார்க்கண்டேயருக்கு சிவன் ஆயுள் பெருக்கியமை முதலான புராணக்கதைகளைக் கையாண்டு பாடினார். இதனை "செருக்கினால் வெற்பெடுத்த திண்தோள் அரக்கனை" எனத் தொடங்கும் அவர்தம் பாடலால் அறியமுடிகின்றது. பல்லவர் கால மெய்யடியார்களும் புராண இதிகாசக் கதைகளைத் தம் பாக்களில் மிகுதியாக கையாண்டுள்ளமைக்கு அம்மையாரே முன்னோடியாய்த் திகழ்ந்தார் எனலாம்.

**வடிவம்**

வடிவ அமைப்பிலும் அம்மையார் புதுமையை நிலைநாட்டி உள்ளார். சைவப் பரப்பின் பதிக அமைப்பைத் தொடக்கி வைத்த முதல்வராவார். தனித்தனி பதிகங்கள் வாயிலாகவும் அந்தாதி முதலான பிரபந்தங்கள் வாயிலாகவும் பக்தி அனுபவங்களை வெளிப்படுத்தும் மரபினைத் தொடக்கி வைத்த பெருமை இவரையே சாரும். குறிப்பாக தேவார முதலிகள் மூவரும் தம் தெய்வீக அனுபவங்களை புதிய வடிவங்கள் ஊடாக வெளிப்படுத்தினர். பிரபந்தங்களில் பாத்திரங்களை அமைத்து அப்பாத்திரங்களின் வாயிலாக தம் பக்தி அனுபவங்களை வெளியிட்டனர். அந்தாதி, கோவை, பாவை, மடல், மாலை, பள்ளியெழுச்சி,உலா, அம்மானை முதலான பிரபந்தங்களை பல்லவர் காலமெய்யடியார்கள் கையாண்டு பக்திஅனுபவங்களை எடுத்துரைத்தனர். எனவே அம்மையார் பத்தி இலக்கியத்தின் விருட்சத்திற்கு வித்திட்டு வைத்த பெருமையைத் தனக்குரியதாக்கி, தமிழ் மொழியின் ஆளுமையை பக்தி இலக்கியமே பறை சாற்றி நிற்க வைத்த பெருமையை ஏற்படுத்த ஏணிப்படியாய் நின்றுழைத்தார் எனலாம்.

**த. தயானந்தன்** – ஆசிரியர்.
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

## கோகழியாண்ட
## குருமனி(ணி) தன் தாள் வாழ்க

திருநெறிய அருளாளர் வரிசையில் மணிவாசகரும் போற்றுதற்குரியவர். கி.பி 6 - 9 ம் நூற்றாண்டு வரை பல்லவர் காலத்தே வாழ்ந்த நால்வரில் ஒருவராவார். இவர் அரிமர்த்தன பாண்டிய மன்னன் ஆட்சியில் அமைச்சராய் விளங்கினார். சிறுவயதிலேயே கல்வி, கலை இறையுணர்வு யாவும் ஒருங்கே கொண்டிருந்தார். இதனால் தென்னாட்டின் பிராமணர்களின் அரசனாய் விளங்குக என "தென்னவன் பிரம்மராஜன்" எனும் கௌரவப்பட்டம் சூட்டப்பட்டார்.

அமைச்சராய் இருந்த போதும் இறை உணர்வு பெற்று அகத்தில் ஈசனை இருத்தி இருந்தார் என்பதை தனது சிவபுராணத்தில் "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" எனக் குறிப்பிடுகின்றார். கண்மூடிவிழிக்கின்ற சிறுகால அளவு கூட என் நினைவில் இருந்து விட்டுப்பிரியாத இறைவன் திருப்பாதங்கள் வாழ்வதாக அமைகிறது. நெஞ்சு என்பது உள்ளத்துள் உயிரினை உறுதி செய்யும் நிலையில் காணலாம்.

"சிவன் சிவலிங்கம்" எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். அவ்வாறு உள்ளத்தில் காணும் இறைவனைத் திருப்பெருந்துறையில் கண்டு வணங்கியதுடன் ஆட்கொள்ளப்பட்டார். அதாவது கோகழி என்பது திருவாவடு துறையைக் குறிக்கும் என்பர் அறிஞர்கள். கோ - என்பது பசு. ஆன்மா கழி என்பது தன்மைகழிதல். இதனடிப்படையில் திருப்பெருந்துறையே பெருமைக்குரிய இடமாகக் கருதப்படுகிறது. "நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல எண்ணியெழு கோகழிக் கரசை" என்றும் கூறுமிடத்து திருப்பெருந்துறைக்குருந்தமரநிழல் என்பதைக் காட்டிடும் நிலையில்

"திருந்துவார் பொழில் திருப்பெருந்துறையில் செழுமலக் குருந்து மேவியசீர் இருந்தவாறெண்ணி" மேலும் "குருந்தம் மேவிய சீர்......." என்றும் "செல்வத்திருப்பெருந் துறையில் நிறைமலர்க்குருந்தம்மேவியசீர்....." என்று திருப்பெருந்துறையுறைசிவனே என்னை ஆட்கொண்ட குருநாதர் என்பதனைச்சுட்டி பல இடங்களில் குருமணிக்குப் புகழ் சேர்க்கின்றார்.அது மட்டுமல்ல தன் குறைகளையும் அவரிடமே எடுத்துக் கூறும் நிலையினையும் காணமுடிகின்றது. "சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே திருப்பெருந்துறையுறை சிவனே......" என்று வாழப்பத்து என்பதனூடாக தெளிவுபடுத்தப்படுகின்றது. இந்த நிலை மணிவாசகர் குருந்தமர நிழலில் குருநாதராய் சிவனை நினைத்து உருகி அவருடைய பரிச, நயன தீட்சை பெற்று உய்தி அடைய ஞானமே வடிவாகிடப் பெற்ற நிலையில் தாம் பெற்ற இறையுணர்வினைப் பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. இறைவன் ஆன்மாக்களை ஆட்கொள்ளும் பொருட்டு குருவடிவாக எழுந்து வருதலைத் தெளிவாகத் திருவருட்பயன் பின்வருமாறு கூறுகின்றது.

"பார்வையென மாக்களை முன் பற்றிப்பிடித்தற்கு போர்வையெனக் காணார்புவி" இந்நிலையில் தெட்சணாமூர்த்தி சிவமூர்த்தமாய் அமைவதைக் காணலாம். அத்தகுவடிவினையும் மணிவாசகர் திருவாசகம் மலர்ந் தருளியதைக் காணலாம். "அன்றாலமர நிழற்கீழ் அருமறைகள் தானருளி.." என்றும் "நன்றாக நால்வர்க்கும் நான் மறையினுட் பொருளை அன்றாலின் கீழிருந்தங்கறமுரைத்தான் காணேடி...." என எடுத்துக்காட்டியிருக்கின்றார். "குரு"

என்பவர் அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானம் எனும் பெரும் பேற்றைப் பெற்றுத்தரும் நிலையில் ஞானகுருவாக விளங்குகின்றார். சிவஞானபோதம் அருளிய மெய்கண்ட தேவர் கூட தனது மங்கள வாழ்த்துரையில் குருவையே தொழுது முதற்பொருளாய் நினைந்து தனது போதமாகிய ஞானத்தைப் பரப்புகின்றார்.

"கல்லால் நிழல் மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே"

என வேண்டி நிற்றலை உணர்த்துகின்றது. இதே போல் உண்மை விளக்கத்தில் தேசிகனே, வித்தகனே என்று போற்றப்படுகிறது. எனவே தான் "குரு" என்பது பல்துறைப்பட்ட நிலையில் காணலாம்.

1. ஞானகுரு
2. தீட்சாகுரு
3. வித்தியா குரு

எந்த குருவிடத்திலும் சிரம் தாழ்ந்து பணிந்து பெறுகின்ற அறிவு ஞானமே சீடனை மேன் நிலைப்படுத்துவதைக் காணலாம். உபநிடதம் என்பதே ஞானம் பெறும் வழியைத் தனது பொருளிலேயே உணர்த்தியுள்ளது. உப - அருகில் நி - சிரத்தை, ஷத் - கேட்டிருத்தல். அருகிருந்து சிரத்தையுடன் கேட்டல் என்பதே உபநிஷத் ஆகும்.

அதாவது ஞானகுருவின் திருவடியில் சிரத்தையுடன் கேட்டிருத்தல் எனப்பொருள்படும் அத்தகு தகுதியோடு கழிவிரக்கத்துடன் மணிவாசகர் வருந்திப் பெற்ற ஞானாமிர்தமாய் மலர்ந்ததே திருவாசகமாகும். நல்ல குரு வாய்க்கப் பெறுதலும், அதன் வழி நற் சீடராய் இருத்தலும், அதன் வழி நற் பேறு கொண்ட நிலையில் வாழ்தலே சாலச்சிறந்த விடயமாகும்.

இந் நிலையில் இம் மலரில் சிந்தனைக்கு ஏற்பவும் மாணவர்கள் "ஆச்சார்ய தேவோ பவ" என்பதற்கு அமையவாழுதல் அவசியம் என்பதனையும் வலியுறுத்திக் கொள்கின்றேன்.

எனவே நூற்றாண்டு கண்டிடும் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் பல்வேறு சிறப்புகளை உடைய மாணவர்களை உருவாக்கிவரும் ஆலயமாக இன்று நூறுவயது அடைந்தாலும், என்றும் சிறந்த அறிவு, ஆற்றல் மிக்க குருநாதர்களின் வழியேஅதன் மலர்ச்சியும் எழுச்சியுமாய் அமைகின்றது. எனவே குருவருள் இன்றித் திருவருள் இல்லை என்பதற்கமைய குருமணிகளைப் போற்றி வாழ்வோம்.

**ஜெ. கோகலே**
ஆசிரியர்

# இன்றைய உலகில் கணிதத்தின் முக்கியத்துவம்

*"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு"*

என்ற குறள் மூலம் வள்ளுவர் எழுத்தினதும் எண்ணினதும் முக்கியத்துவத்தைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

மெய் உலகில் பிரச்சினைகள் தொடர்பாகப் பெறப்பட்ட அபிப்பிராயங்கள் தொகுக்கப்படும் போது வினாக்கள் எழுகின்றன. இவ்வினாக்களினூடு பெறப்படக் கூடிய எண்ணக்கருக்கள் தொடர்பாகத் தன்னிச்சையாகச் சில முடிவுகள் ஊகிக்கப்படுகின்றன. இதன் பின்னர் மாத்திரம் பெறப்படும் அம் முடிவுகளைப் பெறுவதற்கான உய்த்தறி அமைப்புச் செயல் வழி கணிதம் ஆகும் என்கிறார் "மொறிஸ்கிளாயின்" என்ற அறிஞர். இவரின் கருத்தின்படி உலகத்தில் பிரச்சினைகள் ஏற்படும் போது உள்ளுணர்வு அமைத்தல் என்பவற்றினூடு கணிதம் கட்டியெழுப்பப்படுகின்றது என்பதை அறிய முடிகின்றது.

இந்த அபிப்பிராயத்தை உறுதிப்படுத்திய "ஜே. டபிள்யூ. என். சுலிவன்" எனும் கணிதவியலாளர் கணிதத்தைப் பற்றி இவ்வாறு கருத்தளிக்கின்றார். கணிதம் ஒரு கலையாக மாறுவதிலேயே அதன் முக்கியத்துவம் தங்கியுள்ளது. எமது உள்ளத்தில் தேங்கியுள்ள விடயங்கள் பற்றிக் கணிதம் எமக்கு வெளிப்படுத்துகின்றது. புறத்தே நெடுந்தொலைவில் உள்ள யாதேனும் பிரதேசத்தை ஆராய்வதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைப்பதில்லை. எனினும் அவ்வாறாகக் காணப்படுபவை எந்தளவிற்கு எமது மனதில் இடம் பிடித்துள்ளது என்பதை அது காட்டுகின்றது. அகிலத்தில் விதிகள் அமைப்போர் நாமே. எனவே நாம் ஆக்கிய மிகப்பெரிய கணித ஆக்கம் அகிலமாகவே இருக்கக்கூடும். மேற்போந்த கணித வியலாளர் சுலிவனின் கூற்றில் இருந்து கணிதத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடிகின்றது.

இன்றைய உலகில் கணிதம் இல்லாவிடின் மனிதனுக்கு வாழ்க்கை இல்லை என்ற அளவிற்கு எங்கும் கணிதம் வியாபித்து உள்ளது. உலகில் பல நாடுகளில் மொழிகள் பல்வேறுபட்டிருப்பினும் கணித மொழி சகலருக்கும் ஒரு பொதுமொழி ஆகும். $15 - 12 = 3$ என்பதை எம்மொழிபேசுவோரும் புரிந்து கொள்ளலாம். மொழியைக் கற்றுக் கொள்வதற்கும் கணிதம் தேவைப்படுகின்றது. மொழியிலுள்ள உயிர், மெய் எழுத்துக்களை வெவ்வேறாகக் கணக்கிடுவதற்குக் கணிதம் தேவைப்படுகின்றது. கணிதத்தில் காணப்படும் சமச்சீர்த் தன்மை பற்றிய கருத்து சித்திர பாடம் போன்ற பாடங்களில் பயன்படுத்தப்படுகின்றது. விஞ்ஞான பாடத்தைக் கற்பதற்கும், வர்த்தக பாடத்தைக் கற்பதற்கும் கணிதம் தேவைப்படுகின்றது. இதனால் எமது நாட்டில் இடைநிலை மட்டத்தில் கணிதம் கட்டாயபாடமாக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டின் உயர்தரக் கல்வியில் கூட பல்வேறு பாடங்களிலும் கணிதம் பின்னிப் பிணைந்துள்ளதை நாம் காணலாம். பல்வேறு எண்வடிவங்களிலும் வரைபுகளிலும் கருத்துக்களைச் செப்பமாகத் தெரிவிக்கத் தேவையேற்படும். புவியியல், பொருளியல்,

வர்த்தகவியல், சமூகவியல் போன்றவற்றிலும் பல்வேறு விகிதங்கள் தொடர்பான கருத்துக்களை உள்ளடக்கியும் மனையியல், சங்கீதம் போன்ற பாடங்களைக் கற்பதற்கும் பின்னணியாகக் கணிதம் தேவையானது ஆகும்.

கல்வியானது வாழ்க்கையை இலகுவாக்குகின்றது. இன்றைய உலகில் வாழும் ஒவ்வொருக்கும் கணித அறிவானது அவசியம் தேவைப்படுகின்றது. உதாரணமாக நீளம், நிறை, கனவளவு, பரப்பளவு, காலம் போன்ற அளத்தல்களுக்கும் மனிதனின் அன்றாட தேவைகளுக்கு அவசியமான துணியை அளத்தல், நேரத்தை அறிந்து கொள்ளல், பல உணவுப் பொருட்களின் அளவை அறிந்து கொள்ளல் போன்ற செயற்பாடுகளுடன் கணிதம் இணைந்து காணப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை அறிந்து கொள்ளும் திறன் அற்றோருக்கு வாழ்க்கையில் அதிக சிக்கல்கள் ஏற்படும். ஒருவன் பிறந்த நேரத்தைக் கணக்கிடுவதன் மூலமே அவன் எதிர்காலத்தைக் கூறுமளவிற்கு இன்று வளர்ந்து விட்ட உலகில் ஆரம்பக் கட்டமாகக் கணிதமே காணப்படுகின்றது.

வியாபாரம், கொடுக்கல் வாங்கல், போட்டிகள் போன்ற அநேக சமூகத் தேவைகளின் போது சரியான முறையில் காரியங்களைச் செயற்படுத்தக் கணிதத்தைக் கற்றலினால் பெற்ற திறமையும் மனப்பாங்கும் எவ்வளவு முக்கியமானது என்பது நன்றாகவே விளங்கும். 20 ஆம் நூற்றாண்டில் பரபரப்பை ஏற்படுத்தி சகல நாடுகளிலும் முன்னணியில் திகழும் கணனி, இன்ரநெற் போன்ற இயந்திரங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தவை தொழில்நுட்ப வளர்ச்சியும், கணித அறிவு விருத்தியும் ஆகும். எனவே கணிதம் சகல துறைகளோடும் இணைந்து மிகவும் வளர்ச்சியடைந்த நிலையில் உள்ளது. எனவே இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும் போது பின்வருவனவற்றின் மூலம் கணிதத்தின் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

கணிதம்

1. மெய் உலகில் பிரசினங்களைத் தெரிந்து கொள்ள உதவுதல்
2. அறிவுக் களஞ்சியம்
3. ஒரு கலை
4. ஒரு மொழி

இந்நிலையில் கணிதமானது சகல துறைகளிலும் ஒன்றிணைந்து உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுடனும் பிரிக்க முடியாத நிலையில் இணைந்து நன்கு வளர்ச்சி அடைந்த நிலையில் காணப்படுவதை நாம் உணரக் கூடியதாக உள்ளது.

**ஆசிரியர்,**

**திருமதி. சி. மிருளாஜினி**



முகாமைத்துவக்குழு



மாணவ முதல்வர்கள்



பழைய மாணவர்கள்

# சமூகமயமாக்கல்

ஒரு மனிதன் தன்னைச் சமூகத்தின் ஒரு முக்கிய உறுப்பினராக இணைத்துக் கொள்வதற்கு சிறுவயது முதல் முதியவராகும் வரை பெறுகின்ற கல்வியும்,பயிற்சியும், அவர்மேற்கொள்ளுகின்ற முயற்சிகளுமே சமூகமயமாக்கலாகும். மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே ஒரு நிரந்தர நெருக்கத்தையும் இணைப்பையும் ஏற்படுத்துவதே சமூகமயமாக்கலின் முக்கிய நோக்கமாகும்.

சமூக சிந்தனையாளருள் மிகப்புகழ் பெற்றவரான கிரேக்க அறிஞர் அரிஸ்டோட்டல் மனிதனை ஒரு சமூகப்பிராணி என்றும் மனிதனின் முக்கிய பண்பு ஏனையோருடன் கூடி வாழுதல் என்றும் அழகாகக் குறிப்பிட்டுள்ளார். மனிதன் பிறந்தது முதல் இறப்பு வரை சமூகத்தினதும் குடும்பத்தினதும் அரவணைப்பில் சீருடனும் சிறப்புடனும் வளமாக வாழ்கின்றான். பூர்வீக காலத்தில் இருந்தே காலங் காலமாக இது தொடர்ந்து வருகின்றது.

பெற்றோரின் அரவணைப்பில் உறவினரின் ஆதரவில் வளமாக வாழ்ந்த குழந்தை சமூகத்துடன் இணைந்து வாழும் பண்பை படிப்படியாக வளர்த்துக் கொள்ளுகின்றது. பாடசாலைக்குச் செல்லும்போது ஆசிரியர், மாணவர் போன்றவர்களுடன் இணைந்து விளையாட்டு, கற்றற் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் என்பவற்றில் ஈடுபடும் போது சமூகமயமாக்கல் மேலும் வளர்ச்சியடைகின்றது.

உலகில் எவரும் தனித்து வளமாக வாழமுடியாது. தன்னிடமுள்ளதைப் பிறருக்குக் கொடுத்தும் தன்னிடமில்லாததை பிறரிடம் பெற்றும் வாழும் கூட்டு வாழ்வு மூலமே ஒருவர் வளமாக வாழ முடியும். மனிதன் ஏனைய பிராணிகள் போன்று வளர்ந்த பின்பும் தனித்து வாழ முடியாது. பெற்றோர், சகோதரர், உறவினர், அயலவர், நண்பர்கள், ஆசிரியர்கள், சமூகத்தலைவர்கள் போன்றவர்களின் அரவணைப்பும், உதவி, ஒத்துழைப்பு என்பனவும் கிடைப்பதாலேயே சீருடனும் சிறப்புடனும் வாழ்கின்றான்.

ஒரு மனிதன் சிறந்த நற்பிரஜையாக உருவாகுவதால் சமூகத்தில் அமைதி, வளமான வாழ்வு என்பன கிடைக்கின்றன. மனிதனின் கல்வி அறிவு, ஆற்றல், ஆளுமை, ஒழுக்கம் என்பன மேன்மையடைந்து செயலூக்கம் உடைய ஒரு முழுமையான மனிதனாக உருவாக சமூகமயமாக்கம் வழி செய்கின்றது.

மனிதன் நாகரிகமடையாத புராதன காலப்பகுதியிலும் சமூகமயமாக்கல் நிகழ்ந்துள்ளது. தற்போது இது புதிய வடிவங்களில் மலர்ந்துள்ளது. பத்திரிகை, வானொலி தொலைக்காட்சி என்பன சமூகமயமாக்கலில் பெரும் பங்கு வகித்தன. தற்போது கணனி, இன்ரநெற் என்பன இதில் வளமான பங்களிப்புச் செய்கின்றன. சமூகமயமாக்கல் என்பது ஒவ்வொருவரும் தமது நிலைமைக்கும் தகுதிக்கும் ஏற்ப தாமே கற்றுக்கொள்ளும், வாழ்நாள் முழுவதும் தொடரும், வாழ்க்கைக் கல்வியாகும். இது ஒருவரது ஆயுள் முழுவதும் இயல்பாகவும், சுயமாகவும் படிப்படியாக நடைபெற்று சிறந்த பிரஜையாக வாழ உற்ற துணை புரிகின்றது.

**திருமதி து. மகிழாம்பிகை**
ஆசிரியர்.

# அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் வித்திடும் அடிமனப் பதிவுகள்

கல்வியென்பது ஒரு பாடப்பொருளைப் போதித்தல் மட்டுமன்றி, கல்வியின் குறிக்கோள் குழந்தையின் முழு வளர்ச்சியேயாகும். இத்தகைய முழுமை பெற்ற இசைந்த வளர்ச்சி என்பதில் உடல், அறிவு, செய்திறன்கள், அழகுணர் ஆற்றல் நல்லொழுக்கம், சமூகவியல்பு ஆகியவற்றின் வளர்ச்சிகள் யாவும் அடங்கும்.

மாணவர்கள் ஒவ்வொரு நாளையும் கற்பதற்கு உகந்த நன்நாளாக மாற்றிடல் வேண்டும். "நான் நன்றாகக்கற்க வேண்டும்" "திறமைசாலியாக வளர வேண்டும்" என்ற நல் ஊக்கத்தை அடிமனதில் பதித்திடல் வேண்டும். அடிமனப்பதிவுகளே நாளடைவில் சாதனைகளாக மாறுகின்றன.

அதிகாலை 4.30 மணி தொடக்கம் 6 மணிவரை பிரம முகூர்த்தம் **(Alba time)** ஆகும். காலையில் துயில் எழுந்தவுடன் அரும்பிடும் முதல் பத்து நிமிடங்கள் "உயர் உன்னத உச்ச சாதனைக் காலமாகும்" இவ்வுயர் உன்னத உச்ச சாதனைக்காலத்தில் மனதில் திரும்பத்திரும்ப எண்ணும் எண்ணங்களும் சிந்தனைகளும் ஆழ் மனதில் ஆழமாகவலுவூன்றி விடுகின்றன. இச் சமயத்தில் மாணவர்கள் தமக்குள் இடும் "மன எழுச்சி சுய ஊக்குவிப்புக்கட்டளைச் சபதங்கள்" ஆழ்மனதில் ஆழமாகப் பதிந்திட வல்லன. இவ்வாறாக ஆழ்மனதில் ஆழப்பதியும் எண்ணங்களின் உந்து சக்திக்கேற்ப மாணவர்களது செயல்களும் செயற்பாடுகளும் முனைப்பும் முன்னேற்றமாக அமைகின்றன. இவைகளே சாதனைகளாக மாணவர்களில் மலர்கின்றன.

**மாணவர்களின் மன எழுச்சி சுய ஊக்க மன வளச் சபதங்கள்**

- இன்று இனிய நன்நாள். கல்வியிலும் கலைகளிலும் சிறந்திடும் உயர் நாள்.
- யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் கல்விபயிலும் நான் விருப்பத்துடனும், நேரத்துடனும் தினமும் பாடசாலைக்கு ஒழுங்காக வருவேன்.
- ஆசிரியர்களின் நல் வழிகாட்டலுக்கு அமைய முழுமன ஈடுபாட்டுடன் பாடங்களை விருப்பத்துடன் கற்பேன்.
- நான் கல்வியில் உயர் உன்னத உச்ச சாதனைகளை நிலை நாட்டுவேன்.
- நான் நல்லவற்றையே எண்ணுவேன். நல்லவை பற்றிய நல்லவைகளே என்னை வந்தடையும்.
- எனக்கு ஒளிமயமான எதிர்காலம் அமையும்.

பெரும்பாலான வளர்ச்சி அடைந்த நிறுவனங்களில் கடமை புரியும் ஊழியர்கள் தமது வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் சபதங்களை எடுத்துக் கொள்வதன் மூலம் மக்களுக்கு

சிறந்த சேவைகளை ஆற்றி நிறுவனம் வளர்ச்சி அடைந்து வருவதை நாம் நடைமுறையில் தினமும் காணக்கூடியதாக உள்ளது. அதே போல அதிபர் ஆசிரியர்களும் சுய ஊக்க மனவளச் சபதங்களை எடுத்துக் கொள்வதன் மூலம் பாடசாலை மாணவர்களை ஆளுமைமிக்கவர்களாக மாற்ற முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**அதிபர், ஆசிரியர்களது மனவளச் சபதங்கள்**

- நான் இன்றும் என்றும் தேக ஆரோக்கியத்துடன் வாழ்வேன், வளர்வேன்.
- நான் இன்றும் எனது மாணவர்களை கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்காக ஊக்குவிப்பேன்.
- நான் இன்றும் மற்றவர்கள் மனம் நோகாதவாறு இனிய வார்த்தைகளைப் பேசுவேன்.
- நான் அழகு மிக்கவன், ஆளுமை உடையவன். எக்காரியத்தையும் சிறப்பாக ஆற்றுவேன்.
- எனக்கு நிகர் நானே, நானே முதல்வன், நானே தலைவன் அறிவு மிக்கவன், ஆற்றல் உடையவன்.
- என்னை எல்லோரும் பாராட்டும் முகமாக எனது கடமைகள் அனைத்தையும் சரிவர நிறைவேற்றி வெற்றியை நிலை நாட்டுவேன்.

இவ்வாறான எமது வாழ்வும் வளமும் சீரும் சேவையும் மேன்மை அடைவதற்கு நான் என்னைப் பற்றி எனது திறன்பற்றி உயர்வாக எண்ணிடல் அவசியமாகும்.

இவ்வாறான உயர்வெண்ணங்களை வெற்றி எண்ணங்களை நாம் தினம் தினம் எண்ணி எண்ணி பலதரம் கூறிவந்தால் பாடசாலையையும் அதன் சமூகத்தையும் முன்னேற்றி ஆளுமைமிக்க மாணவச் சமூகத்தை கட்டி எழுப்பமுடியுமென்பது உண்மையான விடயமாகும்.

ஆக்கம் :-
**திரு. சுப்பிரமணியம் கணேசதாசன்**
**SL PS - 2 - I**
யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்
சுழிபுரம்.

# THE VALUE OF LEARNING ENGLISH

Leaning English is very important as it impacts your opportunities both personally and professionally. Because learning English expands your knowledge of culture and subjects, it increases your business and professional options as well as personal opportunities. Learning English provides insight into the culture, politics, business practices and new trends in the global community.

## PERSONAL REWARDS

Learning English is interesting and challenging. The challenges include leaning to thing in new ways such as recognizing that the values you hold most dear may be different from the values other people hold. Learning to appreciate values other than your own is one of the most rewarding aspects of learning English because you gain a depth of understanding about yourself. Leaning English is interesting because as you develop linguistic skills, you also meet new people who introduce you to different foods, movies and entertainment.

## KNOWLEDGE

Learning to read in English opens the door to many more resources than you would have access to in your native language alone. In addition to books, newspapers, and professional articles printed only in English, more than 80% of web pages on the internet are written in English. Reading a variety of resources provides a wider range of topics that you know about and a greater depth of knowledge. When you have access to this many additional resources, you gain an advantage over those with limited resources.

## TRAVEL

English is the official language in 52 countries and is the primary language in many small territories and colonies. It is estimated that nearly 1/3 of the world's population speaks and understanding English at least at a beginning intermediate level. In addition, English is the de facto language of diplomacy. When you learn English, is the whole world becomes accessible to you. Whether you want to travel for pleasure or for professional opportunities, learning English enables you to travel more easily.

The benefits of travel include giving you an edge in international affairs, in particular, in regards to business.

## BUSINESS

just as English is the de facts language of diplomacy, it is also the de facto language of business. Being able to read, write, and communicate in English opens a flood-gate of opportunities in the business world. Companies need English competent employees to set up and run branch offices overseas, communicate with competitors in other countries, stay abreast of industry trends and serve as translators, negotiators, liaisons, and consultants for the company both at home and abroad.

## BROADER DIVERSITY

Learning English helps you to learn about different cultures and different people. As you broaden your own sense pf diversity, you become more tolerant of differences among people. This increases negotiation and problem-solving skills which are beneficial both personally and professionally. In today's global economy, having a broad sense of diversity is necessary for success both in your home county and abroad.

## OVERALL VALUE

In a study done by weber in which six different factors (number of primary speakers, secondary speakers, population of countries that use English, major fields using English internationally, economic power of English speaking countries and socio- literary prestige), English was determined to be the number one most influential language. Based on this information, the value of learning English is to be active and competitive in the global community.

***Mr. S. K. Joseph Anura***
J/Chulipuram North
Arumuga Vidyalayam
(English trained Teacher
Dip - in - Eng- Jaffna University)

# மனித விழுமியங்கள்

மனித வாழ்வு மேம்பாடானதுஎனக் கருதுவதற்கு உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே மனித விழுமியங்கள் எனப்படுகின்றன. எமது வாழ்வில் போற்றி வளர்க்க வேண்டிய உயர்ந்த மனிதப்பண்புகள் பல உள. அவை யாவும் மனிதனை மனிதனாக வாழ வைப்பன. மனித விழுமியங்களில் முதன்மையானதும் அடிப்படையானதும் அன்பே ஆகும். அன்பிற்கு மாபெரும் ஆற்றல் உண்டு. எனவேதான் உலகமகா சக்தி என அன்பு போற்றப்படுகின்றது.

அன்பை அடிப்படையாகக் கொண்டு எழும் எல்லாச் செயல்களும் மேம்பாடு உடையதாகும். இவ்வகையில் மனித விழுமியங்கள் என உளத்தூய்மை, சகிப்புத்தன்மை, சமாதானம், அமைதி, பிறருக்கு உதவிசெய்தல், தலைமைத்துவம், செய்ந்நன்றி மறவாமை, பணிவு, நேரந்தவறாமை எனப் பல உள்ளன. இவற்றில் தலைமைத்துவப் பண்பு பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறவுள்ளேன்.தலைமைத்துவப் பண்பை வளர்ப்பதற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டியவை.

1. சுயநலமின்மை, பிறர் நலம் பேணுதல்.
2. நேரந்தவறாமை, உரியநேரத்தில் உரிய செயலைச் செய்து முடித்தல்.
3. நல்ல ஒழுகலாறுகளைப் பேணுதல்.
4. சூழ்நிலைகளை அறிந்து செயற்படுதல்.
5. மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்.
6. தன்னுடைய கருத்தைத் தெளிவாகக் கூறும் மொழிப்புலமை, மொழியாற்றல் என்பவற்றைக் கொண்டிருத்தல்.
7. கூட்டாகச் செயற்பட விரும்புதல், தமக்குரிய பொறுப்புகள் கடமைகள் பற்றிய கரிசனை உடையவராக இருத்தல்.
8. தனித்து நின்றேனும் செயற்படும் திறனும், மன உறுதியும் கொண்டிருத்தல்.
9. பொறுப்புக்களை விரும்பி ஏற்றுச் செய்யும் சேவை மனப்பான்மை.
10. சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு, பிறரை அரவணைத்து ஆதரித்தல், பிறரின் கருத்துக்களை ஏற்று மதிப்பளித்தல்.
11. எச்சந்தர்ப்பத்திலும் நிதானம் தவறாமை, நடுவு நிலைமை கடைப்பிடித்தல் குடும்பம், சமூகம், நாடு எவ்விடத்தும் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்கும் சுமுகமான தீர்வு காணல்.
12. சவால்களுக்கு முகங்கொடுத்துத் துணிவுடன் எதிர் கொள்ளல்.
13. வேலைகளையும், பொறுப்புக்களையும் உரியவரிடத்துப் பகிர்ந்தளித்தல்.
14. சிறந்த உடல், உள ஆளுமைப் பண்புகளை வளர்த்தல்.
15. மதிப்பு, மரியாதை, கீழ்ப்படிதல், பணிவு உடைவராக வாழ்தல் அன்பு உடையவராக இருத்தல்.
16. பிறருக்கு உதவுதல், பிறர் துயர் கண்டு இரங்குதல் என்பனவாகும்.

இவற்றையெல்லாம் கடைப்பிடித்தோமானால் நாம் எல்லாரும்

*"உயர்விலே பணிந்து*
*உணர்விலே நனைந்து*
*உறுதியாய் நிமிர்ந்து*
*உளமார நினைந்து*
*சொல்லை வளைத்து*
*செயலுள் புகுந்து*
*செப்பனே ஆற்றும்*
*செயற்றிறன் மிக்க தலைவராவோம்."*

**செல்வி வ. மனோராணி**
**ஆசிரியர்.**



முதலுதவிக்குழு



சுற்றுப்புறச் சூழல் குழு



சுகாதாரக் குழு

# பாடசாலைகளைப் பாதுகாப்போம்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையின் அமுதமொழி. புராதன காலத்தில் எல்லா விடயங்களும் கோயில்களை மையமாக வைத்தே இடம் பெற்றது. கல்விச்சாலைகளாகவும், கலைவளர்க்கும் நிலையங்களாகவும், அன்ன சத்திரங்களாகவும் விளங்கியவை கோயில்களே. எனவே மனித தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் நிலையங்களாகக் கோயில்கள் விளங்கின. கோயில்களை மையமாக்கிக் கொண்டே அரசாட்சி இடம் பெற்றது "தமிழகவரலாற்றின் பொற்காலம்" எனப்படும் சோழர்காலம் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆலயங்கள் ஆன்மீகத்தை வளர்க்குமிடமாக மட்டுமன்றி மக்களது தேவைகளையும் நிறைவேற்றும் இடமாகவும் விளங்கியதற்றான் ஔவையார் அவ்வாறு கூறினார். காலப்போக்கில் சனத்தொகைப் பெருக்கம், மனிததேவைகளின் அதிகரிப்பு வர்த்தகவிருத்தி, அரச ஆதரவு கிடைக்கலாம் என்ற காரணங்களால் ஆலயங்கள் முன்பு ஆற்றிய இத்தகைய சேவைகளை ஆற்றமுடியாது போயிற்று.

எனவே புராதன காலத்தில் கோயில்கள் வளர்த்த பணிகளான கல்வி, கலை, சமயம் என்பவற்றை சான்றோர்களான கல்விப்பாரிகள் கோயில்மடங்களிலும் மரநிழல்களிலும் தங்கள் வீட்டுத்திண்ணைகளிலும் வைத்து வழங்கலாயினர் .இது பாடசாலை தோற்றம் பெறுவதற்கு வித்தாக அமைந்தது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் பௌத்த பிரிவெனாக்கள், பௌத்த மதம் சார்ந்த கல்வியையும் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் சைவம் சார்ந்த கல்வியையும் வழங்கின. சமயத்துடன் இணைந்து வாழ்க்கைக் கல்வியும், தொழிற் கல்வியும் வழங்கப்பட்டன.

போர்த்துக்கேயர் வருகையைத் தொடர்ந்து அவர்களால் கோயில் மற்றும் பாடசாலைகள் அமைக்கப்பட்டு கத்தோலிக்க மதம் சார்ந்த கல்வி வழங்கப்பட்டது. இதேபோன்று ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும் கோயில் மற்றும் பாடசாலைகள் ஊடாக புரட்டஸ்தாந்து மதம் சார்ந்த கல்வி வழங்கப்பட்டது. அவ்வாறே ஆங்கிலேயரும் கிறிஸ்தவ சமயம் சார்ந்த ஆங்கிலக்கல்வியை வழங்குவதில் தீவிரமாக செயற்பட்டனர். ஆங்கிலக்கல்வி கற்றோருக்கும் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறியோருக்கும் உயர் பதவிகள் வழங்கப்பட்டன. இவற்றால் கவரப்பட்டு எமது சமூகத்தில் ஒரு பகுதியினர் மதம்மாறி ஆங்கிலக்கல்வி கற்று உயர் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர். இன்னொரு பகுதியினர் கல்வி எதுவும் பெறாது காணப்பட்டனர். இத்தகைய சூழ்நிலையில் மதம் மாறி கல்வி கற்பவர்களை தடுப்பதற்கும் கல்விகற்காது இருப்பவர்களை கற்க வைப்பதற்குமாக எமது சமூகப் பெரியோர்கள் பாடசாலைகளை நிறுவி எமது மதம், மொழி கலாசாரம் சார்ந்த கல்வியை வழங்கினர். இன்று நூற்றாண்டு விழாக்காணும் எமது பாடசாலை அந்த வழியில் நிறுவப்பட்டதே ஆகும்.

மனிதனை சமூக இசை வாக்கமடையச் செய்யும் ஓர் உன்னத இடமாக பாடசாலைகள் விளங்குகின்றன. பாடசாலை செல்லாத மனிதன் பண்பாடற்ற மனிதன் ஆகின்றான். அதாவது

மனிதப்பண்புகள் அற்றவன் ஆகின்றான் "ஒரு பாடசாலை திறக்கப்பட பல சிறைச்சாலைகள் மூடப்படும் என்பது முதுமொழி. ஆகவே மனிதனுக்கு மனிதப்பண்பைக் கொடுக்கும் கல்வி அறிவை வழங்கும் "பாடசாலை இல்லா ஊர் பாழ்" "பாடசாலை இல்லா ஊர் மிருகங்கள் வாழ்கின்ற காடு" எனவேதான் "குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல.... கல்வி அழகே அழகு" என்றும் நாலடியார் கூறுகின்றது. அத்தகைய அழகைத்தரும். கல்வியை வழங்கும் பாடசாலைகள் ஊருக்கு அழகைச் சேர்ப்பனவாம். ஊரில் பல பாடசாலைகள் இருப்பது அவ்வூருக்கு அழகே. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" அத்தகையஎழுத்தினை வழங்குவதற்கு நிலைக்களங்களாக விளங்குவது பாடசாலை. சமுதாயத்தின் சிற்பி எனப்படும் ஆசிரியர் சமூகத்திற்கு தேவைப்படும் சகல தரப்பினரையும் செதுக்கும் சிற்பக்கூடமாக பாடசாலைகள் விளங்குகின்றன. அதனால் தான் அன்று சான்றோர்கள் ஆலயங்களுக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை பாடசாலைக்கும் கொடுத்து பாடசாலைகளை நிறுவினர் அந்தவகையில் நூறுவருடம் கண்ட ஆறுமுக வித்தியாலயம் அமரர் கார்த்திகேசு என்னும் பெரியாரால் நிறுவப்பட்டதாகும்.

எனவே இத்தகைய பாடசாலைகளைப்பேணிப் பாதுகாப்பது அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மட்டுமன்றி பழைய மாணவர், பெற்றோர், ஊரவர் அனைவரதும் கடமை ஆகும்.

*பாடசாலை இல்லையாயின் பாலர் கல்வி இல்லை*
*பாலர் கல்வி இல்லையாயின் பல்கலைக்கல்வி இல்லை*
*பல்கலைக்கல்வி இல்லையாயின் பட்டங்கள் இல்லை*
*பட்டங்கள் இல்லையாயின் பதவிகள் இல்லை*
*பதவிகள் இல்லையாயின் பணிகள் இல்லை*
*பணிகள் இல்லையாயின் பண்புகள் இல்லை*
*பண்புகள் இல்லையாயின் பண்பாடு இல்லை*
*பண்பாடு இல்லையாயின் முரண்பாடு தோன்றும்*
*முரண்பாடு இல்லா சமூகத்தை உருவாக்க*
***அரண்போல் உள்ள பாடசாலைகளைப் பாதுகாப்போம்.***

**கு. பாலமுருகன்**
ஆசிரியர்,
(பழைய மாணவன்)



சைவசமய மன்றம்



மாணவர் மன்றம்



மழலைகள் மன்றம்

# வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியமைத்த வள்ளுவனின் வாய்மை மொழி சிலவற்றுடன்

வள்ளுவன் அறநெறி வகுத்த சான்றோன் எனப் பலரும் கூறுவர். ஏனெனில் அவர் இனம், மொழி, சாதி, நாடு ஆகிய எல்லைகளைக் கடந்து உலகசமத்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் அறிவிக்கும் அறிஞனாக நம்முன் தோற்றமளிக்கிறார். இன்றைய அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றம் இல்லாத ஒரு காலத்தில், ஒரு நிலவுடைமைச் சமுதாயத்தில் தோன்றிய ஒருவர் தாம் இயற்றிய நூலில் குறுகிய எண்ணங்களைத் தவிர்த்து மூடநம்பிக்கைகளையும் சமயச்சடங்குகளையும் எதிர்த்து உலக சமத்துவத்தை வலியுறுத்தியுள்ளார் எனின் அது சாதாரணமானதன்று; போற்றி வணங்கக் கூடியதாகும்.

வீரயுகப்போர்க் கொந்தளிப்பினூடாக முடிவேந்தர்களுடைய அரசு உருவாகியிருந்தது. முடிவேந்தர்கள் வர்க்க சமூகஉருவாக்கத்துடன் விவசாய வாழ்வு முறைசார் மதமான வைதீக நெறி சார்ந்த வேள்விகள் செய்தனர். நிலத்தின் பொது நீக்கி நிலமானியமுறைமை வந்தடைவதற்கான வரலாற்றைத் தொடங்கினர். இத்தனியுடைமை முறையில் பலரது உழைப்பின் உபரி ஒரு சிலரால் கையகப்படுத்தப்பட்டது. அந்தச் சிலர் சொத்துடைமை வர்க்கத்தினர் ஆகினர். இந்நிலையில் தனது காலத்து சமூகசமநிலையற்ற அம்சங்கள் மற்றும் உழைப்பும் உழைப்பவரும் இழிவாகப் பார்க்கப்படும் நேரத்தில் சமூகத்துக்கு நல்ல ஆலோசனை வழங்குவதற்காக திருக்குறள் வள்ளுவரால் படைக்கப்பட்டது.

திருக்குறள் எக்காலத்துக்கும் பொருந்தும் நூலெனப் பொதுவாகச் சொல்லப்படுவ துண்டு. திருக்குறளின் பொருளதிகாரத்தினூடாக மனுக்குலத்துக்கான பொது அறம் சார்ந்த அம்சங்கள் அதிகம் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. இதன் பிரயோகம் முடிவேந்தர் ஆட்சிக்காலத்தில் மட்டுமல்ல இன்றைய காலத்துக்கும் பொருத்தமுற அமைவது தெளிவாகிறது.

திருக்குறளின் பொருளதிகாரத்தின் ஊடாக அடையாளம் காணப்படுபவையாக பொதுவுடைமை நாட்டம், உழைப்பின் மீதான மதிப்பு, வாழ்வின் நேசிப்பு, இலக்கியச் செல்நெறி, மெய்யறிவை அடைவதற்கான வழிகாட்டும் மாண்பு என்பன வெளிப்படுகின்றன.

ஒருநாட்டின் பண்பும் அங்கு வாழும் மக்களின் இயல்பும் முகாமைத்துவம் செய்யும் அரசனின் தகுதியும் பற்றிய திருக்குறளின் வரையறைகள் மெச்சத்தக்கவையாகும். சூழ்நிலையோடு பொருந்தாதவற்றை உலகம் ஏற்றுக்கொள்ளாது. ஆகையால் உலகம் இகழ்ந்து தள்ளாத செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர். எனவே தன்னுடைய ஆட்சியின் கீழ் வாழும் அனைத்து உயிரினங்களையும் காத்து மக்களை அன்போடு அரவணைத்து நீதி வருத்தாமல் காப்பாற்றி தானும் வருத்தாமல் காப்பதுடன் நடுநிலைமை தவறாது குற்றவாளிகளைத் தண்டித்து, நாட்டின் வளம் பெருக்கி அதன் பயனை அனைவரும் நுகரும் வகையில் செங்கோல் செலுத்துபவனே சிறந்த அரசன் என்று அடையாளப் படுத்துகிறார். இந் நெறி முறையில் தவறாது ஆட்சி செய்பவர்களை வரலாறு மறப்பதில்லை. இந்நெறிமுறை தவறி ஆட்சி செய்தவர்களை வரலாறு மன்னிப்பதில்லை என்பதையும் குறிப்பிடுகிறார்.

திருக்குறளின் பொருளதிகாரத்தினூடாக மக்களாட்சி, மன்னராட்சி இரண்டிற்குமே பாதுகாப்புப் பணிமுக்கியமானது என்பது விளங்கிக்கொள்ள முடிகிறது. குடிமக்கள் வாழ்வு மற்றும் உடைமைகளைப் பாதுகாக்க ஒரு நிறுவனம் அல்லது நிர்வாகம் அவசியமானது என்பதை வலியுறுத்துகிறார். இதற்கு எடுத்துக் காட்டாக "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்து வகுத்தலும் வல்லது அரசு".

என்ற குறள் மூலம் பாடுபட்டுச் சேர்த்த பொருளை கள்வராலும் பகைவராலும் கவரப்படாமல் படை போன்ற வலிமையால் காத்தல் வேண்டும் என்ற பொருள் வலியுறுத்தப்படுகிறது. சொத்துக்கள் தனியாரிடம் குவிந்துவிடாமல் பங்கீட்டு முறையில் கவனமெடுத்து அனைவர்க்கும் நீதி கிடைக்க ஏற்றதாக பொருளாதார நடைமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசனின் கடமையென வள்ளுவர் கருதுகிறார். இது இன்றைய பாட்டாளி வர்க்கம் எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் பொதுவுடைமை செல்நெறியை விளக்கி நிற்கிறது. பகிர்ந்தளிப்பு கடமையின் ஊடாக பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் சமுதாய அமைப்பை அரசன் நிர்வகிக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறி எவராவது இரந்து வாழ இடமேற்படின் அரசன் அலைந்து கெட்டு அழிவான் என்றும் அவனது அரசமைப்பே மாறிவிடும் என்றும் வள்ளுவர் எச்சரிப்பதாக சில உரையாசிரியர்கள் விளக்கி நிற்கிறார்கள். ஒரு சீர்மையாய் அனைவர்க்கும் நன்மை பயக்கும் பொருளாதார நெறியை வள்ளுவர் வேண்டி நிற்பது தெளிவாகத் தெரிகிறது.

வள்ளுவர் நோக்கில் கல்வியை எடுத்துக்கொண்டால். கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, பெரியாரைத் துணைக்கோடல், மடியின்மை புல்லறிக்கும் வாண்மை போன்ற பல அதிகாரங்களில் அவரின் மணியான கருத்துக்கள் இக்கால கல்வி முறைக்கும் மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் எழுதப்பட்டவைபோல் தோன்றுகின்றன.

கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் சிந்தனைத் திறனைத் தூண்டிப் பொறுமையோடும் பொறுப்புணர்வோடும் துணை நின்று மாணவர்கள் சிறந்த சிந்தனையாளர்களாக அறிஞர்களாக உருவாக்க வழிவகை காணவேண்டும். ஆசிரியர்கள் ஆய்ந்து அறிவு பெற்று, ஆய்ந்து அறியும் அறிவு சார்ந்த மாணவர்களை உருவாக்குவதில் வல்லவர்களாக இருத்தல் வேண்டும் என்பது திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கை, இதை "இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையார் கற்றது உணர விரித்து உரையாதார்" என்ற குறளில் வழி உணர்த்துகிறார் "கல்லாத மேற்கொண்டு ஒரு கல் கசடற வல்லதூம் ஐயம் தரும்" என்ற குறளில் படிக்காததை படித்ததாக ஒருவர் நடிப்பது அவர் தெளிவாக அறிந்தவற்றைக் கூட பிறர் ஐயப்படுமாறு செய்து விடும். இதுவும் ஒரு ஊழல்த் தன்மை வாய்ந்த செயலாகும் என்ற உண்மைத்தன்மையை இக் குறள் மூலம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

திருக்குறள் கூறும் நீதித்துறையை அடுத்து நோக்கினால் பகைவர், நண்பர், அயலோர் சுற்றத்தினர், உறவினர், சமூகத்தினர் சமுதாயத்தினர், சாதியினர், மொழியினர், மதத்தினர், நாட்டினர், இனத்தினர் என பகுத்துப் பார்த்து ஒரு தலைப் பக்கமாக நீதி வழங்காமல் சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் நடுநிலை நின்று நீதி வழங்க வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.

சிறப்புச் செய்தலையும் வள்ளுவர் பொருளதிகாரத்தின் ஊடாக சொல்லத் தவறவில்லை. சிறப்பு விருதுகள் அவரவர் திறமைக்கு ஏற்ப வழங்க வேண்டும் என்றும் விருது வழங்குவதிலும்

மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும் என்பதும் திருவள்ளுவரின் எதிர்ப்பார்க்கையாகும். இதனை "இறப்பே புரிந்த தொழிற்று ஆம் சிறப்புதான் சீரல் லவர்கள் படின்" என்ற குறள் மூலமும் வெளிப்படுத்துகிறார். அத்துடன் ஒற்றர்களுக்கு பிறர் அறியும் படி சிறப்புச் செய்தல் கூடாது அப்படிச் செய்தால் மறைக்க வேண்டியதை ஆட்சியாளனே வெளிப்படுத்தியதாக ஆகிவிடும் எ.னவே சிறப்புக்கள் செய்வதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை "சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின் புறப்படுத்தான் ஆகும் மறை" என்ற குறளின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

பிறப்பால் உயர்வு தாழ்வைக் கற்பிக்கும் வைதீக நெறியை வள்ளுவர் சிறிதும் ஏற்றவரல்லர். மனித சமுதாயத்தில் கற்றார், கல்லார், ஒழுக்கமுடையார், ஒழுக்கமிலார், பண்புடையார், பண்பிலார் எனும் நிலையில் மட்டும் வள்ளுவர் உயர்வு தாழ்வு கருதினாரேயன்றிப் பிறப்பால் அன்று. என்பதை"மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்பிறந்தும் கற்றார் அனைத்திலர் பாடு", "மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்" என்ற குறள்கள் மூலம் வெளிப்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது.

வள்ளுவர் தாம் மட்டுமேயன்றி உலகில் உள்ள அனைவருமே உலகர்களாக விளங்க வேண்டும் என்பதே அவர் விருப்பமாகும். சாதி, சமயம், ஊர், நாடு கடந்து வாழ்க்கையில் சீரிய நெறிமுறைகளைக் கைக் கொண்டு ஒவ்வொருவரும் உலகின் சிறந்த மனிதர்களாக விளங்க வேண்டும் என்பதையே வள்ளுவரின் சிந்தனையில் தோன்றிய திருக்குறளின் வெளிப்பாடு உணர்த்தி நிற்கிறது.

*சான்று நூல்கள்*


1. இலக்கியச் சிந்தனை : புலவர் பா. வீரமணி

2. வள்ளுவர் காட்டும் பொருளாதாரம் : கலாநிதி திரு. பா. நடராசன்

3. நடைமுறை வாழ்க்கையும் திருக்குறளும் : செ. சாந்தி ஆய்வுக்கதிர்

4. திருக்குறளின் கல்விச் சிந்தனை : கலாநிதி நா. இரவீந்திரன்

5. தமிழ் இலக்கிய வரலாறு : பேராசிரியர் வி. செல்வநாயகம்



**சு. யாதவன்**
பழைய மாணவன்,
கலால் வரி உத்தியோகத்தர்.

# சங்ககாலத்தில் இசை மரபு

கவின் கலைகளில் இசைக்கலை புனிதமானது. மனித நாகரிகம் வளர்ச்சியடைய முன்னரே இசைக்கலை ஒரு தனிப்பாஷையாக விளங்கியது. மொழிமூலம் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத காலத்திலேயே மனிதன் தன் உணர்ச்சிகளை ஓசைமூலம் வெளிப்படுத்தினான்.

இவ் ஓசைகளே இசைதோன்றக் காரணமாய் இருந்தன. மகிழ்ச்சியை ஆரவாரித்தும் பயத்தை இரைந்தும் துன்பத்தை ஓலமிட்டும் மனிதன் தன் உணர்வுகளை வெளிப்படுத்தினான். இவ்வாறு இனிமையற்ற ஓசை தவிர்ந்த ஏனையவை நாதம் என அழைக்கப்பட்டன. இந்த நாதமே இசைக்கு அடிப்படையாக அமைந்தது. இந்த வகையில் சங்ககால இசைமரபு பற்றி நோக்குவோம்.

சங்ககாலத்தில் ஐவகை நிலங்களும் அவற்றுக்குரிய பண்களும் இருந்தன. அவையாவன குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தற்பண், பாலைப்பண் என்பன வையாம். விபுலானந்தர் தனது நூலில் பன்னிரண்டு ஸ்வரதான அமைப்பை உடையது. ஆயப்பாலை எனவும் நாற்பத்தெட்டு ஸ்வரதான அமைப்பை உடையது சதுரப்பாலை எனவும் தொண்ணூற்றறு கால ஸ்வரநரம்புகளை உடையது திருகோணப்பாலை எனவும் குறிப்பிடுகின்றார். இவை பின்பு ரி.க.த.நி. தமிழிசையில் துத்தம், கைக்கிளை, விளரி, தாரம் என்னும் ஸ்வரஸ்தானங்களுடன் இணைந்து பதினாறு பண்களாயின. இவை ஒவ்வொன்றும் அகம், புறம், அருகு, பெருகு, என்று நான்கு பேதமடைந்துஅறுபத்து நான்கு பண்களாயின என்றார்.

மேலும் குறிஞ்சி நிலத்துக்குரிய தோற்கருவியாக பிறையும் மருதநிலத்துக்குரிய தோற்கருவியாக முடிவும் முல்லைநிலத்துக்குரிய தோற்கருவியாக ஏறுகோட்பறையும், புல்லாங்குழலும், நெய்தல் நிலத்துக்குரிய கருவியாக விளரியாழும், நாவாய்ப்பம்பை முதலியவையும் தோற்கருவியாக துடியும் இசைக்கப்படுகின்றது. பட்டினப்பாலை என்னும் சங்கநூல் காவிரிப் பூம்பட்டின பண்டகசாலையில் யாழ்கள் இருந்தன என்று கூறுகின்றது.

பரிபாடல் என்பது பண்ணுடன் கூடிய எழுபது இசைப்பாடல்களைக் கொண்ட ஒரு தொகுதியாகும். பரிபாடல் முழுவதும் இசைப்பாடல் ஆகும். இதனைப் பாடிய புலவர்கள் பதின்மூன்று பேர். இவற்றுக்கு இசை வகுத்தோர் பதின்மர், இப்பாடலில் குறிப்பிட்டுள்ள பதினொரு பாடல், பண், பாலை, யாழ் என்னும் இவற்றுள் ஐந்து பாடல் பண் நேர்திறம் என்றும் குறிப்பிட்டுள்ளது. யாழ், குழவு, முழவு, பாட்டு என எல்லாவற்றையும் உள்ளடக்கிய பெரிய தொகுதியாக பரிபாடல் விளங்குகிறது. பரிபாடலில் பண் வழக்கு தற்போது மறைந்து விட்டது.

எட்டுத் தொகையைச் சேர்ந்த புறநானூற்றில் பண்கள் பற்றியும் வேய்ங்குழல், ஆம்பற்குழல், சீறியாழ், பேரியாழ், தண்ணுமை, பெருவாத்தியம், முழவு முதலிய இசைக்கருவிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. காலையில் மருதப்பண்ணும், மாலையில் செவ்வழிப்பண்ணும் இசைக்கப்படும் மரபு இருந்திருக்கின்றது. தவிர புறநானூற்றில் நடுகல்

வழிபாடு இருந்திருக்கின்றது. போரிடும் வீரனுடைய சிறப்புக்கள் புகழ், வீரம் என்பவை பற்றி பாடற்பொருளாக விளங்குகின்றது இத்தகைய பாடல்களை ஒத்தவையே ஆற்றுப்படை நூல்கள் ஆகும் ஆற்றுப்படுத்தல் என்பது வழிப்படுத்தல் ஆகும். பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை ஆகிய நூல்களில் மன்னர் கலைஞர்களை எவ்வாறு ஆதரித்தனர் என்பது பற்றிக்கூறப்பட்டுள்ளது. வெறியாட்டு எனப்படும் ஆடலுடன் கூடிய பாடல் முருகன் பெயரில் பாடப்பட்ட இசை வடிவமாகக் காணப்படுகிறது.

இசைத்தமிழின் அடிப்படை இலக்கணம் பற்றிய குறிப்புக்கள் இடைச்சங்க நூல் ஆகிய தொல்காப்பியத்திலும் கடைச் சங்க நூலாகிய எட்டுத்தொகை பத்துப்பாட்டு கீழ்க்கணக்கு நூல்களிலும் காணப்படுகின்றது. மேலும் தொல்காப்பியத்தில் பண்ணத்திபரிபாடல் முதலிய இசைப்பகுதிகள் காணப்படுகின்றன. கலிப்பாவினுள் தாழிசைப்பகுதி இசைப்பாட்டாக உள்ளது.

பத்துப்பாட்டு பாடல் தொகுதி நூல்களில் பாணர், விறலியர், கூத்தர், பொருநர் என்ற நூல்வகையினர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவர்கள் யாவரும் இசைக்கலையிலும் இசைக்கருவிகளை கையாள்வதிலும் தேர்ச்சி பெற்றவர்கள். பொருநர் ஆற்றுப்படையில் கூறப்பட்டுள்ள வில்யாழே யாழின் தோற்றமாக இருந்திருக்கிறது. யாழில் தோற்றத்தின் ஆரம்பநிலை வில்யாழில் இருந்தே தோற்றம் பெற்றது.

பேரியாழ் 21 நரம்புகளையும், மகரயாழ் - 19 நரம்புகளையும், சகோடயாழ் - 13 நரம்புகளையும், செங்கோட்டு யாழ் 7 நரம்புகளையும், உடையது. யாழை முதலில் கரிகாம் போதியில் (அதாவது செம்பாலை என்று கூறுவர்) இசைத்து பின்பு கிரகபேதத்தினால் மத்திமத்தை ஸட்ஜமாகக் கொண்டு சங்கராபரணமும் இசைக்கப்பட்டது. இவ்வாறாக சங்ககாலத்தில் பல்வேறு நூல்களிலும் இசைபற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இந்த இசையே பிற்காலத்தில் இசை வளர்ச்சி தமிழிசை வளர்ச்சி இரண்டிற்கும் முன்னோடியாக இருந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

சங்க காலத்தில் காணப்பட்ட பண்களும் அவை சுட்டும் நூல்களும்.

| **பண்கள்** | **நூல்கள்** |
|---|---|
| ஆம்பல் பண் | நற்றிணை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு |
| காஞ்சிப் பண் | மலைபடுகடாம், சிறுபாணாற்றுப்படை |
| சாமரப்பண் | சிறு பாணாற்றுப்படை |
| குறிஞ்சிப் பண் | மலைபடுகடாம், நற்றிணை, திருமுருகாற்றுப்படை |
| செவ்வழிப் பண் | அகநானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி |
| நைவப் பண் | குறிஞ்சிப்பாட்டு, சிறுபாணாற்றுபடை |
| பஞ்சுரப்பண் | ஐங்குறுநூறு |
| படுமலைப்பண் | நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு |
| பாலைப்பண் | பரிபாடல், பதிற்றுப்பத்து, பெரும்பாணாற்றுபடை, பொருநராற்றுப்படை |
| மருதப்பண் | மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் |

**செல்வி யாழினி கனகேஸ்வரன்,**
*B. F. A (Music)*
பழைய மாணவி (2001)

## முதலாம் நிலைக்கல்வியின் இன்றியமையாமை

ஒரு மாணவனுடைய கல்வி சார்ந்த வாழ்வியலில் முதலாம் நிலைக்கல்வியானது வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஒன்றாக காணப்படுகின்றது. தரம் 1 முதல் 11 வரையான அதாவது சுமார் 16 வயது வரையான மாணவப்பருவமே முதலாம் நிலைக்கல்விக்கு உரியது எனலாம். ஒரு மாணவனினது எதிர் காலத்தை நிர்ணயிக்கும் கல்விக் காலமாகவும் இது காணப்படுகிறது. ஏனெனில் மாணவர்கள் தம் கல்வியை முடித்துக் கொள்ளும் பருவமாகவும் இதுவே காணப்படுகின்றது. கல்வித் தகைமை சார்ந்த தொழில் துறையோடு இணைக்க நினைப்பவர்கள் இப்பருவத்தில் சிறப்பாக மிளிர்வது அவசியமாகும்.

ஒரு மனிதனிடம் இயல்பாக காணப்படும் அறிவு, திறன் மனப்பான்மை என்பவற்றில் விருத்தியை ஏற்படுத்தவல்ல கல்வியானது அம் மனிதனுடைய எதிர்கால வளமான வாழ்விற்கான நிகழ்காலச் செயற்பாடாகவும் காணப்படுகிறது. எனினும் நிகழ்காலத்தில் இடம்பெறும் கற்றல் செயற்பாடானது கற்றலை மேற்கொள்பவருக்கும் கல்வியை ஊட்டுபவருக்கும் ஒரு சவாலான செயலாகவே காணப்படுகின்றது.

முதலாம் நிலைக்கல்வியை ஒருவர் சிறப்பான முறையில் பெற்றுக்கொள்வதற்கு அந்த நபர் மட்டுமன்றி பெற்றோர், பாடசாலை, சமூகம், போன்ற பல தரப்பட்ட வளவாளர்களின் சாதகமான கூட்டிணைவானது வேண்டப்படுகின்றது. “என்னுடைய வாழ்க்கையை தீர்மானிப்பவர் நானே” என்கின்ற சுய அறிக்கையுடன் கற்றலில் ஈடுபடும் மாணவரும் “எமது பிள்ளைகளுக்கு வளமான கௌரவமான வாழ்வினை ஏற்படுத்திக் கொடுப்போம்” என்ற உணர்வுடன் பெற்றோரும், “ஒவ்வொரு பிள்ளைகளினதும் வாழ்வை நன்முறையில் மாற்றியமைக்கின்றோம்” என்கின்ற உணர்வுடன் பாடசாலையும் குறிப்பாக ஆசிரியர்களும் “எனது அங்கத்தவர்கள் ஒவ்வொருடைய வளர்ச்சிக்கு நானும் பொறுப்பு” என்ற கடமையுடன் சமூகமும் செயற்படுமாயின் கல்வித் தகைமை சார் அடிப்படையில் வாழ்வைக்கட்டி எழுப்புவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்பது திண்ணமாகும்.

பாடசாலையில் கல்வியை ஒருவர் பெறும் காலகட்டங்களில் பலதரப்பட்ட கற்றல் தடைகளை தாண்ட வேண்டியவராகின்றனர். வாழ்க்கை சம்பவங்கள், பிரச்சனைகள் என்பவற்றுடன் உடல், உள விருத்தியில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற பன்முக சவால்களை வெற்றி கொள்ள வேண்டியது அவசியமாகின்றது ஆரம்ப காலத்தில் மாணவர்கள் தம் பாடசாலைக் கல்வியை நிறைவானமுறையில் பூர்த்தி செய்ய முடியாமைக்குரிய முக்கியமான காரணியாக விளங்கியது வறுமையாகும். எனினும் தற்காலத்தில் நேர்மாறாக மக்களின் வாழ்கைத்தரமேம்பாட்டுடன் கூடிய அதிகளவான வசதிவாய்ப்புக்கள் மாணவர்களுக்கு கிடைக்கின்றமை கற்றலுக்குத்தடையாக விளங்குகின்றதெனக் கூறப்படுகின்றது.

தற்போது இளம் பருவத்திலேயே மாணவர்கள் சமூகமயமாக்கலுக்கு மட்டுமன்றி உலகமயமாக்கலுக்கும் உட்படுவதன் விளைவினால் மாணவர்கள் பாடசாலைக்கல்வியின் மீது கொள்ளும் ஒரு முகப்பாடானது குறைவடைகின்றது. கல்வித்தகைமைசார் தொழில் வாய்ப்புகளுக்கு தற்காலத்தில் ஏற்பட்டுள்ள போட்டிகள் காரணமாக குறைந்த பட்சம் ஒருவர்

பட்டப்படிப்பையாவது பூர்த்திசெய்திருக்க வேண்டும் என்கின்ற காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இத்தகைய சூழ்நிலையில் நாம் பாடசாலைக் கல்வியில் முழுமைத்தன்மை அடைய வேண்டியது கட்டாயமாகின்றது.

கற்றலுக்கான வசதிவாய்ப்புக்கள் அதிகரித்தமையினாலும் ஆரம்பக்கல்வியானது எல்லோரையும் சென்றடைவதாலும் கற்பவர்களுக்கிடையிலான போட்டித்தன்மை அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் உயர்தரக்கல்வியை வழங்குவதற்காக மாணவர்களை தெரிவு செய்யும் போது திறமையானவர்கள் அதிகளவில் காணப்படுவதால் மாணவர்களை மட்டுப்படுத்துகின்ற அளவும் அதிகரிக்கின்றது. இவ்வாறாக உயர் கல்விக்காக போட்டித்தன்மை அதிகரித்திருக்கின்ற இக்கால கட்டத்தில் மாணவர்களின் கற்றல் திறன் வெளிப்பாடானது உச்ச அளவினில் இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

நவீன காலத்தில் கல்விப்புலத்தின் எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. உயர்கல்வி தொழிற்கல்வி போன்றவற்றுடன் கணனிக்கல்வி போன்றன தாய் நாட்டில் மட்டுமன்றி அந்நியநாட்டிலும் பெரும் வரவேற்பை பெற்றிருக்கின்றன. அதனால் கிடைக்கும் தொழில் வாய்ப்புகளும் அதிகமாகும். இத்தகைய கல்வியை பெறுவதாயினும் கூட அதற்குரிய தகுதியான பாடசாலைக்கல்வியின் முழுமையை சாதாரண தரப்பரீட்சையிலாவது சித்தியடைந்திருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. அந்தவகையிலும் முதலாம் நிலைக் கல்வியின் அவசியம் இன்றியமையாததாகின்றது.

ஒரு மாணவனை முதல் முதலில் பாடசாலைக்குச் சேர்க்கச் செல்லும் போது தனது பிள்ளை எதிர் காலத்தில் ஒரு வைத்தியனாக, ஓர் பொறியியலாளராக, ஒரு ஆசிரியராக வருவான் எனும் எண்ணத்துடனே பெற்றோர் சேர்க்கின்றனர். அது மட்டுமன்றி பாடசாலையின் ஆரம்ப வகுப்புகளில் ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் பார்த்து நீ என்னவாக வரப்போகின்றாய் எனக்கேட்க அதற்கு மாணவர்கள் வைத்தியர், பொறியியலாளர், ஆசிரியர் என பலதரப்பட்ட பதில்களைச் சொல்வார்கள். ஆனால் மாணவர் பெற்றோர்களினதும் இத்தகைய சிந்தனைகள் காலப்போக்கில் மறக்கப்பட்டு விடுகின்றன. இத்தகைய தன்மையானது அவர்களது கல்விசார் எதிர்காலத்தின் மீது கொண்ட நம்பிக்கை அற்ற தன்மையைக் காட்டுகின்றது. மாறாக மாணவர்கள் மற்றும் பெற்றோரதும் ஆரம்பகால எதிர்பார்ப்பு உணர்வானது என்றென்றும் காணப்படுமாயின் அது சிறந்த வாழ்விற்கு வழிகாட்டும் என்பது திண்ணமாகும்.

இவ்வகையில் ஒருவர் தம் வாழ்க்கையை கல்வி தகைமை சார் தொழிற்துறையோடு இணைக்க ஆர்வம் உடையவதாயிருப்பின் அவர் தன்னுடைய கற்றல் பருவங்களில் உள்ள முதலாம் நிலைக் கல்வியிலும் சிறப்பான வெற்றியைக் காணவேண்டும் என்பது வெளிப்படையாகும்.

***சி. சிவரூபன்*** (பழைய மாணவன்)
இறுதி வருடம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
Sivarupan 1986 @ yahoo. com

# கண்ணகி கோயில் அரசமரம்

*"செவியுணவிற் கேள்வியுடையார் அவியுணவின் ஆன்றாரோ டொப்பர் நிலத்து"*

என்பது பொய்யாமொழி. இந்தத் திருக்குறள் உங்களுக்கு விளங்குகின்றது தானே. என்ன... உன்னையே விளங்கேல்லை. திருக்குறள் எப்படி விளங்கும் என்றோ? சொல்கிறீர்கள். அதுவும் சரிதான் .எப்பவும் தன்னைப்பற்றி அறிமுகம் செய்து தானே மற்றவையோடை தொடர்பு கொள்ளவேணும்.

சரி நான் என்னைப்பற்றிச் சொல்லுகின்றேன். ஆறுமுகவித்தியாலயம் நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிறதையிட்டு பூரண மகிழ்ச்சியடைகிறவன் நான். ஏனென்றால் என்ரை கண்ணுக்கு முன்னாலை பிறந்து, தவழ்ந்து, ஓடி ஆடி விளையாடிக் குதூகலித்து வளர்ந்த பிள்ளைக்கு நூறு வயது எண்டால் எனக்கும் மிடுக்குத் தானே. எனக்கும் நூற்றாண்டு கண்டவன் என்ற பெருமை தானே. என்ரை பிள்ளைக்கு நூறு வயதெண்டால் எனக்கு இப்ப எத்தனை வயதிருக்கும்?

உண்மையிலை நான் புண்ணியஞ் செய்தவன். ஏனென்றால் என்ரை நண்பர்கள் உற்றார் உறவினர் எல்லாம் புண்ணிய காரியங்கள் தான் செய்யினம். அவைக்கு மத்தியிலை நான் ஓங்கி வளர்ந்து சலசல என்று எப்பவும் சந்தோசமாய் இருக்கிறன் என்றால் அதுக்குக் காரணம் நானே? சீச்சீ... நான் இருக்கிற சூழல் தான்.

உள்ளதை உள்ளபடி சொல்லவேணும். நான் இவ்வளவு நீண்ட காலம் வாழுறன் எண்டத்துக்கு முதற் காரணம் என்னோடை நெருக்கமாய் இருக்கிற கேணிதான். மாரியிலை பெய்யிற மழை எல்லாத்தையும் தனக்குள்ள சேமிச்சு வைச்சு உந்த வரண்ட கோடையெல்லாம் எனக்கு ஒரு குறையுமில்லாமல் தண்ணிதாற கேணியை நான் முதலில் வணங்க வேணும் என்ன... என்ன.. என்ன தம்பி?

கோடையிலை வறண்டு கிடக்கிற கேணி உனக்கு எப்படித் தண்ணி தாற தெண்டோ கேக்கிறீர்?

உம்முடைய கேள்வியும் சரி தான். அது தம்பி இந்தக்கேணி மாரியில் பெய்யிற மழை நீரைச் சேமித்து வைக்கிறதை தான் இந்தச் சுற்றுச் சூழலைக்கோடை காலத்திலும் நிலத்தடி நீரை உயர்மட்டத்தில் பேணக்கூடியதாய் இருக்கிது. இதனால் தான் உங்கடகிணற்று நீர் வற்றாமல் நீங்கள் வாளி போட்டு அள்ளக் கூடியதாய் இருக்கிது. இந்தக் கேணி, பறளாய்ப் பெரிய குளம், பிள்ளையார் கோயில்க் கேணி, முருகன் கோயில்ச் சிறிய குளம் அங்காலை தும்பளப்பாய்க் குளம், சந்நியாசி கேணி, சிவன் கோயிலடிக் குளம் இவை மட்டும் தான் இப்ப எஞ்சியிருக்கினம். சும்மா சும்மா சீமெந்தைக் குழைச்சு கட்டிடம் கட்டிடமாய்க் கட்டிறவை புதுசாய் ஒரு கேணி வெட்ட நினைக்கிறேல்லை ஏன்? இருக்கிற கேணி குளங்களையாவது சீராய்க் கட்டிப் பராமரிச்சால் உங்கடை சந்ததி தண்ணிக்குடத்தோடை அலைஞ்சு திரிய வேண்டிய அவசிய மேற்படாது.

அந்தக் காலத்திலை கோயில்களோடை சேர்த்துக் கேணி அமைச்சது, இறங்கிக் கால் கழுவிப் போட்டுக் கோயிலுக்கை போகத்தானே? இப்பதானே கையைத் திருப்ப ரப்பிலை தண்ணி வருகிது பிறகேன் கேணி எண்டு நீ கேட்கப்படாது. தம்பி நீங்கள் திரும்பத்திரும்ப மோட்டரைக் கண்டபடிபோட்டுக் கிணற்றில் உள்ள தண்ணியை எல்லாம் வெளியேற்றைக்கை அதிலை பெரும்பகுதி வீணாய் ஆவியாகிப் போறதாலைதான் உங்கடை கிணற்று நீரெல்லாம் உவர்நீராய் மாறிக்கொண்டிருக்கிறதை நீர் மறக்கப்படாது.

அதோடை எனக்கு ஒரு நீண்ட நாள் ஆசை. இந்தக் கேணியை அடியிலை இருந்து வடிவாய்க்கட்டி மூன்று பக்கமும் சுவர்கட்டி வாசல்லை நல்ல வடிவான ஒரு கேற்றுப் போட வேணும் ஏனென்டால் வீதியோரத்திலை அதுவும் பள்ளிக்கூடத்துக்கு நடுவிலை இருக்கிறது பாதுகாப்பாய் இருக்க வேணும் இன்னும் நீண்ட காலத்துக்கு வீண்பழிச்சொல் எதுவும் கேட்காமல் இருந்தால்த்தானே எங்கடை குடும்பமும் சந்தோசமாய் வாழும்.

இந்தக் கேணி வயிற்றுக்குணவு தருவதாலை தான் முதல்லை அதைப்பற்றிச் சொன்னனான் அதை என்னாலை எப்படி மறக்க ஏலும்.

நான் ஆரம்பத்திலை ஒரு திருக்குறள் சொன்னனான் .இப்பவும் ஒரு குறள் சொல்லுறன் "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் - அச்செல்வம் செல்வத்து ளெல்லாந் தலை" இந்தக் குறள் உங்களுக்கு விளங்கும் எண்டு நினைக்கிறன். உண்மையிலை இதிலை கூறப்பட்ட "செவிச் செல்வம்" எனக்கு ஒரு குறையுமில்லாமல் கிடைக்கிது எண்டால் அதுக்குக் காரணம் யார்? இந்தப் பள்ளிக்கூடம் தான் இண்டைக்கு நான் கூனிக்குறுகாமல் தலைநிமிர்ந்து நிக்கிறதுக்குக் காரணம் நான் என்ன பள்ளிக்கூடம் போய்ப் படிச்சதாலை எண்டோ நினைக்கிறியள். இல்லை உந்தப் பள்ளிக்கூடத்திலை இருந்து வாற சத்தத்தை தான் பகுத்துப் பிரிச்சு அசைபோடுவன். மிருகசாதிஇரைமீட்கிற மாதிரி மீட்டு அலசி ஆராய்வன் சந்தேகம் ஏதுமென்றால் சிவன்கோயில் மருதமரம் முருகன் கோயில் அரச மரம் அம்மன் கோயில் ஆலமரம் இவை யோடை தர்க்கித்து ஒரு முடிவுக்கு வருவன்.

இப்ப கிட்டடியிலை தான் என்னைச் சுற்றி இந்த உயரமான கட்டிட்தைக் கட்டினவை அதுக்கு முதல் உந்த வயிரவரும் என்ரை நிழலை நம்பித்தான் இருந்தவர்.

அப்ப என்னோடை சேந்தாப்போலை ஒரு வெள்ளைப் பளிங்குக் கல்லு இருந்தது அதிலை ஆசிரியர் இருக்க மாணவர்கள் சுற்றி இருப்பார்கள். ஆசிரியர் படிப்பிக்கிறதை மாணவரோடை சேர்ந்து நானும் கிரகிப்பன். சங்கீத பாடம் என்றால் எனக்கு வலு விருப்பம். ஆசிரியரும் மாணவர்களும் கையாலைதாளம் போட்டுப் பாட்டுப்பாட நானும் என்ரை இலைகளை அசைத்து அவையோடை ஒத்திசைப்பன் .பள்ளிக்கூடம் விட்டு பிள்ளையள் வீடு போன பிறகு என்ரை மற்ற நண்பர்களுக்கு அந்தப்பாட்டுக்களைப் பாடிக்காட்டுவன். அவையும் பதிலுக்கு தங்களுக்குத் தெரிஞ்ச தேவாரங்களையும் புராணங்களையும் பாடிக் காட்டுவினம். சிவன் கோயில் மருதமரமும் பல்வேறு விசயங்களையும் கூறுவார். அங்கையும் ஒரு அறநெறிப் பாடசாலைஇயங்குகிறதாலை தான் கனவிசயங்களை என்னோடை பகிர்ந்து கொள்ளும்.

மற்றவைக்கு கந்தரனுபூதியும் அபிராமி அந்தாதியும் பிள்ளையார் கதையும் தான் திருப்பித் திருப்பிச் சொல்லுவினம். வல்லிபுரக்கோயில் வேப்பமரம் கொம்பியூட்டரைப் பற்றி எல்லாம் சொல்லேக்கை இவை இப்பிடி இருக்கிறது எனக்கும் அவமானமாய்த் தான் இருக்கும். நான் சொல்லுறது என்னவெண்டால், கோயிகளிலை ஆன்மீகப்பணியோடை சமூகப்பணியும் செய்ய வேணும். வெளிநாடுகளிலை இருக்கிற எங்கடை சனம் கோயிலுக்கு கெண்டாத் தான் கோடி கோடியாய் குடுப்பினம். ஒரு கொம்பியூட்டார் வகுப்போ, தமிழ் வகுப்போ ஆங்கில வகுப்போ நடத்தப்போறம் எண்டால் பஞ்சிப்படுவினம். அப்படி வாற காசிலை இப்பிடியும் கொஞ்சம் சிலவழிக்கலாம் தானே. இந்தப் பள்ளிக் கூடம் ஆரம்பிச்ச புதிசிலை ஆம்பிளைப் பிள்ளையள் எல்லாம் வெள்ளை வேட்டி சால்வையோடை வந்திச்சினம். பிறகு அரைக்காற்சட்டை சேட்டு இப்ப பெரிய பிள்ளையள் நீளக்காற்சடையும் சேட்டும் புதுசு புதுசாய் சீருடைகள் மாறுகிறதும் எனக்கு ஆரம்பத்திலை புதுமையாய்த்தான் இருந்தது. காலத்துக்கேற்ப மாறுதல் வேணும் தானே எங்கடை சமய நிறுவனங்களும் காலத்துக்கேற்ப மாறவேணும் எண்டத்துக்காய்த் தான் இதைச் சொன்னனான். சில கோயிலுகள்ளை பெரிய சத்தமாய் ஒலி பெருக்கியைப் போட்டு சுற்றுச் சூழலை மாசுபடுத்துகிறது எந்தவழியிலும் நியாயப்படுத்த முடியாது. இதனால் நோயாளர் அவதிப்படுகிறதோடை பிள்ளையளும் வீட்டிலை படிக்க முடியாமல் இருக்கு. அண்டைக் கொரு ஆலமரம் என்னோடை இந்த விசயமாய்க் கவலைப்பட்டது. என்னெண்டால் தன்ரை கிளையிலை ஒலிபெருக்கியைக் கட்டி இப்பிடிச் சனத்தை வருத்துகிறதை நினைக்க தனக்கு மண்டை வெடிக்குமாப்போல இருக்குதாம். என்ன செய்யிறது எங்களுக்குக் கையில்லை எண்டதாலை தானே இப்பிடி எல்லாம் நடக்கிது. எனக்குக் கடவுளே எண்டு இந்த நிலை வரேல்லை அந்த வகையிலும் நான் புண்ணியஞ் செய்தவன் தான். அதுக்காய் நான் கண்ணகையம்மன் கோயில்க்காரருக்குத் தான் நன்றி சொல்ல வேணும். இருந்தாலும் இந்தப்பள்ளிக்கூடத்திலை படிக்கிற பிள்ளையள்ளை கன பிள்ளையள் எனக்குக் கீழே நின்று “இரவு வீட்டிலை படிக்க முடியேல்லை ....” எண்டு கதைப்பினம் அதாலைதான் இதை நான் உங்களுக்குச் சொன்னனான்.

நானும் கனநேரமாய் ஏதோ ஏதோ எல்லாம் கதைச்சுப்போட்டன் இந்தப் பள்ளிக்கூடப்பிள்ளையளுக்காய்த்தான் கதைக்க வேணும் போலை இருந்தது. என்ரை விருப்பம் பௌதீகவளங்கள் பூர்த்தி செய்யப்படவேணும் விஞ்ஞான ஆய்வு கூடம் நூலகம் கணனி அலகு விளையாட்டு மைதானச் சீரமைப்பு, நவீன வகுப்பறைகளைக் கொண்ட மாடிக்கட்டிடங்கள் என்று எல்லா வசதி வாய்ப்புப் பெருகேக்கை, இந்தப்பகுதிப்பிள்ளையள் தூரத்துப் பள்ளிக்கூடங்களுக்கு அலையவேண்டிய தேவை வராது.

நான் இன்னமும் பல நூறு ஆண்டுகள் கண்ணமையம்மன் கோயில் வாசல்லை மிடுக்கோடை நிக்க வேணும் எண்டு நீங்களும் என்னை வாழ்த்துங்கோ என்று சொல்லி முடிக்கிறன்.

வணக்கம்.

**சு. திருகேஸ்வரன்**
பழைய மாணவன்,
அதிபர்.



பரிசளிப்பு விழாவின் போது



பரிசளிப்பு விழா நிகழ்வில்



பிரிவுபசார விழா



விளையாட்டுப் போட்டியில்



ஆசிரியர் தின விழாவில்

# பேரறிஞர்கள்

## தோமஸ் அல்வா எடிசன் (1847 – 1931)

1) அமெரிக்க நாட்டவரான தோமஸ் அல்வா எடிசன் பல கண்டபிடிப்புகளுக்கு உரிமையாளர். எடிசன் கண்டு பிடிப்பாகிய வெப்ப ஒளிர்வு இழைமின் விளக்கு வரலாற்றில் பாரிய திருப்புமுனையாக அமைந்தது. மின்குமிழைக் கண்டு பிடிப்பதற்காக அவர் அயராது உழைத்தார்.அவர்ஆயிரத்திற்கு மேற்பட்ட கண்டுபிடிப்புக்களை உலகத்திற்குத் தந்துள்ளார். இவரது பாடசாலை வாழ்க்கை 3 மாதகாலமே நீடித்தது. அவர் மிகைத் தொழிற்பாடுகளால் குழந்தை என முத்திரை சூட்டப்பட்டது. அவருடைய துருவி ஆராயும் இயல்வு இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். இவர் அவரது தாயாரிடம் இருந்தே வீட்டில் பாடம் கற்றுக் கொண்டார்.

**தோமஸ் அல்வா எடிசனின் கண்டுபிடிப்புக்கள் சில**

☞ வாக்குப் பதிவுக் கருவிகள் ☞ ஆராய்ச்சி ஆய்வு கூடமொன்றை அமைத்தமை

☞ கிராமோபோன் ☞ அசையும் காட்சிகளைக் காட்டும் கமரா

☞ 40 மணித்தியாலயத்திற்கு மேல்ஒளிரத்தக்க வெப்பவொளிர்வு மின்குமிழ்

☞ எடிசன் பற்றறி ☞ பேசும் சலனப்படம்

## சாள்ஸ் பபேஜ் (1791 – 1871)

கணிதத்தின் தந்தை சாள்ஸ்பபேஜ் ஆவார். இவர் ஐக்கிய இராச்சியத்தில் பிறந்த ஒரு கணித மேதை ஆவார். உலகில் கணனித்துறைக்கு வித்திட்டவர் இவராவார். இவர் இறக்கும் வயதில் கூட உலகில் கவனம் அவர் மீது செலுத்தப்படவில்லை. பணத்தட்டுப்பாடுகாரணமாகப் பாதிவழியில் கைவிடப்பட்ட அவரது கணிதற்பொறியும் கிங்ஸ்கொலோஜ் அரும் பொருளகத்தில் தூசுமண்டிக்கிடந்தது. இவர் இறந்த போதிலும் இவரது , கணிதப் பொறி இறந்து மடியவில்லை. பபேஜ் உயிர்நீத்து 37 வருடங்களின் பின்னர் மதுசாரத்தில் அமிழ்த்தி பாதுகாக்கப்பட்டிருந்த அவரது மூளை வெட்டிச் சோதிக்கப்பட்டது. அவரது கணிதப் பொறி கூறிய கதை உண்மையானது என்பதை உயிரியல் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர் சாள்ஸ்பபேஜ் ஓர் அபார திறமைசாலியாவார்.

**சாள்ஸ்பபேஜ் அவரின் கண்டுபிடிப்புகள்**

☞ புகையிரதத்தின் தைனமோமீற்றர் ☞ நியம புகையிரதப்பாதை அளவு கருவி

☞ சீரான கட்டட முறை ☞ கலங்கரை விளக்கொளி

## சேர் ஐசெக் நியூற்றன் (1642 – 1727)

சேர்ஐசெக் நியூற்றன் ஒருபௌதிகவியலாளரும் கணிதமேதையும் தத்துவஞானியும் ஆவார். இவர் பொருள்களின் நடத்தைகளை கணிதப்பாணியில் விளக்கமுயற்சித்துளார். புவியைச் சூழ ஓர் ஒழுக்கில் சந்திரன் செல்லும் முறையை அவர் மனக்கண்ணால் நோக்கினார். மரத்தில் இருந்து நிலத்தில் விழும்பழத்தின் சிந்தனையைச் செலுத்தியவர். மனிதவரலாற்றில் எவரும் சிந்தித்துப் பார்க்காத காலத்தில் இந்த மாபெரும் விஞ்ஞானி புவியின் ஈர்ப்பு விசைபற்றி சிந்தித்தார். அமைதியான சுபாவமுடைய நியூற்றன் சில சந்தர்ப்பங்களில் அமெரிக்கன் விளக்குடன் காற்றாடிகளை வானில் அனுப்பினார்.

**ஐசெக் நியூற்றனின் சிறப்பான கண்டுபிடிப்புக்கள் சில**

☞ ஈர்ப்பு விதிகள், இயக்க விதிகள் ☞ முதலாவது தெறிப்புத் தொலைக்காட்டி

☞ வெவ்வேறு ஊடகங்களின் ஊடாகச் செல்லும் போது ஒளியின் நடத்தை

☞ கணிதத்தின் சில பிரிவுகள்

***சி. தர்சனா*** – தரம் - 07

# வலைப்பந்தாட்டம் (Net ball)

## வலைப்பந்தாட்ட விளையாட்டின் வரலாறு


பெண்களிடையே பிரபல்யம் வாய்ந்த ஒரு விளையாட்டாக வலைப்பந்தாட்டம் விளங்குகிறது. ஆரம்ப காலத்தில் இது பெண்களினால் மாத்திரம் விளையாடப்பட்டு வந்த ஒரு விளையாட்டாக இருந்த போதிலும் தற்போது ஆண், பெண் இரு பாலாராலும் விளையாடப்படுகின்றது.

இவ் விளையாட்டு

1891 ஆம் ஆண்டு கத்தோலிக்க இளைஞர் சங்க உடற்பயிற்சிப் போதனாசிரியர் டாக்டர் ஜேம்ஸ் நைஸ் சிமித் என்பவரால் அமெரிக்காவில் முதன் முதலில் அறிமுகம் செய்யப்பட்டது.

- 1895 - இங்கிலாந்தில் பிரபல்யமடைந்தது.
- 1897 - மைதானம் அமைக்கப்பட்டு 3 பகுதிகளாகப் பிரித்து பேற்று கம்பங்களையும் பயன்படுத்தி விளையாடினர்.
- 1901 - வலைப்பந்தாட்ட விதிகள் அடங்கிய புத்தகம் அச்சிடப்பட்டது.
- 1921 - இங்கிலாந்து இனத்தவரான திருமதி ஜெனிகிறீன் எனும் பெண்மணியினால் இலங்கையின் கண்டி மகளிர் உயர்தர பாடசாலையில் இவ் விளையாட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.
- 1926 - இங்கிலாந்து வலைப்பந்தாட்டசங்கம் உருவாகியது.
- 1938 - முதல் தடவையாக இங்கிலாந்திற்கும் ஸ்கொட்லாந்துக்கும் இடையில் போட்டி என்று நடைபெற்றது.
- 1954 - அகில இலங்கை வலைப்பந்தாட்ட சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1960 - சர்வதேச வலைப்பந்தாட்டச் சங்கம் உருவாகியது.
- 1963 - உலக சாம்பியன் சிப் வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

## வலைப்பந்தாட்ட விளையாட்டின் திறன்கள்




**வீராங்கனைகளின் பிரதேசமும் அவர்களின் விசேட செயற்பாடுகளும்**

**பேற்றுக்காவலன்** – GOAL KEEPER (GK)

பேற்றுப் பிரதேசத்தின் எல்லைக்குள் பாதுகாப்பைச் செய்தல். பேற்றுக்கு எய்தலைத் தடுத்தல். பேற்றுக்கோட்டிற்கு வெளியில் செல்லும் பந்தை உள்ளெறிதல். தவறான எய்தலைப் பெற்றுக்கொள்ளல்.

**சிறைக்காப்போன்** - WIND DEFEND (WD)

தனக்குரியபிரதேசத்தைப் பாதுகாத்தல். கோட்டிற்கு வெளியே சென்ற பந்தை உள்ளெறிதல். முன்னோக்கிச் சென்று பந்தைப்பெறுதலும், மாற்றுதலும்.

**பேற்றுக்காப்போன்** - GOAL DEFEND (GD)

எதிரணி தாக்கும் போது பந்தைப் பாதுகாத்தலும், தடுத்தலும். தேவையான போது எறியப்படும் பந்தைப் பெறல். கோட்டிற்கு வெளியே செல்லும் பந்தை உள்ளெறிதல். தவறான எய்தலைப் பெற்றுக்கொள்ளல். GK மூலம் உள்ளெறியப்பட்டபந்தைப் பெற்றுக் கொள்ளல். மையப்பிரதேசத்திற்கும் பேற்றுப் பிரதேசத்திற்கும் செல்லப்பங்களித்தல்.

**மையத்தோன்** - CENTRE (C)

போட்டி ஆரம்பிக்கும் போதும் பேற்று பெற்றதன் பின்பும் மையத்தின் நின்று பந்து மாற்றுதலைச் சரியாகச் செய்தல். பாதுகாத்தலுக்கான துணை புரிதல். பந்து வெளியில் செல்லும் அனைத்து சந்தர்ப்பத்திலும் பந்தை உள்ளெறிதல்.

**சிறைத்தாக்குவோன்** - WING ATTACK (WA)

மையப் பிரதேசத்தில் எறியும் பந்தைப் பெற்றுக் கொள்ளலும் பந்து மாற்றுதலும். C உடன் சேர்ந்து பேற்றுவளையத்தை நோக்கி பந்தைக் கொண்டு செல்லல். தாக்குதல், பாதுகாத்தலுக்குப் பங்களிப்புச் செய்தல். தமது பிரதேசத்திற்கு வரும் வீரர்களைத் தாக்குதல்.

**பேற்றுத்தாக்குவோன்** - GOAL ATTACK

தமது பிரதேசத்திற்கு வரும் எதிரணி வீரரைத் தாக்குதல். WA, C உடன் சேர்ந்து பேற்றுவளையத்தை நோக்கி பந்தெறிதல். பந்தைப் பேற்றுக்கு எய்தல். பேற்றுக்கு எய்வோனுக்கு (GS) உதவிபுரிதல்

**பேற்றுக்கு எய்வோன்** - GOAL/ SHOOTER (GS)

பந்தைப் பேற்றுக்கு எறிதல். தவறான எய்தலால் வரும் பந்தைப் பெற்றுக் கொள்ளல். பேற்றுக்கு வரும் பந்தை பாதுகாப்பாக பெற்றுக் கொள்ளல். பேற்றுக்கோட்டிற்கு வெளியே செல்லும் பந்தை உள்ளெறிதல்.

**வலைப்பந்தாட்டத்தின் விதி முறைகள்**

**வீராங்கனைகள்**

சப்பாத்து/ கணுக்கால் மூடப்பட்ட பாதணிகளை அணியலாம். அவை பாரம் குறைந்தவையாகவும் ஆணிகள் பொருத்தப்படாதவையாகவும் இருத்தல் வேண்டும். வீராங்கனையின் நிலைகளைக் குறிக்கும் முதல் எழுத்துக்களைக் கொண்ட உடையினை இடுப்பிற்கு மேல், முன் பக்கமாக அணிந்திருத்தல். திருமண மோதிரம் தவிரந்த பிறருக்கு ஊறுவிளைவிக்கும் ஆபரணங்களை அணிய முடியாது. திருமணமோதிரமாயின் அது பட்டியினால் சுற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

## அணித்தலைவிகள்

- மத்திய எறிக்கையை / பேற்றுப் பகுதியை தெரிவு செய்வதற்காக நாணயத்தைச் சுழற்றி முடிவினை நடுவர்க்கு கூறல்.
- இடைவேளையின் போது சுகவீனம், விபத்துக்கள் தொடர்பாக, விளையாட்டை நிறுத்தும் போது அணியில் உள்ளவர்களைப் பிரதியீடு செய்தல், வீரர்களின் நிலையில் மாற்றம் செய்தல் பற்றி நடுவர்கள், எதிரணித்தலைவிக்கும் தெரிவித்தல்.
- விதிகள் தொடர்பான விளக்கங்கள் தேவைப்படுமிடத்து இடைவேளையின் போது / விளையாட்டு முடிவின் போது நடுவர்களிடம் அது பற்றிக் கேட்கலாம்.

- இடைவேளையின் போது அணியிலுள்ளவர்க்கு அவசரமான தேவைகள் ஏற்படும் போது நடுவர்களிடம் கேட்கலாம். அதற்கு அனுமதி கிடைக்குமாயின் எதிரணித்தலைவிக்கு அறிவித்தல் வேண்டும்.

**விளையாட்டை நிறுத்துதல்**

- விபத்தின் போது / சுகவீனத்தின் போது நிறுத்தப்படும்.
- கீழ்குறிப்பிடப்படும் அவசர காரணத்தினால் நடுவர் விளையாட்டை நிறுத்தலாம்.
  1. உபகரணம், மைதானம், வானிலை மூலமான இடையூறுகள் மைதானத்திற்கு வெளியே இருந்துவரும் இடையூறுகள் போன்றவை காரணமாக.
  2. வீராங்கனைகளின் உடல் / உடை தொடர்பான ஒரு விடயம் காரணமாக
- விளையாட்டை நிறுத்துவதற்காக நடுவரால் விசில் ஊதல் மூலம் கட்டளை வழங்கிய பின்னர் தாமதித்த நேரத்தை நேரக்கணிப்பளர் குறித்துக் கொள்ளவேண்டும்.
- விரைவாக விளையாட்டை ஆரம்பித்தல் வேண்டும். மீண்டும் ஆரம்பிக்கும் போது நடுவரால் நேரக்கணிப்பாளருக்கு சமிச்ஞை காட்டி விசில் ஊதப்பட போட்டி மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது விளையாட்டு நிறுத்தப்பட்டால் பந்து இருந்த இடத்தில் இருந்து விளையாட்டு ஆரம்பமாகும்.

1. பந்து மைதானத்திற்கு வெளியே இருப்பின் உள்ளெறிக்கை மூலம் ஆரம்பிக்கப்படும்.
2. விளையாட்டு நிறுத்தப்படும் போது பந்து வைத்திருந்த வீராங்கனையைப் பந்து இருந்த இடத்தை, நடுவரால் அறியமுடியாத சந்தர்ப்பத்தில் பந்து இருந்த இடத்திற்கு மிகவும் அண்மித்த இடத்திலிருந்து இரு எதிரான வீரர்களிடையே மேலெறிக்கை வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்படும்.
3. விளையாட்டு இடையூறு / தொடுகைக்காக இடைநிறுத்தப்பட்டிருந்தால் தவறு நடைபெற்ற இடத்திலிருந்து தண்டனை எறிகை வழங்கி விளையாட்டு தொடர்ந்து நடாத்தப்படும்.

**விளையாட்டை நடாத்துதல்**

- மையத்தோன் பந்துடன் மைய வட்டத்தினுள் இரு கால்களையும் வைத்து நின்றுகொள்ள வேண்டும்.
- எதிரணி மையத்தோன் மையப்பகுதியினுள் எவ்விடத்திலும் நிற்கலாம். அங்கும் இங்கும் செல்லமுடியும்.
- ஏனைய வீராங்கனைகள் தமக்குரிய இடங்களில் நிற்பதுடன் அங்குமிங்கும் அசையமுடியும்.
- விளையாட்டை ஆரம்பிப்பதற்காக விசில் ஊதியவுடன் ஏனைய வீராங்கனைகள் மையப்பகுதிக்குள் செல்லமுடியும்.

### விளையாட்டு ஆரம்பம்

- விளையாட்டை ஆரம்பிப்பதற்கும் மீண்டும் ஆரம்பிப்பதற்கும் நடுவர் விசில் ஊதுதல் வேண்டும்.
- நடுவருடைய விசிலுக்கு விளையாட்டு ஆரம்பிக்கும் போது / மீள ஆரம்பிக்கும் போது "C" ஆல் எறியப்படும் பந்து மத்திய எறிகை எனப்படும்.
- விளையாட்டு ஆரம்பிக்கும் போதும் புள்ளியைப் ெற்றுக்கொண்டதன் பின்னும் மத்திய எறிகை மூலம் விளையாட்டு தொடங்குவதுடன் மையத்தோன் இருவரினாலும் மாறிமாறி மத்திய எறிகை இடம்பெறும்.

### புள்ளிபெறல்

பேற்றுக்கு எய்வோன் / பேற்றுத்தாக்குவோன் பேற்றுவட்டத்திற்குள் நின்று பேற்றுக்கம்பம் உள்ள வளையத்தினுள் பந்தைப் போட்டால் ஒரு பேறு ஆகும். கையில் பெறப்பட்டு மூன்று செக்கனுக்குள் பந்து வலையத்தினுள் போடப்படல் வேண்டும். எதிராளி பந்து பேற்றுக்குள் போடப்படும் போது அதைத்தடுக்கலாம்.

### வலைப்பந்து விளையாட்டில் காணப்படும் தவறுகள்

- மூன்று செக்கனுக்கு மேல் பந்தை ஒருவர் வைத்திருக்க முடியாது.
- பந்தைப்பிடிக்கும் போது முதலில் நிலம் படகாலை அடிக்கவோ, இழுக்கவோ கூடாது.
- பந்தை இன்னொரு வீரரிடமிருந்து பறிக்கமுடியாது.
- பந்தை இருந்துகொண்டோ, முழங்காலில் இருந்துகொண்டோ எறியமுடியாது.
- பந்தை உருட்டவோ / கை முட்டியால் அடிக்கவோ முடியாது.
- ஒருவர் எறிந்த பந்து இன்னொரு வீரர் தொடமுன் அவ்வீரர் தொடமுடியாது.
- ஒரு வீரர் தனக்கு உரித்தல்லாத பிரதேசத்திற்குள் செல்லமுடியாது.
- எதிரணி வீரரைத் தள்ளுதல், அடித்தல், இழுத்தல். பிடித்தல், கால் தடம் போடுதல், மேல் விழுதல் போன்றன செய்தல் கூடாது.

சு. ஜீவனா
பழைய மாணவி



கரப்பந்து அணியினர்



வலைப்பந்துக் அணியினர்



கிளித்தட்டு அணியினர்

சிறுகதை

# தாய்

காலம் சிலவேளைகளில்தன் போக்கிலேயே மனிதர்களை மாற்றிவிடுகிறது. இது வாழ்க்கையின் இயல்பு வாழ்க்கையில் இயல்பானதே என சிலர் கூறினாலும் காலத்தால் மாறாத விடயங்களும் உண்டு. இது தான் வாழ்க்கை என்று நாம் முற்றுப்புள்ளி வைத்திடத் துணிந்தாலும் இது தான் வாழ்க்கையா என எம்மில் சிலர் கேள்விகளைத் தொடுக்கின்றனர். சிலருக்கே இனிமையாகவும். சிலருக்கு புயலாகவும் இருக்கின்றது.

விஜயா நான்கு பிள்ளைகளின் தாய். இளையவள் பெண் பிள்ளை ஏனைய மூவரும் ஆண்கள். ஆண் பிள்ளைகள் மூவருமே தங்கள் விருப்பத்தில் திருமணம் செய்து ஆடம்பர வாழ்க்கையை வாழ்வதற்காக பெற்றோரை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டனர். பின்னர் இளைய பிள்ளையும் தாயும், தந்தையும் தனித்துவிடப்பட்டனர். பின்னர் கடைசிப்பிள்ளையும் ஒரு வாலிபனைக் காதலித்து திருமணம் செய்து கொண்டாள்.

ஒரு காலத்தில் விஜயாவின் கணவர் ராசு சிறந்த உழைப்பாளி. எந்த வேலையானாலும் பாராபட்சமின்றிச்செய்து கொள்பவன். ஆனால் காலப்போக்கில் ராசு நீரிழிவு நோய்க்கு தள்ளப்பட்டான். ஊருக்கு திருவிழாவிற்கு வரும் போது ராசுவின் எந்தப் பிள்ளைகளும் பெற்றோரைப் பார்ப்பதற்குச் செல்வதே இல்லை. காரணம் தமக்குப் பணம் செலவாகிவிடுமே என்று தான் என்ன தான் பிள்ளைகளை ஊட்டிவளர்த்தாலும் பருவம் என்னும் பாதையிலே படியேறி செல்கின்றனர். விஜயாவிற்கோ தன் பெண்பிள்ளையின் மீது அதிக பிரியம் அதேபோல் அவளுக்கும் தாய்மேல் ரொம்ப பிரியம் என்ன காலமோ தெரியவில்லை அவள் காதலால் எல்லாவற்றையும் உதறிவிட்டு தாய் தந்தையை பிரிந்ததை எண்ணி கண்ணீரும் கம்பலையுமாக வாழ்ந்து வந்தாள். அன்பிருந்து என்ன பயன் அவளுடையகணவன் அவளை கிராமத்திற்கு செல்ல அனுமதி அளிப்பதில்லை இதற்கிடையில் ராசு நோய்வாய்ப்பட்டதால் அவளுடைய மனைவி விஜயா கஷ்டப்பட்டு அரசமருத்துவமனைக்கு அனுமதித்தாள். சில நாட்களின் பின்னர். எந்த அறிவித்தலின்றி கைவிரல்கள் அகற்றப்பட்டன. இதை அறிந்த விஜயா பதற்றமுற்றாள். கைவிரல்கள் அகற்றியது ராசுவிற்கு தெரியவில்லை. இதனை விஜயா ராசுவிடம் கூறிய போது ராசுவின் மனம் தடுமாற்றம் அடைந்தது. நான் இனி உயிரோடு இருப்பது ஏன்? இருந்து ஏது பயன்? என்று மனத்திற்குள் நினைத்த வண்ணம் இருந்தான்.

சில நாட்களின் பின்னர் வைத்தியர் ராசுவின் கால்களை உடனே அகற்ற வேண்டும் இல்லையெனில் இறந்துவிடுவான் எனக் கூறியவுடன் விஜயா வைத்தியரே எனது கணவர் கைவிரல்களை அகற்றிய பொது அவரால் தாங்க முடியவில்லை கால்களை கழற்றுவது என்று அறிந்தால் உயிரையே விட்டு விடுவார் என்று கூறினாள். அதன் பின்னர் விஜயா காலை

கழற்றுவதற்கு அனுமதி வழங்கவில்லை ராசு வைத்தியசாலையில் இருக்கும் போது அவ்ஊரே திரண்டு வந்து பார்த்தது. ஆனால் அவனது பிள்ளைகள் ஒரு தடவைகூட தகப்பனை வந்து பார்க்கவில்லை.

ஒரு நாள் விஜயா வைத்தியசாலைக்கு சென்ற போது ராசு விஜயா நான் இறந்து விட்டால் நீ நம்ம பிள்ளைகள் பார்க்கேல என்று அவர்களை மறந்துவிடாதே. ஊருலேயே இருந்து உனக்கு ஏதாவது ஆச்சு என்றால் ஊர்மக்கள் சேர்ந்து தூக்கிப்போடுவாங்க என்று கூறி கண் கலங்கினார். பின்னர் விஜயா வீடு சென்றாள். மறுநாட்கலை வைத்தியசாலைக்குச் செல்லும் போது ராசுவின் மரணச்செய்தியை அறிந்தாள். அவனது மரணச்சடங்கினை ஊர் மனுசன்கள் சேர்ந்து செய்தனர். 4 பிள்ளைகள் என்று தான் பேர் ஆனால் எப்பிள்ளையும் மரணச்சடங்கிற்கு வரவில்லை ராசுவின் மரணத்தின் பின்னர் விஜயாவின் வாழ்க்கை வேதனைக்குரியதாகியது.

சில நாட்கள் கழிந்த பின் இளையமகள் தாயைக் காண்பதற்காக வந்தாள் தாயைப் பார்க்கும் போது அவளிடம் அன்பே காணப்பட்டது. எவ்வித வெறுப்புமே அத்தாயிடம் காணப்படவில்லை ஆயினும் அத்தாய் அன்பை வெளிப்படுத்தாமல் நீ ஏன் இங்குவந்தாய் சென்று விடு இல்லையேல் நான் இறந்து விடுவேன் என்ற வார்த்தைகளே அவளது வாயிலிருந்து வந்தது.

ராசுவின் மரணத்தின் பின்னர் விஜயாவிற்கு ஊரே சொந்தமாக இருந்தது. ஒரு தாயின் சாபம் ஓராயிரம் ஜென்மங்கள் தொடரும். எந்தத் தாயும் தன் பிள்ளைக்கு சாபம் வழங்கியதாக சரித்திரம் கூட சொல்ல வில்லை. அவள் தான் தாய் அவளைப் போன்று அன்பு செலுத்துவதற்கு எவ்வுயிராலும் முடியாது.

*நீ சுமப்பாய் என்று அவள்*
*உன்னை கருவிலே சுமக்கவில்லை*
*நீ விட்டுப் போனபின்பு மனதிலே - சுமக்கிறாள்*
*அவள் தான் தாய்.*

**இ. டிலாஜினி**

தரம் - 10

# தகவல் தொடர்பாடல் விருத்தியும் முன்னேற்றமும்

மனித வாழ்க்கையில் தொடர்பாடல் இன்று ஒரு அத்தியாவசிய தேவையாக முன்னேற்றம் அடைந்துள்ளது. இன்றைய தொழினுட்பமுன்னேற்றம் காரணமாக தொடர்பாடல் பெரும்பாலும் விருத்தியடைந்துள்ளது. தொடர்பாடல் ஊடகமாக விளங்கும் சாதனங்களாவன : கணனி, பத்திரிகை இணையம், மின்னஞ்சல், தொலைநகல், தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி போன்றவை விளங்குகின்றன. தொடர்பாடல் மனிதர்களிடையே தகவல்களைப் பரிமாற உதவுகிறது.

முன்னைய காலத்தில் காணப்பட்ட நிலைமைகளைப் பொறுத்து மனிதர்கள் தமக்கிடையே தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர். கிராமப் புறங்களில் வசிக்கும் மக்கள் பறை அடித்தும், கூக்குரல் எழுப்பியும் புகை எழுப்பியும், பறவைகள், மிருகங்கள் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர். பெரும் பாலும் ராஜாக்கள் இன்னொரு ராஜாக்களுடன் யுத்த விடயம், நாட்டு அபிவிருத்தி, சுயம்வரம் வேறு நிகழ்ச்சி பற்றி அறிவிப்பதற்காக தகவல்களைப் பரிமாறிக்கொண்டனர். வரலாற்று ரீதியாக நோக்குவோமானால் கம்பளை இராச்சிய காலத்தில் பல தூது விடு காவியங்கள் தோற்றம் பெற்றன. உதாரணமாக புறாவிடுதூது. குயில்விடுதூது, போன்றவை இவை மக்களிடையே தகவலைப் பரிமாற உதவின.

இன்றைய தொழினுட்ப முன்னேற்றம் காரணமாக கண்டுபிடிக்கப்பட்ட உபகரணம் கணனி ஆகும். கணனி இன்று எல்லா இடங்களிலும் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்துள்ளது. கணனியின் மூலம் மனிதன் ஒருவன் ஓர் இடத்தில் இருந்த வண்ணம் பலவிதமான தகவல்களைப் பெற்றுக்கொன்கின்றான். உலகில் எந்த மூலையில் இருக்கும் உறவினர்களுடனும், நண்பர்களுடனும் தனது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றான். கணனியின் மூலம் நாம் கடிதங்களை அச்சுப்பொறித்து பிரதிகளை எடுத்துக் கொள்ளமுடியும். இதற்கு மேலாக இந்த உலகையே கிராமம் ஆக்கி ஒவ்வொருவரையும் இணைக்கின்ற ஊடகமாக இணையத்தளம் பயன்படுகிறது. இவ்வாறு இத்தகைய தொடர்பாடலுக்கு உதவும் கணனியை கண்டுபிடித்தவர் பிரான்சிய நாட்டைச் சேர்ந்த "பிளெஸ் பஸ்கால்" என்பவர் ஆவர். இனிவரும் காலங்களில் தொடர்பாடல் விருத்திக்கு கணனி பெரும்பங்காற்றும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

அச்சு ஊடகத்தினூடாக தகவல்களையும் தொடர்பாடல்களையும் மேற்கொள்வதற்கு உகந்த சாதனம் பத்திரிகை யாகும். தினசரிப் பத்திரிகை எமது நாட்டு செய்தி வெளிநாட்டுச் செய்தி போன்றனவும் வெளியாகின்றன. அத்துடன் சினிமா, சிறுகதை, விளம்பரம், பிறந்த நாள், மரண அறிவித்தல் போன்றன வெளியாகின்றன. யார் ஒருவன் தினமும் பத்திரிகையைப் படித்து அறிவை விருத்தி செய்கின்றானோ அவன் பொது அறிவு மிக்கவனவாகவும் புத்திசாலியாகவும் மாறுகின்றான்.

அடுத்து தொடர் பாடல் ஊடகமாக விளங்குவது வானொலி யாகும். வானொலியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் மார்க்கோனி ஆவார். இக் கண்டுபிடிப்பு தொடர்பாடலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. வானொலியில் இடம் பெறும் அறிவு சார் நிகழ்ச்சிகள் இடம்

பெறுகின்றன. பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, போன்றனவும் செய்திகளும் இடம் பெறுகின்றன. இவற்றை நாம் கேட்டுக் கிரகிப்பதன் மூலம் மாணவர்களாகிய நமக்கு அறிவுத் தாகம் தீர்வடைகிறது. கடிதம் மூலமும் தகவல் பரிமாறப்படுகிறது. கடிதத்தின் மூலம் தகவல்கள் அனுப்பப்படுவது தற்போது குறைவாகக் காணப்பட்டாலும் கடிதத்தின் மூலமும் தகவல்கள் பரிமாற்றப்படுகின்றன. இவற்றினூடாக அனுப்பப்படும் தகவல்கள் கிடைப்பதற்கு அதிக நாள் எடுக்கிறது. அதனால் தான் இன்றைய தொழில் நுட்பமுன்னேற்றம் காரணமாக தொலைநகல் என்னுஞ்சாதனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இச்சாதனத்தில் உடனடியாக பிரதிகளாக செய்திகளை அனுப்பிப்பெற்றுக் கொள்ள முடியும்.

தொலைபேசியை முதன்முதலாகக் கண்டு பிடித்தவர் "அலெக்சாண்டர் கிரகம்பெல்" ஆவார். இதை அடிப்படையாகக் கொண்டு இன்று பல்வேறு தொலைபேசிகள்கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு சிறந்த உபகரணமாகக் காணப்படுவது தொலைகாட்சி ஆகும். இதன் மூலம் தகவல்களைப் பார்த்தும் கேட்டும் புரிந்து கொள்ளலாம். மற்றும் தொலைக்காட்சியில் இடம் பெறும் ஏனைய நிகழ்ச்சிகளை பார்க்க முடியும் உதாரணமாக :- கருத்தரங்குகள், நாடகம், சிறுவர் பகுதி போன்றவை. அது மட்டும் மல்லாது செய்திகளை பார்ப்பதனால் அரசியல், யுத்த பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.

இவ்வாறு இன்றைய தொடர் பாடல் விருத்திக்கு உதவுவது தொழி நுட்ப ரீதியாகக் கண்டுபிடிக்கப்படும் சாதனங்களே ஆகும். தொடர்பாடல், உறவுகளை இணைத்து மனிதனை அறிவுடையவன் ஆக்குகிறது. மாணவர்களாகிய நாம் தொடர்பு சாதனங்களில் இடம் பெறும் விடயங்களை அறிந்து கொண்டு புத்திசாலியாக வாழ்வோம்.

**ச. கிரிசாந்தினி**

**தரம் – 11**

---

## எமது பாடசாலை

1. எமது பாடசாலையின் பெயர் யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் ஆகும்.
2. எமது பாடசாலை அதிபரின் பெயர் திரு.ந. பாலச்சந்திரன் ஆகும்.
3. எமது பாடசாலையில தரம் ஒன்று தொடக்கம் 11 வரை வகுப்புக்கள் நடைபெறும்.
4. எமது பாடசாலை 1910 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
5. எமது பாடசாலையில் எல்லாப் பாடங்களும் ஒழுங்காக நடைபெறும்.
6. ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் இல்லங்களுக்கான விளையாட்டுப்போட்டி நடைபெறும்.
7. எமது பாடசாலையில் விளையாட்டுமைதானம் நூலகம் என்பன உள்ளன.

**மு. கயானா**

தரம் - 03



மாணவர்களின் இசைவும் அசைவும்



கணனி அலகு



ஆசிரியர் தின விழா



உலக உணவுத்திட்ட விநியோகம்



ஆரம்பப் பிரிவின் இசைச் செயற்பாடு



உயர் மட்டக் கல்விச் செயற்பாடு

## உள்ளத்து அனையது உயர்வு

வாழ்க்கையில் உயர்ந்திடவே - மனிதன்
ஊக்கமுடன் செயற்படவே
நாளைய உலகத்திலே
நாயகனாகத் திகழ்ந்திடவே

கல்வி எனும் பாதையிலே - சென்று
கலைகள் பல கற்றுயர்ந்து
ஊக்கம் தனை ஏணியாகக் கொண்டு
உயர்வு தனை நாடிடவே

வளங்கள் பலவற்றைத் தேடி - மனிதன்
வாழ்க்கையில் உயர்ந்திட எண்ணி
முயற்சியை நோக்காகக் கொண்டு
முடிந்தவரை முயன்றனனே

ஊக்கமது கைவிடேல் - என்று
உயர்வாக எண்ணியே மனிதன்
உன்னதமான வாழ்க்கையிலே
உயர்வுதனைப் பெற்று வந்தான்.

**தி. பிருந்தா**
தரம் - 11

---

## மங்கையராய்ப் பிறந்து விட்டோம்

மதிகெட்ட உலகமதில்
மங்கையராய்ப் பிறந்து விட்டோம்
மானிட வர்க்கமதில்
மங்கையுமோர் அங்கமென
எண்ணாத கருமிகட்கு
உணர்த்திடுவோம் மங்கையவள்
பெருமை தனை - பூவையராய்
பாவையராய் எமைப்பார்த்த
உலகினுக்கு புதுமைப் பெண்
நாமென்று புதுநடை போட்டிடுவோம்
மங்கையவள் உலகினுக்கு
அடிமையில்லை என்றுரைப்போம்
ஆடவர்க்கு ஆசைமகளாய்
இருந்த காலம் போகட்டும்
வேதனைகள் நாம் கடந்து
சாதனைகள் படைத்திடுவோம்
பூவுலகம் பூத்திருக்க
புதுமகளாய் வீற்றிடுவோம்.

**இ.ரஜிதா**
தரம் - 10

---

## வாழ்க்கை

வாழ்க்கை உனது தான்
வாழப்பழகிக் கொள் மானிடனே
சுற்றிச் சுழலும் பூமி
உன் சொந்தம் - அதில்

இது இன்பமான வாழ்க்கை
மதுபானம் போதைப் பொருட்களிலும்
மனம் மயங்கும் சுகங்களிலும்
வீணான புகைத்தலிலும் - உன் வாழ்க்கை

கடல் போன்ற இவ்வுலகின்
கலங்கரை விளக்கம் நீ
நோய் இன்றி வாழ்ந்தாலே
உன் வாழ்க்கை இன்பமடா

சுற்றுச் சூழலை சுத்தமாக பேணப்பழகு
சூழலின் நீரிழிவு, வாந்திபேதி
அனைத்தையும் இல்லாது தடுக்கலாம்
மானிடனே உன் இனத்தை வாழவை

கனிவான இவ்வுலகில் கல்விமானாய்
சீர்மிகுந்த சிறந்த உழைப்பாளியாய்
சுத்தம் சுகம் தரும் நம்பிக்கையுடன்
நல்மனிதனாய் வாழ்ந்துபார்
உலகமே உன்னை வாழ்த்தும்
நன்றி

**ச. ஜெயராணி**
பழைய மாணவி

## சிறுவர் நாம்

சின்னக் கண்சிமிட்டி மழலை பேசும் போது
சில்லென சிலுக்காத மனசில்லை
சின்னச் சின்னக் குடைபிடித்து
சிங்காரமாய் கானமிசைக்கும் சிறுவர் நாம்

சிறகை விரித்து வானத்திலே பறக்கச்
சிந்திக்கும் சிறுவர் நாம்
கள்ளம் கபடமற்ற பேச்சின் மூலம்
காலமெல்லாம் நாம் மகிழ்ந்திடுவோம்

சாதி மதம் பாராமல் கூடிவிளையாடிச்
சரித்திரம் படைக்கும் சிறுவர் நாம்
பள்ளியில் ஒரு தாய் பிள்ளைகள் போல்
படித்து ஒற்றுமையாக நாம் வாழ்வோம்

இறைவன் விரும்பி உறையும்
இதயக்கோயில் சிறுவர் உள்ளம்
சிகரத்தின் மேலே ஏறிநின்று பாறைகளைச்
சிதைக்கும் பச்சிளம் பிஞ்சுகளைப் பார்.

சீரழியும் சினிமாச் சமுதாய வாழ்வில்
சிறுவர் துஸ்பிரயோகம் எம்நாட்டில்
சித்திரவதைகளால் கூண்டிற்குள் துன்புறும்
சித்திரவதைத் தடுப்பு முகாம்களைப் பார்.

பிஞ்சு உள்ளங்களை வேலைக்கு அமர்த்தாதீர்
பிஞ்சுப் பாலகர்களுக்கு படிக்க உதவி செய்யுங்கள்
உயர்ந்த கருணை உள்ளம் கொண்டவரே
உங்கள் சேவையால் சிறுவர் எதிர்காலம் ஒளிரட்டும்.

விளையும்பயிர்போன்ற சிறுவர்களுக்கு
விந்தையான பூமிதனில் வாழ வழி செய்யுங்கள்
எல்லோரும் சேர்ந்து ஒன்றிணைந்து சிறுவர்
எதிர்காலத்தை இன்பமயமானதாக்குவோம்.

சிட்டுப்போல் சிறகடித்துப் பறக்கும் சிறுவர் தம்
சிறந்த எதிர்காலத்தை சிறப்புற அமைக்கவும்
சீர் கெடும் சமுதாயத்தை சீராக்கிவிடவும்
விரைந்து வருவீர் அனைவரும்.

சட்டங்கள் பல வந்தும் சம்பிரதாயங்கள் பல விருந்தும்
திசை கெட்டுச் செல்லும் உலகில்
சிறுவர் தம் எதிர் காலம் சிதைந்திடாதிருக்க
விரைந்து வருவீர் அனைவரும்.

**தி. மிஸ்த்திரா**
தரம் - 09

## எமது பாடசாலை

சுழிபுர ஊரிலே
சிறப்பான மையத்தில்
கொஞ்சிடும் அழகில்
மிஞ்சிடும் வகையில்
மிளிர்ந்ததே இப் பூங்கா
எமக்கென ஓர் பாடசாலை
ஆறுமுகம் பாடசாலை
கண்ணகி அம்மன் முன்னிலையில்
கல்வியுடன் பண்பையும்
கட்டுப்பாட்டுடன் எமக்கு
கண்ணியமான அதிபர்
கடமை தவறாத ஆசிரியர்கள்
போற்றி வளர்த்தனர்.
ஆரம்பம் குடிசையாக
அமைந்த பூங்கா
அழகான பூஞ்சோலையாக
மாற்றமடைந்துள்ளது.
எம் பாடசாலை ஆசிரியர்கள்
கல்வியுடன் பண்பையும் அன்பையும்
மாணவருக்கு மெருகூட்டும் களமாகவும்
பாடசாலை வளர்ச்சிக்கு அயராது
உழைக்கும் எம் முன்னைய
நண்பர்கள் ஆசிரியர்கள்
வெற்றியாக நூற்றாண்டுகள்
தவழ்ந்து, நடந்து நிமிர்ந்ததுவே
விந்தைகள் பல படைக்க விஞ்ஞான அறை
சிந்தையில் அறிவூட்ட I.C.T அறை
பாடம் படிக்க நூலகம்
அழகான வகுப்பறையில்
அழகாக அமைத்து உள்ளனர் பாரீர்
வனப்பு மிக்க பூஞ்சோலை
தனித்துவமானது எம் பாடசாலை
போற்றிடுவோம் நம் பாடசாலையை
அனைவரும் வாரீர்

**கே. அனிஸ்ரா**
தரம் - 11

# சேற்றில் முளைத்த செந்தாமரை

சல சல என நீர் ஓடும் அருவிகளும், பச்சைப்பசேல் என விரிந்து காணப்படும் புல் வெளிகளும், மணல் மேடுகளும் காணப்படும், மலைகளும் நிறைந்த ஒரு அழகான கிராமமே பச்சை புல்மோட்டை என்னும் சிற்றூராகும். இங்கு இவ்வளவு இயற்கை எழில்மிக்கதாக காணப்பட்டாலும் இவ்வூரில் மிகவும் படிப்பறிவு அற்ற மக்களே வாழ்ந்தனர்.

இங்கு தான் கந்தப்பு, செல்லம்மா என்ற தம்பதியினரும் வாழ்ந்தனர். இவர்களது குடிசை ஈர்க்குமட்டும் காணப்படும் ஓலையினால் வேயப்பட்ட ஒரு வீடு. இங்கு தான் இவர்களின் செல்வப் புதல்வனாக கோபால் பிறந்தான். இவனை வளர்தது ஒரு வைத்தியர் ஆக்குவதே கந்தப்பு, செல்லம்மா இருவரின் கனவு. தினமும் கந்தப்பு, செல்லம்மாவை பார்த்து "ஏலோ பிள்ளையை வளர்த்து வைத்தியராக்கணும் நான் இல்லை என்றாலும் இவனை எப்படியாவது டாக்குத்தராக்கணும் புரியுதா" என தினமும் கூறுவான் கந்தப்பு. இதற்கு செல்லம்மாவும் தலையசைப்பாள்.

இவ்வாறு நாட்கள் கழிகின்றன. கந்தப்புவுக்கு திடீரென வயிற்றோட்டம் வருகிறது. செல்லம்மா அனைத்து கை வைத்தியமும் பார்த்தும் நோய் சுகம் வரவில்லை. கந்தப்புவை பார்ப்பதற்காக அக் கிராமத்து அயலவர்கள் வந்து "ஏய் செல்லம்மா இனி இவன் தப்பமாட்டான் இவனுக்கு வைத்தியம் பார்க்க டவுனுள்ள வைத்தியரைத்தான் பார்க்கவேணும். இதற்கு உங்கிட்ட பணம் இல்லை என்ன செய்யப் போற" என கூறினர்.செல்லம்மா என்ன செய்வது தெரியாது தவித்தாள் மறுநாள் கந்தப்பு மரணமடைந்து விட்டான். செல்லம்மாவும் கோபாலும் "தரைமேல் தத்தளிக்கும் மீன்போல" துடி துடித்தனர் கந்தப்புவுக்கு செய்ய வேண்டியகாரியங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன.

செல்லம்மா குடிசை வீட்டுக்குள் கோபாலை தனது மடியில் உறங்கும்படி கூறி தலையைவாரிக் கொண்டு "கோபாலு அப்பன்ட கனவை நிறை வேற்றுவையா அப்பன் இல்லை என்று கவலைப்படாதே ஆத்தா நான் இருக்கிறேன்டா. நீ எதையும் மனதில் வைத்திருக்காமல் ஒழுங்காக படிப்பில கவனம் செய் என்னப்பா" என தளதளத்து கூறினார் ஒரு முறை கோபாலு தாயின் முகத்தை அன்போடு பார்த்து தலை அசைத்து கண்ணீர் சிந்தினான்.

நாட்கள் மாதங்களாகின மாதங்கள்; ஆண்டுகள் என கடந்தன, கோபாலுக்கு கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையும் நெருங்கியது. இவன் திறமையான ஒரு மாணவன். இருப்பதைக் கொண்டே திருப்தியடைவான். வயல் காட்டிலே வெயில் அடித்து தன்னை படிப்பிக்கும் தாய்க்கு தான் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதே இவன் குறிக்கோள். தினமும் செல்லம்மாவின் முகத்தைப்பாத்து "அம்மா அப்பாவின் ஆசையை நிறை வேற்றுவேன். நீ கவலைப்படாதே" என மனமுருகி தாயை அன்போடு தழுவுவான். இவ்வாறு அவன் தன்னை பரீட்சைக்குத் தாயார் செய்து பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சிறந்த மாணவனாகத் தெரிவானான்.

இவனுக்கு உயர் தரத்தை மேற்கொள்ளத் தயார் ஆகும் நிலை ஏற்பட்டது. தந்தையின்றி தாயின் உழைப்பில் எவ்வாறு மேற்படிப்பை மேற் கொள்வது எனதனக்குள்ளே பல கேள்விகள் தொடுத்தான் அந் நேரம் தான் "இருளுக்குள் வெளிச்சம் போலவே அவனுக்குத் தமிழ் கற்பித்த தாஸ் ஆசிரியர் அவன் அருகில் வந்து "கோபாலு எதற்கும் கவலைப்படாதே உனக்கு தேவையான அனைத்து வசதிகளையும் நான் உனக்கு செய்து தருகின்றேன். உன் நிலை எனக்கு தெரியும். மனதை உறுதியாக வைத்து கொள். என்னை உன் அப்பா போல நினை!! என அவனின் தோளில் தட்டிச் சென்றார். அதைக் கேட்ட கோபாலுக்கு மனம் உறுதியைக் கொடுத்தது. கோபாலு மேற்படிப்பு படிப்பதற்கு தாயை விடடு விரிந்து செல்லும் நிலை ஏற்பட்டது. அவனுக்கு தாயை விட்டு பிரிய மனமில்லை என்றாலும் தந்தையின் கனவை நிறைவேற்ற வேண்டும் என்ற நெறியில் தாயின் பிரிவையும் ஏற்று மேற்படிப்பைத் தொடர்ந்தான்.

காலங்கள் கடந்தன. அனைத்துப் பரீட்சைகளையும் வெற்றிகரமாக செயற்பட்டு தனது மேற்படிப்பை முடித்து. "சேற்றுக்குள் முளைத்த செந்தாமரை போல" ஒரு வறிய கிராமத்துக்குள் ஒரு வைத்தியர் என்ற பெருமையுடன் சிறந்த வைத்தியர் என உரு வெடுத்தான். செல்லம்மாவுக்கு தனது மகன் வைத்தியர் என்ற பெருமையில் மிதந்தாள். கோபால் தனக்கு உதவிபுரிந்த தாஸ் ஆசிரியருக்கு நன்றி கூறி தனது வைத்தியப் பணியினை அக்கிராமத்திலே மிகச்சிறப்பாக மேற்கொண்டான்.

**செல்வராசா அனோஜியா,**
தரம் : 10,
யாழ்/சுழிபுரம் ஆறுமுகவித்தியாலயம்.

## சூழல் மாசடைவதைத் தடுபோம்

சூழல் மாசடைவதில் மனிதன் முக்கிய பங்கு வகிக்கின்றான். எனவே, நாம் ஒவ்வொருவரும் சூழல் மாசடைவதைத் தடுக்க தம்மாலான ஒத்துழைப்பையும், முயற்சியையும் எடுக்க வேண்டும்.

குப்பைகளைக் கண்ட இடங்களில் கொட்டுவதால், மலசலங்களைக் கண்டபடி கழிப்பதால் தொற்று நோய்கள் ஏற்படுகின்றன எனவே, குப்பைகளை எரித்தோ அல்லது பசளையாகவோ பயன்படுத்தலாம். மலசலகூடங்களில் மலசலங்களைக் கழிக்க வேண்டும்.

அடுத்து நாம் பயன்படுத்தும் குடிநீர் அசுத்தமடையாது பாதுகாக்க வேண்டும். தவறின் கொலரா போன்ற கொடிய நோயால் உயிராபத்து ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள், இளநீர்க் கோம்பைகள், பழைய ரயர்கள், சிரட்டைகள், தகரப்பேணிகள், போன்றவற்றில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகி மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, யானைக்கால் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

எனவே, நாம் சூழலை சுத்தமாக பேனுவதன் மூலம் நோயற்ற சமூகத்தை உருவாக்குவோம் என உறுதி பூணுவோம்.

**ச. கதுர்சனா**
தரம் - 04

## J/CHULIPURAM NORTH ARUMUGA VIDIYALAYAM

1) The name of my school is J/Chulipuram North Arumuga Vidiyalayam.
2) It is Situated at Chulipuram.
3) It was built in 1910.
4) The name of our principal is mr. N. Balachandran.
5) The name of my class teacher is Mrs. Y. Inthumathy.
6) My School is small.
7) It is a mixed School.
8) It has four buildings.
9) There are two hundred and Fifth students Studing in my School.
10) I LOVE My School Very Much.

***S. THADSAJINI***
GRADE - 05

## பொது அறிவு

1) ஐக்கிய நாடுகள் சபை வரலாற்றில் முதன் முதலில் உறுப்புரிமைப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நாடு - **யூகோஸ்லாவியா**
2) ருபர்சியா என்று அழைக்கப்பட்டநாடு - **ஈரான்**
3) தேசியக் கொடியில் முழுவதும் பச்சை நிறம் மட்டுமே உள்ள நாடு- **லிபியா**
4) உலகின் முதன் குளோனிங் பெயர் என்ன - **ஜெபர்சன்**
5) பக்கெட்டுகளில் பாலை அடைத்து விற்பனை செய்யும் முறையை முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு - **பிரான்ஸ்**
6) ஒபெக் அமைப்பு எத்தனையாம் ஆண்டு தோற்று விக்கப்பட்டது - 1960
7) சர்வதேச மனித உரிமைக் கழகம் ஆரம்பிப்பதற்கு காரணகர்த்தாவாக இருந்த பிரிட்டிஷ் வழக்கறிஞரின் பெயர் என்ன? - **பீட்டர்பெரன்சன்**
8) புகையிலையில் உள்ள நச்சுப்பொருள் - **நிகோடின்**
9) உலகிலேயே பெண்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சிளை அளிக்கும் நாடு எது? - **இஸ்ரேல்**
10) ஆண்மை மாத்திரை வயாகராவைக் கண்டு பிடித்தவரின் பெயர் என்ன? - **சைமன் காம்ப்பெல்**
11) சந்துனு என்ற கதா பாத்திரம் இடம் பெற்றுள்ள நூல் எது? - **ஆசிய ஜோதி**
12) பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட இலக்கண நூலின் பெயர் என்ன? - **நன்னூல்**
13) ஆரம்ப காலத்தில் "வசன காவியம்" என எதை அழைக்கிறார்? - **நாவல்**
14) பாரதியார் நடத்திய முதல் பத்திரிகையின் பெயர் என்ன? - **சக்ரவர்தினி**
15) நாகம்பாள் என்ற நாவலை எழுதியவர் யார்? - **ஆர்.ஷண்முக சுந்தரம்**
16) முதன் முதலில் தமிழில் வெளிவந்த அகராதியின் பெயர் என்ன? - **சதுரகராதி**
17) மலையகச் சிறுகதை வரலாறு என்ற நூலை இயற்றியவர்? - **தெளிவத்தை ஜோசப்**
18) இந்தியாவின் இரும்புப் பெண்மணி எனவர்ணிக்கப்பட்டவர்? - **இந்திரா காந்தி**
19) உலகிலே பெண்தொழிலாளிகள் அதிகமுள்ள நாடு? - **சீனா**

**சி. தர்சனா**
தரம் - 07

# ஒரு குடையின் சுயசரிதை

நான் ஓர் அழகான குடை. எனது வெளித்தோற்றம் பார்ப்பவர் கண்களைக் கவரும். என்னை அழகான பூக்கள் பதிக்கப்பட்ட வண்ணக் குடையாக பலபேருடன் ஒருவனாக உற்பத்தி செய்தார்கள். என்னுடன் தயாரிக்கப்பட்ட குடைகளில் நானே மிகுந்த அழகுடன் இருப்பதாக தொழிற்சாலையில் உள்ளோர் பேசிக் கொண்டார்கள். நான் அதைக்கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

ஒரு நாள் எங்கள் தொழிற்சாலையில் ஒரே பரபரப்பாக இருந்தது. எனது அருகில் நின்ற ஒருவர் "இன்று இந்த நாட்டு ஜனாதிபதிக்கு குடை வாங்குவதற்கு சிலர் வருகிறார்கள்" என்று கூறினார். சற்று நேரத்தில் குடை வாங்க வந்தவர்கள் என்னைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். எனக்கு அதிர்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. என்னைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை என்னை எடுத்துச் சென்றவர்கள் ஜனாதிபதியிடம் பணிவுடன் கொடுத்தார்கள்.

என்னைப் பார்த்த ஜனாதிபதியின் கண்கள் மகிழ்ச்சியால் அகல விரிந்தன. ஆஹா எத்தனை அழகான குடை என்று கூறி என்னை தனது கைகளில் எடுத்துக் கொண்பர். என் மனம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது ஒரு ஜனாதிபதியின் கைகள் என்மேனியில் படுவதற்கு எவ்வளவு பாக்கியம் செய்திருக்கவேண்டும். எத்தனை மனிதர்கள் ஒரு நாட்டு ஜனாதிபதியைப் பார்க்கமுடியாது, பேச முடியாது தவிக்கின்றார்கள். இதனால் எனது அதிஸ்டத்தை நினைத்து மிக மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

ஜனாதிபதியவர்கள் எங்கு சென்றாலும் என்னை கைவிடுவதில்லை. நானும் அவருக்கு வெயில், மழையிலிருந்து பாதுகாப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றேன். அவர் முக்கிய கூட்டங்களிற்கு கூட என்னை எடுத்துச் செல்ல மறக்கமாட்டார் அதுமட்டுமன்றி என்னைத்தன் கையில்வைத்துக் கொண்டு தான் கூட்டங்களில் பேசுவார். பேசும் போது அடிக்கடி எனது மேனியை வருடுவார் அப்போது நான் ஒரு குழந்தைவடிவான குடையாக ஜனாதிபதியின் கைகளில் இருக்கின்றேன்.

**யோ. நிலாவினி**

தரம் - 05

## தொலைக்காட்சியின் பயன்கள்

- விஞ்ஞானம் வழங்கிய பயனுள்ள சாதனமான தொலைக்காட்சி கண்ணுக்கும் செவிக்கும் விருந்தளிக்கிறது.
- தொலைத்தொடர்பு சாதனங்களில் கண்ணுக்கும் செவிக்கும் விருந்தளிப்பது தொலைக்காட்சி.
- தொலைக்காட்சி மூலம் செய்திகளைப் படங்களுடன் உடனுக்குடன் அறிய முடியும்.
- உலகில் நாம் சென்று பார்க்க முடியாத நிகழ்வுகளையும் இடங்களையும் இதன் மூலம் பார்க்கலாம்.
- மாணவர்களுக்கு கல்வி நிகழ்ச்சிகளை வழங்குவதால் எளிதாக அறிவைப் பெறலாம்.
- இன்று மக்களின் பிரதான பொழுதுபோக்குச் சாதனமாக பயனளிக்கிறது.
- மக்கள் மகிழ்வுறுவண்ணம் பல் கலை நிகழ்வுகளை வழங்கும் தொலைக்காட்சியின் பயன்கள் அளப்பரியன.
- அது மட்டுமல்ல எல்லா வயதினருக்கும் ஏற்ற நிகழ்ச்சிகளை வழங்கி உதவுகின்றது.
- இன்று பெரும்பாலும் அனைவராலும் வாங்கிப் பயன்படுத்தக் கூடிய ஒரு சாதனமாக விளங்குகின்றது.
- விளம்பரங்களைத் தொகுத்துத் தருவதால் அனைவரும் இதன் மூலம் பயனடையலாம்.
- தொலைக்காட்சி பார்ப்பதால் மனிதனது பொது அறிவு வளர்ச்சி அடைகிறது.
- பெருமளவு தகவல்களைச் சேமித்து வைக்கவும் பொழுது போக்கைப் பயனுள்ள வகையில் அமைக்கவும் உதவுகின்றது.
- பல்வேறுபட்ட அளவில் தொலைக்காட்சிகள் உண்டு.
- பல அதிசயமான முக்கியமான நிகழ்வுகளையும் இதன் மூலம்அறியலாம்.
- இத் தொலைக்காட்சியானது இலங்கையின் சகல பிரதேசங்களுக்கும் சேவையை வழங்குகின்றது.

**க. கம்ஸன்**
தரம் - 05

## உயிர் எழுத்தில் என் அம்மா

1. அன்புள்ளவள் என் அம்மா
2. ஆறுதல் அளிப்பவள் என் அம்மா
3. இனிமையானவள் என் அம்மா
4. ஈகையுள்ளவள் என் அம்மா
5. உண்மையுள்ளவள் என் அம்மா
6. ஊக்கமுள்ளவள் என் அம்மா
7. எளிமையானவள் என் அம்மா
8. ஏணியானவள் என் அம்மா
9. ஐயம் அற்றவள் என் அம்மா
10. ஒழுக்கமுள்ளவள் என் அம்மா
11. ஓடம் போன்றவள் என் அம்மா
12. ஔவியம் அற்றவள் என் அம்மா

**யோ. வினிஸ்ரா**
தரம் :- 5

# உலக அதிசயங்கள்

**01. பண்டைய உலக அதிசயங்கள்**

1. எகிப்தின் பிரமிட்கள்
2. எ∴பிஸ்ஸில் இருந்த ஆர்ட்டிமிஸ் ஆலயம்
3. ஹெலிகார்னஸிஸ்ஸில் இருந்த கல்லறைமடம்
4. அலெக்ஸாந்திரியாவில் இருந்த ∴ பாரோஸ் கலங்கரை விளக்கம்
5. பாபிலோனியாவின் தொங்கு தோட்டம்
6. ஒலிம்பஸ்ஸிலிருந்து ஜியுஸ்சிலை
7. ரோட்ஸில் இருந்த பேருருவச்சிலை

**02. இடைக்கால உலக அதிசயங்கள்**

1. ரோமின் கொல்லோசியம் அரங்கம் 2. நான்கிங்கின் பீங்கான் கோபுரம்
3. இங்கிலாந்தின் ஸ்டோன் ஹெஞ்சல் எனப்படும் மனித புதைவிடக்கற்கள்
4. பைசா நகரம் சாய்ந்த கோபுரம் 5. சைனாவின் பெரிய சுவர்
6. கரன்ஸடாண்பிநோபுளின் புனித சோபியா மசூதி
7. அலெக்ஸாந்திரியாவின் அடிநில குடைவு கல்லறை

**நவீன உலக அதிசயங்கள்**

1. ஆக்ராவில் உள்ள தாஜ்மகால்
2. பாரிஸில் உள்ள ஜ∴பில கோபிரம்
3. டிஸ்னிலாந்து
4. பிக்பென் கடிகாரம்
5. அமர்நாத் பனி லிங்கம்
6. லிபர்டி சிலை அமெரிக்கா
7. சீனாவின் மலர்த்தோட்டம்

**ச. கிரிசாந்தி**
தரம் - 11

---

# மரத்தில் பூக்காத பூக்கள்

- மனிதனைப் புகழும் பூ - சிறப்பு
- காலை வரும் பூ - விழிப்பு
- சமையலறையிலுள்ள பூ - அடுப்பு
- ஒளியைத்தரும் பூ - நெருப்பு
- சுவையைத் தரும் பூ - உப்பு
- கோபத்தில் வரும் பூ - வெறுப்பு
- பாதங்களைக் காக்கும் பூ - செருப்பு
- குற்றம் புரிந்தால் வரும் பூ - குறு குறுப்பு
- சிறுவர் செய்யும் பூ - குறும்பு
- எல்லோருக்கும் தேவையான பூ - அன்பு

**சு. பிரிந்தாயினி**
தரம் -03

# கூடி வாழ்தல் (கதை)

ஒரு அடர்ந்த பெரிய காடு இருந்தது. அங்கு மான், காகம், எலி என்பன நண்பர்களாக இருந்தன. பெரிய ஆலமர மொன்றில் அவை வசித்து வந்தன. அவை மூன்றும் எங்கு சென்றாலும் சேர்ந்தே சென்றன. தினமும் காலையில் உணவு தேடச் செல்லுங்கள்.

ஒரு நாள் நீண்ட தூரம் சென்றும் உணவு கிடைக்கவில்லை. அதனால் மான் 'நண்பர்களே! நாம் தனித்தனியாக உணவைத் தேடுவோம்" என்றது. எலியும் காகமும் மனமின்றி அதை ஏற்றுக்கொண்டன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் சென்றது. அப்பொழுது மான் பசுமையான புற்றரை ஒன்றைக் கண்டது. சந்தோசத்தால் 'ஆ! நல்ல புல் இருக்கிறதே" என்று கூறிய படியே சென்றது. புல்லைத் தின்னத் தொடங்கியது. புல்லைத்தின்னும் ஆவலில் அங்கு மறைந்திருந்த வேடனை மான் காண காணவில்லை. அப்போது வேடன் மானை வலையை வீசிப் பிடித்துக் கொண்டான். வலையில் மாட்டிய மான் தனது செயலை நினைத்து வருந்தியது.

மாலை வேளை எலியும், காகமும் தமது வசிப்பிடமான ஆலமரத்துக்கு வந்தன. அங்கு மானைக் காணவில்லை. அவை காத்திருந்தன. நீண்ட நேரமாகியும் மானைக்காணவில்லை. காகமும் எலியும் கவலையடைந்தன எலி காகத்தைப் பார்த்து 'நீ சென்று மானைத்தேடிக் கொண்டு வா ஏதாவது உதவி தேவைப்பட்டால் என்னிடம் வா" என்று கூறியனுப்பியது. காகம் மானைத் தேடச் சென்றது.

நீண்ட தூரம் சென்று மானைக் கண்டது. மான் வலையால் கட்டப்பட்டிருப்பதைக் கண்டது. எவ்வாறு வலைக்குள் அகப்பட்டாய்" என்று காகம் கேட்டது. நடந்தவற்றைக் கூறியது மான். காகம் மானுக்கு ஆறுதல் கூறிவிட்டுப் பறந்து சென்றது.

எலியிடம் சென்று நடந்தவற்றைக் கூறியது. எலியைத் தன்னுடன் அழைத்துச் சென்றது ஒரு நொடிப்பொழுதில் வலையையறுத்து மானை விடுவித்தது. 'நண்பனே! பார்த்தாயா நீ சொன்ன யோசனையால் வந்த வினையை" என்றது காகம். மான் தனது தவறை உணர்ந்து கொண்டது. சரி 'நாம் இனி ஒரு போதும் பிரியக் கூடாது" என்று மான் கூறியது. நண்பர்கள் மூவரும் தமது இருப்பிடத்தை நோக்கி சென்றன.

*"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"*

**வ. சதிகா**

தரம் -05

# உலகின் ஏழு அதிசயங்கள்

**1. எகிப்திய பிரமிடுகள் :-**

4000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. மிகவும் பழைமையானது. இதன் வேலைப்பாடு இன்றைய கட்டடவியலாளர்களால் வியந்து பாராட்டப்படுகின்றது. மிகப் பழைமையான அதிசயங்களில் நிலைத்து நிற்கும் சின்னமாகும்.

**2. பாபிலே தொங்கு தோட்டம் :-**

நெபுட்றேசர் என்பவரால் 6 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்து பிறப்பதற்கு முன் கப்பல் தரைக்குமேல் 75 முதல் 300 அடிவரை பல்வேறு பூச்செடிகளும் மரங்களும் உள்ளன. மேலும் நீர் வாய்க்கால்களும் உள்ளன.

**3. ஒலிம்பிக்கின் ஜீயஸ் சீலை :-**

இது கிறிஸ்து பிறப்பதற்கு முன் 15 ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இது கிரேக்க உயர் கடவுளின் தாடியுடன் கூடிய அமைந்த நிலையில் உள்ள சிலையாகும். இதன் தலையில் ஒலிவ் மலர் இலைகளால் சூடப்பட்ட மலர் கிரிடம் தலையில் உள்ளது. வலது கையில் செங்கல் உள்ளது. இத்தகைய சிறப்புமிக்க இச்சிலை 30 அடி உயரம் உள்ளது இதன் உடல் மரத்தால் செய்யப்பட்டு தங்கத்தால் மூடப்பட்டுள்ளது.

**4. தாஜ்மகால் :-**

வெள்ளைச் சலவைக்கல்லால் மொகலாய அரசரான ஷாஜகானால் தன் மனைவி அரசி மும்தாயின் நினைவாக ஆக்ராவில் கட்டப்பட்ட நினைவுக்கல்லறை (சமாதி) 1631 இல் கட்ட ஆரம்பிக்கப்பட்டு 1653 இல் கட்டி முடிக்கப்பட்டது.

**5. சீனாவின் பெருஞ்சுவர் :-**

கிறிஸ்து பிறப்பதற்கு முன் 3 வது நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதன் பிரதான சுவர் 2000 மைல்கள் நீளத்தையும் (3219 கி.மு) 6 முதல் 15 மீற்றர் உயரத்தையும் கொண்டது.

**6. பைசா நகர கோபுரம் :-**

1154 (கிறிஸ்து பிறப்பிற்கு பின்) இது வட்டவடிவத்தில் 8 மாடிகளைக் கொண்டது. இது மணிக்கூண்டு வடிவத்தை ஒத்தது. சலவைக்கல்லால் கட்டப்பட்டது. 188 அடி உயரம் மேல் உயரம் 16 அடி கொண்டது. கீ.ப 1174 இல் பைசா நகரபொறியாளர் போனாஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு 1350 இல் முடிக்கப்பட்டது.

**7. ரோமில் உள்ள கொலாஸ்ஸியம் :-**

இது மிகப் பழைமையான கேளிக்கைத் திரை அங்கமாகும் இது வெஸ்பாஸ்ஸியன் என்ற பேரரசரால் கி.பி 82 இல் கட்டப்பட்டது. இக்கட்டிடம் 615 X 510 உயரம் அடி

**திவாரணி**

தரம் - 07

# சிறுவர் எதிர்காலம் சிதைந்திடாது........

சிறுவர்கள் எனப்படுவோர் ஒரு வயது தொடக்கம் பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவார். இவர்கள் எதிர்கால சமுதாயத்தின் சிற்பிகள் என்ற வகையில் நோக்கப்பட வேண்டியவர்கள் ஆவார். இவர்கள் சிறந்த வழிநடத்தலின் கீழ் ஆரோக்கியமும் ஆற்றலும் நிறைந்தவராக வளர்க்கப்பட்டாலே சமூகத்தின் எதிர்காலமும் சிறப்பாய் அமையும். முத்தான சிறார்கள் முதலில் சேரும் சமூகம் குடும்பம் ஆகும். குடும்பத்தின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் பாரம்பரியங்கள் அப்பிஞ்சு உள்ளத்தில் ஆழப்பதிந்து அதன் எதிர்காலத்தை உருவாக்குவதில் தாக்கம் விளைவிக்கும். அதாவது எந்தக்குழந்தையும் நல்ல குழந்தை தான். மண்ணில் பிறக்கையிலே அது நல்ல வராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பிலேயே என சினிமாப் பாடல் கூறுவது போல குழந்தைகள் நல்லவர்களாகவே பிறக்கின்றார்கள். அவர்களை நல்லவர்கள் ஆகவோ தீயவர்களாகவோ உருவாக்குவது சமுதாயமே.

இந்த வகையில் சிறுவர்கள் தம் வாழ்க்கையின் பெரும் பகுதியை குடும்பத்திலேயே கழிக்கிறார்கள். இதனால் குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகள் அனைத்தும் சிறாரின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் திறவு கோல் போல ஆகிறது. குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் சிறந்த எடுத்துக்காட்டாக வாழ்வதன் மூலம் சிறுவர்களையும் சிறந்த சிற்பிகள் ஆக்க முடியும்.

சிறுவர் சேரும் சமுதாயம் என நோக்குவோமாயின் பாடசாலை ஆகும். இங்கு சிறுவர் அறிவுதிறன், ஒழுக்கம் என்பவற்றைக்கற்கின்றார்கள் அதுமட்டும் அல்லாது தன்னிடமுள்ள ஆற்றல், திறன் என்பவற்றை பயிற்சி மூலம் மெருகூட்டி வளர்த்துக் கொள்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளுக்காக பாடசாலை விளங்குகிறது. இதனை உணர்ந்து பாடசாலைச் சமுதாயமும் மாணவச் சிறார்களை சிறந்த எதிர்காலச்சந்ததியினராக்க முழுமூச்சுடன் செயற்படவேண்டும். சிறார்கள் என்போர் "பின்பற்றுவோர்கள்" அவர்களுக்கு சிறந்த முன்மாதிரிகளாக அதிபர் ஆசிரியர்கள் திகழ வேண்டும்.

சமய சமூக நிறுவனங்கள் மூத்தோர், முதியோர் தொலைத்தொடர்பு ஊடகங்கள் என்பனவும் சிறுவர்களின் பல்வேறு நடத்தைகளுக்கு காரணமாகின்றன. இவையும் தமது கடமை, பொறுப்புக்களை உணர்ந்து உண்மையானதும், நேர்மையானதுமான வழிகாட்டல்களை வெளிப்படுத்த வேண்டும். நவீன யுகத்தில் சிக்கல் நிறைந்த சமுதாயப்போக்கில் தொடர்பு ஊடகங்களின் பங்கு அளப்பரியது. இத்தொடர்பு ஊடகங்களின் வளர்ச்சியானது உலகைக்கிராமமாக மாற்றியுள்ளது. ஆயினும் அதனூடாகக்கிடைக்கும் தகவல்கள் அனைத்தும் சிறப்பானதா? சிறுவர்கள் பின் பற்றக் கூடியதா? எனநோக்கின் கேள்விக்குரியதாகும் பாழ்பட்டபாலியல் துஷ்பிரயோகம், போதைவஸ்து, மது, புகைத்தல் என்ற பல சமுதாயசீரழிவுகளும் இதனாலேயே பரவலடைகின்றது என்பது மறுக்க முடியாத தொன்றாகும்.

இவ்வாறாகக் குடும்பம் பாடசாலை ஏனைய சமய சமூக நிறுவனங்கள் தொடர்பூடகங்கள் போன்ற அனைத்தும் சிறுவர்களின் வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாகும். அதனால் அவை தம் கடமை, பொறுப்புக்களை தொடர்ந்து சிறப்பாகச் செயற்படுத்துவதன் மூலம் எதிர் காலம் சிறக்க வழி செய்யலாம்.

ஆனால் இன்று உலகில் என்ன நடக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கின் சிறுவர்களின் நடைமுறை வாழ்க்கை கேள்விக்குறியாகிறது. தாய், தந்தை வேலைக்குச் செல்லல், வெளிநாடு செல்லல், பிரிந்திருத்தல், வறுமை என்பன சின்னஞ்சிறுசிறார்களையே பாதிக்கிறது அதாவது வீட்டில் அன்பு, அரவணைப்பு, கணிப்பு, நல்ல உணர்வு, கட்டுப்பாடு, பாதுகாப்பு என்பன கிடைக்கப்பெறாத நிலையில் அக் குழந்தைகள் திசை தெரியாது திக்கற்று சிதறிப் போகும் நிலையே உருவாகி வருகிறது.

இது மட்டுமா? வீட்டில் அன்பு காட்டி அரவணைக்க வேண்டியவர்களே சிதைத்துச் சீரழிக்கும் பல கதைகளை நாம் பத்திரிகைகள் மூலம் காணக்கூடியதாக உள்ளது. அன்புடன் அரவணைக்கிறார்களா? அல்லது ஆசையுடன் அரவணைக்கிறார்களா என்பது கூடத்தெரியாது. பிஞ்சு உள்ளங்களைச் சிதைப்பதற்கு இவர்களால் எவ்வாறு முடிகிறது! இது மட்டும் இல்லாது கல்வி கற்காது வேலைக்குச் செல்லும் சிறார்கள் போதைவஸ்து, மது விற்பனைகளில் ஈடுபடும் சிறார்கள், தாய், தந்தை மறுமணம் செய்வதால் சிறிய தந்தை, சிறிய தாயால் துன்புறுத்தும் சிறார்கள் எனப்பல வழிகளில் பாதிப்புக் குள்ளாகின்றனர்.

மேலும் போரெனும் அரக்கர்களின் கோரப்பிடியில் அகப்பட்டு அன்னை, தந்தை இழந்து அங்கங்கள் இழந்து அவதிப்படும் சிறார்கள் கூட்டமே உலகில் பெருமளவில் உள்ளனர் இப்படிப்பல கொடுமைகளுக்கு ஆளாபவர்கள் சிறார்களே.

இப் பிரச்சினைகளைத்தீர்க்க, சிறுவர் உரிமை அமைப்புகளான யுனிசெப், சிறுவர் சமவாயம் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் சிறுவர் உரிமைகள் என்பன வெல்லாம் உள்ளன. ஆயினும் சிறுவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பல பாதிப்புக்குள்ளாகிக் கொண்டே இருக்கிறார்கள். இதனால் குடும்பம், பாடசாலை சமூக சமய நிறுவனங்கள், தொடர்பு ஊடகங்கள் ஆகிய அனைத்துக் கரங்களும் ஒன்றிணைந்து சிறுவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக செயற்படுவோமாக.

**எ. நிலக்ஷனா**
தரம் - 11

## சத்தான முதியவர்கள் நம் சொத்து

அகிலத்தில் சிறப்பாக அனுபவப்பட்டவர்கள்
அன்பால் உலகத்தை அணைத்தவர்கள்
அசையாத உறுதியுடன் உழைத்தவர்கள்
இசையோடு இணைந்தே வாழ்ந்தவர்கள்
கறை இல்லா வாழ்வு நெறி கொண்டே
தரைமீது நோயின்றி வாழ்ந்தவர்கள்
இறையை வணங்கியதன் பின் ஏனை உயிர்க்கு
இரையிட்டு உண்டவர்கள், வாழையடி
வாழை என நம் பண்பாடுகளைக் காத்து
வாழ வழி கூறி நின்றவர்கள்
தேசத்தின் மீது தீராத பற்றுடனே - தம்மக்கள்
தேவையறிந்து பல சேவை புரிந்தவர்கள்
பேரன், பூட்டன் என்னும் உறவுக்களுக்காய்
வேராய் இருந்தவர்கள் இயற்கையை
நேசித்து பயன்மரங்கள் பல நாட்டி
யாசித்து வருவோர்க்கு உணவிட்டு
யோசித்து வேலைசெய்து காலத்தின்
வேகத்தால் முதுமை நிலையடைந்த முத்துக்கள்
தேகத்தால் நசிந்தாலும் பாசத்தால் நலியாது
தேடி உறவுகளைக் காண விரும்புகின்ற
சொத்தான முதியவர்கள் முகம் களையிழந்து
மெத்தவுமே வாழ பிள்ளைகளின் வரவு
தனை நாடி ஏங்கித் தவம் கிடக்கும்
தபசிகளாய் கைத்தடியும், கைத்
தொலைபேசியுமாய் மணியடிக்கும்
தொலைபேசி அழைப்பிற்காய் பிள்ளைகளின்
குரலைக்கேட்டு உள்ளத்தில் விம்மி
உடல் தளர்ந்து நிற்கின்றார்
அவர் நிலை மாற்ற வேண்டியே
நாம் அணைப்போம் முதியவரை

**தி. திலீனா**
தரம் - 10

# 1996 - 2010 வரை சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்களின் விபரம்

| ஆசிரியர் பெயர் | |
|---|---|
| 1. திருமதி. வ. கணபதிப்பிள்ளை | ஓய்வு |
| 2. திருமதி. ச. கனகரத்தினம் | இடமாற்றம் |
| 3. திரு. ந. பாலச்சந்திரன் | சேவையில் உள்ளார் (அதிபர்) |
| 4. திரு. சோ. கந்தையா | இடமாற்றம் (அமரர்) |
| 5. திருமதி. க. சுந்தரசிவம் | இடமாற்றம் |
| 6. செல்வி. மு. விஜயகுமாரி | சேவையில் உள்ளார் (உப அதிபர்) |
| 7. செல்வி. சு. இராதாகிருஷ்ணன் | ஓய்வு |
| 8. திருமதி. த. உதயகுமார் | இடமாற்றம் |
| 9. திருமதி. து. மகிழாம்பிகை | சேவையில் உள்ளார் |
| 10. திருமதி. மா. பாலச்சந்திரா | வெளிநாடு |
| 11. திருமதி. பு. சுகுமார் | இடமாற்றம் |
| 12. செல்வி. தா. சறோஜினிதேவி | இடமாற்றம் |
| 13. செல்வி. வ. மனோராணி | சேவையில் உள்ளார் |
| 14. திரு. பொ. சபாநாதன் | இடமாற்றம் |
| 15. செல்வி. ந. தமிழரசி | வெளிநாடு |
| 16. திருமதி. தி. பத்மநாதன் | இடமாற்றம் |
| 17. திருமதி. ஜெ. அருள்மயம் | இடமாற்றம் |
| 18. திரு. த. பத்மநாதன் | இடமளற்றம் |
| 19. திருமதி. நி. ஜெயக்குமார் | இடமாற்றம் |
| 20. திரு. இ. திருஞானலிங்கம் | வெளிநாடு |
| 21. செல்வி. ப. சுகந்தினி | இடமாற்றம் |
| 22. செல்வி. தி. நிலாவரசி | இடமாற்றம் |
| 23. திரு. சி. சிதம்பரநாதன் | இடமாற்றம் (அமரர்) |
| 24. செல்வி. இ. சாந்தி | இடமாற்றம் |
| 25. திரு. சி. பாலச்சந்திரன் | இடமாற்றம் |
| 26. திரு. வே. சிவானந்தன் | இடமாற்றம் |
| 27. செல்வி. இ. வ. மனோராணி | இடமாற்றம் |
| 28. திரு. ந. குமணன் | இடமாற்றம் |
| 29. திரு. யோ. சு. சே. பிரான்சிஸ் | இடமாற்றம் |
| 30. திரு. அ. அருள்நேசன் | இடமாற்றம் |
| 31. திருமதி. ற. சந்திரகுமார் | சேவையில் உள்ளார் |
| 32. திரு. வெ. றாஜ்குமார் | இடமாற்றம் |

| | |
|---|---|
| 33. திரு. தி. கணேசலிங்கம் | இடமாற்றம் (அமரர்) |
| 34. செல்வி. பா. ஜெயந்தி | இடமாற்றம் |
| 35. திரு. இ. இராசபாலன் | இடமாற்றம் |
| 36. திருமதி. இ. ஞானகுரு | சேவையில் உள்ளார் |
| 37. திரு. கி. யோ. அனுரா | சேவையில் உள்ளார் |
| 38. செல்வி. பா. கல்பனா | இடமாற்றம் |
| 39. திரு. த. தயானந்தன் | இடமாற்றம் |
| 40. திருமதி. ஊ.சே. சண்முகநாதன் | இடமாற்றம் |
| 41. திரு. ஞ. பாலச்சந்திரன் | ஓய்வு |
| 42. திருமதி. யா. இந்துமதி | சேவையில் உள்ளார் |
| 43. திரு. ஜெ. கோகலே | சேவையில் உள்ளார் |
| 44. திரு. த. மதியழகன் | இடமாற்றம் |
| 45. செல்வி. கோ. விமலாவதி | இடமாற்றம் |
| 46. செல்வி. தி. லயந்தினி | இடமாற்றம் |
| 47. திரு. சு. திருமூர்த்தி | இடமாற்றம் |
| 48. திருமதி. சி. மிருலாஜினி | சேவையில் உள்ளார் |
| 49. திருமதி. மா. மனோக்குமார் | சேவையில் உள்ளார் |
| 50. திருமதி. அ. பகீரதன் | சேவையில் உள்ளார் |
| 51. திரு. சு. கணேசதாசன் | சேவையில் உள்ளார் |

## 1910 – 2010 வரை சேவையாற்றிய அதிபர்களின் விபரம்

| அதிபர் பெயர் | காலப்பகுதி |
|---|---|
| 1. திரு. மு. கார்த்திகேசு | 1910 - 1925 |
| 2. திரு. இ. கார்த்திகேசு | 1926 - 1950 |
| 3. திரு. ஞ. பசுபதிப்பிள்ளை | 1951 - 1965 |
| 4. திரு. ஊ. சரவணமுத்து | 1966 - 1968 |
| 5. திரு. சு. நல்லதம்பி | 1968 - 1972 |
| 6. திரு. சி. கந்தையா | 1972 - 1973 |
| 7. திரு. மு. விருத்தாசலம் | 1974 - 1986 |
| 8. திரு. ச. சண்முகலிங்கம் | 1986 - 1995 |
| 9. திரு. ந. பாலச்சந்திரன் | 1996 - 2010 |

## தமிழ்த் தினப்போட்டிகளின் பெறுபேறுகள்

| ஆண்டு | மாணவர் பெயர் | நிகழ்வுகள் | பிரிவு | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|
| 1999 | வே. தர்சினி | வாசிப்பு | - | 1 | 2 |
| 2004 | ச. கிரிசாந்தினி | இசையும் அசைவும் | 1 | 3 | |
| | ந. சுதர்சினி | சிறுகதையாக்கம் | 2 | 3 | |
| | ந. அனுஜா | கட்டுரை வரைதல் | 3 | 3 | |
| 2008 | சு. துஷ்யந்தினி | பாவோதல் | 3 | 1 | |
| | தி. திலீனா | பேச்சு | 3 | 3 | |
| | நே. சிந்துஜன் | எழுத்தாக்கம் | 1 | 1 | |
| | மு. தர்சிகா | திருக்குறள் மனனம் | தரம் - 4 | 1 | 2 |
| 2009 | மு. தர்சிகா | திருக்குறள் மனனம் | தரம் - 5 | 1 | |
| | மு. தர்சிகா | பாவோதல் | தரம் - 5 | 1 | 1 |
| | ந. துவாரகா | வாசிப்பு | 1 | 3 | |
| | யோ. தட்சாயினி | வாசிப்பு | 2 | 3 | |
| | மு. தர்சிகா | பாவோதல் | 1 | 1 | |
| | தி. திலீனா | பேச்சு | 3 | 3 | |
| | ஜெ. இந்துஜா | சிறுகதை | 4 | 3 | |
| | தெ. தாட்சாயினி | கவிதை | 4 | 1 | |
| | இ. கீர்த்தனா | குறுநாடகம் | 4 | 2 | |
| | இ. நிரோஜன் | கட்டுரை | 2 | 1 | |

### ஆங்கிலதினப் போட்டிகளின் பெறுபேறுகள்

| ஆண்டு | மாணவர் பெயர் | நிகழ்வுகள் | பிரிவு | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|
| 2008 | ச. ஜெயராணி | ஆங்கில உறுப்பெழுத்து | தரம் - 11 | 3 | |
| 2009 | செ. ராஜ்குமார் | ஆங்கில சொல்வதெழுதல் | தரம் - 3 | 3 | |

### சமூக விஞ்ஞானப் போட்டிகளின் பெறுபேறுகள்

| ஆண்டு | மாணவர் பெயர் | நிகழ்வுகள் | பிரிவு | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|
| 2003 | க. கார்த்திகேயன் | பொது அறிவுப்போட்டி | | 2 | |
| 2004 | க. கார்த்திகேயன் | ஆக்கத்திறன் போட்டி | | 2 | |
| | சு. கல்பனா | ,, ,, | | 3 | |
| | தி. றஜிதா | ,, ,, | | 2 | |
| | ம. சுதர்சினி | ,, ,, | | 1 | 2 |
| | ந. அனுஜா | ,, ,, | | 2 | |
| | வே. தர்சினி | ,, ,, | | 3 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2010 | தி. கஜீபன் | பொது அறிவுப்போட்டி | தரம் - 8 | 1 | |
| | லோ. நிதுர்சனா | ,, ,, | தரம் - 9 | 1 | |
| | தி. மிஸ்த்திரா | ,, ,, | தரம் - 9 | 1 | |
| | ஜெ. சஜித் | ,, ,, | தரம் - 11 | 2 | |
| | ச. கிரிசாந்தினி | ,, ,, | தரம் - 11 | 1 | 3 |

## விவசாய, விஞ்ஞானப் போட்டிகளின் பெறுபேறுகள்

| ஆண்டு | மாணவர் பெயர் | நிகழ்வுகள் | பிரிவு | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|
| 1999 | ந. கஜேந்திரன் | விவசாய அறிவுப்போட்டி | | 1 | |
| | ஜெ. ஜெயகாந்தன் | ,, ,, | | 2 | |
| | S. அகிலன் | ,, ,, | | 3 | |
| 2005 | தி. தினியா | விஞ்ஞான வினாவிடைப்போட்டி | | 2 | |
| 2007 | தி. தினாத் | விவசாய அறிவுப்போட்டி | | 1 | |
| | ம. சுமன் | ,, ,, | | 2 | |
| | சோ. கோகுலதர்சன் | ,, ,, | | 3 | |

## குழு விளையாட்டுப் போட்டிகளின் பெறுபேறுகள்

| தலைப்பு | நிகழ்வுகள் | பிரிவு/தரம் | ஆண்டு | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|
| விளையாட்டு | உடற்பயிற்சி | U 19 பெண் | 2003 | 3 | - |
| | உடற்பயிற்சி | U 19 ஆண் | 2004 | 2 | - |
| | உடற்பயிற்சி | U 19 பெண் | 2004 | 3 | |
| | கிளித்தட்டு | ஆரம்பப்பிரிவு பெண் | 2009 | 3 | |
| | கிளித்தட்டு | ஆரம்பப்பிரிவு பெண் | 2010 | 1 | |
| | கிளித்தட்டு | ஆரம்பப்பிரிவு ஆண் | 2010 | 3 | |

## ஏனைய போட்டிகளின் பெறுபேறுகள்

### தேசிய சிறுவர் மனித உரிமைச் சமவாய கட்டுரைப் போட்டி - 1999

| | |
|---|---|
| சி. தேவயாழினி | - ஆறுதல் பரிசு |
| ஞா. பாமினி | - சான்றிதழ் பரிசு |
| த. தவலட்சுமி | - சான்றிதழ் பரிசு |
| க. சுதாமதி | - சான்றிதழ் பரிசு |

### சைவபரிபாலன ப் பரீட்சை - 1998

| | |
|---|---|
| பி. சோழராஜன் | - வெள்ளிப்பதக்கம். |


ச. தாட்சாயினி
தரம் – 05


இ. நிதர்சன்
தரம் –5



ந. டயானா
தரம் – 5



வ. சதிகா
தரம் – 5

# மனமார்ந்த நன்றிகள்

பாடசாலையின் 100 வது வருடகால வரலாற்றில் முதற்தடவையாக பாடசாலை தொடர்பான வரலாற்றினை ஆவணப்படுத்த எடுத்த முயற்சிக்கு உறுதுணையாக நின்று ஆக்கமும் ஊக்கமும் அளித்து மலர் வெளியீட்டிற்கு அநுசரணை வழங்கிய மாகாணக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

மலரினை வெளியிடுவதற்கும் மனமுவந்து நிதியுதவியினை வழங்கி பங்களிப்புச் செய்த பாடசாலையின் பெற்றோர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும், கல்வி கற்பித்து வெளிநாட்டில் வசிக்கின்ற ஆசிரியர்களுக்கும், டென்மார்க், நோர்வே போன்ற நாடுகளிலிருந்து நிதியுதவியை வழங்கிய பழைய மாணவர்களுக்கும், நலன் விரும்பிகளிற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

பாடசாலையின் ஒய்வு நிலை அதிபர்களின் புகைப்படங்களை உரியவர்களிடமிருந்து பெறுவதற்கு வழிகாட்டியவர்களுக்கும் அவற்றினை தந்துதவியவர்களுக்கும் மன மார்ந்த நன்றிகள்.

100 வது ஆண்டு மலருக்கு ஆசியுரைகள் வழங்கிய சமயப்பெரியார்களுக்கும், வாழ்த்துரைகள் வழங்கிய நிர்வாகத்துறை, கல்வித்துறை சார்ந்த பெரியோர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். மலரினை அலங்கரிப்பதற்கு சிறந்த முறையில் புகைப்படங்களை எடுத்து தந்த சுவப்பிரதா ஸ்ரூடியோ நிறுவனத்தாருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

குறித்த காலத்தில் 100 ஆவது ஆண்டு மலரினை மிகவும் சிறப்பான முறையில் அச்சிட்டு தந்துதவிய திருநெல்வேலி குரு பிறிண்டேர்ஸ் உரிமையாளர், அவர்தம் பணியாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்களுக்கும், மலரின் வெளியீட்டு உரையினை நிகழ்த்தியவர்களுக்கும், மலரின் தரம் பற்றி மதிப்பிட்டுரை நிகழ்த்தியவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

மலர் வெளியீட்டு விழாவில் முதற்பிரதி பெற்ற எமது பாடசாலையின் பழைய மாணவியும், முன்னாள் ஆசிரியருமான திருமதி. பா. சிவராசா அவர்களுக்கும், கௌரவப் பிரதிகளைப் பெற்று பாடசாலையினை கௌரவப்படுத்திய சமூகப் பெரியர்களுக்கும், பாடசாலையின் மைந்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

சிறப்புப்பிரதிகளைப் பெற்று உதவிய முன்னாள் ஆசிரியர்களிற்கும், பழைய மாணவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் மனமார்ந்த நன்றிகள். எமது பாடசாலையின் நூற்றாண்டு விழா தொடர்பான செய்திகளை இணையத்தில் வெளியிட்டு உதவிய பணிப்புலம். Com, பணிப்புலம் இணையத்தாருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

100 வது ஆண்டு விழா சிறப்புற அமைவதற்குப் பேருதவி வழங்கிய பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினருக்கும் மாணவர் சங்கத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன்.


**சு. யாதவன்**
செயலாளர்,
100 வது ஆண்டு நிறைவு விழாச் சபை.












Guru Printers, Thirunelvely.